2961

T.N.L.A. Debates

Official Report

Vol 34   No 243

23, 24, March 1987


1211,61 N87
N87.34.243
18650

வெளியீடு 14-9-1987 Issued 14-9-198

16/9/87
2961

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை மார்ச் 23, 1987—தொகுதி 34 எண் 2
Monday the 23rd March 1987 Volume 34 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

D
V211,31 N87
N87.34.2 f3
136506
சென்னை-600 008

# உள்ளடக்கம்.

23—3—1987

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—44 |
| 2. தகவல் கோரல்— | |
| பேரவைத் தலைவர் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை. | 44—45 |
| 3. வரவு-செலவுத் திட்டம், 1987-88 பொது விவாதம்— | |
| திரு. க. பாரமலை | 45—59 |
| திரு. எல்ல. இராசமாணிக்கம் | 59—65 |
| திரு. பொன். முத்துராமலிங்கம் | 65—75 |
| திரு. ஏ. பாலுச்சாமி | 75—78 |
| திரு. டி. ஆர். வேங்கடரமணன் | 79—92 |
| திரு. சா. ஞானசுந்தரம் | 92—103 |
| *டாக்டர் ந. மாசிலாமணி | 104—116 |
| *திரு. செ. தங்கராசு | 117—120 |
| *திரு. சி. சுப்புராயர் | 120—126 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 126—131 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*1987, மார்ச் 23, திங்கட்கிழமை*

**பங்குனி 9, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு-2018.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. எச். பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

" அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் ".

சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப் பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பொது இடங்களில் ஆக்கிரமிப்பு.

121—(*வினா எண். 11041) **திரு. கே. உச்சி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொது இடங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு அபராத ஆக்கிரமிப்பு கட்டணம் விதித்து வசூல் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905 (தமிழ்நாடு சட்டம் III /1905) பிரிவு 5 மற்றும் 5(அ)-ன் கீழ் பொது இடங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு அபராத ஆக்கிரமிப்புக் கட்டணம் விதித்து வசூல் செய்வது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற அபராதங்கள் எந்த அடிப்படையில் விதிக்கப்படு கின்றன என்பதையும் அது ஒரு ஏக்கருக்கு இவ்வளவு அல்லது ஒரு ஹெக்டேருக்கு இவ்வளவு என்ற அடிப்படையில் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நிலம் தீர்வை விதிக்கப்பட்டதாக இருப்பின் ரூ. 5-க்கு மேற்படாமலும், அல்லது பிரிவு 3-ன்கீழ் ஓராண்டுக்கு விதிக்கப்படும் 10 மடங்குத் தொகை, தீர்வை ரூ. 5-க்கு அதிகமாக இருப்பின், அத்தீர்வையைப் போல் 10 மடங் குக்கு மிகைப்படாமலும் தீர்வை செலுத்த வேண்டும்.

நிலம் தீர்வை விதிக்கப்படாமல் இருப்பின் ரூ. 10 க்கு மிகைப் படாமலோ அல்லது பிரிவு 3-ன்கீழ் இருபது மடங்கு தீர்வை விதிக்கப்பட்டு இருப்பின், ஓராண்டுக்கு ரூ. 10 க்கு மிகைப்பட்டு இருப்பின், இருபது மடங்கு தீர்வைக்கு மிகைப்படாமல் அபராதம் செலுத்த வேண்டும்.

5(அ) பிரிவின் கீழ் மாற்றப்பட்ட பகுதியாக இருப்பின், எந்த ஒரு நபரும், பிரிவு 3(அ)-ன் கீழ் தீர்வை விதிக்கப்பட்டிருப்பின், மாவட்ட ஆட்சியரோ அல்லது அவரது தலைமையின் கீழ் உள்ள வட்டாட்சியரோ அல்லது துணை வட்டாட்சியரோ தீர்மானிக் கும்படி, நிலம் தீர்வை விதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது தீர்வை விதிக்கப்படாமல் இருந்தாலோ, ரூ. 200-க்கு மிகைப்படாமல் தீர்வையைத் தவிர, அபராதம் செலுத்த வேண்டும்.

மேற்காணும் விதிமுறைகளே நடைமுறையில் கையாளப்பட்டு வருகின்றன.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி அதிகப்படியாக 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று புறம்போக்கு இருந்தால் அதிலே ஆக்கிரமிப்பு செய்ததற்கு, அதிலே உழுவடை செய்கின்றவர்களுக்கு இந்தத் தீர்வைப் போடுகிறோம், அதை நாங்களும் வரவேற்கிறோம். இருந்தாலும் சுடுகாட்டுக்குப் போகின்ற வழி, குளத்துப் புறம்





போக்கு, கண்மாய்ப் புறம்போக்கு, நடைபாதைப் புறம்போக்கு, இவற்றில் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, அதை வெளி யேற்றுவதாக இருந்தால் வெளியிலே செல்ல முடியாது என்று தொந்தரவுபடுத்துகிறார்களே அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு முன்பே ஒரு வினாவிற்கு விடை அளிக்கும்போது குறிப்பிட்டேன். குளத்துப் புறம் போக்கு, ஓடைப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு ஆகிய வற்றில் எல்லாம் ஆக்கிரமிப்பு கூடாது என்று இருக்கிறது. சுடு காட்டுக்குப் போகின்ற வழிகள் தடைப்பட்டிருந்தால் அப்படிப் பட்ட ஆக்கிரமிப்புகள் கட்டாயம் அகற்றப்பட வேண்டியவை. அப்படிப்பட்ட இடங்களிலே ஆக்கிரமிப்புகளுக்குத் தண்டத் தீர்வையோ, மற்றவையோ, அபராதங்களோ விதித்து, அவர் களைத் தொடர்ந்து அந்த ஆக்கிரமிப்புகளில் இடம் அளிக்கின்ற அளவுக்கு இடம் தரமாட்டார்கள். ஆனால், வேறு வகையிலே யாருக்கும் தொல்லை இல்லாத அளவுக்கு ஆக்கிரமிப்பு இருக்கு மானால் அந்த இடங்களிலே ஆக்கிரமிப்புக்கு இந்தத் தண்ட அபராதம் போடப்படுகிறதே தவிர, மக்களுக்குப் பயன்படுகிற அளவுக்கு இடைஞ்சலாக இருக்கிற இடங்களில் ஆக்கிரமிப்பை அகற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

**திரு. கே. உச்சி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு சில பகுதிகளில் மிக அதிக அளவில் கூட நடக்கின்றன. அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியதுபோல் பொது மக்க ளுக்கு சௌகரியம் இல்லாத இடம் என்று சொல்வது போல், அதாவது சுடுகாடு என்று சொல்கின்றபொழுது, கணிசமான ஆக்கிரமிப்பு நடக்கிறது. அந்த ஆக்கிரமிப்புக்கு கிராம அதிகாரி களே, ரசீது போட்டு ஒரு தொகையை வசூல் செய்து கொள்கிறார்கள். அதை வட்டாட்சியர்தான் போட வேண்டு மென்று இருக்கும் என்று கருதுகிறேன். ஆனால், அந்தக் கிராம அதிகாரிகள் செய்வதால் போதுமான தகுந்த கிரயம் அங்கு வந்து சேர்வது இல்லை. இது ஒன்று.

[1987 மார்ச் 23

இரண்டாவது அதிலே பல தவறுகள் நடக்கின்றன. மக்க ளுக்குச் சம்பந்தமில்லாத வெகுதூரத்திலே உள்ள பகுதிகளிலே பல இடங்களில் சிலர் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைத் தங்கள் கைவசம் வைத்துக்கொண்டு செக்ஷன் 17. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது பெரிய விவாதம் போல் இருக்கிறது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியாது. கேள்வியாக இருக்கவேண்டும்.

**திரு. கே. உச்சி** : அவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று கூடலூர் பகுதியே ஒரு பிரச்சினைக்குரியதாகத்தான் இருந்து வருகிறது. அங்கே ஆக்கிரமிப்பு என்பது தீர்க்க முடியாத பிரச்சினையாகும். அதைக் கஷ்டப்பட்டுத் தீர்ப்ப தற்குப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று கிராம அதிகாரிகள், கீழ் வருவாய்த் துறை அதிகாரிகள் சிலபல குற்றங் களைச் செய்வார்களானால் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத் திற்குச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்கள் கொண்டுவருவார்களானால் சட்டப்படி, விதிப்படி இருக்கிற நடை முறைகளை அவர்கள் மேற்கொள்வார்கள்.

**டாக்டர் கே. சமரசம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பொது இடங்களைச் சிலர் ஆக்கிரமிப்பு செய்துவிட்டு அந்த இடத்திலே பல்வேறு வகைகளிலே தண்டத்தீர்வையும் செலுத்தி விட்டு--12 அல்லது 15 வருடங்கள் ஆனவுடன் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தமுடியாதுபோய் கோர்ட்டிற்குச் செல் வதும், அரசுக்குத் தேவை என்று சொல்கிற நேரத்திலே அதை எடுக்கமுடியாது தவித்துக்கொண்டும் இருக்கிற சூழ்நிலையை அரசு அறியுமா ? அப்படியானால் பொதுமக்களுக்குத் தேவை யான, அத்தியாவசியமான இடங்களில் பிற்காலத் தேவைக்கு ஏற்ற இடங்களில் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 மார்ச் 23]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று இந்தப் பிரச்சினை தீவிரமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. என்றாலும்கூட அதிலே பல் வேறு பிரச்சினைகள் எழுகின்றன. நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறோம் என்று வழக்குமன்றத்திலே ரசீது காட்டு கிறார்கள் அந்த இடத்திலே இருக்கிறவர்கள். ஆகவே அந்த இடம் அரசிற்கே தேவையில்லை என்பதுபோல் இருக்கிறது. அந்த இடத்தைக் கொடுத்தால் என்ன என்றுகூட தீர்ப்புகள் வாங்கிக்கொண்டு வருகிற சூழ்நிலைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அதை ஆராய்ந்து அதற்கேற்றபடி சட்டத் திருத்தங்கள் கொண்டுவருவதற்கு வழி வகைகள் இருக்குமானால் அதைச் செய்வதற்குக்கூட அரசு தயா ராக இருக்கும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கார் நில ஆக்கிரமிப்பு என்பது மாநிலம் பூராவும் எல்லா இடங்களிலும் இருக்கிறது. குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்கள்—ஏரிப் புறம்போக்கு, சாலைப் புறம்போக்கு, மயானப் புறம்போக்கு, மேய்ச்சல் தரைப் புறம்போக்கு என்று இப்படி 11 வகையான இடங்களை பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைத்திருக்கிறார்கள்— அந்த நிலங்களில், சில இடங்களில் மேய்ச்சல் தரை என்பது 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று விசாலமாக இருக்கிறது ; சில பேர்கள் அவற்றை ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்து கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை அந்தந்தப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்டு அவர்களுக்கு அடமானம் கொடுக்கலாம் என்று தெரிவித்தால் அவர்களுக்கே அதை கொடுக் கப்படுமா? இல்லையென்றால் அவர்கள் அந்த நிலங்களைக் கிரையம் போட்டால் அவர்களுக்குக் கிரையத்திற்குக் கொடுப் பதற்கு அரசு அனுமதிக்குமா? நான் இதை என் அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்றால் எல்லா இடங்களிலும் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றி யங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்கள், பி.டபிள்யு.டி. ரெவின்யூ, இப்படி கிளாசிபிகேஷன் செய்யப்பட்டு இருக்கின்ற நிலங்களை

யெல்லாம் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அந்த நிலங்களை அடமானம் கொடுக்கலாம் என்று ஊராட்சி தீர்மானித்தால் கொடுத்துவிடுவதற்கு அரசு முடிவு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் அனுப்புகிறபோது ஊர் மக்களுடைய எண்ணங்களினுடைய அடிப்படையில்தான் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று இதிலே இரண்டு வகைகள் இருக்கின்றன. சில பல இடங்களில் ஊராட்சிக்குத் தேவையான இடங்களை தனியார்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏரியோ, குளமோ, மேய்ச்சல் தரையோ ஊராட்சிக்குப் பயன்படவேண்டியது அப்படிப் பயன்படாது தனியார்கள் பயன்படுத்துவதால் அவற்றை மீட்டு ஊராட்சிக்கே கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அவர்களுக்குத் தீர்மானம் போட்டு அடமானம் செய்யலாம் என்று சொன்னால் அதை அரசு கவனிக்குமா என்று கேட்கிறபோது ஊராட்சி ஒன்றியம் ஆங்காங்கு இருக்கிற நிலைமைகளையொட்டி தீர்மானங்கள் போடுவதில் தவறில்லை. அதை அரசு ஆராய்ந்து நியாயமான முடிவை, எது ஏற்றது என்று பார்த்து முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. அதை ஒட்டுமொத்தமாக, ஒரே நிலைமைக்கு நாம் கொண்டு வர இயலாது. ஒவ்வொரு பிரச்னையைத் தனித்தனியாக ஆராய்ந்து, அது பலன் அளிக்கக் கூடியதாகவும் நலன் தரக் கூடியதாகவும் இருக்கும் என்று கண்டறிந்துதான் அதிலே முடிவெடுக்க வேண்டிவரும்.

(முற்பகல் 10-10)

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, சாலைகளையும் சுடுகாட்டு வழிகளையும் ஆக்கிரமிப்பதிலே இன்றைக்கு மிக அதிகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் பொதுமக்கள். அன்னியர்கள் கால ஆட்சியில், ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்ற நேரத்தில், அந்த அந்த ஊரிலே இருக்கிற வெட்டியான், தலையாரியை வைத்துக் கொண்டு, கிராமப் புறம்போக்கு ஆக்கிரமிப்பாளர்களை அந்த அந்த ஆண்டே அப்புறப்



படுத்தி வந்தார்கள். நாம் சுதந்திரம் பெற்ற பின்னாலே, மக்கள் சுதந்திரமாக இன்றைக்கு புறம்போக்கை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே, அந்த, அந்த ஆண்டே சாலைப் புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தினார்களே, அதுபோல், ஆண்டுக்காண்டு, புறம்போக்கு ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த வேண்டுமென்பது தான் கொள்கை. ஆக்கிரமிப்பது என்பதே விதிமுறைக்கு முரணான ஒன்று, அக்கிரமமான ஒன்று. அதை அப்புறப்படுத்துவதை ஆண்டுக்காண்டுதான் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை, ஆறு மாதத்திற்கு ஒருமுறை கூடச் செய்யலாம். ஆனால் ஏற்கனவே நடைபெற்றுவந்து, விடுபட்டது என்பது தவறுதான். அங்கங்கே இருக்கிற உள்ளூர் அதிகாரிகளும் மற்றவர்களும் அவ்வப்போது கவனிப்பார்களானால் நீடித்த காலத்திற்கு இத்தகைய ஒரு குறைபாடு ஏற்படாமல் போய்விடும். ஆகவே, மேலதிகாரிகளும் மற்றவர்களும் இதிலே கவனக் குறைவாக இருந்து விடுவதன் காரணமாக, பல இடங்களில் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் நாங்களே ஆண்டு அனுபவித்து விட்டோம் என்று உரிமை கொண்டாடி, நாங்கள் இருந்து விட்டோம், ஆகவே, எங்களுக்குத் தாருங்கள் என்று கட்டிக்காட்டுகின்ற அளவுக்கு, வசதி படைத்தவர்கள் கூட வாதாடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அவ்வப்போது நடவடிக்கை எடுத்து, ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்வதுதான் சிறந்தது என்று அரசும் கருதுகிறது; அதற்கான நடவடிக்கைகளை வருவாய்த் துறையினர் கவனிப்பார்கள்.

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குத் தேவையான பொது இடங்களை இனிமேலாவது ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்கிற அளவிற்குப் பொது இடங்களுக்குப் பாதுகாப்புத் தர அரசு தனி நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 23

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி நடவடிக்கை என்று சொல்லிப்பார்க்கலாம், எச்சரிக்கை விட்டுப் பார்க்கலாம், விதிமுறைகள் இருக்கின்றன என்று சொல்லிப் பார்க்கலாம், அதற்கென்று தண்டனை உண்டு என்று சொல்லிப் பார்க்கலாமே தவிர, துணிந்து எது வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்று துணிவோடு மக்கள் இறங்குகின்றபொழுது, தடுப்பதற்கான வழிமுறைகளைத்தான் கையாளவேண்டும், அவர்கள் ஆக்கிரமிப்பு செய்ததற்குப் பிறகு, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத்தான் எடுக்கவேண்டியதாக இருக்கிறது. அதை விரைவாகச் செய்ய வேண்டுமென்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் பலருடைய கோரிக்கைகளாக இருக்கின்றன. அதை நிறைவேற்றுவதற்கு அரசு முயலும்.

### கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்.

122—(வினா எண். 11648) **திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கத் தேர்தல் 1986-87-ல் நடத்துவதற்கு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடத்தப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமும் அதன் கீழ் உருவாக்கப்பட்டுவரும் விதிகளும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டவுடன் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கு ஆவன செய்யப்படும்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத் தேர்தலுக்காகத்தான் நமது அரசு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பி பொறுக்குக் குழுவும் பரிசீலனை செய்து, தேர்தல் நடத்தலாம் என்று முடிவு செய்த பிறகு,



1987 மார்ச் 23]

விதியைத் திருத்தி, விரைவில் தேர்தல் நடத்துவதாகத் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. அதிலிருந்து பல பிரச்னைகள் உருவாவதால் அமைச்சர் அவர்கள் அந்த விதியைத் திருத்தி இந்த 1987-வது ஆண்டு முடிவதற்குள் தேர்தல் நடத்துவதற்கு வாக்குறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தனி அலுவலர்களுடைய பதவி நீட்டிப்புக் காலம் பற்றிய திருத்த மசோதா வந்தபொழுதே நான் இருக்கிற நிலைமைகளை விளக்கிக் கூறினேன். அந்த வகையிலே, 1983-லே சட்டம் உருவாக்கப்பெற்று, அதற்குப் பிறகு அதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டு, அந்த விதிமுறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள்தான் நடைபெற்று வருகின்றன. ஆகவே, நடைமுறைப்படுத்தப்பட ஓராண்டுக்காலம் ஆகும் என்ற கணக்கின் அடிப்படையில் எப்படியும் அதை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அரசு அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது என்று அன்றே நான் குறிப்பிட்டேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தியப் பேரரசினுடைய மேன்மைக்குரிய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் விரைவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட வேண்டும் என்று கடிதம் எழுதியிருப்பதாகச் செய்தி ஒன்றைப் பார்த்தேன். தமிழக அரசுக்கும் அப்படிப்பட்ட கடிதம் ஒன்று வந்திருக்கிறதா ? ஆமெனில் அக்கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? அடுத்து, கூட்டுறவுச் சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் என்ன சிக்கல் இருக்கிறது ? ஏன் இந்த ஆண்டே கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தக் கூடாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிடுவது இன்றைய காலையில் செய்தித்தாள்களில் வந்த செய்தியாகும். அதுபற்றிய முழு விவரம் தற்போது

என்னிடம் இல்லை. அவ்வாறு கடிதம் வந்திருக்கிறதா என்று பார்த்து, கூட்டுறவுத் துறைக்கான மானியக் கோரிக்கைமீது நடைபெறும் விவாதத்தின்போது அதைக் குறித்து விரிவாகப் பதில் சொல்ல முடியும். பிரதமர் அவர்களிடமிருந்து என்ன கடிதம் வந்தது, அதற்கு என்ன பதில் எழுதினோம் என்ற விவரங்களை அப்போது எடுத்துச் சொல்ல இயலும்.

மேலும் விதிகள் எல்லாம் தற்போது வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் ஏற்கெனவே அவையில் எடுத்துச் சொன்னேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 13 இயங்கும் பதிவாளர்களின்கீழ் 49 வகையான சங்கங்கள்—ஏறத்தாழ 27,036 சங்கங்கள்—தமிழகம் முழுவதும் பரவலாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்குக் கிட்டத்தட்ட 5,000-க்கும் மேற்பட்டோர்—தனி அலுவலர்கள் என்றும், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் என்றும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவற்றைப் பொறுத்தவரையில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகவே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் இருந்து வருகிறார்கள். எனவே இவற்றிற்கெல்லாம் புதிதாகத் தேர்தல் நடைபெற வேண்டும் என்று வருகிறபோது இவற்றிற்கான பல்வேறு முன்னேற்பாடுகளை நாம் செய்ய வேண்டியிருக்கிறது.

புதிய சட்ட விதிகளை நடைமுறைக்குக் கொண்டு வருகிறபோது அதன் அடிப்படையில் பழைய உறுப்பினர்களோடு புதிய தன்மையின் அடிப்படையில் புதிய உறுப்பினர்களையும் சேர்ப்பதற்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த 49 வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நாம் தேர்தல்களை நடத்த வேண்டும். ஒன்று ஆரம்ப நிலைக் கட்டம். அடுத்து மாவட்ட அளவில் இருக்கிற சங்கங்கள். அதற்கடுத்து மாநில அளவில் இருக்கிற சங்கங்கள் என்று 3 வகையான நிலையில் தேர்தலை நடத்த வேண்டும். எனவே எல்லா கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்த இயலாது. ஆக, பகுதி பகுதியாகத்தான் நடத்த வேண்டும். ஆகவே ஓராண்டுக் காலத்திற்குள் எப்படியும் நடத்த வேண்டும் என்ற



அளவுக்கு அதற்கான முறையில் திட்டங்களைத் தீட்ட துறையினர் வற்புறுத்தப்பட்டிருக்கின்றனர். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளும் செயல்படுகின்றன, தனி அதிகாரிகளின்கீழ் செயல்படும கூட்டுறவு அமைப்புகளும் இருக்கின்றன என்று தெரிவித்தார்கள். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னாலே கூட சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியில் பல லட்சக் கணக்கான ரூபாய் கையாடல் நடைபெற்றதாகச் சொல்லப்பட்டு அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதை அறிவோம். மேலும் கடந்த 10 ஆண்டுக்காலமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின்கீழ் கூட்டுறவு அமைப்புகள் செயல்பட்டாலும் அது நிர்வாகத்தையே சீர்குலைக்கக்கூடிய வகையில்தான் இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகம் செம்மைப்பட வேண்டும் என்று அரசே நடவடிக்கை மேற்கொண்டு பல கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தும் இருக்கிறது. இவ்வாறு அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கிறோமே தவிர கூட்டுறவுத் துறைக்கு ஏற்படும் பல லட்சக்கணக்கான ரூபாய் திரும்பக் கிடைப்பதில்லை. இம்மாதிரியான நிலைமைகளைக் கருதி—கூட்டுறவு அமைப்புகள் தற்போது தனி அலுவலர்களின்கீழ் இருந்தாலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின்கீழ் இருந்தாலும் சரி—விரைவில் புதிய தேர்தல்களை நடத்த வேண்டும் என்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது இந்த ஆண்டே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்வதாக இல்லை. ஓரளவுக்குச் சந்தேகத்தை அளிப்பதாக இருக்கிறது. எனவே இருக்கிற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு 1987 ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தலை நடத்துவோம் என்ற வாக்குறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 23

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்குள் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்றுதான் நான் எடுத்துச் சொன்னேன். அவ்வாறு நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றுதான் சொன்னேன். ஆனால் இந்தத் தேதியில் அதை நடத்திவிடுவோம் என்று மட்டும் இப்போது சொல்வதற்கில்லை என்றுதான் சொன்னேன். புதிய சட்ட விதிகளின்கீழ் பல அறிக்கைகளை அரசு முதலில் வெளியிட வேண்டியிருக்கிறது. சட்ட மற்றும் விதிகளின்கீழ் பதிவாளருக்கான அதிகாரங்களை இயங்கும் பதிவாளர்களின் கீழுள்ள அதிகாரிகளுக்கு வழங்கி அரசு ஆணை வெளியிட வேண்டியிருக்கிறது. மேலும் புதிய சட்ட விதிகள், ஷரத்துக்கள் மற்றும் கிளைகள் ஆகியவற்றை விளக்கி விரிவான சுற்றறிக்கையைப் பதிவாளர் அவர்கள் வெளியிட வேண்டியிருக்கிறது. புதிய சட்டம் மற்றும் விதிகள் பற்றி கூட்டுறவுப் பதிவாளர் மற்றும் இயங்கு பதிவாளர்களின் கீழ் இயங்கும் மாநிலத்தில் உள்ள பல்வேறு அலுவலர்களும் நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டு அவர்களுக்குத் தேர்தல் வகுப்புகளை நடத்த வேண்டியிருக்கிறது. வேறு வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடத்துவதற்கான கால அளவு குறிப்பிடப்பட்டு புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான கால அவகாசமும் அறிவிக்கப்பட வேண்டியிருக்கிறது. இவ்வளவையும் செய்து தேர்தல்களை நடத்த வேண்டியிருக்கிறது. மாற்றியமைக்கப்பட்டுள்ள புதிய சட்டம். . . .

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒத்த வகையில் வெவ்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய விதிகளை உருவாக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பணிகள் இருக்கின்ற காரணத்தால் குறிப்பிட்ட இந்த நாளில் தேர்தல் நடைபெறும் என்று, சட்டமன்றத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மாதிரி



1987 மார்ச் 23]

சொல்லுவதற்கில்லை. ஓராண்டுக்காலம் பெறப்பட்டிருக்கிறது. அதற்குள் நடத்த வேண்டுமென்று மத்திய கூட்டுறவு அமைச்சரும் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் குறிப்பிட்டதைப் போன்ற சிலபல மாநிலங்களில் கூட்டுறவுத் தேர்தல் பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருப்பதால் விரைவிலே கட்டாயம் அந்தத் தேர்தலை நடத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களால் எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் எழுதப்பட்ட அந்தக் கடிதம் இன்று காலை பத்திரிகைகளில்கூட வரப்பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்பிலேயிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களிலும், அதே போல அதிகாரிகள் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களிலும் உறுப்பினர்களாக ஆவது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. புதிய விதியைத் தளர்த்தி (automatic membership) ஆக யார் வேண்டுமானாலும் சேரலாம் என்ற வகையில் வாய்ப்புத் தர வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு முன்பு எல்லோரும் உறுப்பினர்களாக ஆவதற்காக கால அவகாசத்தை நீட்டித்து, அதற்கிடையிலே அந்த வாய்ப்பைக் கூடுதலாக, பொதுமக்களுக்கு வழங்க, கூட்டுறவுச் சங்கங்களின் ஆலோசனைக் குழுவை அரசாங்கம் அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று பொறுக்குக் குழுவினர் இவற்றையெல்லாம் ஆராய்ந்து, ஏற்கெனவே கூட்டுறவு முறையில் இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் ஆராய்ந்து, வேறுபல மாநிலங்களுக்கும் சென்று அந்த மாநிலங்களின் உள்ள தன்மைகளை ஆராய்ந்து, அந்தப் பொறுக்குக் குழுவில் இருந்த பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம், உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே சங்கடங்கள் இருக்கக் கூடாது, அவர்களை உறுப்பினர்களாகச்

சேர்ப்பதை யாரும் தடுக்கக் கூடாது என்ற முறையில் சிலபல முறைகளை வகுத்து, உறுப்பினர்கள் தாராளமாகச் சேர வேண்டும் என்ற அளவிற்கு வைத்திருக்கிறார்கள். அந்த முறையிலே பழைய உறுப்பினர்களோடு, புதிய சட்ட திட்டத்தின்படி புதிய உறுப்பினர்களைச் சேர்க்க குறைந்தது ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் என்று வைத்துத்தான் தர வேண்டும். அதைத்தான் முதலிலே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அதற்கான வாய்ப்பைத் தந்து, அதற்கடுத்தபடியாக அவர்கள் தொடர்ந்து சங்கத்தை நடத்த கால வரையறை வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று புதிய உறுப்பினர்கள் யார், யார், எந்த எந்த அமைப்பிலே சேர விரும்புகிறார்களோ அவர்கள் எல்லோருக்கும் தாராளமாக இடம் கொடுக்கும் வகையில், பொறுக்குக் குழுவின் எண்ணத்தை நிறைவேற்றுகிற அளவிற்கு வாய்புத் தர வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். அவர்கள் சொல்லுவது மாதிரி ஆலோசனைக் குழு நியமிப்பதைக் குறித்து அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை. அதைப்பற்றித் தனியாகத்தான் ஆலோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண்கள் 123 முதல் 127 முடிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

### தமிழகப் பேருந்துக் கழக தொழில்நுட்பக் கல்லூரி.

128—(* வினா எண் 2884) **திரு. மா. சின்னராசு மற்றும் திரு. க. சோலைராசு** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பேருந்துக் கழகங்களின் மூலம் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி என்னுமிடத்தில் போக்குவரத்துக் கழகங்கள்



நிதியுதவியுடன் சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒரு தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) துவங்க அரசின் அனுமதி கோரியுள்ளது. அரசின் அனுமதி கிடைத்தால் துவக்கப்படும்.

**திரு. மா. சின்னராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஈரோடு நகரில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற கல்லூரி இரண்டாவது தொழில் நுட்பக் கல்லூரியா? அது சுயநிதிக் கல்லூரி என்ற அடிப்படையில் அமைக்கப்படுமா அல்லது அரசு நிதியுதவியோடு உதவி பெறுகிற கல்லூரியாக அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆய்வில் இருக்கிறது. ஏற்கெனவே அமைக்கப்பட்டிருப்பது இன்ஜினியரிங் கல்லூரி. இப்போது திட்டமிடப்பட்டிருப்பது பாலிடெக்னிக். இப்போது இருக்கின்ற நிலையிலே பாலிடெக்னிக் அமைப்பதைவிட ஐ.டி.ஐ. அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்ற ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அது குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. அனுமதி தர வேண்டுமென்று அரசுக்கு எழுதியிருக்கிறோம். அந்த அனுமதியைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. சோலைராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் உள்ள பொறியியல் கல்லூரியில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது? அவர்களுக்கு வழங்கப்படுகிற வேறு சிறப்புச் சலுகைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: தலைவர் அவர்களே, தொழிலாளிகள் தங்களுடைய பங்குத் தொகையாக அந்தக் கல்லூரியை நடத்துவதற்குப் பணம் செலுத்தியிருக்கிற காரணத்தால் 40 சதவீதம் அந்தத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் அவர்கள் கல்லூரியில் சேர்ந்த

[1987 மார்ச் 23

பிரிவு தனிப்பட்ட முறையிலே தொழிலாளர்களுடைய குழந்தைகள் என்ற வகையில் சலுகைகள் அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காரணம் அங்கே சேரக்கூடியவர்களை எல்லாம் சமமாகப் பாவிக்க வேண்டுமென்று அந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் அவர்களுக்கென்று சில சலுகைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அது பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் பேருந்துக் கழகங்களின் மூலமாக எத்தனை கல்லூரிகள் நடைபெறுகின்றன? மேலும், பேருந்துக் கழகங்களின் மூலமாக மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, கல்லூரி என்ற வகையிலே இன்ஜினியரிங் கல்லூரி மாத்திரம்தான் துவக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்கள் ஐ.டி.ஐ.-க்களை நடத்திக்கொண்டிருக்கின்றன: மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே துவக்கியாகி விட்டது. அதற்கான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு, இப்போது கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கான கட்டிடங்கள் கட்ட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கும் திருச்சி மாநகரில் சேரன் போக்குவரத்துக் கழகத்தின் தொழிலாளர்கள் சுய நிதிக்குப் பங்குத் தொகை கட்டத் தயாராக இருக்கும் பட்சத்தில், ஒரு ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் திருச்சிக்குத் தர முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, திருச்சி ஒரு நல்ல வளர்ந்த நகரம். ஏற்கெனவே அங்கே கல்லூரிகள், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்குகள் எல்லாம் இருக்கின்றன:



1987 மார்ச் 23]

எனவே இன்னும் ஒன்று அங்கே அவசியமில்லை என்று நினைக்கிறேன். போக்குவரத்துக் கழகம் அங்கே ஐ.டி.ஐ. நடத்துகிறது. எனவே புதிதாகத் துவக்க அவசியம் ஏற்படாது.

திரு. கூடலூர் இ. வி. வேலு: பேரவைத் தலைவரவர்களே, அனைத்து மாவட்டங்களிலும்—ஈரோடு, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் துவக்கியிருக்கிறதென்று சொன்னார்கள். போக்குவரத்துக்கழகங்களிலேயே அதிக லாபம் ஈட்டுவது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்தான். ஆனால் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் இல்லை. எனவே அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு முன்னுரிமை அளித்து, விழுப்புரம், திருவண்ணாமலை போன்ற பகுதிகளில் இன்ஜினியரிங் காலேஜ் அல்லது ஐ.டி.ஐ. துவக்க அரசு முன்வருமா? அப்படி ஒரு பரிசீலனை அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படி ஒரு பரிசீலனை இல்லை. அதற்குக் காரணம், இது சென்னைக்கு அருகாமையில் இருக்கிறது. சென்னையில் எல்லாம் இருப்பதால், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஐ.டி.ஐ. அங்கே இருக்கிறது. பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஐ.டி.ஐ. துவக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அப்படி இல்லை என்றால் அதைத் துவக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கேள்வி; யாராவது கேட்பார்கள் என்று பார்த்தேன். ஆதலால் நானே அமைச்சரைக் கேட்கிறேன். என்னுடைய தொகுதியில் இந்த ஆண்டே துவக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### அரசுத் துறையில் ஸ்டவ் தொழிற்சாலை ஏற்படுத்துதல்.

129—(* வினா எண். 3045) திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமையல் வாயுவினால் எரியும் ஸ்டவ்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை அரசுத்துறையில் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் இல்லை.

### சென்னை மாநகராட்சி மோட்டார் வாகன வரி

130—(* வினா எண் 3256) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்கு மோட்டார் வாகன வரியாக ( Taxation Fees ) வசூலிக்கப்படும் தொகையிலிருந்து சாலைகளைப் பழுது பார்ப்பதற்கு குறிப்பிட்ட தொகை ஒதுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மோட்டார் வாகன வரியினை அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்திடுவது பற்றி தற்பொழுது இருந்துவரும் முறையை மறுபரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை அரசு ஆய்வு செய்து மாநிலத்தின் நிதிநிலை சீர்குலையாமல் இருக்கும் பொருட்டும், தற்பொழுது இருந்துவரும் முறை சீராக நடைபெற்று வருவதால் இம்முறையை தொடர்ந்து நீடித்து வரலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் வாகனங்கள் மூலம் வசூலிக்கப்படும் வரி எவ்வளவு? அரசு வாகனங்கள் மூலம் வசூலிக்கப்படும் வரி எவ்வளவு என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மொத்தமான கணக்கு இல்லை. எனவே தனித் தனியாகச் சொல்ல வாய்ப்பு இல்லை. இதைப் பகிர்ந்துகொள்வது எப்படி என்றுதான் இருக்கிறது. இதற்கான மொத்தக் கணக்கு என்னிடம் இல்லை.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகரத்தில் கார்ப்பரேஷன் பஸ்கள் நிறையச் செல்கின்றன. அதனால் சாலை பாதிப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அவற்றைச் சரி செய்ய, போக்குவரத்துக் கழகத்தில் சூழல் நிதி ஏற்படுத்தி, சாலை சீரமைப்புப் பணிகளை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது மக்களுக்கு ஆங்காங்கே போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தருவதுதான் போக்குவரத்துக் கழகங்களின் கடமை. பாதைகளைப் பராமரிக்க தனித் தனித் துறைகள் இருக்கின்றன. அந்தப் பொறுப்பை மாநகராட்சிதான் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் போக்குவரத்துக் கழகங்களின்மீது சுமத்தினால், இந்தப் பணி நடக்காமல் வேறு ஏதாவது பணிதான் நடந்துகொண்டிருக்கும். எனவே அப்படிப்பட்ட அபிப்பிராயம் இல்லை.

### விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு உதவிப் பணம்.

131—(* வினா எண் 4755) திரு. கே. எம். தங்கமணி, திரு. ஆர். ரெங்கசாமி, திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்ற தியாகிகளுக்கு அரசு வழங்கும் உதவிப்பணத்தை அதிகமாக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) இதுவரை உதவிப்பணம் கோரி வந்த மனுக்களுள் எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன?

[1987 மார்ச் 23

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம், மாநில ஓய்வூதியம் மட்டும் பெறுபவர்களுக்கு 10—6—1986 முதல் மாதம் ரூ. 150-ல் இருந்து ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) சுமார் 278 மனுக்கள் தற்போது நிலுவையில் உள்ளன.

(முற்பகல் 10-30)

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலே தேசப்பிதா காந்தியடிகளின் தலைமையில் தேசபக்தர்கள் உடல், பொருள், ஆவி ஆகியவற்றைத் துச்சமாக மதித்துப் போராடியிருக்கின்றார்கள். அவர்களால் நாடு சுதந்திரம் பெற்றும் அந்தச் சுதந்திரத்தின் பயனை நாட்டு மக்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி போராடிய தியாகிகளின் குடும்பங்கள் அழிந்துபோகாமல் காக்கவேண்டுமென்பது ஜனநாயக கடமையாக நம்மிடம் இருக்கின்றது. இப்போதுள்ள நிலைமை தியாகிகளுடைய பிள்ளைகளுக்கு மருத்துவக் கல்லூரிகளில் ஒரு சதவிகிதம் இடம் ஒதுக்கீடு என்று இருக்கிறது. அதுபோலவே தொழில் கல்வி, பட்டப்படிப்பு நிறுவனங்களிலும் ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா? தியாகிகளின் பிள்ளைகளுக்கு ஏனைய தகுதிகள் இருந்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பில் அரசு முன் உரிமை கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்தனை கருத்துக்களையும் மனதிலே கொண்டுதான் ஏற்கெனவே அந்த முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதிலேகூட பார்ப்பீர்களானால் பல சலுகைகள் முன்னரே தர ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. முதலிலே இந்தத் தொகை ரூ. 50 ஆக இருந்தது. 1972-லே ரூ. 75 ஆக உயர்த்தப்பட்டது. 1979-லே அதை இந்த அரசாங்கம் ரூ. 100 ஆக உயர்த்தியது. 1981-லே அதை ரூ. 150 ஆக உயர்த்தியது. 1986-லே அதை ரூ. 250 ஆக உயர்த்தியது. எனவே இதையெல்



1987 மார்ச் 23]

லாம் பார்க்கிறபோது தேவையான அளவுக்கு இப்போது நாம் செய்திருக்கிறோம். தாங்கள் சொல்லிய கருத்துக்களைப் பரிசீலிக்கலாமா என்று பார்க்கவேண்டும். மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றவை கேள்விக் குறியாக இருக்கின்றன. அவை பற்றி தனியாக அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தியாகிகள் பென்சன், அரசு உதவி கோரி மனுப்போட்டு உள்ளார்கள். கடந்த 2 வருடங்களாக கவர்ன்மெண்டில் பெண்டிங்க்-ல் இருக்கிறது. சீக்கிரமாக கவர்ன்மெண்ட் ஆர்டர் போடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனு செய்தவர்கள் உண்மையாகவே அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால்தான் இதிலே காலதாமதம் ஏற்படுகிறது. போலியான தகவல்கள் கொடுக்கப்பட்டன என்று இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்வது என்னுடைய கடமையாக இருக்கிறது. தவறாகக் கொடுக்கப்பட்டால், உண்மையாகவே போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மரியாதை இல்லாமல் போய்விடும். அரசாங்கத்தில் நிலுவையிலே உள்ள மனுக்களுக்குச் சரியான ஆதாரம் கிடைக்காத காரணத்தினாலேதான் காலதாமதம் ஆகிறது. அரசாங்கம் கொடுக்காமல் விடவேண்டுமென்ற நோக்கத்தோடு விட்டுவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கு இருவகைப்பட்ட மக்கள் போராடியிருக்கின்றார்கள். ஒன்று, காந்தியடிகளின் தலைமையிலும் மற்றொரு சாரார் நேத்தாஜி அவர்கள் தலைமையில் வெளி நாடுகளில் இருந்துகொண்டு போராடியிருக்கின்றார்கள். இப்போது தாயகம் திரும்பியிருக்கின்றார்கள். அவர்களும் மனு கொடுத்திருக்கின்றார்கள். அந்த மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இதுவரையில் கிடைக்காதவர்களுக்கு விரைந்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். மொழிப்

போராட்டத்தில் தமிழகத்திலே ஆயிரக்கணக்கானவர்கள் உயிர் இழந்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் சில சலுகைகள் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னேன். இன்றைக்கு மனு நம்மிடத்திலே வந்து, நிலுவையில் இருப்பது 278 மனுக்கள் தான். அதுபற்றிய விவரம் பிரிவு வாரியாக இல்லை. அந்த மனுக்கள் 278 நிலுவையில் இருக்கின்றன. சரியான ஆதாரங்கள் கிடைக்காத காரணத்தினால்தான் அவை நிலுவையிலே இருக்கின்றன. அரசாங்கம் கொடுக்கக்கூடாது என்ற நிலையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மொழி பிரச்சினையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பற்றிச் சொல்லும் போது அதற்கு இது சரியான சந்தர்ப்பம் இல்லை. அதைத் தனியாகப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தியாகிகளுடைய சம்பளம் அதிகரிப்பது விஷயமாக நீலகிரி மாவட்டத்தில் ஒரு குழு என்னைச் சந்தித்தப்பிறகுதான் அந்த வினாவையே நான் எழுப்பினேன். திரு. மாதண்ணன் என்பவர் சமீபத்தில் காலமாகி விட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 278 மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன என்று சொன்னார்கள், அதில் அவர் பெயர் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி இருந்தால் அவருடைய மனு உடனடியாகப் பரிசீலிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவரும் உயிருடன் இல்லை என்று உறுப்பினர் சொல்கின்றார். நம்மிடத்திலே உள்ள மனுக்களில் அவர் பெயர் இருக்கிறதா என்று தெரியவில்லை. என்னிடம் மொத்த கணக்குதான் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் குறிப்பிடுவதைப்பற்றி தகவல் இல்லை.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு 1986-ல் இருந்து ரூ. 250 அளவுக்குக் கொடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர்



அவர்கள் சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு இப்போது இருக்கின்ற வயதைப் பார்த்தால் இன்னும் கொஞ்சம் காலம்தான் இருப்பார்கள். ஆகவே அவர்களுக்கு பஸ் வசதி, ரெயில் வசதி ஆகியவற்றை இந்த அரசு செய்து கொடுக்குமா? மத்திய அரசிலே செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை இந்த அரசு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு பெரிய அரசு, அதற்குத் தகுந்தாற்போல் செய்கிறது. மாநில அரசு சிறிய அரசு, இதற்குத் தகுந்தாற்போல் செய்துகொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னேன். மிகக் குறுகிய காலத்திலேயே நாங்கள், 75 ரூபாயாக இருந்ததை 250 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய சலுகைகளைப் பொறுத்தவரையில் இந்த அரசுக்கு இல்லையென்று சொல்லுவதற்கு மனதில்லை. பரிவுடன் கவனிக்கிறது இந்த அரசு. ஆனால் அரசின் நிதி நிலைமையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அதுபற்றித் தனியாக பரிசீலிக்கலாம்.

**திரு. எஸ். குமார குருபர ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் சுதந்திரத்திற்காக தென் பகுதி சீமையை ஆண்ட வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்டான். அந்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கு பென்சன் இல்லையென்று சொல்லி அரசிடமிருந்து தகவல் வந்ததாக நம்பப்படுகிறது. பால்ராஜா என்கிற இராஜாமணிப்பாண்டிய மாப்பிள்ளை சாமிக்கும் அவருடன் சேர்ந்த ஐவருக்கும் இதுவரை பென்சன் தொகை வரவில்லை. அவருக்கு பென்சன் வழங்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரது கோரிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறபடி சம்பவம் இருக்கிறதா? இருந்தால்

கோரிக்கையில் ஏதாவது குறைபாடு இருக்கிறதா என்றும் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு அதுபற்றி தெரிந்தால், ஒரு கடிதத்தின் வாயிலாக அரசுக்குத் தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. முத்துவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய விடுதலைப் போராட்ட வீரரான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் திருவுருவப் படத்தை எல்லா அரசு அலுவலகங்களிலும் வைக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருந்தும் இன்னும் பெருவாரியான அரசு அலுவலகங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவப் படத்தை வைக்கவில்லையே, இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியம் பற்றியது கேள்வி. திருவுருவப் படத்தைப்பற்றிய கேள்வி இதிலே இல்லை. இதுபற்றிய தகவல் ஏதும் இல்லை. தனியாக இதைப் பார்க்கலாம்.

### திருநெல்வேலி கே. டி. சி. தொழிற் சங்கம்.

132—(* வினா எண் 8844) **டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கே. டி. சி. யில் எந்த தொழிற்சங்கத்திற்கு பஸ் பாசும், வேலை செய்யாமல் சம்பளமும் (OD; ) கொடுக்கப்பட்டு வருகிறது?

(ஆ) இதனை மற்ற சங்கங்களுக்கும் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் அண்ணா தொழிலாளர்கள் சங்கம் மற்றும் கட்டபொம்மன் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் ஆகிய தொழிற்சங்கத்தில் தலைமை பொறுப்பில் உள்ளவர்களுக்கு





மட்டும், நிர்வாகத்தோடு பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும், பணிமனைகளில் தொழிலாளர்கள் குறைகளைக் கேட்டு அறிவதற்கும் வசதியாக அயல்பணி வருகைப் பதிவும் மற்றும் இலவச அனுமதி பயணச் சீட்டும் வழங்கப்படுகின்றன. மற்ற தொழிற் சங்கங்களுக்கும் பேச்சு வார்த்தைக்காக வரும்போது இச்சலுகை வழங்கப்படுகிறது.

### மோட்டார் வாகன விபத்து ஈட்டுத் தொகை.

133—(* வினா எண் 9828) **திருமதி பி. லட்சுமி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்குகளில் மரணம் அடைந்தவருக்கு வழங்கப்படும் தொகை உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு வழக்குகளில் மரணம் அடைந்தவருக்கு வழங்கப்படும் தொகை உயர்த்துதல் சம்பந்தமாக கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி பி. லட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விபத்து நடந்து மரணமடைந்தவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லையென்று சொன்னார்கள். இந்த ஆண்டிலிருந்தாவது இந்த உதவித் தொகையை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்துகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லையென்றுதான் நான் சொன்னேன். ஆகவே, ஏற்கெனவே கொடுக்கப்படுவது தொடர்ந்து கொடுக்கப்படும்.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய காலத்தில் விசாரணையை நடத்தாமல், விசாரணையை நீட்டிப்பதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்த உதவித் தொகை சீக்கிரம் கிடைக்கவில்லை. ஆகவே, இனிமே லாவது குறுகிய காலத்தில் விசாரணையை நடத்தி பாதிக்கப் பட்டவர்களுக்கு விரைவில் உதவித் தொகை கிடைக்க ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணையை விரைவுபடுத்துவது பற்றி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் விசாரணையை விரைவாக நடத்துவதன் காரணமாக விதி முறைக்கு மாறாக காரியங்கள் நடைபெறாமலும் பார்க்க வேண்டியிருக்கிறது. அதையும் நாம் கவனிக்க வேண்டும். விசாரணையை விரைவுபடுத்த வேண்டும் என்பதில் அரசுக்கு எந்தச் சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தமிழகத்தின் பழைய கல்வெட்டு, ஓலைச்சுவடிகள்

**134—(* வினா எண் 3234) திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் பண்டைய கல்வெட்டுகளும் ஓலைச் சுவடிகளும் மைசூரில் உள்ள எபி இராபிக் அலுவலகத்தில் உள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளை தமிழ்நாட்டுக்கே கொண்டு வந்து பிரசுரம் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கல்வெட்டுக்கள் உள்ளதை அரசு அறியும். அங்கு ஓலைச் சுவடிகளை சேகரித்து வைப்பதில்லை. மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் மைசூர் தலைமைக் கல்வெட்டாய்வாளர் அலுவலகத்தில் படியெடுத்து வைக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுப் படிகளைப்





(PAPER INSCRIPTIONS) பெற்று அவைகளை அச்சாக்கி நூலாக வெளியிட, பல ஆண்டுகளுக்கு முன் அரசு நடவடிக்கை எடுத்து, இது சம்பந்தமாகப் பல ஆண்டுகள் தொடர்ந்து மத்திய அரசினுடைய கல்வெட்டுப் பிரிவைக் கேட்டுக் கொண்டதற் கிணங்க, கல்வெட்டுப் படிகளைப் படித்து, நூலாக வெளியிடத் தவணை முறையில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

## கிராமப்புற மனமகிழ் மன்றங்கள்

**135—(* வினா எண் 7937) திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் பல இடங்களில் 'மனமகிழ் மன்றம்' என்ற பெயரால் சூதாட்டக்கூடமாக நடைபெற்று வருவதைக் கருத்திற்கொண்டு அவைகளுக்கான அனுமதியினை ரத்து செய்திடும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-40)

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே மனமகிழ் மன்றம் துவக்குவதனுடைய நோக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் யார் துவக்க விரும்புகிறார்களோ அவர்களே அந்த விதிகளைச் சொல்ல வேண்டும். முக்கியமாக மனமகிழ்ச்சி, கல்வி, போன்றவற்றின் அபிவிருத்திக்காக இந்த மனமகிழ் மன்றங்கள் தோற்றுவிக்கப் படுகின்றன.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் என்கின்ற பெயராலே பல இடங்களிலே சூதாட்டங்கள் பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்றன, சட்டத்தை ஏமாற்றி. எனவே, அதைக் கருத்திற்

கொண்டு அதற்கென்று தனியாக அதிகாரிகளை நியமித்து அதன் மூலமாக அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, தமிழ்நாடு பூராவும் எத்தனை மனமகிழ் மன்றங்கள் இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் என்ற பெயரில் சூதாட்டம் நடக்குமானால் அந்தத் தகவலைக் கொடுத்தால் போலீசார் நடவடிக்கை எடுக்கலாம் அல்லது சம்பந்தப்பட்ட சப்-ரிஜிஸ்திரார் செக்ஷன் 38, உட்பிரிவு 2-இன்கீழ் அந்த உரிமத்தை ரத்து செய்யலாம்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மகிழ்ச்சியோடு கேட்கலாம்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** கேள்வி 134-இல் ஒரு துணை வினா. தமிழ்நாட்டினுடைய வரலாற்றுக்கு மிக்க தேவைப்பட்ட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி அது அல்ல இது அடுத்த கேள்வி.

**நெல்லிக்குப்பத்தில் கால்நடை மருந்தகம் அமைத்தல்**

136—(*வினா எண் 8793) **திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் நகரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் கருத்துரு அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் பகுதி நிறைந்த விவசாயப் பெருமக்களை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும். அங்கே



இருக்கின்ற விவசாயப் பெருமக்கள், கால்நடைகளுக்கு மருந்து தேவைப்படுமேயானால் கிலோமீட்டர் கணக்கில் நடந்து சென்று வைத்தியம் பார்க்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகின்றபொழுது இல்லை என்று சொன்னார்கள், இருந்தாலும் நடப்பு நிதியாண்டிலேயாவது ஒரு மருந்தகத்தை அமைக்கின்ற செயற்குறிப்பை மாண்புமிகு அமைச்சரவர்கள் உருவாக்கித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்திற்கு அருகில் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் காராமணிக் குப்பம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் உள்ளது. தவிர, மூன்று கிலோமீட்டர் தூரத்தில் மேல்பட்டாபாக்கம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் உள்ளது. மேலும் ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சி. என். பாளையம் என்ற ஊரில் ஒரு கால்நடை மருந்தகம் உள்ளது. நெல்லிக்குப்பத்திலேயே தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒரு கால்நடை கிளை நிலையம் இயங்கி வருகிறது. அந்த நகராட்சியிலிருந்து, கால்நடை மருந்தகம் துவக்க வேண்டுமென்று விண்ணப்பம் இல்லை.

**திரு. ச. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு எத்தனை கால்நடை மருத்துவ மனைகள் அரசால் அனுமதிக்கப்பட்டன? இந்த ஆண்டு எத்தனை கால்நடை மருத்துவமனைகள் அனுமதிக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 10 மருந்தகங்கள், இந்த ஆண்டும் 10 கால்நடை மருந்தகங்கள் திறக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

[1987 மார்ச் 23

**கன்னியாகுமரி மாவட்டத்தில் குச்சிக்கிழங்கை பயன்படுத்தி சாராய ஆலை நிறுவுதல்.**

**137—(*வினா எண் 10331) திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் குச்சிக்கிழங்கை பயன்படுத்தி ஒரு சாராய ஆலை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குச்சிக் கிழங்கைப் பயன்படுத்தி வடிசாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, சாராய ஆலையைப் பற்றிய கேள்வி இது. இப்பொழுது குச்சிக் கிழங்கிலிருந்து பலவகையான பீர் கிடைக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆகவே, பீர் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்குகின்ற செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எண்ணமும் தற்போது இல்லை.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு அதிகமாகக் கிடைக்கிறது. எந்தவொரு தொழிற்சாலையும் கிடையாது. மேலும் படித்தவர்கள் அதிகமாக இருக்கின்ற மாவட்டமாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாக, அரசே தொழிற்சாலையை உருவாக்குவதற்குப் பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடிசாராயம் உற்பத்தி செய்வதற்குப் பதில், லிங்கவிட் குளுகோஸ் தயாரிப்பதற்கு அங்கே ஆலைகள் அமைக்கலாம்.



1987 மார்ச் 23]

**திரு. மா. மணிமாறன்:** தலைவரவர்களே, புதிதாக ஏதாவது சாராயத் தொழிற்சாலை திறக்க அரசு ஆராய்ந்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, நிச்சயமாக ஆராயவில்லை.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தர்மபுரி, சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களில்தான் குச்சிக்கிழங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தக் குச்சிக்கிழங்கைப் பயன்படுத்தி தர்மபுரி மாவட்டத்தில் தனியார் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ ஒரு எரிசாராயத் தொழிற்சாலை அல்லது குளுக்கோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, 1—1—1987-க்குப் பிற்பாடு தமிழ்நாட்டில் சாராய விற்பனை இல்லை; தயாரிப்பும் இல்லை. ஆகவே தனியார் துறையாக இருந்தாலும் அரசுத் துறையாக இருந்தாலும் சாராவி தயாரிக்கும் உத்தேசம் இல்லை. மேலும் ஒரு லிட்டர் கருப்பஞ்சாற்று கசடிலிருந்து தயாரிக்கப்படும் சாராவிக்கும் குச்சிக்கிழங்கி லிருந்து தயாரிக்கும் சாராவிக்கும் அதிக விலை வித்தியாசம் இருக்கிறது. கருப்பஞ்சாற்று கசடு சாராவி ரூ. 3.61 முதல் ரூ. 4.32 வரை ஆகிறது. ஆனால் குச்சிக்கிழங்கு சாராவிக்கு ரூ. 8.23 ஆகிறது. அதனுடைய மூலப்பொருளுக்கு மட்டும்; சாராவி தயாரிக்கின்ற செலவு ரூ. 12.74 வருகிறது. ஆகவே குச்சிக்கிழங்கிலிருந்து சாராவி தயாரிப்பதாக இருந்தாலும் அதை யாரும் வாங்க முன்வரமாட்டார்கள். குளுக்கோஸ் தயாரிக்க வேண்டுமானால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பரிந்துரை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு வருமானால் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதுபற்றி தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

[1987 மார்ச் 23

## திட்டக் குழு.

136—(*வினா எண் 11566)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'திட்டக்குழு'வை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1982 ஆம் ஆண்டு முடிவில் மாநிலத் திட்டக் குழு இறுதியாக திருத்தி அமைக்கப்பட்டது. இக்குழுவிற்கு, திட்டங்களைத் தயாரிப்பதில் தலைவருக்கு உதவியாக உதவித் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலாளரைத் தவிர மேலும் சில பகுதி நேர உறுப்பினர்கள் மற்றும் முழுநேர உறுப்பினர்களின் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு 31—10—1984 அன்றுடன் முடிக்கப்பட்டு விட்டன. 1986 ஆம் ஆண்டு முதல் சில கூடுதல் பணிகள் மாநிலத் திட்டக் குழுவின் பொறுப்பிற்கு விடப்பட்டன. இக்கூடுதல் பொறுப்புகள் மற்றும் மாநிலத் திட்டக் குழுவின் பணிகளின் விவரங்களடங்கிய அறிக்கை† மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டு உள்ளது. இப்பணிகளை செயல்படுத்த மாநிலத் திட்டக் குழுவின் அமைப்பை மாற்றி அமைக்கும் அவசியம் ஏற்படின், மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. செ. செம்மலை:** தலைவரவர்களே, மாநிலத் திட்டக் குழு திட்டங்களை இறுதியாக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்ற வகையில் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பொறுப்புகள் அதிகமாக உள்ள இந்தக் குழுவின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா?

† 348 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



1987 மார்ச் 23]

மேலும், குழுவிலே உறுப்பினர்களை நியமிக்கும்போது பொருளாதார நிபுணர்கள் இடம்பெறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தக் குழுவிலே காலியாக உள்ள இடங்களுக்குத் தகுதியானவர்களை நியமிக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. செ. செம்மலை:** தலைவரவர்களே, திட்டங்கள் மக்களிடமிருந்துதான் உருவாக வேண்டும். அதன் பிறகு அதிகாரிகள் அவற்றைச் செயல்படுத்த வேண்டும். அப்படி இருந்தால்தான் திட்டங்களுடைய பயன்கள் மக்களுக்குப் போய் சேரும், நன்மை ஏற்படும் என்பது பொதுவான விதி. அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் மாவட்டத் திட்டப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படித் திட்டப் பிரிவுகளை அமைக்கின்றபோது அந்தப் பிரிவுகளுடைய பணிகள் என்னவாக இருக்கும் என்று தெரிவித்தால் இந்த அவைக்கு நல்ல தகவலைக் கொடுத்ததாக இருக்கும். அந்தப் பிரிவுகள் மக்களிடமிருந்து திட்டங்கள் உருவாகிற வகையில் பணிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, தற்போது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், நீலகிரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் திட்டப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களிலும் இந்த மாதிரி படிப்படியாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மக்களிடமிருந்து எந்தத் திட்டம் தேவை என்று அறிந்து, மேலே அனுப்புவதுதான் மாவட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிற திட்டப் பிரிவுகளின் பணியாக இருக்கும்; அந்த வகையில்தான் திட்டப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-லிருந்து திட்டக் குழுவிற்கு Non-official members இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[1987 மார்ச் 23

குறிப்பிட்டார்கள். எந்த அடிப்படையில் Non-official members நியமிக்கப்படுவார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும் டிஸ்ட்ரிக்ட் ப்ளானிங் செல்லிலே எந்த வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாக வினா போடும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

**சென்னையில் வெளிநாட்டு இந்தியர் மூலம் ஓட்டல்கள்.**

**139—(*வினா எண் 11887) திரு. டி. ஆர். வேங்கடரமணன்) :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் வெளிநாட்டு இந்தியர் மூலம் ஹோட்டல் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் முதலீட்டுடன் அவர்கள் பங்கேற்கும் கூட்டுத் திட்டங்களாக சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள இடத்திலும், வேப்பேரியில் கண்ணப்பர் திடலை ஒட்டியுள்ள இடத்திலும் நட்சத்திர ஓட்டல்கள் கட்ட திட்டமிட்டு இருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஓட்டல்களைக் கட்டுவதற்கு யார், யாருக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது? எத்தனை காலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன ரூபாய் முதலீடு செய்யப்பட இருக்கிறது? இதில் தமிழக அரசு ஏதாவது முதலீடு செய்ய இருக்கிறதா?



1987 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு சற்று தொலைவிலும், வள்ளுவர் கோட்டத்திற்கு அருகிலும் சர்வதேச சுற்றுலா மையம் உருவாக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது. முதல் கட்டமாக வள்ளுவர் கோட்டம் அருகில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் 64 கிரவுண்ட் நிலத்தில் சர்வதேச சுற்றுலா மையம் உருவாக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஓட்டல் வளாகம் கீழ்க் கண்ட சிறப்பம்சங்கள் கொண்டதாக இருக்கும் :—

(1) 720 பேர் தங்க வசதி, (2) பொழுது போக்கு வசதிகள், (3) உடல் பயிற்சிசாலை, (4) தகவல் நிலையம், (5) சுற்றுலா அலுவலகங்கள், (6) பிற மாநிலத் தகவல் மையங்கள், (7) கைவினைக் கூடம், (8) சர்வதேசக் காட்சியகங்கள், (9) விற்பனைக் கூடங்கள். இந்தத் திட்டம் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் முதலீட்டைப் பயன்படுத்தி கூட்டுத் திட்டமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தில் அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் திரு. மோகன்ராவ் மூலம் முதலீடு செய்ய வந்திருக்கின்றனர். இந்த அமைப்பு வள்ளுவர் கோட்டத்தின் முகப்பை எவ்வகையிலும் பாதிக்காமல் கட்டப்படும்.

இரண்டாவதாக சென்னை வேப்பேரியில் கண்ணப்பர் திடலை ஒட்டியுள்ள நிலத்தில் ஓட்டல் வளாகம் அமைத்தல். சென்னை வேப்பேரியில் கண்ணப்பர் திடலை ஒட்டி 41 கிரவுண்ட் நிலப்பரப்பில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஜனதா ஓட்டல் உட்பட ஓட்டல் வளாகம் அமைக்கும் திட்டம் கூட்டுத் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்த இடத்தைத் தவிர்த்து வேறு இடம் தெரிவிக்குமாறு தெரிவித்திருந்தார்கள். எனவே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது அமெரிக்காவில் வாழும் டாக்டர் பழனி சி. பெரியசாமி குழுவினருடன் இணைந்து அவர்களுடைய முதலீட்டைப் பயன்படுத்தி கூட்டுத் திட்டத்தில் அருகே உள்ள பழைய மிருகக்காட்சி சாலை நிலத்தைப் பயன்படுத்தி நட்சத்திர ஓட்டல் கட்ட முன்வந்திருக்கிறது.

[1987 மார்ச் 23

**திரு. டி. ஆர். வேங்கடாமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணப்பர் திடல் அருகே அமைய இருக்கின்ற இந்த ஓட்டல் இடம் பற்றி பத்திரிகைகளில் பரவலாகத் தகவல்கள் வந்திருக்கின்றன. தனி நபருக்கு 99 ஆண்டுகளுக்கும் மேலாக அரசால் லீஸ்-க்குக் கொடுக்கப்பட்டு இருப்பதாகவும் அதிலே மத்திய அரசின் அனுமதி பெறவில்லை என்றும் பத்திரிகைகளில் பரவலாக செய்திகள் வந்திருக்கின்றன. அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய அனுமதியும், ரிசர்வ் வங்கியினுடைய அனுமதியும் பெறப்பட்டு விட்டதா? அங்கே இருந்த மிருகக் காட்சிசாலை அருகே இருக்கிற இரயில் நிலையத்தின் காரணமாக மாசுபடுவதால் உபயோகப்படவில்லை என்று சொல்லி மாற்றப்பட்டது. அப்படிப்பட்ட இடத்தில் சுற்றுலாத் துறையின் சார்பாக ஒரு ஓட்டல் அமைத்தால் வெளிநாட்டில் இருந்து வருகிற பயணிகளைக் கவரக்கூடிய விதத்தில் இருக்குமா? இந்தியாவைப் பற்றி ஒரு தவறான கருத்து ஏற்பட வாய்ப்பளிக்காதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் சில நாட்களுக்கு முன்பு தவறாக புகார் வந்தபோது அரசுத் துறையில் விளக்கமாக அறிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது. என்.ஆர்.ஐ. திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கென மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 26 சதவீதம் பங்கு மூலதனமும், என்.ஆர்.ஐ. கூட்டு முயற்சிக் குழுவினர் 25 சதவீதமும் மற்றும் பொது விநியோகத்தில் 49 சதவீதமும் என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இத்தனை ஆண்டுக்காலம் என்று யாருக்கும் குத்தகை கொடுக்கிற உத்தேசம் இல்லை. நிலங்களை யாரிடத்திலும் ஒப்படைக்கவும் இல்லை. மத்திய அரசிடமிருந்து இந்தத் திட்டத்தைப் பாராட்டிக் கடிதம் வந்திருக்கிறது. 21—2—1986-ல் மத்திய அரசினிடத்திலிருந்து வந்த கடிதத்தில்

"We have carefully examined the merits of the Project and also given our clearance to the Government of Tamil Nadu to take up the Project with N.R.I. participation ......"



1987 மார்ச் 23]

என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது இந்தியாவில் என்.ஆர்.ஐ. திட்டத்தில் வேறு எந்த மாநிலமும் முன்வராத போது தமிழ்நாட்டில் வெற்றிகரமாக இந்தத் திட்டம் இயங்குவது பற்றி மத்திய அரசு பாராட்டு தெரிவித்து இருக்கிறது.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவர் அவர்களே, நகரத்தில் பொதுவான இடங்கள் திடல்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நியதி முறையோடு இருக்க வேண்டும். குறுக்கிடக் கூடாது.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் பொதுவான இடங்கள், குறைந்து வருகின்றன, திடல்கள் பூங்காக்கள் உள்பட. இது சென்னை நகர மக்களுடைய சுகாதாரத்தைப் பெரிதும் பாதிக்கிறது. அந்தப் பகுதிகளை சாதாரணமாக (Lungs of the Town) என்று சொல்வார்கள். ஆகவே அத்தகைய இடங்களில் ஓட்டல் கட்டுகிற திட்டத்தை அமல்படுத்தினால் சென்னை நகர மக்களுடைய சுகாதாரம் பாதிக்கக்கூடும் என்பதை அடிப்படையாகக் கொண்டு, கண்ணப்பர் திடல் போன்ற இடங்களில் 5 நட்சத்திர ஓட்டல் கட்டும் திட்டத்தை அரசு கை விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியை மேம்பாடு செய்வதற்கு, வளர்ப்பதற்கு பல அறைகள் கொண்ட ஓட்டல்கள் வேண்டும் என்ற நிலையை ஒரு பக்கம் சொல்லுகிறார்கள். அந்த முறையில் இந்த மாதிரியான திட்டங்கள் கைவிடப் பட வேண்டியது இல்லை. சுகாதாரம் கெடாமல் அந்த திட்டத்தை அமல் நடத்த அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடாமணன் அவர்கள் ரிசர்வ் பாங்கின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறதா என்று கேட்டார்கள். 21—8—1986 ஆம் தேதிய கடிதத்தின் மூலம் ரிசர்வ் பாங்க் ஒப்புதல் அளித்திருக்கிறது.

ஆற்காட்டில் தாட்கோ மூலம் வீடுகள்.

140—(* வினா எண். 9335) திரு. த. பழனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு வட்டத்தில், 'தாட்கோ' மூலம் 1985—86 வரை கட்டிக்கொடுக்கப்பட்ட மொத்த வீடுகள் எத்தனை?

(ஆ) 1986—87-க்கு ஒதுக்கியுள்ள வீடுகள் எத்தனை?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆற்காடு வட்டத்தில், 'தாட்கோ' மூலம் 1985-86 வரை கட்டிக் கொடுக்கப்பட்ட மொத்த வீடுகள் 143 ஆகும்.

(ஆ) 1986—87-க்கு வீடுகள் கட்டுவதற்கு இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

திரு. த. பழனி: தலைவர் அவர்களே, 1985—86 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வீடுகள் குறித்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதற்காக நன்றி. 1986—87 ஆம் ஆண்டில் கட்டப்படுகிற வீடுகளில் பெரும் பகுதி கிராமப்பகுதிகளில் கட்டப்பட வேண்டும். என்னுடைய தொகுதியிலே 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனைகள் இருக்கின்றன. குறிப்பாக ஆற்காடு பகுதியிலே 200 க்கும் மேற்பட்ட மனைகள் இருக்கின்றன. அதைப் பரிசீலித்து அத்தகைய இடங்களில் வீடுகள் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியிலே வருகிற ஆண்டில் தாட்கோ மூலமாக இல்லாவிட்டாலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் என்ற திட்டத்தின் கீழ், அந்தப் பகுதியும் சேர்த்துக் கட்ட எடுக்கப்படும்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக கட்டப்படுகிற வீடுகள் அனைத்து மாவட்டங்களுக்கும் முறையாக பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். அப்படிப் பகிர்ந்து அளிக்கிறபோது பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிற பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கே முறையாக ஒதுக்கீடு செய்யும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் 5 ஆயிரம் வீடுகள் ஒதுக்குகிற நியதி இருக்கிறது. அதன் மூலம் கட்டாயம் வருகிற ஆண்டில் தாட்கோ மூலம் கட்டப்படுகிற வீடுகள் பகிர்ந்து அளிக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர் எல் இ ஜி பி., என் ஆர் இ பி., திட்டங்களின் மூலமாக கட்டப்படுகிற வீடுகளுக்கு லெட்ரீன் வசதி செய்துக் கொடுக்க 3 ஆயிரம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்படுகிறது. ஆனால் தாட்கோ மூலமாக கட்டப்படுகிற வீடுகளுக்கு 6 ஆயிரம் மட்டும் தான் இருக்கிறது. அதை அதிகமாக்க உத்தேசம் உண்டா? அத்தோடு ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகளில் மின் சாரம் இனாமாகக் கொடுக்கப்பட்டது. அதை தற்போது டிஸ்கனெக்ட் செய்து வருகிறார்கள். ஆகவே தாட்கோ மூலமாக கட்டப்படும் வீடுகளில் மின் வசதியும் செய்து தரப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி; திட்டங்களின் மூலமாகக் கட்டப்படும் வீடுகளுக்கு ரூ. 9 ஆயிரம் என்று ஒதுக்கி, அதிலே ரூ. 6 ஆயிரத்திற்கு வீடும், 3 ஆயிரத்திற்கு ரோடு வசதி, மின்சார வசதி, தண்ணீர் வசதி போன்றவை செய்து கொடுக்கப்படுகின்றன. அத்தோடு அந்த இரண்டு திட்டங்களும் மாநில அரசும், மைய அரசும் சேர்ந்து நிறைவேற்றும் திட்டங்கள். தாட்கோ மூலமாகக் கட்டப்படும் வீடுகள் முழுவதையும் தமிழக அரசே போட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மின்சார வசதியைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டே மின் துறை அமைச்சர் அவர்கள் இந்த வீடுகளுக்கு மின்சாரம் அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். வருகிற ஆண்டில் கட்டாயம் அந்த வசதி கொடுக்கப்படும்.

(முற்பகல் 11-00)

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுமென்ற திட்டத்தின் அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு லேட்டஸ்ட் பட்டா இருந்தால் தான் கட்டிக்கொடுக்கப்படும், பழைய பட்டாக்கள் இருந்தால் கட்டிக் கொடுக்கப்படமாட்டாது என்ற நிலை இருக்கிறது. பட்டா இருக்கிற அத்தனை குடிசைகளுக்கும், வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிறவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு வேண்டிய மாற்றத்தை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில் கட்டாயம் வீடுகள் கட்டிக் கொடுத்து வருகிறோம். சில ஊர்களைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு பட்டா கொடுத்திருப்பார்கள், பக்கத்தில் இருக்கிற அடுத்த ஊர்களில் 1975-ம் ஆண்டிலோ 1976-ம் ஆண்டிலோ கொடுத்திருப்பார்கள். அதற்கு முன்னுரிமை கொடுத்து அதுவும் எடுத்துக் கொள்ளப்படும். ஆகவே முன்னுரிமை என்பது மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிகளைப் பொறுத்து இருக்கிறது. அடுத்து வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு என்ற அந்தச் சூழ்நிலையைச் சொன்னார்கள். அப்படி எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல் ஆதிதிராவிட மக்கள் எல்லோருக்கும் பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இக்கேள்வி முடியும் வரையில் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு கட்டிக்கொடுக்கிற வீடுகள் ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ போன்ற திட்டங்களின் மூலம் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஒரு பிரிவில் கட்டுகிற வீடுகளுக்கு ஒன்பதாயிரம் ரூபாயும், தாட்கோ மூலம், கட்டிக் கொடுக்கிற வீடுகளுக்கு ஆறாயிரம் ரூபாயும் கொடுக்கிறார்கள்.



என்னுடைய தொகுதியிலே பள்ளச்சந்தம் என்ற கிராமத்தில் கட்டிக்கொடுத்திருக்கிற வீடுகளைப் பார்த்தேன். ஒன்பதாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிற வீட்டிலே ஒன்பது வாரைதான் போட்டிருக்கிறார்கள். ஆனால் ஆறாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிற வீடுகளைப் பார்க்கிறபோது பூவரசம் மாத்தைப் போட்டு ஏழு வாரை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இதில் நிலைமை என்னவென்றால் ஓடுகள் எல்லாம் தொங்கிப் போகின்றன. மழைக்காலங்களில் அவர்கள் அதில் வசிக்க முடியாத நிலையிருக்கிறது. நாம் அரசாங்கத்தில் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும், குடியிருப்பவர்களுக்கு வசதியாக இருக்க வேண்டும். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, எத்தனை லட்சம் வீடுகள் கட்டிக் கொடுத்தோம் என்பதற்குப் பதிலாக, எத்தனை வீடுகளில் மக்கள் குடும்பம் நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்து அந்தப் பெருமையைத் தேடிக்கொள்வதற்கு வாய்ப்பாக வீடுகள் கட்டுவதற்கு, கொடுக்கப்படுகிற தொகையை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, பாரபட்சம் இல்லாமல் எந்தத் துறையில் கட்டினாலும் ஒரே அளவில் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒன்பதாயிரம் ரூபாயில் கட்டப்படுகிற வீடுகள் ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின் வாயிலாக அந்தப் பகுதியில் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக கட்டப்படுகின்றன. ஆறாயிரம் ரூபாயில் கட்டப்படுகிற வீடுகள் நன்றாக இருக்கின்றன என்று சொன்னார்கள். பொது மேஸ்திரி என்று சொல்லப்படும் பணியாளர்களின் கையில் பணம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் நல்ல முறையில் கட்டவேண்டுமென்ற எண்ணத்தில் போதாமல் இருக்கிறபோது தன்னுடைய பங்கையும், உழைப்பையும் போட்டு நன்றாகக் கட்டிக் கொடுக்கிறார்கள். இப்போது கொடுக்கப்படுகிற ஆறாயிரம் ரூபாய் என்பது போதாது என்றுதான் அதனை பத்தாயிரம் ரூபாயாக உயர்த்துகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. அ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஆற்காடு வட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை என்று சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன? அதேபோல் தமிழகம் முழுவதிலும் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., மற்றும் தாட்கோ மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கிற போது, சில பகுதிகள் மணற்பாங்கான பகுதிகளாகப் போய்விடுகின்றன. அங்கு வீடுகள் கட்டுவதற்குப் பணம் அதிகமாகத் தேவைப்படுகிறது. திருச்சி போன்ற மாவட்டங்களில் மணற்பகுதி குறைந்திருக்கின்றன. ஆனால் தஞ்சை மாவட்டம் மற்றும் தென்னாற்காடு மாவட்டம் போன்ற கடலோர மாவட்டங்களில் மணற்பாங்கான பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. இங்கே கொடுக்கப்படுகிற தொகையினை அதிகரித்துக் கொடுத்தால் நலமாக இருக்குமென்று எண்ணுகிறேன். அந்த அடிப்படையில் வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கப்படுகிற தொகை இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதிகரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் தம்பிக் கோட்டையில் வடகாடு, மேலக்காடு, மரவக்காடு ஆகிய மூன்று பஞ்சாயத்துக்களில் அனுமதிக்கப்பட்ட வீடுகள் இன்னும் கட்டப்படாத நிலையில் அவற்றை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவை மணற்பாங்கான பகுதிகள் என்பதால் அங்கே கட்ட முடியாது என்று பொறியாளர்கள் சொல்கிறார்கள். ஆகவே அந்தத் தொகையை தனிப்பட்ட முறையில் உயர்த்தி, அங்கே வீடுகள் கட்ட நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் போதாது என்றுதான் 6 ஆயிரம் ரூபாயை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தும் செயற்குறிப்பு இருக்கிறது என்று சொன்னேன். அதேபோல் அவர்களுடைய பகுதி



யிலே உத்தரவு போட்டும் இன்னும் வீடுகள் கட்டாமல் இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதேபோல் ஆர்.எல்.இ.ஜி.பி. என்.ஆர்.இ;பி. போன்ற திட்டங்களாக இருந்தாலும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இப்படிக் கட்டிக் கொடுக்காத இடங்களிலே எல்லாம் இப்போது கட்டிக் கொண்டிருக்கிறோம்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு என்று கட்டுகின்ற வீடுகள், அந்த மக்கள் குடியிருப்பதற்கு லாயக்கற்ற வீடுகள் இவை என்று ஏதாவது அரசிடம் கணக்கு இருக்கிறதா? அவ்வாறு குடியிருப்பதற்கு லாயக்கற்ற வீடுகளைக் கட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு மூலமாக கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் அவர்களுக்குப் போதுமான அளவில் இருக்கின்றன. 201 சதுர அடி கொண்ட வீடுகள்—3 செண்ட் கொண்டதாக நிலம் இருந்தாலும்—அவர்களுக்குப் போதுமான அளவிற்கு இருக்கிறது. அதைத்தான் கட்டிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அது லாயக்காக இருக்கிறதா, இல்லையா என்பதை அதை அனுபவித்தவர்கள் தான் சொல்லவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற மாதிரி வீடுகள் எம்படிப் பட்ட இடங்களில் இருக்கின்றன என்று சொல்வார்களானால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 201 சதுர அடியில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு 6 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இதே 6 ஆயிரம் ரூபாயில் 201 சதுர அடிக்கு மேற்பட்ட வீடுகளைச் சில தனியார் துறையினர் வெளிநாட்டு உதவியுடன் கட்டி வருகிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா? இது வரவேற்கக்கூடியதா, அல்லது தவிர்க்கக்கூடியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 23

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, இது பற்றி ஒன்றும் எனனிடம் பதில் இல்லை. இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்லப்படும்.

**திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற பணி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த ஒப்படைப்பின் பிரகாரம் அரிசனங்களுக்கு மனை கொடுப்பதிலே அவர்கள் சீனியாரிட்டி முறையைக் கடைபிடிப்பதில்லை. 1960 ஆம் வருடத்திலே மனு கொடுத்தவர்களை விட்டுவிட்டு, 1973-லே மனு கொடுத்தவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படுகிறது. ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே முன்காலத்திலே கொடுக்கப்பட்ட அந்த மனுதாரர்களுக்கு முதலிடம் கொடுத்து, வருட வாரியாக, இந்த அலாட்மெண்ட்டை ஒதுக்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா? ஏன் என்றால், இப்போதுள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், தவறான முறையிலே இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதினாலும், அவர்களுக்கு வேண்டப்பட்டவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்த்து வீடுகளை ஒதுக்குகிற காரணத்தாலும், இதற்கு ஒரு வரையறை வைத்து, வருட வாரியாக அந்த இடத்திலே பட்டா கொடுத்தவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

பேரவைத் தலைவர் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

**திரு. கி. மனோகரன்:** * *

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சனை பற்றி பேசவேண்டுமானால் என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசலாம். இங்கே கேட்பது முறையல்ல. *

(பேரவைத் தலைவர்)

* * * *

* * * *

* * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை அத்தனையும் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

(முற்பகல் 11-10)

## 3. வரவு-செலவுத் திட்டம் 1987-88 பொது விவாதம்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கின்ற 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் வரவு-செலவு அறிக்கைக்கு முன்பாகவே இந்தத் தமிழகத்தை உலுக்கிய, தமிழக மக்களைப் பெரும் துயரத்தில் ஆழ்த்திய அரியலூர் இரயில் விபத்தைப் பற்றி வேதனையுடன் சில கருத்துக்களை குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது சம்பந்தமாக நானும் சில கருத்துக்களை வெளியிட்டு. ... (குறுக்கீடு)

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** இவை அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) * (ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

* * * *

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 மார்ச் 23

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் அளித்திருக்கின்ற, வரவு-செலவு அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற அரியலூர் இரயில் விபத்தைப்பற்றி நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பில் என்னுடைய எண்ணங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த இரயில் கவிழ்ப்பு முயற்சி ஒரு திட்டமிட்ட சதி.
காட்டுமிராண்டித்தனமான, நாகரீகமற்ற, மனிதாபிமானம் சிறிதும் இல்லாத அரக்க குணம் படைத்தவர்களுடைய இந்த இழி செயல்களை நாமும் கண்டித்திருக்கிறோம். இந்த மன்றமும் கண்டித்திருக்கிறது. இந்த நாடே கண்டிக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட ரயில் கவிழ்ப்பு முயற்சிகள் தமிழகத்திலே பரவலாக நடக்கக்கூடிய அபாயம் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், அல்லது மொழியின் பெயரால், போலித்தனமான தீவிரவாதத்தின் பெயரால் இந்திய ஒற்றுமைக்குக் களங்கம் விளைவிக்கின்ற எந்த முயற்சியையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என்று இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள பிரியப்படுகின்றேன்.

இந்த ரயில் கவிழ்ப்பு முயற்சிகளைப் பற்றி மத்திய, மாநில அரசுகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த ரயில் கவிழ்ப்பு முயற்சிக்குப் பின்னணியில் இருக்கிற சக்திகளை அடையாளம் கண்டு அவற்றைக் கடுமையாக ஒடுக்க வேண்டும்; இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ரயில் கவிழ்ப்பு முயற்சியில், அந்த முயற்சியாளர்கள் அந்தப் பகுதியிலே விட்டுச் சென்றிருக்கின்ற வாசகங்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் அவருடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "இந்தியாவிலிருந்து,



1987 மார்ச் 23] (திரு. க. பாரமலை)

இந்திய யூனியனிலிருந்து தமிழ்நாடு தனியாகப் பிரியாத வரை இந்தித் திணிப்பைத் தடுக்க முடியாது; தென் ஆப்பிரிக்காவைப் போல, இலங்கையுடனும் தொடர்பை அறுத்துக் கொள்ள வேண்டும்; போராளிகளைக் கைது செய்யாதே; போராளிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களைத் திருப்பிக் கொடு;" என்று சொல்கின்ற பல்வேறு கோஷங்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதிலே ஒரு உண்மையை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு எந்த அளவுக்குத் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும், தமிழக அரசு எந்த அளவுக்கு அதற்கு உறுதுணையாக இருக்கிறது என்பதையும் நாம் நன்றாக அறிந்து இருக்கிறோம். இந்த நாடும் நன்றாக அறிந்து இருக்கிறது.

சமீப காலத்தில்கூட, இலங்கையிலே தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளுக்கு உணவு மற்றும் மண்ணெண்ணெய், பெட்ரோல் போன்ற எரி பொருட்கள் செல்லாமல் இலங்கை அரசு தடை செய்திருந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு பிரதமர் ராஜீவ் அவர்கள் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதை இந்த நாடு நன்றாக அறிந்திருக்கிறது.

பல சந்தர்ப்பங்களில் மந்திரிசபைக் கூட்டங்களைக் கூட்டி விரிவாக விவாதித்து, கடைசியாக ஒரு முடிவை அறிவித்தார்கள். 'இலங்கை அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் தமிழர்கள் வாழுகிற பகுதிகளுக்கு மண்ணெண்ணெய், அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதைத் தடை செய்வது நீடித்தால், இந்திய அரசு மனிதாபிமான முறையில் அந்த மக்களுக்கு பெட்ரோல், உணவு போன்றவற்றை நாங்களே நேரில் எடுத்துக்கொண்டு கொடுக்கின்ற நிலைமை ஏற்படும் என்று எச்சரித்ததன் காரணமாக, இன்றைக்கு இலங்கை அரசின் மனப்போக்கில், ஜெயவர்த்தனேயின் மனப்போக்கில் ஒருவித மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்

[திரு. க. பாரமலை] [1987 மார்ச் 23

அந்த அளவுக்கு மிகத் தீவிரமான நடவடிக்கைகளை மத்திய அரசு, மதிப்பிற்குரிய நம்முடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழக மக்களின் பேரில், ஈழத் தமிழ் மக்களின் மேல் கொண்டிருக்கின்ற உண்மையான அன்பு காரணமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த நடவடிக்கைகளைப் பாராட்டுவதற்கு மனம் இல்லாதவர்கள் அல்லது அதனால் தங்களுடைய பிழைப்பு போய் விடுமே என்ற ஆதங்கம் கொண்டிருப்பவர்கள், எதையாவது சொல்லி தமிழகத்தைத் தனியாகப் பிரித்து விடவேண்டும் என்ற எண்ணத்தோடு இன்றைக்குத் தீவிரவாதத்தின் பெயரில் அந்தச் சதிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆகவே, அப்படிப்பட்டவர்களுடைய முயற்சியை நாம் கடுமையாக நடவடிக்கை எடுத்து ஒடுக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில், மனித உரிமைகளின் பெயரால், அப்படிப்பட்ட தீவிரவாதத்திற்கு ஆதரவாக இருக்கின்ற எந்தச் சக்தியாக இருந்தாலும் அதைத் தடை செய்ய வேண்டும். அப்படிப்பட்ட தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தமிழகத்திலே இருக்கின்ற பிரச்சினைகளுக்கு, பிரச்சினைகளை நேரில் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது போராடுவதில் தவறில்லை; ஆனாலும், போராடுகிறபோது "அந்தத் தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படவில்லையெனில், அல்லது இலங்கைப் பிரச்சினை தீர்க்கப்படவில்லையெனில் தமிழகம் பஞ்சாபாக மாறும்" என்று எச்சரிக்கின்ற சக்திகள் விஷயத்திலும் இந்த அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இதை ஒரு பஞ்சாபாக மாற்றுகிற முயற்சியை முறியடிக்க வேண்டும். அந்த வகையிலே நாம் தமிழக மக்களுடைய ஆதரவைப் பெறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 23] [திரு. க. பாரமலை]

(முற்பகல் 11-30)

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவோம் என்று சொல்லிக் கொண்டு தமிழகத்தில் ஓடுகின்ற ரயில்களைக் கவிழ்த்து இங்கு இருக்கின்ற தமிழர்களைக் கொல்லுகின்றவர்கள் தமிழர்களாக இருக்க முடியுமா? தமிழ் இனத்தின்மீது அக்கறை கொண்டவர்களாக இருக்க முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கு இருக்கின்ற தமிழர்களைக் கொல்வதும், இங்கே இருக்கக்கூடிய தமிழர்களின் சொத்துக்களை கொள்ளையடிப்பதும், இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவோம் என்று சொல்வது ஒரு போலித்தனமான வாதம் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; இப்படிப்பட்ட, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுகின்றோம் என்ற பெயரால் நடைபெறுகின்ற வன்முறைகளுக்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் இனம், தமிழ் மக்கள் இப்படிப்பட்டவர்களை புறக்கணிக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு ஆதரவு தரக் கூடாது என்றும், இப்படிப்பட்டவர்களைத் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வதில் வெட்கப்பட வேண்டும் என்பதை மிக வருத்தத்தோடும், வேதனையோடும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இப்படிப்பட்ட முயற்சிகள் இனிமேல் நடைபெறாமல் தடுப்பதற்கு மத்திய மாநில அரசுகள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, நம்முடைய நாவலர் அவர்கள் வரவு-செலவு அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் ஏறக்குறைய 206 கோடி ரூபாய்க்கான பற்றாக்குறை வரவு செலவு அறிக்கையைக் கொடுத்து இருக்கிறார்கள். இதிலே 15 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்த வரிச் சலுகையில் கையினால் செய்யப்பட்ட தீக்குச்சிகளுக்கு விற்பனை வரி விலக்கு ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 1 லட்சமாக ஆக்கி இருப்பது; தீப்பெட்டி குடிசைத்

[திரு. க. பாரமலை] [1987 மார்ச் 23

தொழிலை நம்பியிருக்கின்ற தொழிலாளர்களுக்கு, தொழிற்சாலைகளை நடத்துபவர்களுக்கு, அதிலே வேலை பார்க்கின்ற ஊழியர்களுக்கு மிக ஆதரவாக இருக்கும் என்ற காரணத்தினால் அதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன்.

அதேபோல, பழைய நகைகளை வாங்கும்போது வணிகர்கள் வாங்கும் வரி 2 சதவீதம் செலுத்தவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தாலும்கூட வணிகர்கள் நகை வாங்குபவர்களிடமே அந்த வரியை வாங்குகின்ற காரணத்தினாலே அந்த வரியை ரத்து செய்திருப்பது நிச்சயமாக, சாதாரண, நடுத்தர மக்களுக்கு உதவியாக இருக்கும் என்ற வகையிலே அதையும் நான் வரவேற்கிறேன்.

புதிதாக, இப்போது நகரப் பேருந்துகளுக்கும், விரைவுப் பேருந்துகளுக்கும், வெளியூர் பேருந்துகளுக்கும் இருக்கை மீதான காலாண்டு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. சமீபத்திலே, ஏற்கெனவே போக்குவரத்துத் துறை, பயணிகளுடைய கட்டணத்தை உயர்த்தியிருக்கின்ற இந்த நேரத்தில் இந்த வரி உயர்வு காரணமாக மேலும் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரி விதிப்பின் காரணமாக பேருந்தை நடத்துகின்றவர்கள் அவற்றினுடைய பயணக் கட்டணத்தை உயர்த்தி சாதாரண மக்கள் தலைமீது சுமத்தி விடாமல் பார்த்துக்கொள்வது இந்த அரசினுடைய கடமை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, உணவு மற்றும் சிற்றுண்டி சாலைகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மீதான விற்பனை வரி விலக்கு எனக்குறைய விலக்கு அளிக்கப்பட்டிருந்தது இப்போது நீக்கப்பட்டு விட்டது. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 2 லெட்சம் வரை விற்பனை அளவு உள்ள சிற்றுண்டி சாலைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 2 லெட்சத்திலிருந்து 3 இலட்சம் வரை ரூ. 7,500 என்றும்; ரூ. 3 லெட்சத்திலிருந்து ரூ. 4 லெட்சம்வரை ரூ. 11.250 என்றும்; ரூ. 4 லெட்சத்திலிருந்து ரூ. 5 லெட்சம்வரை ரூ. 15.000 என்றும் [illegible] ஓட்டல்களிலே, சிற்றுண்டி சாலைகளிலே பெரும் பகுதி சாதாரண, ஏழை நடுத்தர மக்கள் [illegible] அதிகமாக சென்று சாப்பிடுகிறார்கள். இந்த வரி



1987 மார்ச் 23] [திரு. க. பாரமலை]

விதிப்பின் காரணமாக, ஏற்கெனவே இருந்த விலைக்கு மாற்றப்பட்டதன் காரணமாக புதிய வரி விதிப்பின் காரணமாக ஓட்டல் பண்டங்களின் விலையை உயர்த்தி அந்தச் சுமையை மக்கள் சுமந்துவிடாமல் பார்த்துக்கொள்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கேளிக்கை வரி, கேளிக்கை வரி மீதான உபரி வரி, கேளிக்கை வரி மீதான கூடுதல் உபரி வரி போன்ற வரிகளும், காட்சி வரி, காட்சி வரி மீதான உபரி வரி, காட்சி வரி மீதான கூடுதல் உபரி வரி இவற்றிற்குப் பதிலாக ஒட்டுமொத்தமாக ஒரு வரியை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதிலே பொதுவாக 6 வரிகளையும் ஒன்றாக்கி ஒட்டுமொத்தமாக 55 சதவீதம் வரி என்று ஆக்கி இருக்கிறார்கள். இந்த வரியில் அரசுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் ஏற்கெனவே 35:65 என்றிருந்த சதவீதத்தை மாற்றி இப்போது 30:70 என்ற விதத்திலே இன்றைக்கு மாற்றி அமைத்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஓரளவுக்கு அதிக நிதி வசதி ஏற்படுத்திக் கொடுத்ததற்காக நான் நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு புதிய திட்டம் ஒன்று இந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் காலணி வழங்கும் திட்டம். எந்தத் திட்டமானாலும் சரி, பொது மக்களும் சமுதாயத்தின் அடித் தளத்தில் இருக்கிற ஏழை எளிய மக்கள் பயன்பெறுகிற திட்டமாக இருந்தால் அதை எங்கள் கட்சி கண்டிப்பாக வரவேற்கத் தயாராக இருக்கிறது. அந்த வகையில் கிராமங்களில் வாழ்கிற தாய்மார்களுக்கும் பள்ளிச் சிறார்களுக்கும் காலணி வழங்குகிற திட்டத்திற்காக இந்த ஆண்டு ரூ. 20 கோடியை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டி என்னுடைய வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நாட்டில் நிலவும் வறட்சிபற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகத்தில் மிகவும் கடுமையான வறட்சி நிலவுகிறது. எங்கே பார்த்தாலும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. மாட்டுக் தீவனம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. விவசாயம் இல்லாத காரணத்தால் விவசாயக்

[திரு. க. பாரமலை] [1987 மார்ச் 23

தொழிலாளர்கள் ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு வேலை தேடிச் செல்லும் மோசமான—ஒரு அவலமான—நிலை தமிழகத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட வறட்சியைப் போக்குவதற்கு மத்திய அரசிடமிருந்து ரூ. 347 கோடி உதவி கோரி இருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமக்கு ரூ. 347 கோடி கிடைக்க வேண்டும் என்றால் எந்த அளவுக்குத் தமிழகத்தில் வறட்சி மக்களை வாட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அந்த அளவுக்கு வறட்சியைப் போக்குவதற்கு முனைப்பான திட்டங்களை விரைவுபடுத்திச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதில் முதல் கட்டப் பணி மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதாகும். அந்த வகையில் பல்வேறு மாவட்டங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவது, புதிதாக ஆழ் குழாய்களை அமைப்பது போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது. என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கிராமங்களில் வாழ்கிற மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுக்காலமாகவே தொடர்ந்து மழை அங்கே பொய்த்துவிட்ட காரணத்தால், அவர்கள் யாரும் விவசாயத்தைப் பார்க்க முடியாமல், இருக்கிற நிலங்களையெல்லாம், இருக்கிற வீடுகளையெல்லாம் விற்று சாப்பிடுகிற அவல நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அரசு மேற்கொண்டிருக்கிற பணிகள் அவர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்பை உருவாக்கும் பணிகளாக அமைய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் போர்-வெல் போடுகிறபோது—ஆழ் குழாய்க் கிணறுகளைப் போடுகிறபோது—அதனால் மனித உழைப்பு நாட்கள் என்பது மிகக் குறைவாகத்தான் கிடைக்கிறது. தற்போது கிராமங்களில் வாழ்கிற மக்கள் வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே விவசாயம் இல்லாமல் இருக்கிறது. விவசாயத்தையே நம்பி இருக்கிற மக்களுக்கு விவசாயப் பணி இல்லை என்றால்



1987 மார்ச் 23] [திரு. க. பாரமலை]

வேறு எந்த வேலையும் இருப்பதில்லை. அதன் காரணமாக அவர்கள் பட்டினியாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலை இருக்கும்போது மனித உழைப்பு நாட்களை அதிகமாக வழங்கக்கூடிய பெரிய திட்டங்களை நாம் விரைவாக எடுத்துக் கொண்டு செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் இன்னும் அரசு வறட்சிப் பகுதியாக அதனை அறிவிக்கவில்லை. எனவே உடனடியாக அதை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அங்கே உள்ள விவசாயிகளுக்கு வரி வஜா வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி நாடு முழுவதும் வறட்சி இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கிராமப் பகுதிகளில் இருக்கிற கிராம நிர்வாக அலுவலர்கள் எல்லாப் பகுதிகளிலும் விளைந்திருக்கிறது என்று எழுத வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார்கள் என்று நான் அறிகிறேன். அப்படிப்பட்ட கருத்தைத்தான் ஆங்காங்கே உள்ள பொதுமக்கள் சொல்லுகிறார்கள். ஒரு பக்கம் வறட்சி என்று சொல்லிக்கொண்டு பெரிய அளவில் உதவியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறபோது இன்னொரு பக்கத்திலே "விளைந்தது" என்று அறிக்கை தயாரிப்பது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன். இதைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 347 கோடி ரூபாய் நிதி உதவி கோருகிற அளவுக்குத் தமிழகத்தில் வறட்சி நிலவுகிறது என்று கேட்கிற நிலையில் நாம் விளைந்தது என்று அறிக்கை தயாரித்தால் அது உண்மை நிலைக்கு நேர்முரணாகத்தான் இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமை தற்போது கிராமப் பகுதிகளில் இருக்கிற காரணத்தால் அறிக்கை தயாரிப்பதில் உண்மை நிலவரங்களை அறிந்து அறிக்கைகள் தயார் செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. பாரமலை] [1987 மார்ச் 23

அடுத்து (Part II) (பாகம் இரண்டு) திட்டத்திற்கு ரூபாய் 56 கோடி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை வரவு செலவுத் திட்டத்தில் பார்க்க முடிகிறது என்றாலும் புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருக்கிற திட்டங்களை மேம்பாடு செய்வதற்கு மட்டுமே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர புதிய திட்டங்கள் ஏதும் அறிவிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

மேலும் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அதை டிரிபியூனலுக்கு விட வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. ஆனால் சமீபத்தில் கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே அவர்கள் தெரிவித்துள்ள ஒரு கருத்தானது நமக்கு ஆழ்ந்த கவலையை அளிப்பதாக இருக்கிறது. "காவிரி நீர் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கைக்கு ஓரளவு மத்திய அரசாங்கம் இணங்கக் கூடும். ஆகவே காவிரிப் படுகையில் எஞ்சியுள்ள திட்டங்களை இந்த அரசு விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது" என்று கர்நாடக முதலமைச்சர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். ஆகவே காவிரிப்படுகையில் இருக்கின்ற திட்டங்களை விரைவுபடுத்தி, புதிய திட்டங்களை அவர்கள் மேற்கொள்வதை நாம் மத்திய அரசாங்கத்துடன் பேசி தடுத்து நிறுத்த வேண்டும். உடனடியாக காவிரி பிரச்சினையில் நமக்கு உரிய பங்கை பெறுவதற்காக டிரிபியூனலுக்குச் செல்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று சொல்லுவது என்னுடைய கடமையாகும்.

மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளைப் பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். பல வருஷங்களாக முயற்சி செய்கிறோம் என்றாலும் இன்னும் பலன் கிட்டவில்லை. ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட பாசனத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வது: இதிலே நீங்கள் தீவிரமாக இருந்து கேரள அரசோடு பேசி, மத்திய



1987 மார்ச் 23] [திரு. க. பாரமலை]

அரசாங்கத்தோடு பேசி தீர்வு காண வேண்டும். ஏற்கெனவே மேற்கு நோக்கி ஓடுகிற 43 ஆறுகளிலிருந்து 45,000 மில்லியன் கோடி கன அடி தண்ணீர் அரபிக் கடலில் எந்தப் பிரயோஜனமும் இல்லாமல் விழுகிறது என்று சொல்லுகிறார்கள். இதைத் தமிழகத்திற்குத் திருப்பிவிட முயற்சி எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறைக்காக இந்த வருஷம் 597 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பல கிராமங்களில் இன்னும் பள்ளிக்கூடங்கள் இடிந்து விழும் நிலையிலும், பாதுகாப்பற்ற நிலையிலும் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலையில் உள்ள பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஒரு phased programme என்று சொல்லுகிற அளவிற்குத் திட்டமிட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம் இரண்டாண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்கீழ் கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு, ஓடு, செங்கல் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றோடு தமிழக அரசு ஒதுக்கியுள்ள நிதியையும் சேர்த்து இப்படிப்பட்ட சங்கங்களுக்கு மூதலீடாகக் கொடுத்து வேலையைத் துவங்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது நீண்ட காலத் திட்டம். இந்தத் திட்டத்தின் பெயரால் நடைபெறும் வேலைகளுக்குக் குந்தகம் இல்லாமல் விரைவாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் தங்கள் நிலங்களை விற்று, அல்லது ஒத்தி வைத்து சாப்பிடுகிற நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். பத்திரப்பதிவு நோக்கத்திற்காக கிராமங்களில் உள்ள நிலங்களின் மதிப்பை இந்த மாதம் 2 ஆம் தேதியிலிருந்து தமிழக அரசாங்கம் பல மடங்காக உயர்த்தியிருப்பது சாதாரண,

[திரு. க. பாரமலை] [1987 மார்ச் 23

நடுத்தர, ஏழை விவசாயிகளைக் கடுமையாக பாதிக்கும் என்பதால் இந்த நில மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன நலத் துறையைப் பொறுத்த வரையில் அரிசன நல குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்திருக்கிறேன். Scheduled Caste Commission மத்திய தாழ்த்தப்பட்டோர் நல கமிஷனரின் வேண்டுகோளை ஏற்று முதன் முதலாக இந்த கமிட்டி இங்கே அமைக்கப்படும் என்று உறுதி கொடுத்த தமிழக அரசு இன்று வரை அதை அமைக்காமல் இருப்பது குறித்து வேதனைப்படுகிறேன். ஆகவே தமிழக அரசு உடனடியாக, சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட Legislative Committee on Scheduled caste Welfare ஆதிதிராவிடர் நலக் குழுக்களை அமைக்க வேண்டும். பல ஆண்டுகளாக நடந்துவந்த ஆதிதிராவிடர் நல ஆலோசனைக் குழு இன்னும் புதுப்பிக்கப்படவில்லை. கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக அந்தக் குழு செயல்படாமல் இருக்கிறது. இந்தக் குழுவை அவசியம் அமைக்க வேண்டும். நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடர் முடிவதற்குள் அமைப்போம் என்று முன்னாள் அமைச்சர் திரு. விஜயசாரதி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. தாமதமாகிக் கொண்டே போகிறது. ஆகவே அந்தக் குழுவை உடனடியாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசினர் தாழ்த்தப்பட்டோர் மாணவ, மாணவியர் இல்லத்தில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியர்க்கு சாப்பாட்டுக் கட்டணத்தை 65 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக உயர்த்தியதற்காக நம்முடைய அரசையும், மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள். அரசாங்கம் நடத்துகிற அரிசன நல மாணவ, மாணவியர் இல்லங்கள், சாப்பாட்டுக் கட்டணத்தைக் கொடுக்கிறோம். விடுதி காப்பாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறோம். காப்புறவுப் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்கிறோம். சமையல்காரர்களைக் கொடுக்கிறோம். ஆனால் தொண்டு நிறுவனமான தமிழ்நாடு அரிசன சேவா சங்கம் நடத்தும் இல்லங்களில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு இன்னும் 45 ரூபாய்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இது எந்த வகையிலும் பொருத்த



1987 மார்ச் 23] [திரு. க. பாரமலை]

மில்லை. அந்த ஸ்தாபனங்களுக்கு மாணவர்கள் சாப்பாட்டுக் கட்டணம் தவிர வேறு எந்த உதவியும் செய்யவில்லை. ஆகவே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அரிசன சேவா சங்கத்திற்கு ஒரு காலத்தில் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தவர்கள் எல்லாம் மகாத்மா காந்தி அவர்களின் வேண்டுகோளின்படி ஆயிரம் ஆயிரமாக நிதியுதவி கொடுத்தார்கள். அந்த நிதியை வைத்துக்கொண்டு, அவை நடந்து வந்தன. இன்றைக்கு அந்த நிதி தருவது நின்றுவிட்ட நிலையில், தமிழக அரசு, அரசு மாணவர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு எந்த அளவுக்கு நிதி கொடுக்கிறதோ அந்த அளவுக்கு தொண்டு ஸ்தாபனங்கள் நடத்தும் மாணவர் இல்லங்களில் உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சரவர்களும், விவசாயிகள் வாங்கிய கடனில் 50 சத விகிதத்தை பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் செலுத்தியவர்களுக்கு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக கணிசமான அளவுக்கு வசூல் நடந்திருக்கிறது. ஓடியாடி, அலைந்து திரிந்து, கட்ட முடியாதவர்களின் நிலையைக் கருணையோடு பரிசீலித்து, வரும் ஜூன் 30-க்குள் 50 சதவிகிதத்தைக் கட்டினால், இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுமென்ற நிலையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் ஒரு கேள்வி கேட்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைச் சொன்னார்கள். என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலம் வீடு கட்ட 6,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இதுதவிர இன்ப்ராஸ்ட்ரக்சர் என்ற முறையில் 3,000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் 'தாட்கோ' மூலம் 6,000 ரூபாய்தான் கொடுக்கிறோம். ஹரிஜனங்களுக்கு ஒரு பக்கம் 9,000 ரூபாய் மதிப்பில் கொடுக்கிறோம். இன்னொரு பக்கம் 6,000 ரூபாய்தான் கொடுக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்த்து, தாட்கோ மூலமும் 9,000 ரூபாய் கொடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. பாரமலை] [1987 மார்ச் 23

அடுத்து, கிராமங்களில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பு தரும் பல்வேறு திட்டங்களை அமுல் செய்ய வேண்டும். அந்த வகையிலே எனது தொகுதியில் சீமைக் கால்வாய், செங்களத்தூரிலிருந்து தெற்குச் சந்தனூர் வரை செல்லும் கால்வாய், அன்னவாசல் உள்பட 15 கண்மாய்களுக்கு பாசன வசதி அளிக்கும் புதிய கால்வாய் நாட்டாண்பு ஓடைச் சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றை விரைவாக அமுல் நடத்தினால் பல்லாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இன்றைக்கு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 84 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது. 1.98 இலட்சம் பேர் முதியோர் உதவித் தொகை பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருக்கும் இந்த நிலையில், கிராமங்களில் வேலை செய்ய முடியாத நிலையில் சக்தியற்று வாழும் முதியோர்களுக்கு முதியோர் இல்லங்களில் உணவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் பேசட்டும். ஒரு பெயரை குறைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) மாலையிலே சட்டசபை வைத்துக்கொள்ளலாம் என்றால் கடுமையாக எதிர்க்கிறீர்கள். ஒரே மெம்பர் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) இருக்கிற நேரத்தை எல்லோரும் பகிர்ந்துகொள்ளலாம். கடைசியில், ஒரு பெயரைக் குறைத்துக்கொள்ளலாம்.

**திரு. க. பாரமலை:** விரகனூர் மதகு அணையிலிருந்து பார்த்திபனூர் மதகு அணைவரை வைகையின் இரு புறங்களிலும் வைகைக் கால்வாயை மேம்படுத்த, சீரமைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் கண்மாய்களைப் பொறுத்தவரை, திருப்புவனம், கொந்தகை, பூவந்தி, மடப்புரம், காஞார், கட்டிக்குளம், பழையனூர், கட்டனூர், ராங்கியம், மேலவெள்ளூர், மார்நாடு,



1987 மார்ச் 23] [திரு. க. பாரமலை]

இடைக்காட்டூர், பெரிய கோட்டை ஆகிய கண்மாய்கள் பெரிய கண்மாய்களாகும். நம்முடைய அரசாங்கம் இந்தக் கண்மாய்களை எல்லாம் வேகமாக, விரைவாக மேம்பாடு செய்ய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கதர் கிராமத் தொழில் வாரியத்தைப் பொறுத்தவரையில், 1987-88-ல் உற்பத்தி இலக்கு 140 கோடி ரூபாயாக இருக்கும் என்று மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் உள்ள 3,900 விசைத் தறிகளில் 3,000 விசைத் தறிகள் செயல்படாமல் இருக்கின்றன. அந்த sick யூனிட்டுகளை நடத்த அரசாங்கம் முயற்சித்தால், நிச்சயமாக உற்பத்தி இலக்கு 150 கோடி ரூபாய் அளவை எட்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. திருப்புவனத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. திருப்புவனத்திலிருந்து அருப்புக்கோட்டைக்குத் தண்ணீர் செல்வதால், கிணற்றில் நீர் வற்றிவிட்டது. இன்றைக்கு வைகைக் கரையில் உள்ள மக்கள் தண்ணீர் எடுக்க வெளியிடங்களுக்குச் செல்லும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே வைகை ஆற்றில் மேலும் ஒரு புதிய ஆழ் கிணறு தோண்டுவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம். ஜெய் ஹிந்த்.

(முற்பகல் 11-50)

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1987-88 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு சார்பில் தமிழக நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள மொத்த வரவு ரூ. 3,474.37 கோடி. மொத்த செலவு ரூ. 3,681.06 கோடி என்பதை ஆதரித்து என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் பாராட்டி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

[திரு. எல்லை. இராசமாணிக்கம்] [1987 மார்ச் 23

தமிழக அரசு நிதிநிலை அறிக்கையை வெளியிட்டவுடன் அந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி, எதிர்க்கட்சியிலே உள்ள தலைவர்களும் மற்ற பல அறிஞர்களும் பல கருத்துக்களைச் சொல்லி இருக்கின்றார்கள். எதிர்க்கட்சி வரிசையில் இந்த பட்ஜெட் இனிக்கவில்லை, கசக்கிறது என்று சொல்வது வழக்கமான ஒரு பாடம்தான். நாம் இன்று நேற்று இந்த விமர்சனங்களைக் காணவில்லை. 1947-லேயிருந்து ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை இதுவரையிலே 40 ஆண்டுகளாக சமர்ப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி 20 ஆண்டுக் காலம் இந்த நாட்டிலே நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தது. திராவிட முன்னேற்றக் கழகம் 8, 9 ஆண்டுக்காலம் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தது. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி, இன்றைக்கு 10-வது ஆண்டு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறது.

இதற்கு முன்புள்ள நிதிநிலை அறிக்கைகளுக்கும் இப்போது அளித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கும் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தால் தெரியும், நமக்குப் புரியும். 1977-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஆட்சிக்கு வந்தது. அதற்கு முன்பு 1947-லே இருந்து 1977 வரை மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்காக சுமார் 30 ஆண்டுக் காலத்தில் செலவு செய்யப்பட்ட தொகை 47 கோடி ரூபாய் அதாவது 30 ஆண்டுக் காலத்தில் குடிநீருக்காக 1947-லே இருந்து 1977 வரை செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 47 கோடிதான் என்ற நிலையில் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 1977-லே ஆட்சிக்கு வந்த பின்பு. அன்றிலிருந்து இன்றைக்கு வரையிலே பத்து ஆண்டுக் காலத்தில் செலவழித்த தொகை ரூ. 397 கோடி என்பதை நாம எண்ணிப்பார்த்து பேசவேண்டும். இதைப் பார்க்கும்போது மக்களின்பால் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது இந்த அரசு என்பது தெரிகிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைவிட எந்த ஆட்சியும் முன்னிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே மக்களுடைய அடிப்படை தேவை குடிதண்ணீர். அந்தக் குறையைத்



1987 மார்ச் 23] [திரு. எல்லை. இராசமாணிக்கம்]

தீர்க்கும் பணியில் அரசு எவ்வளவு உன்னிப்பாக கவனம் செலுத்துகிறது என்று தெரிகிறது. இன்றைக்கு அப்படியும் அந்தப் பிரச்சினை தீர்ந்ததா என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இந்த ஆண்டோடு, இந்த பட்ஜெட்டோடு, இந்த ஆட்சியினுடைய முடிவு முடிந்துவிட்டதாக எண்ணத் தேவையில்லை. இன்னும் 2, 3 பட்ஜெட்டுகளைத் தயாரிக்க வேண்டிய சந்தர்ப்பம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே எதிர்க் கட்சிகள் கவனத்திலே கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாராயக் கடைகளை மூடிய பின்பு இந்த அரசு தடுமாறிவிடும், நிதிநிலையிலே மோசமாகப் போய்விடும் என்றெல்லாம் கணிப்பு செய்துகொண்டு, சென்ற ஆண்டிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் மேடைகளிலே இந்த ஆண்டோடு அரசு 'குளோஸ்' என்றெல்லாம் பேசியது. அப்படிச் சொன்னவர்களும் உண்டு. ஆனால் மத்திய அரசும், மாநில அரசும் திட்டக் குழுவும் சேர்ந்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு செய்ய ஒதுக்கியுள்ள மொத்த தொகை ரூபாய் 5,750 கோடி. அப்படி என்றால் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,150 கோடி செலவு செய்ய ஒத்துக்கொள்ளப் பட்டது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், கள் மற்றும் சாராயக் கடைகளை மூடியதன் வாயிலாக சுமார் 250 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில் ஆண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1,150 கோடி ரூபாய்க்கு உள்ளாக திட்டத்தைப் போட்டு கண்டிப்பாக இந்த அரசு செயல் படுத்தியிருக்க முடியும். இருந்தாலும் நாட்டின் நலன் கருதி, நாட்டு மக்களின் தேவை கருதி, வறட்சி நிலையைக் கருதி இந்த அரசு 1,341 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுடைய நிதி நிர்வாகத்தின் கீழ் இயங்குகிற அரசு அறிவிக்கிறது என்றால், இதற்கு எவ்வளவு துணிவு வேண்டும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏதோ 75 கோடி ரூபாய்க்கு வரி போட்டுவிட்டோம் என்று அதைப் பிரமாதமாகப் பேசுகிறார்கள். அண்டை மாநிலமான கர்நாடகாவில் 145 கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்திருக்கிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் 155 கோடி

[திரு. எல்ல. இராசமாணிக்கம்] [1987 மார்ச் 23

ரூபாய்க்குப் பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்து அளித்திருப்பதாக நேற்றையதினம் பத்திரிகையில் நாம் பார்த்தோம். அது மட்டுமல்ல, இன்னும் சில நாட்களில் பல்வேறு மாநிலங்களில் பட்ஜெட்டுகள் அளிக்கப்படும்போது பற்றாக்குறை பட்ஜெட் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும காலத்தின் தேவையைக் கருதி, மத்திய அரசு சுமார் 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்து தன்னுடைய திட்டங்களைத் தீட்டியிருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இந்த 10 ஆண்டுக்காலத்தில் செய்துள்ள சாதனைகளை மாண்புமிகு எதிர்க்கட்சி நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 10 ஆண்டுக் காலத்திலேதான், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான் தண்ணீருக்காக என்று மிகப் பெரிய அளவில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மக்களுக்குத் தண்ணீர் அளிப்பதை இந்த அரசு தன்னுடைய கடமையில் தலையாய கடமையாகக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

அடுத்ததாக, தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்த 10 ஆண்டுக் காலத்தில் மிகச் சிறப்புமிக்க இடத்தை நமது மாநிலம் பெற்றிருக்கிறது. இந்தியாவிலேயே நமது மாநிலம்தான் தொழில் துறையில் இன்றையதினம் முதன்மை பெற்ற மாநிலமாக இருக்கிறது என்று சொன்னவர் யாரோ அல்ல—மத்திய அரசின் தொழில் அமைச்சராக, ராஜாங்க அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிலேயே தமிழகம்தான் தொழில் வளர்ச்சியில் முதன்மை பெற்ற மாநிலமாக சென்ற ஆண்டு வந்திருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுகின்ற நேரத்தில் ஒரு மாண்புமிகு உறுப்பினர் பேசுகையில் இந்தியாவிலே தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் தமிழகம் 13-வது இடத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அவர் அந்தக் கருத்தை எந்த ஆதாரத்தை வைத்து சொன்னாரோ, எனக்குத் தெரியவில்லை. ஆனால்



1987 மார்ச் 23] [திரு. எல்ல. இராசமாணிக்கம்]

நான் சொன்ன ஆதாரம் மாண்புமிகு மத்திய தொழில் ராஜாங்க அமைச்சர், மத்திய அரசின் சார்பாக குறிப்பிட்ட ஆதாரமாகும்.

இன்னொன்றையும் அவர்கள் அப்போது குறிப்பிட்டார்கள். அகில உலகத்தின் தொழில் வளர்ச்சியை எடுத்துக்கொண்டால் இந்தியா 7-வது இடத்திற்கு வந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். 11-வது இடத்தில் இருந்த இந்தியா, தொழில் வளர்ச்சியில் இன்றையதினம் அகில உலக அளவில் 7 வது இடத்திற்கு வந்திருக்கிறது என்று பெருமைப்பட குறிப்பிட்டிருந்தார்கள்.

(நண்பகல் 12-00)

அதோடு அவர் நிற்கவில்லை. 1980—85 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் ஒரு சர்வே நடத்தினார்கள். அப்போது வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ளவர்கள் இந்தியாவில் சராசரி நூற்றுக்கு 52 பேர் என்று கணித்தார்கள். ஆனால் தமிழகத்தினுடைய நிலையைப் பொறுத்தவரையில் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் 100-க்கு 42 பேர் என்ற நிலை இருந்ததை, 1981-லிருந்து 1985 ஆம் ஆண்டு வரையிலே ஒரு புள்ளி விவரத்தை எடுத்து மத்திய அரசு வெளியிட்டது. அதை மாநிலச் செய்தியாக, தமிழ்நாட்டினுடைய வானொலி வெளியிட்டது. அதிலே குறிப்பிட்டார்கள், 1981-லிருந்து 1985 வரையிலே உள்ள அந்தப் புள்ளி விவரத்தைக் குறிப்பிட்டார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்தவர்கள் 42 சதவீதம் என்பது இன்றைக்கு 36 சதவீதமாகக் குறைந்துள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்த 6 சதவீதம் ஏழை மக்கள் மேலே சென்றிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது. ஏழைகளுக்குச் செய்த தர்மங்களும், ஏழைகளுக்குச் செய்த திட்டங்களும் செயல்படத் துவங்கிவிட்டன என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு என்ன வேண்டியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல, நடப்பு நிதியாண்டில் எவ்வளவு சிறப்பாகக் காரியங்கள் நடத்தப்படுகின்றன என்பதைப்பற்றிச் சொல்ல வேண்டும். இந்த நாடு மிகப் பெரிய விவசாய நாடு. அடுத்து நெசவுத் தொழிலாளர்கள் நிறைந்த நாடு. அந்த நெசவாளர்களுக்கு 10 கோடி ரூபாயைச் சென்ற ஆண்டு நிதிநிலையிலே ஒதுக்கினோம். ஆனால் அவர்களுக்கு ரிபேட் என்ற வகையில்

[திரு. எல்ல. இராசமாணிக்கம்] [1987 மார்ச் 23

கொடுக்கின்ற நேரத்தில் 37 கோடி ரூபாய் என்று ஒதுக்குவதன் மூலம் சென்ற ஆண்டைவிட 27 கோடி ரூபாய் அதிகமாக நமது நிதிநிலை அறிக்கையிலே வந்துவிட்டது.

அதைப்போல, இன்றைக்கு சமூக நலக் காடுகள் என்பதைப் பொறுத்தவரையில், பல அறிஞர்கள் மழை வராமல் போவதற்கு மரங்கள் இல்லாதது ஒரு மிகப்பெரிய காரணம் என்று சொன்னதால்தான் இன்றைக்கு இந்திய அரசும், மாநில அரசும் பல கோடி ரூபாய்களிலே மரங்கள் நடுவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். தமிழகத்திலே பல இடங்களிலே ஏற்பட்டுவிட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும், நீக்குவதற்கும், அதேநேரத்தில் சமூகத்தினுடைய நலன் காக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காகவும 76 கோடி ரூபாயை 1986-87-லே ஒதுக்கி, இந்த ஆண்டு 1987-88-லே 92 கோடி ரூபாயை, அதாவது 16 கோடி ரூபாயை அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல, பாசனத்திற்காக 129 கோடி ரூபாய் சென்ற ஆண்டிலே ஒதுக்கினார்கள். இந்த ஆண்டு 1987-88-க்கு 142 கோடி ரூபாய், அதாவது 13 கோடி ரூபாயைப் பாசனத்திற்காக என்று அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல, கல்விக்காக சென்ற ஆண்டு செலவிட்ட தொகை 551 கோடி ரூபாய். இந்த ஆண்டு செலவழிக்க இருக்கின்ற தொகை 597 கோடி ரூபாய். 46 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்கிறார்கள்.

அதேபோல, வேளாண்மைக்கு 118 கோடி ரூபாய் சென்ற ஆண்டு. இந்த ஆண்டு 141 கோடி ரூபாய். அதிக ஒதுக்கீடு 23 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பட்டியல்களைச் சொல்லிக்கொண்டே போனால் எவ்வளவோ சொல்லலாம்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க பாட்சித் தலைவருக்கும், அவரோடு நின்ற நமது நாவலர் அவர்கள் இரவு பகலாக அதிகாரிகளோடு கலந்து பேசி, மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற மிகப் பெரிய நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தமைக்காகப் பாராட்டுதலைத் தெரிவிக்கிறோம்.



1987 மார்ச் 23] திரு. பொன். முத்துராமலிங்கம்]

என்பதை மாற்றி "Tap the poor and pat the rich" என்ற அடிப்படையில் இந்த வரி விதிப்புமுறை அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய செங்கல்லுக்கு 5 சதவிதத்திலிருந்து 8 சதவீதமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய மரத்திற்கு 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. நடுத்தர மக்கள் பயன்படுத்தக்கூடிய ஆஸ்பெஸ்டாஸ் சீட்டிற்கு 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது.

இவை மட்டுமல்லாமல், இன்னொன்றையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிற்றுண்டிச்சாலைகளில் உணவுப் பண்டங்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்படக்கூடியவர்கள் சிற்றுண்டிச்சாலைகளுக்குச் செல்லுகின்ற சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள்தான். இப்படிப்பட்ட மக்களைத்தான் இந்த வரிச் சுமை பாதிக்கும். அது மட்டுமல்லாமல், செங்கல் வாங்கக்கூடிய, மரம் வாங்கக்கூடிய ஏழை எளிய மக்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஓட்டல்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலைமைகளைப் பார்க்கிறபோது இந்த வரி விதிப்பினால் தவறுகள் நடக்க வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அதனால் சிற்றுண்டி விடுதிகளுக்குப் போகிற சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் இந்த வரிச் சுமையால் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதெல்லாம், இந்த சிற்றுண்டிச் சாலைகளுக்கு வரி விதிப்பதன் மூலமாக அதிகாரிகள் இந்த நிலைமைகளைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இதிலே உள்ளன என்பதைத்தான்.

**(பிற்பகல் 12-10)**

நான் இந்த வரி கூடாது என்று வாதிட்டாலும் கூட இந்த வரியை விதித்தாலொழிய வேறு வழியில்லை என்று அரசு கருதுமேயானால் ஒட்டுமொத்தமாக ஆண்டுக்கு இவ்வளவுதான் என்று

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 மார்ச் 23

சொல்லி சிற்றுண்டிச் சாலைகளுக்கு விதிக்கலாமேயல்லாமல் ஏதோ (turnover) என்ற அடிப்படையில் அதாவது ஆண்டுக்கு இவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்திருந்தால் இவ்வளவு வரி கட்டவேண்டும் என்கிற முறை இருந்தால அதிகாரிகள், இடைத் தரகர்கள் தவறாகப் பயன்படுத்துவதற்கான அனைத்து வாய்ப்புக் களும் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு இந்த வரி நிலைமைகளை மறுபரிசிலனை செய்யவேண்டுமென நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்படுகிற வரிகள் மூலமாக, அதுபோன்ற விற்பனை வரிகளின் மூலமாக 90 கோடி ரூபாயை இந்த அரசு ஈட்ட இருக்கிறது. ஆனால் வரிச்சலுகை என்று சொல்லி 15 கோடி ரூபாய்க்கு வரிச்சலுகை கொடுத்திருக் கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் தூண்டில் போடு கிறவன் சிறு மீனைப் போட்டு பெருமீனைப் பெற முயற்சிப்பது போல் இருக்கிறது. இந்த அரசினுடைய மனப்பான்மை, 15 கோடி ரூபாயை வரிச்சலுகையாக வழங்கிவிட்டு 90 கோடி ரூபாயை வரியாகப் பெறுவது என்ற வகையில் அமைந்திருக்கிறது. அதாவது தூண்டில் போடுகிறவனுடைய மனப்பான்மையை ஒத்தி ருக்கிறது இந்த ஆட்சியினுடைய மனப்பான்மை என்று நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இங்கே பெரும் வீடுகட்டும் திட்டம் என்று ஒரு திட்டத்தைப் புலனாய்வு செய்துகொண்டிருக்கிறீர்கள். இந்தத் திட்டம் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டம். தமிழ்நாட்டில் உள்ள நலிந்த பிரிவினருக்காகவும், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுக்காகவும் ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் என்ற அடிப்படையில் 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஆளுநர் உரையில் அதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான விவரங்களை அறிவிக்கிறபோது இந்தத் திட்டம் நிறைவேறுமா என்ற ஐயப்பாடு இங்கே கூட ஏற்பட்டது. 30 இலட்சம் வீடுகள் என்று ஏற்கெனவே அறிவித்தபடி பார்த் தால் ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் கட்டவேண்டும். நடந்த



1987 மார்ச் 23] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

கிற 26.11 கோடி ரூபாயைக் கழித்துவிட்டு இறுதியாக பற்றாக் குறை எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால் 206.69 கோடி ரூபாய் வருகிறது.

ஆனால் இந்த ஆண்டில் விற்பனை வரி மூலமாக, மோட்டார் வரி மூலமாக 90 கோடி ரூபாயை இந்த அரசு பெறவிருக்கிறது. வரிச் சலுகைகள் என்ற வகையில் 15 கோடி ரூபாய் அளவில் அளிக்கவிருக்கிறது. வரிச் சலுகைக்கான 15 கோடி ரூபாயைக் கழித்தால் பாக்கியுள்ள 75 கோடி ரூபாயைத் துண்டு விழுந்திருக் கிற பற்றாக்குறையாக இருக்கிற 206.69 கோடி ரூபாயில் கழித் தால் இறுதியாக எஞ்சி இருப்பது, 1987-88 ஆம் ஆண்டுக்கான இறுதி பற்றாக்குறை 131.69 கோடி ரூபாய் என்ற அளவில் இருக் கிறது. இவ்வளவு பெரும் தொகை இந்த நிதிநிலை அறிக்கை யில் பற்றாக் குறையாக, துண்டு விழுந்திருக்கிறது.

அடுத்து, 7 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த இரண்டாண்டு கழிந்த பின்னால் 86 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதியாகத் தமிழக அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் இது வரை மத்திய அரசிடமிருந்து இந்த 86 கோடி ரூபாய் பற்றி, பரிசீலித்ததாக, கொடுக்கவிருக்கிறதா அல்லது மறுக்கிறதா என்ற விவரக் கடிதம் தமிழக அரசுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்ற தகவலைத்தான் என்னால் இந்த நிதிநிலைக் குறிப்பில் பெற முடிகிறது. இந்த 86 கோடி ரூபாய் தமிழக அரசுக்குக் கிட்டாது போனால் இந்த ஆண்டினுடைய நடுவில் மேலும் பல வரிச் சுமை களை தமிழக மக்கள்மீது சுமத்தக்கூடிய கட்டாயம் இந்த அரசுக்கு உருவாகும் என்ற அச்சம் இருந்துகொண்டிருக்கிறது

இங்கே வரி விதித்திருக்கிறார்கள். வரி விதிப்புக் கொள்கை பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் குறிப் பிடும்போது "Tap the rich and pat the poor என்று சொன்னார்கள். ஏழையின் முதுகிலே தட்டிக்கொடுத்து, வசதி படைத்தவர்களிடமிருந்து வரியைப் பெறவேண்டுமென்று சொன் னார்கள். ஆனால் இங்கே யார் யாருக்கு வரி விதிக்கப்பட்டிருக் கிறது; யார் யாருக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் அண்ணா சொன்ன "Tap the rich and pat the poor"

[திரு. எல்ல இராசமாணிக்கம்] [1987 மார்ச் 23

இருபது கோடி ரூபாய் ஏழை எளிய தாய்மார்களுக்கு, காலணி கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகம்—நமது துணைத் தலைவருடைய வார்த்தையிலே சொல்லப்போனால் எதையுமே கொச்சைப்படுத்திப் பேசுகின்ற திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசியிருக்கிறார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் செருப்பை ஏன் தாய்மார்களுக்குக் கொடுத்தார் தெரியுமா? பத்தாண்டுக் காலமாக இந்த அரசுக்கு ஓட்டு போட்டோமே என்று தாய்மார்கள் தலையிலே அடித்துக் கொள்வதற்காக என்று மிகக் கேவலமாகப் பேசி, முரசொலி பத்திரிகையிலே அவர்களுடைய தலைவரின் அனுமதியோடு வந்திருக்கிறது. ஒரு நிதிநிலை அறிக்கையைப்பற்றி கருத்து சொல்வதிலே ஆச்சரியப்படத் தேவையில்லை. எல்லோரும் உரிமையோடு கருத்து சொல்லலாம். எதிர்க் கட்சிகள் தங்களுடைய கருத்தைத் தாராளமாகச் சொல்லலாம். அரசைப் பாராட்டுவதற்காக வேண்டியே நாம் பட்ஜெட்டைத் தயாரிக்க முடியாது. நாட்டு மக்கள் பாராட்ட வேண்டும். பல நல்ல நோக்கங்களோடு கூடிய, நாவலர் அவர்களால் உருவாக்கப் பட்ட நிதிநிலை அறிக்கையை, புரட்சித் தலைவர் அரசால் கொண்டுவரப்பட்ட அறிக்கையை, நாங்கள் மனதார வரவேற்று, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் பாராட்டு தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக அரசாலே இந்த ஆண்டு கொண்டுவரப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கைமீது சில எண்ணங்களை மட்டும் நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின்படி விவரிக்கப்பட்டிருக்கிற கருத்துக்களைப் பார்த்தால் இந்த நிதிநிலை அறிக்கையில்; வருவாய்க் கணக்கில் 94.85 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. அதிலே மூலதனக் கணக்கில் 122.97 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. மொத்தத்தில் பொதுக் கணக்கிலே வருகின்ற உபரித் தொகைக் கணக்கில் இந்த ஆண்டு தொடக்கத்தில் ஏற்படு



1987 மார்ச் 23] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

ஆண்டில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது? எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பணம் செலவாகி இருக்கிறது? யார், யாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன? இந்த விவரங்களை எல்லாம் இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த 30 இலட்சம் வீடுகளைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு என்ன சொல்லி இருக்கிறார்கள்? சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினருக்கு அரசால் இவை கட்டிக்கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்கள் மற்றும் மத்திய வங்கியினுடைய உதவி, மத்திய அரசினுடைய உதவி, அத்துடன் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசு எப்படி உதவி செய்கிறதோ அதை எதிர் பார்த்து ஒட்டுமொத்தமாக வீடுகள் கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்கிற புலனாய்வுதான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் நண்பர்கள் இது ஒரு புதுமையான திட்டம் என்று சொன்னார்கள். ஆனால் இது ஒரு புதிரான திட்டம். இந்தப் புதிர் திட்டத்திற்கு புலனாய்வுதான் கடந்த ஓராண்டுக் காலமாக நடந்துகொண்டிருந்ததே அல்லாமல் இது கட்டி முடிக்கப்படுமா, நலிந்த மக்களுக்கு வீடுகள் வழங்கப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மன்றத்தில் எழுந்துவிட்ட நிலையில் இது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது.

இன்னொரு நிலைமையையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை. இன்றைக்கு 1,500 ரூபாய் செலவில் குடிசைப்பகுதியில் வாழும் மக்களைப் பொறுத்த வரையில் அப்பகுதி புறம்போக்குப் பகுதியாக இருந்தாலும் நீண்ட நெடுங்காலமாக அவர்கள் அந்தப் பகுதியில் இருப்பதன் காரணத்தால் அந்தக் குடிசையை அகற்றிவிட்டு ஒரு குடிசைக்கு 1,500 ரூபாய் செலவு செய்து ஓடு போடுகிற ஒரு திட்டம் அமல் படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியான மதுரை மேற்குத் தொகுதியானாலும், மாண்புமிகு

[திரு. பொன் முத்துராமலிங்கம்] 1987 மார்ச் 23

முதலமைச்சர் அவர்களின் தொகுதியான ஆண்டிப்பட்டியானா லும் இந்த 1,500 ரூபாய் குடிசைகளுக்கு ஒழுங்காகச் செலவிடப் படுகிறதா என்பதை ஆட்சியிலே உள்ளவர்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். * *.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** Sweeping ஆக இவ்வாறு குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. அவ்வாறு சொல்வதற்கு உங்களை அனுமதித்தால் பிறகு ஆளும் கட்சியினரையும் அவ்வாறு அனுமதிக்க வேண்டி வரும். எனவே குற்றச்சாட்டுகளைச் (sweeping) ஆகத்தான் சொல்லவேண்டும். Sweeping ஆக சொல்லப்பட்டதால் அதனை அவைக்குறிப்பிலே இருந்து நான் நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. பொன். முத்துராமலிங்கம் :** இதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே தவிர, ஏதோ குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** Specific-சொன்னால்தான் அரசாங்கம் விசாரிப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

**திரு. பொன். முத்துராமலிங்கம் :** சொல்லப்போகிறேன் இனி. அரசாங்கம் பணத்தை ஒதுக்கீடு செய்தாலும் கூட, அது ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகிற நேரத்தில் எவ்வளவு மோசமான சூழ்நிலையை உருவாக்குகிறது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

என்னுடைய தொகுதியான மதுரை மேற்குத் தொகுதியானாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆண்டிப்பட்டி தொகுதியானாலும் நான் சொல்லுகிற நிலைமைகள் இருக்கின்றனவா, இல்லையா என்பதை அரசாங்கமே ஒரு குழு அமைத்து நேரிடையாகச் சென்று விசாரித்து இந்த மன்றத்திலே ஒரு அறிக்கையைத் தாராளமாக தாக்கல் செய்யலாம். நான் என்னென்ன குறைபாடுகள் சொல்கின்றேனோ அவற்றிற்கெல்லாம் நான் முழு மனதோடு பொறுப்பேற்க முழுமையாகத் தயாராக இருக்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 மார்ச் 23] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

இந்த நிலைமைகளைச் சொல்வதற்குக் காரணம் இந்த அரசாங்கம் பணம் ஒதுக்கியிருந்தாலும்கூட ஒரு கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு, அந்தப் பணத்தை சிலர், இடைத் தரகர்களாக மாறி எடுத்துச் செல்வது என்பது எந்த வகையில் நியாயம் என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து கிருஷ்ணா நதி நீர்த் திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றி தொடர்ந்து ஒவ்வோராண்டும் ஆளுநர் உரையானாலும், நிதிநிலை அறிக்கையானாலும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. நான் இந்த மன்றத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் இப்போது எந்த நிலையிலே இருக்கிறது. கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்கு 600 கோடி ரூபாய் 1985-86 ஆம் ஆண்டு திட்ட அடிப்படையிலே செலவாகும் என்றும், ஆண்டு தோறும் 200 கோடி ரூபாய் செலவு ஆகும் என்றும் விவரக் குறிப்பு இருக்கிறதேயல்லாமல், இந்தத் தமிழக அரசு இந்தத் தெலுங்கு கங்கை திட்டமான கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்கு எவ்வளவு பணம் கொடுத்து இருக்கிறது? இதுவரையில் எவ்வளவு ஆகியிருக்கிறது? இன்னும் எவ்வளவு கொடுக்க வேண்டும்? திட்டச் செலவு என்பது எவ்வளவு என்ற விவரத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலேயே தெரிவிக்க வேண்டாமா? ஆந்திராவிலே உள்ள அமைச்சர் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது விரிவாக எடுத்துச் சொன்னேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போது அவையில் இருந்து கேட்டார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. மீண்டும் வேண்டுமானாலும் என்னுடைய பதிலுரையின் போது தெளிவுபடுத்துகிறேன். எவ்வளவு செலவழித்தோம், எவ்வளவு கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம், எவ்வளவு அவர்கள் செலவழித்தார்கள், எவ்வளவு நாங்கள் செலவழிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்ற விவரங்களைச் சொன்னேன். மீண்டும் என்னுடைய உரையிலே தெளிவுபடுத்துகிறேன்.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை பற்றி ஆந்திராவிலே இருந்து வந்த வருவாய்த் துறை அமைச்சர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள்? தமிழகத்தினுடைய முதலமைச்சர் மத்திய அரசுக்குப் பயந்து கொண்டு இந்தத் தெலுங்கு கங்கை திட்டத்திற்கு ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள் என்ற கருத்தை ஆந்திராவினுடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்றால், இரு அரசுக்கும் நல்ல உடன்பாடு இருக்கிறதா? ஆந்திர அரசாங்கத்திற்கும், தமிழக அரசுக்கும் தெலுங்கு கங்கை திட்டத்தை நிறைவேற்றுவதில் நல்ல ஐக்கிய மனப்பான்மை இருக்கிறதா என்ற விவரங்களை எல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிடுவதாக சொல்லியிருக்கிற காரணத்தாலே, அதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

அடுத்து இங்கே பஸ் கட்டண உயர்வைப் பற்றி நான் சில கருத்துக்களைத் தெரிவித்தாக வேண்டும். நிதிநிலை அறிக்கை 20 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு 2 நாட்களுக்கு முன்பாக பேருந்துகளின் பயணக் கட்டணம் உயர்த்தப் பட்டிருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கை மக்கள் மன்றத்திலே தாக்கல் செய்யப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக பேருந்துகளுடைய பயணக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய காரணம் என்ன என்பதை நான் வினவிட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, மக்கள் மன்றம் அதைப் பரிசீலித்து ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்னால், பேருந்துகளைப் பயன் படுத்துகிற மக்கள் என்ன நிலையைத் தெரிவிக்கிறார்கள் என்பதை மக்கள் பிரதிநிதித்துவ மன்றத்தின் மூலமாக ஒரு கருத்தைப் பெற்று அதற்குப் பின்னால் ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்னால் ஆட்சியிலே உள்ளவர்கள் அவசரப்பட்டு இந்தக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் என்ன என்று நான் கேட்டிட விரும்புகிறேன்.





அதுமட்டுமல்ல. அங்கு எரி பொருள் மிகவும் திறமையாகவும் க்கனமாகவும் பயன்படுத்தப்படுகிறது என்ற கருத்து ற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே பணியாற்று றவர்கள் கூட குறைந்த அளவிலேதான் இருக்கிறார்கள் என்றும் ருத்து நிலவுகிறது. எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும், ன்றிரண்டு தவிர, லாபத்திலே தான் ஓடிக் கொண்டிருப்பதாக மைச்சர்களாலேயே அறிக்கை தரப்படுகிறது. போக்குவரத் துக்கழகம் லாபத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது; எரிபொருள் க்கனமாகப் பயன்படுத்தப்படுகிறது; 1985 ஜூலைக்குப் பின்னால் எரி பொருள் விலையில் ஏற்றம் இல்லை; வறட்சியின் கொடுமை தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது; அப்படி ஒரு கோர வறட்சி குடிகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் என்ன காரணம் கருதி இந்தப் பேருந்துகளின் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டது, அதுவும் மக்கள் மன்றத்திற்குள் அறிவிக்கப் படாமல் என்பதை நான் அறிந்திட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

இன்றைக்குப் பேருந்துகளை யார் பயன்படுத்துகிறார்கள்? சாதாரண ஏழை எளிய மக்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்கள்தான் இந்தப் பேருந்துகளைப் பயன்படுத்து கிறார்கள். ஆகவே இன்றைக்குப் பேருந்துகள் கட்டணத்தை உயர்த்தியிருப்பது என்பது அரசாங்கம் ஏழை மக்கள்பால் அக் கறை கொண்டு நலத்திட்டங்களைச் செயலாற்றுகிறோம் என்று ஒரு புறத்தில் சொல்லிக் கொண்டு, இன்னொருபுறம் அந்த சாதாரண ஏழை மக்களைக் கசக்கிப் பிழிகிற வகையில் வரிச் சுமையைச் சுமத்துவது என்பது ஒரு அரசியல் வேடம் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து இங்கே மதுவிலக்கைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். மதுவிலக்கு பற்றி என்ன தெரிவிக்கப்பட்டிருக்கிறது? 250 கோடி ரூபாய் உத்தேசமாக நஷ்டம் வருமென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதிலே 50 சதவீதம் மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அதற்கு மத்திய அரசு என்ன ஆட்சேபணை சொல்கிறது? 1977-78-ம் ஆண்டை மையமாக வைத்து, அப்போது என்ன செலவு ஏற்பட்டதோ, அதை அடிப்படையாக வைத்துத்தான் கணக்கிட்டுக் கொடுப் போம் என்று சொல்கிறது. இங்கே தமிழக அரசில் என்ன சொல்

கிறார்கள்? எப்போது மதுவிலக்கு அமலுக்குக் கொண்டு வரப்பட்டதோ அதற்கு முந்தைய ஆண்டில் எவ்வளவு செலவு வருகிறதோ அதைக் கணக்கிட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது என்ன நிலைமை? கடந்த ஜனவரி மாதம் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டுவிட்டது. ஆனாலும்கூட இன்றைக்கு இதுவரையிலும் மத்திய அரசு இதுபற்றி ஏதாவது கருத்து தெரிவித்திருக்கிறதா? அல்லது மத்திய அரசிடம் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்தி இருக்கிறதா? அல்லது மத்திய அரசு எவ்வளவு தொகை தரவிருக்கிறது? மத்திய அரசு தரக்கூடிய தொகை இந்த நிதிநிலை அறிக்கையைக் கடுமையாக பாதிக்குமே? ஏற்கனவே பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக இருக்கிறதே, அவற்றையெல்லாம் கணக்கிட்டு இதுவரையிலும் மத்திய அரசிடமிருந்து ஒரு உத்தேசமான அனுமதியை இந்த அரசு பெற்றிருக்க வேண்டாமா என்பதையெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் இடித்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நிதிநிலை அறிக்கையின்படி உயர் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய ஆயிரம் தொழிற்சாலைகளுக்கு 40 சதவீதம் மின்வெட்டு வருமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தமிழகம் தொழில் துறையில் முதலாவதாக இருக்கிறது என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அருணாசலம் தெரிவித்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதெல்லாம் இந்த அறிக்கையில் பின்குறிப்பில் ஐந்தாம் பக்கத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வழங்கப்பட்ட தொழில் உரிமங்களின் எண்ணிக்கையைப் பொறுத்த மட்டில், மாநிலம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, அதன் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ், மாநில வாரியாக நிதி உதவி அளித்துள்ள அறிக்கையைப் பார்க்கும்போது, மகாராட்டிர மாநிலத்தை அடுத்து, இரண்டாவது இடத்தில் தமிழகம் இருப்பதைக் காணலாம். எனவே இந்த அறிக்கையில் தொழில் முன்னேற்றத்தில் தமிழகம் மூன்றாவது, இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்பது தெரிகிறது. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள்



சொன்னார்கள், எனவே தமிழகம் முதல் நிலையில் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, அவர்கள் இந்த அறிக்கையை ஒழுங்காக, சரியாக ஆய்வு செய்யவில்லை என்பதைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

அடுத்து இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் இதில் விமர்சனம் செய்வதற்கான கருத்துக்களே இல்லை. நாட்டிலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள். சட்டியிலே இருந்தால்தான் அகப்பையில் வருமென்று. இங்கே எதுவும் குறிப்பிடப்படாத நேரத்தில், வறட்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படாத நேரத்தில், தொழில்கள் பெருகுவதற்கான வாய்ப்புக்களே இல்லாத நேரத்தில் இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் அதிகமாக விமர்சிப்பதற்கு ஒன்றுமில்லை, காரணம் இந்த அறிக்கையில் ஒன்றுமில்லையென்று சொல்லி, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. ஏ. பாலுச்சாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் இந்த அவைக்கு அளிக்கப்பட்டிருக்கிற 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறும் பொது விவாதத்தில் கலந்து கொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜெனரேட்டர் உறுப்புகள், விசைக் கலப்பைகள், பிளாஸ்டிக்கின் மூலப் பொருட்கள் போன்ற பொருட்களுக்கு எல்லாம் வரிச் சலுகை அளித்துள்ளதற்காக சாதாரண மக்கள், மற்றும் நடுத்தர மக்கள் சார்பாக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கருவுற்ற தாய்மார்களுக்கும் மற்றும் சிறு குழந்தைகளுக்கும் ஒருங்கிணைந்த சத்துணவு வழங்கும் திட்டத்தையும், கிராமப்புறங்களில் உள்ள தாய்மார்களுக்கும், ஏழைக் குழந்தைகளுக்கும் காலணி வழங்கும் திட்டத்தையும், இன்னும் பல்வேறு நலத் திட்டங்களையும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. அந்த ரீதியில் காலணி அணிபவர் பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கு

[திரு. ஏ. பாலுச்சாமி] [1987 மார்ச் 23

வாய்ப்பாக இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. அவர்களுக்கு ஒரு நிரந்தரமான வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய திட்டமாகவும் இது அமைந்திருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதியில் வாழ்கின்ற ஏழை மக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில், இதய தெய்வம் தமிழக முதலவர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தொடர்ந்து 3 ஆண்டுக் காலமாக வறட்சியின் பிடியில் சிக்கி இன்றையதினம் தவித்துக் கொண்டிருக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி, கடுமையான குடிநீர்க் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. பரமக்குடி, கடலாடி, முதுகுளத்தூர், கமுதி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் வேலை வாய்ப்பில்லாமல் கிராமங்களை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். எனவே அங்குள்ள குடிநீர்க் கஷ்டத்தைப் போக்கவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரவும், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியான பரமக்குடியைச் சுற்றியுள்ள பல பள்ளிகளில் கட்டிட வசதி இல்லாமல், இன்றையதினம் வகுப்புகள் வெளியே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, கல்விக்கு என்று ஒதுக்கியுள்ள நிதியில் அதிகமான பணத்தை பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கவேண்டும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மூலம், கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் பல கிராமங்கள் மின் அழுத்தக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் இணைப்புச் சாலைகள் இல்லாமல் பல கிராமங்கள் என்னுடைய தொகுதியில் உள்ளன. எனவே இந்தக் குறைகளைப் போக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 23] [திரு. ஏ. பாலுச்சாமி]

குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மேம்படுத்த உள்ள நகர்ப் பகுதிகளில், பரமக்குடி நகராட்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட உள்ள பணியைத் துரிதமாகச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாக நலன் கருதி பெரிய வட்டமான பரமக்குடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, நயினார்கோவிலை மையமாக வைத்து தனியாக ஒரு வட்டம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே இரண்டு கலைக் கல்லூரிகள்தான் உள்ளன. ஒன்று கமுதியிலும், மற்றொன்று இராமநாதபுரத்திலும் உள்ளது. எனவே பரமக்குடியில் ஒரு கலைக் கல்லூரியையும், ஒரு தொழில் நுட்பக் கல்லூரியையும் அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போக்குவரத்து வசதியைப் பொறுத்தவரையில், மிகவும் பின்தங்கிய பகுதியாக எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் இருக்கிறது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என தனியாக ஒரு போக்குவரத்துக் கழகத்தை அமைத்துத் தரவேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு ஓய்வு ஊதியம் வழங்கும்போது, மின் வாரியத்தில் உள்ள நடைமுறையை அமல்படுத்தி, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. பாலுச்சாமி] [1987 மார்ச் 23

அடுத்து பெரியார் வைகை பாசனத் திட்டத்தை நவீனப் படுத்த இரண்டாம் கட்ட பணிக்கு ரூ. 56.86 கோடி அனுமதி அளித்துள்ளதை வரவேற்கிறேன். அதே சமயம் வைகை அணையின் தண்ணீர் இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பாசன வசதிக்கு உண்டா என்ற மனக்கவலை அங்குள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே தண்ணீர் திறந்துவிடுவதில் உள்ள நடைமுறையை மாற்றி, புதிதாக ஆய்வு செய்து, ஒப்பந்தத்தை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தின் சார்பில் தண்ணீரின் அளவைக் கண்காணிக்க அங்கு ஒரு அதிகாரியை நியமிக்கவேண்டும் அல்லது பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடும்பொழுது பாசன வசதிக்கு உட்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களை வைத்துத்தான் முடிவு எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து கைத்தறி நெசவாளர்களின் சங்கங்களுக்கு வழங்கப்படும் விழாக்கால சிறப்புத் தள்ளுபடி உடனுக்குடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதிகமான காலதாமதம் ஆவதால், வங்கிகளில் கடன் பெற்று சங்கங்களை நடத்தக்கூடிய நிலைமை உருவாகின்றது. மேலும் அச்சங்கங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கும் பணி அளவு, சம்பள விகிதம் பணி உத்தரவாதம் போன்றவை இல்லாமல் இருக்கின்றன. எனவே அவற்றைப் போக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சேது கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்தியும், பாம்பன் பாலத் திட்டப் பணியைத் துரிதமாக முடிக்கவும் இராமேஸ்வரத்தில் தொலைக்காட்சி நிலையம் அமைப்பதை விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், இராமநாதபுரம் மாவட்டக் கடலோரப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவர்கள் அச்சமின்றி கடலில் சென்று மீன் பிடித்து வரக்கூடிய பாதுகாப்பு உள்ள நிலைமையை அப் பகுதி மீனவர்களுக்கு உண்டாக்கித் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.



1987 மார்ச் 23]

(பிற்பகல் 12-30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க விழைகிறேன். இந்த பட்ஜெட் வெளிவந்தவுடன் என்னுடைய நண்பர் ஒருவரிடம் இந்த பட்ஜெட் பற்றி கருத்தைக் கேட்ட போது அவர் இதை ஒரு அக்கவுண்டெண்டு பட்ஜெட் என்று வேடிக்கையாகச் சொன்னார். அக்கவுண்டெண்டு என்று சொன்னால் double entry system of accounting debit what comes in) and credit what goes out என்ற பாணியிலே அக்கவுண்டுகளை வைப்பார்கள். ஆனால் ஒரு அக்கவுன்டெண்டை வேலைக்கு வைக்கிறபோது நடந்த ஒரு வேடிக்கையான சம்பவத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அக்கவுண்டெண்டு ஒருவரை வேலைக்கு எடுத்தபோது அவரிடத்தில் உங்களுக்கு double entry system of accounting தெரியுமா என்று கேட்டபோது எனக்கு triple entry system of accounting தெரியும் என்று சொன்னாராம். அதாவது வருமான வரித் துறையின் கண்ணை மறைப்பதற்கு ஒரு கணக்கும், உங்களுடைய பங்குதாரர் அல்லது பார்ட்னருக்குக் குறைந்த லாபத்தை காட்டக்கூடிய ஒரு கணக்கும், உண்மையான உரிமையாளருக்கு உண்மையான லாபத்தை காட்டக்கூடிய ஒரு கணக்கும் ஆக (triple entry system of accounting என்று சொல்லக்கூடிய அந்த சிஸ்டமே தெரியும் என்று சொன்னாராம்.

இங்கே நம்முடைய பழுத்த அனுபவம் மிக்க நிதி அமைச்சர் அவர்கள் கூட ஒரு அக்கவுண்டெண்டாக இருந்து 3 விதமான அக்கவுண்டை இங்கே தந்து இருக்கிறார்கள் என்று நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சிகள் என்ற வருமான வரியினுடைய கண்ணை மறைக்கவும், பங்குதாரர் ஆகிய மத்திய அரசுக்குக் குறைந்த லாபத்தை காட்டி பற்றாக்குறை பட்ஜெட்டாகவும், மக்கள் என்கிற எஜமானர்களுக்கு காலணி வழங்கும்

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மார்ச் 23

திட்டம் போன்ற லாப கணக்கைக் காட்டி ஒரே கல்லில் மூன்று மாங்காயை அடித்து இருக்கிறார்கள் என்று நான் முதலில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இந்த பட்ஜெட்டில் para-wise remarks என்று அடிக்கடி சொல்லுவார்கள். அதுபோல் இந்த அரசினுடைய இந்த பட்ஜெட்டில் பத்தி வாரியாக என்னுடைய கருத்தை இங்கே சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

முதலில் 10-வது பத்தி, 11-வது பத்தியில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்த அரசினுடைய திட்டங்களினால் மத்திய மாநில அரசுகளின் உறவு எப்பொழுதும்போல் நல்லபடியாகவே நிலவட்டும், மத்திய அரசு வலிவு பெறத்தக்க அளவுக்கு மாநில அரசு வளம் பெறட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நல்ல கருத்தோடு என்னுடைய கருத்தையும் இணைத்துக் கொள்கிறேன். இரு கைகள்தான் ஓசை எழுப்ப முடியும். மத்திய அரசு, மாநில அரசு ஆகிய இரண்டும் இந்த நாட்டை வளர்ப்பதற்கு உண்டான இரண்டு கண்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றியும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் பற்றியும் கூறிய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்கிறேன். இன்றைக்கு இலங்கைத் தமிழர்களிடையே ஒற்றுமைக் குறைவின் காரணமாக, அங்கே இருக்கின்ற மோதல்கள் காரணமாக ஜெயவர்த்தனே போன்றவர்கள் இந்த divided house-ஐ பயன்படுத்திக்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். நம்முடைய பாரதப் பிரதமர் பெருந்தலைவர் இளைஞர் ராஜீவ் காந்தி அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக பத்திரிகைகளில் கூட ஆயில் எம்பார்கோ என்று சொல்லக்கூடிய தடைகள் எல்லாம் நீக்கப்பட்டு, ரேஷன் என்ற முறையில் அவை கிடைத்துக்கொண்டு இருக்கின்றன. பெட்ரோலும், கெரோசினும் கிடைத்துக்கொண்டு இருக்கின்றன என்ற தகவலும் நமக்கு கிடைத்துக்கொண்டு இருக்கிறது.



1987 மார்ச் 23] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

இன்றைக்கு சண்டையிட்டாலும் சகோதரர் அன்றோ 'ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி?' என்ற பாரதியார் கருத்தை இங்கே சுட்டிக்காட்டி இலங்கைத் தமிழர்களின் துயரைத் துடைப்பதற்கு மத்திய அரசும், மாநில அரசும் எடுத்துக்கொண்டு இருக்கக்கூடிய நடவடிக்கைகளை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தபோதிலும்கூட நாம் வெளிநாட்டு, உள்நாட்டு சக்திகளோடு போராடிக்கொண்டு இருக்கும் இந்த நேரத்தில் அரியலூரில் நடந்த ரயில் விபத்து கண்டிக்கத்தக்கது, வேதனை தரத்தக்கது. தமிழர்கள் பெருமையுடையவர்கள் என்று சொல்லிக்கொண்டு இருப்பதற்கு எல்லாம் எதிராகவும், நாகரிகம் அற்ற செயலாகவும் இது இருக்கிறது. உங்களோடு சேர்ந்து என்னுடைய கண்டனக் குரலையும் இந்த அவையின் மூலமாக இந்த நாட்டுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

இனி இந்த பட்ஜெட்டில் உள்ள திட்டங்களைப் பற்றி பேசுகின்றபோது பத்தி 12-ல் செங்கல், ஓடு போன்ற கட்டுமானப் பொருள்கள் உற்பத்திச் சங்கங்களை அமைக்கத் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்தபோது அதற்கு வேண்டிய காய்கறிகளை வாங்குவதற்கு போடப்பட்ட Co-operative Societies எல்லாம் எந்த அளவுக்கு நடக்கின்றன என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்டு நீங்கள் உணர்ந்து இருக்கிற காரணத்தால் நல்ல திட்டங்கள் நல்லதாக நடைபெறவேண்டும் என்ற நல்ல எண்ணம் நம் அனைவருக்கும் இருக்கிற காரணத்தால் இந்த செங்கல், ஓடு முதலிய கட்டுமானப் பொருட்கள் உற்பத்திச் சங்கங்கள் என்று ஆரம்பிப்பதால் அங்கே உள்ள ஒரு சிலர் தனிப்பட்ட முறையில் பயன் பெறாமல் நாட்டு மக்கள் அனைவரும் பயன் பெறக்கூடிய அளவுக்கு அது அமையவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காலணி வழங்கும் திட்டம் என்று நீங்கள் சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். இது ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இல்லை என்று ஒரு சாரார் குறை சொன்னாலும் கூட

இன்றைக்கு தமிழகத்தில் உள்ள உஷ்ணத்தை எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது அது நல்ல திட்டமாக இருந்தாலும் அந்த காலணி உற்பத்தி செய்கின்ற பணியை தமிழகத்தில் இருக்கின்ற காதி கிராப்ட் என்ற நிறுவனத்தின் மூலமாக நீங்கள் செய்ய வேண்டும். மூன்று மாத காலத்திற்குள் எத்தனை லட்சக் கணக்கான காலணிகள் வேண்டுமானாலும் செய்வதற்கு திறமை படைத்த கைவினைஞர்கள் உள்ள திறமை படைத்த ஒரு இயக்கமாக இன்றைக்கு அது அமைந்து இருக்கிறது. ஆகவே அதற்குத் தனியார் நிறுவனம் என்றோ அல்லது வேறு தனிப்பட்ட சங்கம் என்றோ மாற்றித் தரவேண்டாம். இருக்கின்ற காதி கிராப்ட் மூலமாகவே அதை செய்யலாம் என்ற ஒரு ஆலோசனையை இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குத் தர ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்பற்றி பக்கம் 15-லே சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு விரைவிலே இசைவு அளிக்கும் என நாம் நம்புகிறோம் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

கிருஷ்ணா நதி நீரைப்பற்றி மாறுபட்ட தகவல்கள் இன்றைக்கு வந்துகொண்டிருக்கின்றன. கடந்த Front line என்ற மேகசினை எடுத்துப் பார்த்தீர்களேயானால், அதில் தெள்ளத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. "The point of contention is not the supply of water to Madras to which all the three States have agreed to contribute. In 1976, Andhra Pradesh, Karnataka and Maharashtra agreed to contribute 5 tmc. each from their share of the Krishna water to Madras. What seems to have irked Karnataka and Maharashtra is that Andhra Pradesh will also be using the canal that is to bring water to Madras to irrigate 2.3 lakhs of hectares in the Rayalaseema area."

என்று சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால் நம்முடைய திட்டம் சிறப்பாகச் செயல்படுகின்றதா? எந்த அளவிலே செயல்படுகிறது? இன்றைக்கு கர்நாடக அரசுக்கும், ஆந்திர அரசுக்கும் தோன்றி





யுள்ள பிரச்சினைகளும், அதன் காரணமாக தமிழகம் பாதிக்கப் படுகின்ற சூழ்நிலைகளையும் கருத்தில்கொண்டு, இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்களையும், சர்வ கட்சிப் பிரமுகர் களையும் வைத்துக்கொண்டு, நாம் இன்றைக்கு ஒரு முடிவு செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். ஏனென்று சொன்னால், நமக்குத் தருவதற்கு அனைவரும் ஒத்துக்கொண்டிருக்கின்ற இந்தத் திட்டம் நிறைவேறாவிட்டால் பாதிக்கப்படப்போவது சென்னை நகரத்துவாசிகள் என்கிற காரணத்தால் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களையும், அரசியல் பிரமுகர்களையும் வைத்துக்கொண்டு, ஒரு குழுவை அமைத்து, இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்துகின்ற தன்மைகளைக் கொண்டு பார்ப்பதோடு மட்டுமல்லாமல், இந்த இரண்டு சம்பந்தப்பட்ட அரசுகளையும் அரசியல் ரீதியாக அணுகி, இந்தத் திட்டத்திலே உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு முயலவேண்டுமென்ற ஆலோசனையைத் தர விரும்புகிறேன்..

19-வது பாராவில், தொலைக்காட்சி பெட்டியும் தகவல் தொடர்பு நிலையமும் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிப் பகுதியிலே கிட்டத்தட்ட 156 டெலிவிஷன் பெட்டிகள் கொடுக்கப்பட்டு, பஞ்சாயத்தில் வழங்கப்பட்ட அந்தப் பெட்டிகளில் பெரும் பாலானவை வேலை செய்யாமல் இருக்கின்றன. Solidaire T.V. that seldom fails என்று விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் Solidaire T.V. that seldom works என்று மக்கள் கேலி பேசுகின்ற அளவிற்கு இந்த டி.வி. பெட்டிகள் இயங்காமல் இருந்துகொண்டிருக்கின்றன.

அடுத்தபடியாக இன்றைக்கு டி.வி. பெட்டிகளையெல்லாம் தனியாரிடமிருந்து வாங்கினால்; ரூ. 4,000-க்கு வாங்குகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அரசிடம் கொள்முதல் செய்கிற போது, ரூ. 7,500 பணம் கொடுத்து, கருப்பு மற்றும் வெள்ளைப் பெட்டி வாங்கியும்கூட, எங்களுடைய பகுதியிலே, பஞ்சாயத்துக் களில் இருக்கக் கூடிய பெரும்பாலானவை வேலை செய்யாமல் இருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆகவே அதிகமான விலை கொடுத்து வாங்கப்

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மார்ச் 23

பட்ட டி.வி.-க்கள் கூட, இன்றைக்கு வேலை செய்யாமல் இருக்கின்றன. வாங்கப்பட்டிருக்கின்ற வீடியோக்கள் எல்லாம்கூட தமிழகத்திலே திருவள்ளுவர் கழகத்திலே உள்ள வீடியோக்கள் வேலை செய்யாதது மாதிரி—நீங்கள் கொண்டு வந்த திட்டம்—ஆகிவிடக் கூடாது என்ற அக்கறையோடு இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தகுந்த திட்டங்கள் போடாமல், தகுந்த ஏற்பாடுகள் செய்யாமல், கொண்டு வந்தோமானால், அதற்காக செலவழிக்கப்படுகின்ற பணம் நன்மை பயக்காது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரணத்தைப் பற்றி சொல்கின்றபோது, பயிர்கள் சாவியாகிவிட்ட பகுதிகளிலே உள்ள உழவர்களுக்கு நில வரியைத் தள்ளுபடி செய்ய ஏற்கனவே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று 20-வது பத்தியிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மை நிலைமை என்ன? திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி வட்டத்திலும், செங்கோட்டை வட்டத்திலும் கெடுபிடியாக வரிகள் வசூல் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால் அவர்கள், மேலேயிருந்து வசூலிக்கவேண்டுமென்று எங்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள், நாங்கள் வசூல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். உங்களுடைய திட்டத்திலே நீங்கள் சொல்கிறீர்கள், நாங்கள் வரி வசூல் செய்வதை வேண்டாமென்று சொல்லியிருக்கிறோம் என்று. இதில் உண்மை நிலைமை என்ன என்பதை நீங்கள் இந்த மன்றத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு நிதிநிலை ஆதாரத்திலே நீங்கள் சொல்லி இருக்கின்ற கணக்கின்படி கிட்டத்தட்ட ரூ. 122.97 கோடியும், ரூ. 94.85 கோடியும், சேர்த்து கிட்டத்தட்ட ரூ. 180.58 கோடி பற்றாக்குறையும், அதிலே இந்த ஆண்டினுடைய வரி விதிப்பு ரூ. 75 கோடி வருமானத்தின் காரணமாக மொத்த பற்றாக்குறை ரூ. 105.58 கோடி என்றும், அதிலே சென்ற ஆண்டினுடைய ஆரம்பப் பற்றாக்குறை ரூ. 26.11 கோடி, ஆக மொத்த பற்றாக்குறை ரூ. 131.69 கோடி என்ற கணக்கைத் தந்திருக்கி



136506
600 008

1987 மார்ச் 23] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

றீர்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே கேள்வியைக் கேட்க ஆசைப்படுகிறேன். பத்தி 27-லே சொல்லியிருக்கிறீர்கள். ரூபாய் 86 கோடி எங்களுக்கு வரவேண்டும், நாங்கள் மத்திய அரசிடமிருந்து கேட்டிருக்கிறோம் என்று. அப்படி வராவிட்டால் என்ன செய்ய இருக்கிறீர்கள் அப்படி வராவிட்டால் இந்த ஆண்டினுடைய 1987-88-ல் Extra Plan Expenditure ஆன ரூ. 97 கோடியும் சேர்த்து, மொத்த கணக்கைப் பார்த்தால், நீங்கள் சொல்லியிருக்கின்ற மொத்த பற்றாக்குறை ரூ. 131 கோடிதான். ஆனால் இந்த இரண்டையும், அதாவது 1986-ல் நீங்கள் கேட்டிருப்பது, இந்த வருடம் அதிகமாக நீங்கள் சொல்லியிருக்கின்ற ரூ. 91 கோடியும் சேர்த்தால் ரூ. 308.69 ஆக இந்தப் பற்றாக்குறை உயரக்கூடிய

(பிற்பகல் 12-40)

அபாயம் இருக்கிறது. ஆகவே, அந்த உண்மையான நிலைமையை நீங்கள் இன்றைக்குச் சட்டமன்றத்தின் மூலமாக இந்த நாட்டிற்கு அறிவிக்கவில்லை என்ற வேதனையை இங்கே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனாலும் கூட இன்றைக்கு, தமிழகத்தினுடைய வருமானத்திலே விற்பனை வரிகள் கூடுதலாகிக்கொண்டு இருக்கின்றன. விற்பனை வரி வசூல்களிலே இன்றைக்கு சிறப்பாக சில சீர்திருத்தங்களைச் செய்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட விற்பனை வரி வசூலிலே நீங்கள் அருமையான கெடுபிடிகள் வைத்து, சில அதிகாரிகள் மக்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டு இருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக தென்காசியிலே சமீபத்திலே ஒரு போராட்டம் நடந்தது.

இன்றைக்கு சேலம் நகரத்திலே அனைத்து வணிகர்கள் சங்கமும், அரசியல் கட்சிகளுமாக மாநில அரசு மத்திய அரசு வணிகத் துறை அலுவலர்கள் பலர் தங்கள் தகுதிக்கு மீறி முறைகேடாகச் சேர்த்துள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டுமென்றும், அடுத்தபடியாக வணிகவரி அலுவலர்களே, உத்தேச வரிவிதிப்புச் சட்டத்தை வணிகர்கள் மீது தவறாக பயன்படுத்தாதீர்கள் என்று சொல்லி, நோட்டீஸ் அடித்து கடை அடைப்பு செய்கின்ற அளவுக்கு, வணிகவரி துறையினுடைய அக்கிரமங்கள் இன்றைக்கு

நீண்டுகொண்டே சென்று கொண்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தினுடைய பார்வைக்கு வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். (ஒரு போஸ்ட்டரைக் காட்டினார்) உடனடியாக சேலத்திலே நடக்கின்ற இந்தப் பிரச்சனையில் அரசு தலையிட்டு சேலத்து வியாபாரிகள், பொதுமக்களுடைய. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படியெல்லாம் திடீரென்று போஸ்ட்டரைக் காண்பிக்கக் கூடாது. ஒரு முறை இருக்கிறது. 'சேரிடம்' காண்பித்துவிட்டுப் பேச பழக வேண்டும்.

**திரு. டி. ஆர். வேங்கடராமணன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக் குறிப்பிலே அது ஏறவேண்டும் என்பதற்காக வாசித்தேன். நீங்கள் விரும்பினால். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாங்கள் விரும்புகிறோம் என்பதல்ல. அந்த போஸ்ட்டரைப் படிப்பதென்றால், சேரிடம் காண்பித்துவிட்டுப் படிக்க வேண்டும்.

**திரு. டி. ஆர். வேங்கடராமணன்:** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்சனை உங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நான் அதற்கு வலுவூட்டுவதற்காகத்தான் சொன்னேன். அரசைக் குறை சொல்லவேண்டுமென்பதற்காக. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சுவரொட்டிகளைக் காண்பிப்பதென்றால் அனுமதி பெற்றுக் காண்பிக்க வேண்டும். அவைத் தலைவர் அவர்கள் அனுமதி தந்தால் தான் காண்பிக்க வேண்டுமே தவிர ஒவ்வொருவரும் எந்தெந்த சுவரொட்டிகளையோ கொண்டு வந்து காண்பிப்பது என்று ஆரம்பித்துவிடுவார்களானால் அது முறையல்ல. ஆகவே இதற்கென்று ஒரு முறை இருக்கிறது, கட்டுப்பாடு இருக்கிறது. அனுமதி பெறலாம். அனுமதி தந்ததற்குப் பிறகு காண்பிப்பதைப்பற்றி எந்த ஆட்சேபணையும் இல்லை. முன்கூட்டி அனுமதி பெறவேண்டும் என்பதுதான் துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தாகும்.





**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** துணைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, நிதி அமைச்சருடைய வரவு-செலவுத்திட்ட அறிக்கையிலே 24 ஆம் பக்கத்திலே வணிக வரி அமைப்பை, அடுத்துள்ள மாநிலங்களிலும், தொழில் துறையில் முன்னேறி இருக்கும் மகாராட்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களிலும் இருக்கின்ற விற்பனை வரி வீதங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யவும் குழு ஒன்றை இந்த அரசு நியமித்திருந்தது என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு காங்கிரஸ் ஆளுகின்ற மகாராட்டிரத்திலும், குஜராத்திலும் தொழில் துறை முன்னேறி இருக்கிறது என்று நீங்கள் அளித்துள்ள இந்த நற்சான்றுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அந்தக் குழு என்ன பரிகாரங்களைச் சொன்னது, அது எவ்வாறு செயல்பட்டது என்று கேட்க விரும்புகிறேன்.

சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு இந்த மன்றத்திலே நான் எழுப்பிய ஒரு பிரச்சனைக்குப் பதில் சொல்லுகின்றபோது, அப்போதிருந்த வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள், இந்த மன்றத்தில் இருந்த உறுப்பினர்களையும் சேர்த்துக்கொண்டு வணிகவரித் துறைக்கு Consultative Committee போல—ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்த வாக்களித்து ஆண்டுகள் இரண்டாகிவிட்டன. அந்த கமிட்டி என்னவாயிற்று? அதை விரைவிலே நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வரி கூடுதலாக விதிப்பதினால் வருமானம் வரும் என்ற கருத்து தவறானது என்பதை அன்னை இந்திரா காந்தியினுடைய ஆட்சியிலே Income-Tax Slab ஐக் குறைப்பதன் மூலமாக Personal Income-Tax Collection அதிகமாகியிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்ற காரணத்தினால் இந்தத் தமிழகத்திலேயும் இன்றைக்கு விற்பனை வரி மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே, இந்தத் தமிழகத்தினுடைய பொருள்களையெல்லாம் தமிழக மக்கள் வெளிநாட்டிலே சென்று வாங்கிக்கொண்டு, அதனால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலே Rationalisation of the tax structure என்று சொல்லுவார்களே அதை மிக விரைவில் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மார்ச் 23

அடுத்தபடியாக நீங்கள் கொடுத்திருக்கின்ற அத்தனை வரி விதிப்பு சலுகைகளுக்கும் நான் என்னுடைய வரவேற்பைச் சொல்லிக் கொண்டாலும் கூட, வரி விதிப்பிலே எனக்கு இருக்கின்ற ஒரு ஐயத்தினை உங்களிடத்திலே முதலிலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். பத்தி 30-லே இரண்டாவது பிரிவிலே சென்னை ஏற்றுமதி மண்டலத்திலுள்ள தொழிற்சாலைகள் வாங்கும் மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் மீதான விற்பனை வரிச் சலுகைகள் என்று சொல்லி அதிலே வாங்கப்படுகின்ற பொருள்களுக்கான, மூலதனப் பொருள்களுக்கான விற்பனை வரி திருப்பிச் செலுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அப்படி வாங்கப்படுகின்ற பொருள்களில், தமிழகத்திலே வாங்கப்படுகின்ற பொருள்களுக்கு மட்டும்தான் விற்பனை வரி செலுத்தப்படுமா. அல்லது வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகின்ற பொருள்களுக்கு நீங்கள் விற்பனை வரியைத் திருப்பிச் செலுத்துவீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இது பணப் பிரச்சனை சம்பந்தப்பட்டதாக இருக்கின்ற காரணத்தினாலே, தமிழ்நாட்டிலே, வெளி மாநிலங்களிலிருந்து வாங்கக்கூடிய வரிகள் வெளி மாநில அரசுகளுக்குச் செல்லுகின்றன. ஆனால் அந்தப் பணத்தை நீங்கள் திருப்பிச் செலுத்தினீர்களேயானால் தமிழக அரசுக்கு எந்தவிதமான இலாபமும் இல்லை. தமிழ்நாட்டிலே வாங்கக்கூடிய பொருட்களுக்கு செலுத்தப்பட்ட, தமிழக அரசுக்கு வருகின்ற விற்பனை வரிகளை மட்டும் நீங்கள் திருப்பிச் செலுத்துவோம் என்று சொன்னால் அது பயனுடையதாக இருக்கும். ஆனால் அந்த வரிகள் எல்லாம் ambiguous என்று சொல்லக்கூடிய அளவுக்குக் குழப்பமாக இருக்கின்றன. அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனித்து, ஆராய்ந்து எங்களுக்கு விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், தமிழகத்திலே வாங்கப்படுகிற மூலப் பொருட்களுக்கு, தமிழக சர்க்காருக்கு செலுத்தப்பட்ட அந்த விற்பனை வரிகளை திருப்பிச் செலுத்துவது பயன்பாடு உடையதாக இருக்கும். ஆனால், வெளி மாநிலங்களுக்குச் செலுத்தப்



1987 மார்ச் 23] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

பட்ட வரிகளை நாம் திருப்பிச் செலுத்துவோமேயானால், அது ஒரு 'சப்சிடி' யாக மாறிவிடும் என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மோட்டார் ஊர்திகள், இரண்டு சக்கர வாகனங்களுக்கு நீங்கள் வரிகளைக் குறைத்திருக்கிறீர்கள். அதை வரவேற்கிறேன். இருந்தாலும்கூட, இங்கே இருக்கிற 'வேன்' என்று சொல்லப்படுகிற அந்த சுற்றுலா ஊர்திக்கான வரியை இப்போது நீங்கள் 66.66 சதவீதம் கூட்டி இருக்கிறீர்கள். ஆனால் அந்த வேன்களிலே 7 நபர்கள்தான் செல்ல முடியும் என்ற அடிப்படையை வைத்துக்கொண்டு 66 சதவிகிதம் என்று வரியை உயர்த்தி இருப்பதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அதற்கு மாற்றாக இன்றைக்கு International Tourism என்பது வளர்ந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, எவ்வாறு 66 சதவிகிதம் நீங்கள் அந்த வரியை உயர்த்தினீர்களோ, அதுபோல 66 சதவிகிதம் அந்த இருக்கைகளையும் உயர்த்தினீர்களேயானால் பொதுமக்களுக்கு அது நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். அரசுக்கும் அதனால் கிட்டத்தட்ட 32 இலட்சத்திற்கும் மேல் வருமானம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆகவே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற வேன்களுடைய Seating capacity-யை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, தமிழகத்தினுடைய அத்தனை உள்ளாட்சி மன்றங்களுடைய நிதிநிலைமை குறைவாக, மோசமாக இருப்பதால், கேளிக்கை வரியை நெறிப்படுத்தி, 35:65 என்று இருப்பதை, அந்த dividing ratio 30:70 என்று மாற்றியிருப்பதை வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, ஓட்டலிலே உண்ணப்படுகின்ற உணவுகளுக்கு வரி என்று போட்டுவிட்டு, Tax விஷயத்தைச் சொல்லாமல் ஒரு Compounding tax ஆக போட்டிருக்கிறீர்கள். இரண்டு இலட்சம் ரூபாய் வரை வரி கிடையாது என்றும், மூன்று இலட்சம் ரூபாய் வரை, ரூபாய் 7,500 என்றும், 4 இலட்சம் ரூபாய் வரை

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 மார்ச் 23

ரூ. 11,250 என்றும், 5 இலட்சம ரூபாய் வரை ரூ. 15,000 என்றும் சொல்லியிருக்கிறீர்கள். இது முறையே, 2.5 சதவிகிதம், 2.81 சதவிகிதம், 3 சதவிகிதம் டாக்ஸ் ஆக இருக்கிறது. ஆனால், மொத்த விற்பனைக்கு டாக்ஸ் என்று இன்றைக்கு நீங்கள் போட்டு இருக்கிறீர்கள். ஏற்கனவே ஓட்டலிலே விற்கின்ற உணவுப் பண்டங்களுடைய விலை கடுமையாக இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே அத்தனை ஓட்டல் காரர்களும் 5 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று டாக்சை கலெக்ட் பண்ணிக் கொண்டு தங்கள் பைகளை நிரப்பிக் கொள்வார்கள். அரசுக்கு வரும் தொகை மிகக் குறைவாக இருக்கும். ஏற்கனவே ஓட்டலிலே விலைவாசி உயர்ந்து இருப்பதால், இது தேவையற்றது, அனாவசியமானது என்று சொல்லி, தயவுசெய்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த வரியைப் பற்றி மறு பரிசீலனை செய்து வாபஸ் பெறவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே, இந்த ஆண்டு வீடற்றவர்களுக்கு வீடு கட்டுகின்ற ஆண்டாக அறிவிக்கப்பட்டு, 30 இலட்சம் வீடுகள் எல்லாம் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிற காரணத்தினால் இந்தச் சமயத்தில், ஆஸ்பெஸ்டாஸ், செங்கல், மரம் போன்றவற்றிற்குக் கூடுதலாக வரி விதித்திருப்பதை அறிந்து மனவேதனை அடைகிறேன். தயவுசெய்து அதை நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒருசில கருத்துக்கள். என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் சொல்லிவிட்டு விடைபெறலாம் என்று ஆசைப்படுகிறேன். கல்விக்கு 591 கோடி ரூபாயை வழங்கி இருக்கிறது இந்த அரசு. பள்ளிக் கட்டிடங்கள் மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலுள்ள புளியறையிலே உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டிடங்கள் இல்லாமல் மரத்தடியிலே பள்ளிக்கூடங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றை உடனே கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 23] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

மின் விசைக் செக்குகள் என்று சொல்லி, காதி கிராஃப்ட் மூலமாக வழங்கப்பட்ட மின்விசைக் செக்குகள் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிற காரணத்தினால், அவற்றிற்கு மின்சார கட்டண சலுகை தருவதற்கு இந்த அரசு—ஏற்கனவே, இந்த அவையின் மூலமாக அப்போதிருந்த மாண்புமிகு அந்தத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அவற்றைக் கொடுத்தால், 2½ இலட்சம் ரூபாய்தான் அரசுக்கு இழப்பீடு ஏற்படும். ஆகவே, அதை மீண்டும் வெகு வேகமாகப் பரிசீலித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு டைப்ரைட்டர்களை வைத்துக்கொண்டு ஜாப் டைப் செய்பவர்களுக்கும், மின் கட்டணத்தை கமர்ஷியல் ரேட்டாக ஆக்கி இருக்கிறீர்கள். அதைக் குறைக்கவேண்டும் என்று ஏற்கனவே அரசுக்குக் கடிதம் எழுதி, அரசு பரிசீலிப்பதாக அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது. அந்த Job Typists வங்கியிலே கடன் வாங்கி வீட்டில் வாசலிலே இருந்து கொண்டு டைப் செய்பவர்கள். அவர்களுக்கு மின்சாரக் கட்டண சலுகை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசியிலே, கால்நடை துறையிலே ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் வேண்டுமென்று சொல்லி மாவட்டப் பிரிவினையையொட்டி கேட்டிருந்தோம். அரசு ஆராய்வதாக பதில் வந்தது. அதை தயவுசெய்து உடனடியாக, சீக்கிரமாக தென்காசிக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தென்காசி அருகிலே ஆர்.டி.ஓ. ஆபீஸ், டி.எஸ்.பி., டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்திரார், டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபிசர் என்று புதிய அலுவலகங்கள் எல்லாம் வந்துள்ளன. அந்த அலுவலகங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் அமைத்து, Combined Government building ஆக கட்டித் தரவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறோம். அரசு பரிசீலனை செய்து, வெகு விரைவில் நில ஆர்ஜிதங்கள் செய்து அனைத்து அலுவலகங்களையும் ஒரே இடத்தில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செங்கோட்டைக்கு நீண்ட நெடுங்காலமாக, லைப்ரரி இல்லை; லைப்ரரி ஆக்ட் அந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும்

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] 1987 மார்ச் 23]

(பிற்பகல் 12-50)

கூட, செங்கோட்டை நகருக்கு லைப்ரரி இன்னும் ஏற்படுத்தித் தாமுடியவில்லை. ஒரு மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு தாலுக்காவினுடைய தலை நகரத்திலே தமிழ்நாட்டிலேயே லைப்ரரி இல்லாத ஒரே ஒரு இடம் இன்றைக்கு செங்கோட்டையாக இருக்கின்ற காரணத்தினாலே இந்த பட்ஜெட்டிலே இருக்கக் கூடிய கல்வி ஒதுக்கீட்டிலிருந்து செங்கோட்டை முனிசிபல் டவுனிலே அரசின் சார்பாக உடனடியாக—தமிழ்நாட்டிலேயே அதிகமாக படித்தவர்கள் இருக்கக்கூடிய ஒரு நகரமாக செங் கோட்டை இருக்கின்ற காரணத்தினாலும்—ஒரு வாசகசாலையும், அந்த செங்கோட்டை தாலுக்காவிற்காக ஒரு தீயணைப்பு நிலையமும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

* **திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையை வரவேற்று நான் சில கருத்துக்களை கூறுவதற்கு விழைகின்றேன். இன்றைக்கு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற இந்த அரசு இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்காக, ஏழை எளிய மக்களின் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு காரியங் களை ஆற்றிவருவதால்தான் சமுதாயத் திட்டங்களை இந்த அரசாங்கம் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பது போன்ற பல திட்டங்களை ஒருசேர 400 கோடி ரூபாய் திட்டமாக ஒருங்கிணைந்த திட்டமாக தமிழகத்திலே கொண்டு வந்து சிறப்பாகப் பணி ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல காலணி வழங்குகின்ற திட்டத்தை தமிழகத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக 20 கோடி ரூபாயை இந்த ஆண்டிலே அளித்திருப்பதை நான் வரவேற்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் முன்னாலே பேசிய நண்பர்கள் இந்தத் திட்டத்தையெல்லாம் கேலியும் கிண்டலும் பேசினார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச்



1987 மார்ச் 23] [திரு. சா. ஞானசுந்தரம்]

சேர்ந்தவர்கள் இந்த திட்டங்களெல்லாம் நடைபெறுமா?.. நடக்க முடியுமா? என்று கேட்டவர்கள்தான். நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலே வந்த சத்துணவுத் திட்டமும், சீருடைத் திட்டமும், இலவச பாட புத்தகத் திட்டமும் சிறப்பாக நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே ஐயம் தெரிவித்தவர் களுக்கு நான் சொல்லிக்கொள்வேன், இந்தத் திட்டங்களின் பயன்கள் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேரும். பல்பொடி வழங்கும் திட்டத்தையெல்லாம் ஒரு நேரத்திலே கேலி பேசி னார்கள். அதெல்லாம் சுகாதாரத்திற்கு நலம் என்கின்ற அடிப் படையை உணராமலேயே பேசினார்கள். ஆனால் கிராமப் புறத்திலே இருக்கிற மக்கள் அந்தத் திட்டத்தை வரவேற்றார்கள் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் முத்து ராமலிங்கம் அவர்கள் தொழில் துறையிலே தமிழகம் பின்தங்கி இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டினார்கள். முதல் இடத்திலே இருக்கிறதென்று ஆளும் கட்சி உறுப்பினர் சொன்னதை, அதுவும் மத்திய அமைச்சர் சொன்னார் என்பதையும், அவர்கள் பத்திரிக்கை வாயிலாகச் சொன்னார் என்பதையும் தெரிவிக்கிற போது அதற்கு மறுப்பினை தெரிவித்து அவர்கள் அதற்கு விளக்கமும் தந்தார்கள். நிதிநிலை அறிக்கையிலே, மூன்றாவது இடத்திலே, இரண்டாவது இடத்திலே தமிழகம் இருக்கிறது என்பதை இன்றைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டதற்காக நான் நன்றி. தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தமிழகம் தொழில் துறை வளர்ச்சியில் முதலாவது இடத்தில் இருந்தது போலவும், இன்றைக்கு இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பின்தங்கி இருப்பதுபோலவும் அவர்கள் இங்கே கோடிட்டு காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் தமிழகம் தொழில் துறையில் பின்னாலே தங்கியது என்கின்ற கருத்தை காங்கிஸ்காரர்கள்

[திரு. சா. ஞானசுந்தரம்] [1987 மார்ச் 23

தந்திருக்கிறார்கள். அதை அவர்கள் மறுப்பதற்கு இல்லை. அந்த அளவிலே இன்றைக்கு தமிழகம் இரண்டாவது இடத்திலே, மூன்றாவது இடத்திலே இருக்கிறது என்பதை நாம் பாராட்டவும் போற்றவும் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கு வித்தகராக இருப்பவர் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்.

இன்றைக்கு மின்சார உற்பத்தியைப் பார்க்கிறபோது தமிழகத்திலே அதற்கான திட்டங்கள் 300 கோடி ரூபாயாக இருப்பதை 330 கோடி ரூபாயாகத் தந்து அந்தத் திட்டங்களை இன்றைக்கு நிறைவு செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மேட்டூர் அனல் மின் திட்டம், நெய்வேலி மின்சார திட்டங்கள் இப்படிப் பட்ட பல்வேறு திட்டங்களை தமிழகத்திலே கொண்டுவந்து அந்தத் திட்டங்கள் மூலம் ஏழைஎளிய விவசாயிகளுக்கு எல்லாம் இலவச மின்சாரத்தை தந்து கொண்டிருக்கிறார்கள். குடிசைகளுக்கு மின்சார வசதி தந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு 40 ஆயிரம் விவசாயிகளுக்கு மின்சாரத்தைத் தரவேண்டுமென்ற கட்டாய சட்டத்தை இங்கே போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏன், இதையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பாராட்ட மறுக்கிறார்கள். ஆனால் எதிரிலே இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள், அதிலே சிலவற்றை பாராட்டவும் கடமைப்பட்டு, சிலவற்றை எதிர்க்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், இந்தியாவினுடைய பண மதிப்பு இருக்கிறதே, 1947-க்குப் பிறகு இன்றைக்கு இந்தியாவினுடைய பண மதிப்பு சுமார் 16 காசு என்கிற அளவுக்கு குறைந்து வந்திருக்கிறது. பொருளாதார வீழ்ச்சி இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு பல்பொருள் விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாதது என்பதை நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வகையிலே தமிழகத்திலே மட்டும் அல்ல, மற்ற மாநிலங்களிலும் பற்றாக்குறை பட்ஜெட்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வு திட்டங்களோடு அனைத்து தரப்பு மக்களும் ஏழைஎளியவர்களை வாழ்விக்கிற திட்டங்கள், விவசாயிகளை வாழ்விக்கிற திட்டங்கள்,



1987 மார்ச் 23] [திரு. சா. ஞானசுந்தரம்]

தொழிலாளிகளை வாழ்விக்கிற திட்டங்கள் போன்ற திட்டங்களைத் தந்துகொண்டிருக்கிற அரசு இந்தியாவிலேயே தமிழக அரசு என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏன் அதைச் சொல்லுகிறேன் என்றால் இன்றையதினம் தமிழகத்தில் வேலை இல்லாத படித்த பட்டதாரிகளுக்கு படிப்பு உதவித் தொகையும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் முதற்கொண்டு சுய வேலை வாய்ப்புக்கு உதவித் தொகையையும் தந்து நல்லதொரு திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிப்பது மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு ஒன்றுதான்.

அதைப்போலவே அன்னை இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டங்களையும் தமிழகம் மட்டும்தான் வேறு எந்த மாநிலத்தையும் விடச் சிறப்பாக இன்றையதினம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. சுகாதாரத்தை எடுத்துக் கொண்டாலும் தமிழகம் இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. அதைப் போலவே குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைப் பொறுத்த வரையிலும் அந்த இலக்கை அடைவதில் தமிழகம்தான் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. 5,000 பேருக்கு ஒரு சுகாதாரத் துணை நிலையம் அமைப்பது என்ற பொது நோக்கத்தோடு தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. 1987-88 ஆம் ஆண்டிலே 7,200 நிலையங்களை மாற்றி 7,700 ஆக சுகாதாரத் துணை நிலையங்களை ஏற்படுத்தும் திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் என்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையில் 1987-88 ஆம் ஆண்டிலே மேலும் 140 ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைக்க இருக்கிறது என்பதையும் பெருமையோடு இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன் காரணமாக இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக தோராயமாக 58,000 மக்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்கிற இலக்கைத் தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு எய்த இருக்கிறது. கருவுற்ற தாய்மார்களுக்கும்

[திரு. சா. ஞானசுந்தரம்] [1987 மார்ச் 23

ஆகியவற்றைத் தயாரிக்கிற பொறுப்பை இனி தனியாரிடம் விட்டு விடாமல் கூட்டுறவு இயக்கத்திலிருந்தே இவைகளை உற்பத்தி செய்து, கூட்டுறவு அடிப்படையில் தொழிலாளர்களுக்கு அந்த வாய்ப்பைத் தருவதை வரவேற்காமல் அந்தத் திட்டத்தைக் கேலி செய்வது அல்லது கிண்டல் செய்வது என்பதன்மூலம் நாங்கள் கூட்டுறவுத் திட்டத்திற்கு எதிரானவர்கள் என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் தொழிலாளர்களும் மக்களும் சேர்ந்து நன்றாகச் செயல்பட்டால் தான் கூட்டுறவு இயக்கம் நன்கு வளரும். அந்த அளவுக்கு தமிழகத்தில் நாம் ஓரளவுக்கு ஏற்கெனவே வெற்றியைக் கண்டிருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் பல்வேறு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள், குறைந்த வட்டி வீதத்தில், 4 சதவீதம் வட்டி என்ற வகையில் கடனளித்து மானாவரி நிலங்கள், புஞ்சை நிலங்களில் பயிரிடும் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் பலன் தரும் வகையில் அவர்களுக்காக அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அவர்களுடைய வட்டியை அரசாங்கம் கொடுத்து விட்டது. மேலும் கூட்டுறவுத் துறையிலே ஆதிதிராவிடர்கள் பத்தாயிரம் பேரையும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆதி திராவிடர்களுக்கு 250 ரூபாய் வரை வட்டி இல்லாமல் செய்து அவர்களுடைய வாழ்வை வளமாக்கும் திட்டம். இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம்.

(பிற்பகல் 1-00)

அதைப்போலவே குடிநீரைப் பற்றிச் சொல்லும்போது பஞ்சம் வந்தது அல்லது வறட்சி வந்தது என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இதனாலே தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு 1986-87-ல் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் இரண்டாயிரம் ஆழ்துளை கிணறுகளைத் தோண்ட திட்டமிட்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் தமிழகத்திலே வரவிருக்கிறது, நிறைவேற்றவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 மார்ச் 23] [திரு. சா. ஞானசுந்தரம்]

விவசாயிகளுக்கு கூட்டுறவு அக்ரோ-என்ஜினியரிங் சர்வீஸ் மூலமாக ஆழ்துளை கிணறுகளைப் போடும் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். விவசாய கிணறுகளுக்கான துளைப்பான்களை வாங்க வேண்டும் என்றால் அக்ரோ-என்ஜினியரிங் துறை மூலம்தான் வாங்க வேண்டும். ஆனால் தனியார் கூட்டுறவுச் சங்கங்களும் வழங்குவதற்கு தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த வகையிலே விவசாயிகளுக்கு பல்வேறு காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாய நீர்ப்பாசன பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கேளிக்கை வரியை எடுத்துக் கொள்கிறபோது, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு, ஊராட்சி அமைப்புகளுக்கு வரியில்லை, வசதியில்லை என்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் 65 : 35 என்பதை மாற்றி 70 : 30 என்று மாற்றியிருப்பதால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருகிற வருமானம் பெருகும். கேளிக்கை வரியைப் பொறுத்த வரையில் இவ்விதமாக நன்மை செய்திருக்கிறார்கள்.

பல்வேறு நன்மைகளை, பல்வேறு திட்டங்களை செய்து கொண்டிருக்கிற நேரத்தில் தமிழகத்திலே தமிழுக்காக என்ன செய்தீர்கள் என்று நண்பர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். தமிழ் ஆராய்ச்சி மையத்தை தஞ்சையில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். டில்லியில் இருக்கக் கூடிய தமிழ்ச் சங்க கட்டிடத்திற்காக 5 இலட்சம் ரூபாயைத் தந்திருக்கிறார்கள். தஞ்சையிலே இருக்கக் கூடிய தமிழ் பண்பாட்டு மையம் வளர பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் முதல்வர் தஞ்சையிலே தமிழ் பல்கலைக் கழகத்தைக் கண்டார்கள். இப்படிப்பட்ட நிலையிலேதான் தமிழகத்திலே கோரச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அரியலூரில் நடைபெற்ற கோரச் சம்பவம் தமிழகத்தையே உலுக்கிக் கொண்டிருக்கிறது, சவால் விட்டுக் கொண்டிருக்கிறது. பத்திரிகை செய்திகள் வந்து கொண்டிருக்

[திரு. சா. ஞானசுந்தரம்] [1987 மார்ச 23

கின்றன. [illegible] பட்டிருக்கிறான் என்ற செய்தியைத் தந்திருக்கின்றார்கள். இதற்காக தமிழக காவல் துறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டத்தையும், ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டும் மாநிலம் தமிழ் மாநிலம். இந்த மாநிலத்தில் அமைதியைக் குலைக்கும் வகையில் அரிய ஆல் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிக்காக கண்டிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். அதை ஆதரிப்பவர்களும் ஒரு பக்கத்திலே இருக்கிறார்கள். தமிழகம் இப்படியே போகுமானால் சட்டம், ஒழுங்கு கெடும். ஆகவே அரசு இதைக் கண்காணித்தாக வேண்டும்.

கலால் வரியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், கள், சாராயக் கடைகளை மூடியதால் தமிழகத்திற்கு 200 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் 50 சதவீத இழப்பை கொடுப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்திலேதான் கள், சாராயக் கடைகள் மூடப்பட்டுள்ளன. மற்ற காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களில் கள், சாராயக் கடைகள் இருக்கின்றன. மற்ற கட்சிகள் ஆளும் மாநிலங்களிலும் இருக்கின்றன. ஆனால் தமிழகத்திலேதான் புரட்சித் தலைவர் அவர்கள் தான் சொன்ன கொள்கையின்படி கள், சாராயக் கடைகளை மூடியிருக்கிறார், இதன் மூலம் 200 கோடி ரூபாய் இழப்பு. அந்த இழப்பையும் தாங்கிக் கொண்டு பல நல்ல திட்டங்களை தந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மத்திய அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் முந்தைய காலக் கணக்கை எடுத்துக் கொள்ளாமல் உரிய காலத்திலே, உரிய முறையிலே, இந்தக் காலக் கணக்கை எடுத்துக் கொண்டு அதற்குரிய இழப்பை மத்திய அரசிடம் சரிக்கட்ட வேண்டும் என்பதுதான்.

அதே போல மாநிலங்களுக்கு தருகிற நிதியை யூனியன் டெரிட்டரிகளுக்குத் தருவதைப் போல மத்திய அரசாங்கம் தர வேண்டும். யூனியன் டெரிட்டரிகளுக்கு மத்திய அரசாங்கம் 16 சதவீதம் தருகிறது. அவர்களுக்கு தருகிற திட்டத் தொகை அதிகமாக இருக்கிறது. ஆனால் தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் குறைந்த நிதியைத்தான் தருகிறது.



1987 மார்ச் 23] [திரு. சா. ஞானசுந்தரம்]

ஆகவே அந்த நிதியை கூட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். இதை மத்திய சர்க்கார் பணிவோடு கவனித்தாக வேண்டும்.

நாம் பல்வேறு திட்டங்களின் மூலமாக நகர்ப்புற போக்குவரத்தை சரி செய்து கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. அப்படி உயர்வு தந்ததால் தான் ஆயிரம் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த இடத்திலே 11 ஆயிரம் பேருந்துகள் தமிழகத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தமிழ்நாட்டு அரசு நிறுவனங்கள்தான் நடத்திக் கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் தனியாருக்கு போய்ச் சேரவில்லை. இன்றைக்கு இதனாலே பாதிப்பு ஏற்படுவது சகஜம். ஒவ்வொரு ஆண்டும் வழக்குகள் ஏற்படக்கூடியதும் சகஜம் தான். ஆனால் தமிழகத்திலே இன்றைக்கு வசதிகளைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு, நான் முன்னாலே சொன்ன காரணத்தைத்தான் இப்போதும் சொல்ல முடியும். பணத்தின் மதிப்பு குறைந்திருப்பதால்தான், டிக்கட்டின் விலையை உயர்த்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள் 14 இருக்கின்றன. வரும் ஏப்ரல் திங்களிலிருந்து பதினைந்தாவது போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தப்பட இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அன்னை சத்தியா பெயரிலே போக்குவரத்துக் கழகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்த இருக்கிறார்கள். அதைக்கூட கேலி செய்கிறார்கள். தர்மபுரியில் ஏற்படுத்த இருக்கும் அந்தப் போக்குவரத்துக் கழகத்தை சிறப்பாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு நல்ல திட்டங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம். 30 இலட்சம் வீடுகள் என்று சொல்லி, பல்வேறு வகைகளிலே வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களைப் பார்க்கும்போது ஏழை எளியவர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏழைகளுக்குத் திட்டமிடுகிறபோது, அதிலே சில பணக்காரர்கள் வருகிறபோது, வீடுகளை மக்களுக்குத் தருகிறோம் என்று

[திரு. சா. ஞானசுந்தரம்] [1987 மார்ச் 23

எண்ணாமல், பணக்காரர்களுக்கு இது போய்ச் சேருகிறதென்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் ஏழைகள் என்று சொல்லும்போது, அவர்களுக்கு வேண்டியதைத் தான் செய்கிறோம். இன்றைக்கு நண்பர்கள் அதைப் பாராட்டவில்லை.

பல்வேறு விவசாயப் பொருள்களுக்கு, உதிரி பாகங்களுக்கு, ஜெனரேட்டர்களுக்கு வரி விதிப்பைக் குறைத்திருக்கிறோம். அதைப் பாராட்ட மறுக்கிறார்கள். விவசாயக் கருவிகளுக்கு பூச்சி மருந்துகளுக்கு, மூலப் பொருள்களுக்கு வரிக் குறைப்பு செய்திருக்கிறார்கள். அவற்றையும் பாராட்ட மறுக்கிறார்கள். விவசாயிகளுடைய அரசு இது என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். முன்னாலே ஆட்சியிலே இருந்தவர்கள் விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கிறார்களா என்றால் இல்லை என்று தான் சொல்ல முடியும். பல்வேறு வழிகளில், ஜெனரேட்டர்களுக்கு, உழவுக் கருவிகளுக்கு வரி குறைத்திருக்கிறார்கள். சில பொருள்களுக்கு வரி உயர்வு செய்திருக்கிறார்கள். 2 இலட்சத்திற்கு மேல், 3 இலட்சம் 4 இலட்சம் ரூபாய்வரை விற்பனையுள்ள ஓட்டல்களில் இணக்க வரி என்ற முறையில் வரி விதிப்பு செய்திருக்கிறார்கள். கடை நடத்துகிறபோது, ஒழுங்காக நடத்துகிறார்களா, சரியான கணக்கு இருக்கிறதா என்பதை இப்போது பார்க்க முடியும். சிற்றுண்டிச் சாலை என்ற பெயரிலே பல லட்சக்கணக்கான ரூபாயை அவர்கள் ஈட்டிக் கொண்டிருக்கிற காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த வரி விதிப்பின்மூலம் அரசாங்கத்திற்கு வருவாயை ஈட்டுகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய அரசு பல்வேறு வகைகளில் நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். மின்சார உற்பத்திக்காக பல கோடி ரூபாய்களைச் செலவு செய்கிறோம். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,000 கோடி ரூபாயை மின் உற்பத்திக்காக ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு அதிகமாக



1987 மார்ச் 23] [திரு. சா. ஞானசுந்தரம்]

மின்சார உற்பத்திக்காக செலவு செய்ய இருக்கிறார்கள். மின் துறைக்கு அதிகமாகச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டுவர கப்பல் வாங்கியிருக்கிறார்கள். பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அதை நடத்தி, இலாபம் ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே நாகப்பட்டினத்திலே ஒரு அனல் மின் நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள், விரைவிலே அதற்கான பணிகள் தொடங்கும் என்று சட்ட மன்றத்தில் சொன்னார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வடபாதிமங்கலத்தில் கரும்புப் பண்ணைக் கழகம் இருக்கிறது. 3,400 ஏக்கருக்குச் சொந்தமான அந்த கரும்புப் பண்ணைக் கழகத்தை கலைக்க இருப்பதாக அறிகின்றேன். நம்முடைய விவசாயத் துறையினர் வேறு எங்கெங்கோ விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்குச் சொந்தமாக ஒரே இடத்தில் 3,400 ஏக்கர் இருக்கும் வடபாதி மங்கலத்தில் வரும் ஆண்டு ஏற்படுத்த இருக்கும் விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாலங்கள் பற்றி போக்குவரத்து குறித்த மானியக் கோரிக்கையின்மீதும், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் மீதும் பேசியிருக்கிறேன். மன்னார்குடி கிழக்குப் பகுதியில் பாலம் கட்ட வேண்டுமென்றும், நெடும்பரையில் பாமினி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்றும், வடபாதிமங்கலம் வடவேற்குடியில் பாலம் கட்ட வேண்டுமென்றும் 2, 3 முறை பேசியிருக்கிறேன். நான் அந்தத் தொகுதி மக்களின் சார்பிலே கேட்பதெல்லாம், அந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்பதுதான். அந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

[1987 மார்ச் 23

(பிற்பகல் 1-10)

* **டாக்டர் ந. மாசிலாமணி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல எண்ணத்தோடும் தூய நோக்கத்தோடும் எடுத்துச் சொல்லும் கருத்துக்கள் அரசுக்கு பெரிதும் உதவியாக அமையவேண்டுமென்று நியாயமான முறையில் சுட்டிக் காட்டப்படும் குறைகளும், அழுக்காறு இன்றி நீதியின் அடிப்படையிலே எடுத்துக் காட்டப்படும் குற்றங்களும், உடனடியாக களையப்பட அரசுக்கு உதவிகரமாக அமையும். அத்தோடு மட்டுமல்லாமல், அவையின் பெயரும் புகழும் காப்பாற்றப்படவும், கண்ணியமும் கட்டுப்பாடும் பேணப்படவும், எல்லோருடைய ஒத்துழைப்பையும் நான் வேண்டுகிறேன். "சூடு மறையட்டும், ஒளி நிலவட்டும்" என்ற நம்முடைய அவையினுடைய முன்னவர் மாண்புமிகு நாவலர் அவர்கள் இன்றைய வரவு-செலவு திட்டத்தை அறிவிக்கின்றபோது, இந்த அவையிலே கூறினார்கள். அந்த அளவிலே என்னுடைய கருத்தும் ஓரளவுக்கு பயன் கொடுக்கும் என்ற எண்ணத்தோடு அவையிலே என்னுடைய பேச்சை தொடங்க இருக்கிறேன்.

ஒரே ஒரு காரணத்திற்காக, தமிழக முதல்வரை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலே பல்வேறு கடுமையான சூழ்நிலைகள் இருக்கின்ற இந்த நேரத்திலே, பாகிஸ்தானுடைய ஆதரவோடு காஷ்மீரிலும் பஞ்சாபிலும் மிகப் பெரிய குழப்பத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். அதுபோன்றே வெளிநாடுகளுடைய சக்தியோடு அஸ்ஸாமிலே பிரிவினைவாதிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேப்பாளத்தின் துணையோடு கூர்க்கர்கள் கூர்க்கா லேண்ட் கேட்டு, மேற்குவங்கத்திலே மிகப் பெரிய குழப்பம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது போன்று வங்க தேசத்தினுடைய ஊடுருவலோடு திரிபுராவிலே தேசிய தொண்டர் படை என்கிற சக்தி குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. நாட்டிலே பிரிவினை என்ற பெயராலே, வன்முறையின் பெயராலே, மதத்தின் பெயராலே, இனத்தின் பெயராலே, மொழியின் பெயராலே பல்வேறு குழப்பங்களும் வன்முறை சம்பவங்களும் நடக்கின்றன. தமிழகத்திலேகூட அப்படிப்பட்ட



1987 மார்ச் 23] [டாக்டர் ந. மாசிலாமணி]

நிகழ்ச்சிகள் இன்றையதினம் நடந்துகொண்டிருப்பதை நாம் காணுகிறோம். கடந்த தினங்களில் அரியலூரில் நடந்த விபத்திலே ஏற்பட்ட கொடுமையான நிலைமைகளை பார்த்து நாடே நடுங்கிக் கொண்டிருக்கிறது என்ற இந்தச் சூழ்நிலையிலேகூட வன்முறைகளைக் கண்டிக்கிற அளவிலே இந்தியாவிலே தமிழக முதல்வர் அவர்கள் இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டைக் காப்பதற்காகவும், பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய கரத்தை வலுப்படுத்துகின்ற அளவில் அவரோடு தோளோடு தோள் நின்று இன்றையதினம் செயல்படுத்திக்கொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது, அந்த ஒரே ஒரு காரணத்திற்காக நான் தமிழக முதல்வர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, இந்த பட்ஜெட்டை நாம் பார்க்கின்றபோது, ஒரு தோட்டக்காரனைப் போல இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 'ஆயிரம் பூக்கள் உங்கள் தோட்டத்திலே மலரட்டும், கோடான கோடி பூக்கள், வண்ண வண்ணப் பூக்கள் பூத்து குலுங்கட்டும்' என்று இந்த நேரத்திலே நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இந்த பட்ஜெட்டை நன்கு தயாரிக்கவில்லை. ஏனென்றால் இந்த பட்ஜெட்டைத் தயார் செய்கிறபோது ஒரு நல்ல தோட்டக்காரனைப் போல இந்த பட்ஜெட்டைத் தயார் செய்யவில்லை. எனவே என்னால் அந்த அளவுக்குப் பாராட்ட முடியவில்லை. ரூபாய் 90 கோடிக்கு வரிவிதிப்பு போட்டுவிட்டு, 15 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை கொடுத்துக்கொண்டிருப்பதை நான் எப்படி உண்மையிலேயே ஒரு நல்ல பட்ஜெட் என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்? அதை எப்படிப் பாராட்டுவது? பட்ஜெட்டை இந்த மன்றத்திலே வழங்கும்போது மிகப் பெரிய சுமையை இந்த மன்ற உறுப்பினர்களுக்கு கொடுத்து இருக்கின்றார்கள். உறுப்பினர்களுக்கு கொடுத்த சுமையைப் பார்க்கிறபோது, அவர்களுக்கு ஓட்டுப் போட்ட மக்களுக்குத்தான் அந்த சுமையைத் தந்திருக்கிறார்கள் என்ற நிலைமையிலே உள்ளது. அதைத்தான் அவர்கள் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் இந்த நேரத்திலே நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் ந. மாசிலாமணி] [1987 மார்ச் 23

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், அன்று கொடுத்த சுமை, ஒரு சுமையாகத்தான் இருக்கிறதே அல்லாமல் இந்த பட்ஜெட் ஒரு சுவையானதாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

தமிழகத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்ற துறைகளில் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற துறை போக்குவரத்துத் துறைதான். இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே தமிழகத்திலேயுள்ள 14 போக்குவரத்துக் கழகங்கள் அனைத்துமே வெற்றிகரமாக, லாபகரமாக போய்க்கொண்டிருக்கின்றன, ஆனால் ஒரே ஒரு கழகம்தான் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றது. மற்ற கழகங்கள் லாபகரமாக போய்க்கொண்டிருக்கின்றபோது மிகப் பெரிய வரியை, பஸ் கட்டணத்தை உயர்த்தியிருப்பது உண்மையிலேயே கண்டிக்கக் கூடிய ஒன்றாகும். எனவே தமிழக அரசு அருள்கூர்ந்து பஸ் கட்டண உயர்வைத் தவிர்க்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி அமைச்சகத்தை நாம் நினைத்துப் பார்க்கின்றபோது, இந்த நிதித் துறையைப் பொறுத்தவரையில் அது தனித்து இயங்க வேண்டும். அத்தோடு எந்தவிதமான துறையும் இயங்கக் கூடாது. அப்படி இயங்கினால், நிதித்துறை தனியாக சிறப்பாகச் செயல்பட்டாலும்கூட, நிதித்துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் தங்களுடைய துறைக்கு என்று அதிகமான நிதியைக் கொடுத்து விட்டார்கள் என்ற பாகுபாடும், அவர் மேல் ஒரு தவறான எண்ணமும் நாட்டு மக்களுக்கு வந்துவிடும். எனவே ஒரு துறை சிறப்பாக இயங்கவேண்டுமானால், அந்த துறை, நிதித் துறை தனித்து இயங்கவேண்டும் என்று இந்த மன்றத்திலேயே பேசப்பட்டது. இந்த கருத்து என்னால் பேசப்பட்டது அல்ல. 1967-க்கு முன்னால், பேறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையிலே எங்களைப் போன்று இருந்திருக்கின்றபோது அந்த கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், நாவலர் அவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை எனக்குண்டு. இருந்தாலும்கூட தற்போதிருக்கின்ற நிலை பேறிஞர் அண்ணா அவர்களுடைய



1987 மார்ச் 23] [டாக்டர் ந. மாசிலாமணி]

கொள்கைக்கும் அவர்களுடைய கருத்துக்கும் முரண்பாடு உள்ள நிலைமை இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் மாநிலம் முழுவதும் கடுமையான வறட்சி நிலை காணப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் நிலவும் வறட்சி பற்றி இங்கே முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சையே வறட்சியால் வாடும்போது திருச்சி எம்மாத்திரம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். விரைவில் திருச்சியை இரண்டாகப் பிரித்து திருவள்ளுவர் மாவட்டத்தைப்பற்றி அறிவிக்க வேண்டும். முசிறி, குளித்தலை, லால்குடி போன்ற இடங்களில் ஏற்பட்டுள்ள பலவித வளர்ச்சி எங்கள் பகுதியில் இன்னும் ஏற்படவில்லை. வறட்சியை பார்வையிட நிவாரணக் குழுக்கள் வரும்போது திருச்சியின் ஒரு பகுதியை மாத்திரம் பார்வையிட்டு சென்றுவிடுகிறார்கள். திருச்சியின் கடைகோடியில் இருக்கின்ற ஆண்டிமடம், ஜெயங்கொண்டான் போன்ற பகுதிகளை வந்து பார்வையிடுவதில்லை. இந்த இடங்களில் எல்லாம் குடிநீருக்கு கூட கஷ்டமான நிலைமை இருக்கிறது. ஆகவே, திருச்சி மாவட்டத்தை விரைவில் இரண்டாக பிரிக்க வேண்டுமென்று மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே 30 லட்சம் வீடுகள் பற்றி சென்ற இரண்டாண்டு காலமாக பேசிக்கொண்டிருக்கிறோம். 30 லட்சம் வீடுகள் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் தெளிவாக விவரங்கள் விளக்கமாக இல்லை. 30 லட்சம் வீடுகளை கட்ட வேண்டுமென்றால் சுமார் 3 ஆயிரம் கோடி ரூபாயாவது வேண்டுமென்று இங்கே பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 30 லட்சம் வீடுகளைப் பொறுத்தவரையில் ஆர்.எல்.இ.ஜி.பி., (N.R.E.P.), தாட்கோ போன்ற பல்வேறு மத்திய அரசின் உதவியுடன் கட்டி முடிக்க முடியும் என்று இங்கே அரசின் சார்பாக பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது மத்திய அரசால் துவக்கப்பட்டுள்ள வீட்டு வசதி திட்டத்தையும் இதனோடு சேர்த்து செயல்

படுத்துவதாக சொல்கிறார்கள். அப்படி இருந்தால் கூட ஒரு வருடத்தில் 10 லட்சம் வீடுகள் கட்ட முடியாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல நம் நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரியும்.

அடுத்து, 1 கோடி மக்களுக்கு மேல் காலணி தர இருக்கிறார்கள். அதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இப்படி காலணி வழங்குவதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் எந்த அளவுக்கு சிறப்பாக இத்திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும் போது சற்று அச்சமாக இருக்கிறது. இந்த நேரத்தில் 30 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அரசால் சொல்லப்பட்ட வாக்குறுதியையும் எண்ணிப் பார்க்கிறோம். இது சரியாக செயல் படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் கடந்த காலத்தில் 3 படி அரிசித் திட்டத்தை அறிவித்தார்களே, அதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு என்று பொதுமக்களுக்கு ஐயப்பாடு ஏற்பட்டு விடும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தயவுசெய்து 30 லட்சம் வீடுகள் திட்டத்தைப் பொறுத்தவரையில் விரைவிலே செயல்படுத்த வேண்டும். உண்மையாகவே தேவையான நிதி ஒதுக்கீட்டை ஒதுக்கீடு செய்ய வேண்டும். இத்திட்டம் உண்மையிலேயே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற நம்பிக்கையில் இக்கோரிக்கையை நான் வைக்கிறேன். இலவச காலணி வழங்குவதுபற்றி இங்கே பேசுகின்றபோது, ஒரு நேரத்திலே ஒரு சர்ச்சையை எழுப்பினார்கள். இலவச காலணி வழங்குவதன் மூலம் இரத்தச் சோகை நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததாக இங்கே சொன்னார்கள். இந்த இரத்தச் சோகை என்கிற அனிமியா நோயைப் பொறுத்த வரையில் இது வருவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், காலணிகளை அணியவில்லை என்றால் இந்த நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று மருத்துவ ரீதியாக தெரிய வருகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிந்து சொன்னார்களோ, தெரியாமல் சொன்னார்களோ எனக்குத் தெரியாது—காலணியை அணிவதன் மூலம்





இந்நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகளைத் தவிர்க்கலாம். நாளையதினம் இந்த காலணியை நாட்டு மக்களுக்கு வழங்கும் போது என்ன நிலைமை ஏற்படும் என்பதையும் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் இப்போது இருக்கின்ற நிலைமையின்படி பார்த்தால் இந்த 20 கோடி ரூபாய் கூட போதாது என்றுதான் தோன்றுகிறது. மேலும் காலணி வழங்கும்போது தரமான காலணியை வழங்க ஆவன செய்ய வேண்டும். பாட்டா நிறுவனத்தில் நல்ல ரக காலணிகளை தயாரிக்கிறார்கள். ஆகவே, பாட்டா போன்ற நிறுவனத்தின் மூலமாக தயாரிக்கப்படுகின்ற உயர்ந்தரக காலணியை அரசாங்கம் வழங்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது காலணி வழங்குவது பற்றி குறிப்பிடும்போது முதலமைச்சர் அவர்கள் தெரிந்து சொன்னார்களோ, தெரியாமல் சொன்னார்களோ என்று குறிப்பிட்டார்கள். அதுபோல் காலணி அணிவதால் காமாலை நோய் வரும் என்றும் சொன்னார்கள். இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு தெளிவாக தெரிந்து வைத்திருக்கிறார் என்பதை முதலில் உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மருத்துவ ரீதியாக நோய் வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரிய வருகிறது என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வை எக்ஸ்ரே பார்வை என்பதையும், அவர்கள் எல்லா துறைகளிலும் வல்லுநர் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி தெரிந்து சொன்னார்களோ, தெரியாமல் சொன்னார்களோ என்று உள்நோக்கம் கற்பித்து வார்த்தையை சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள கருத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கருத்துக்கும் என் கருத்துக்கும் உடன்பாடு உண்டு. ஆனால் காமாலை நோய் வரும் என்று நான் இங்கே சொல்லவேயில்லை.

[டாக்டர் ந. மாசிலாமணி] [1987 மார்ச் 23

யார் வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும், தெரிந்தோ தெரியாமலோ சொல்லியதாக கருத்துக்களை குறிப்பிடலாம். அதில் தவறு இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது எந்த அளவுக்கு உறுப்பினர் அவர்கள் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறாரோ அந்த அளவுக்கு எங்களுக்கும் அவரிடத்தில் மதிப்பும் மரியாதையும் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில், செய்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்ற கடமையும் எங்களுக்கு இருக்கின்ற காரணத்தினால்தான் நான் இதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்போடு சொன்னதன் முறையிலே, இந்தக் காலணியை வழங்குகின்ற விதத்திலேயும் சிறப்பான முறையிலே நாட்டுமக்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

பல்வேறு திட்டங்கள் தமிழகத்திலே செயல்படுகின்றபொழுது மத்திய அரசிடமிருந்து பல்வேறு பரிசுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றையதினம் இருபது அம்சத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று அதற்காக மத்திய அரசிடமிருந்து பரிசைப் பெற்றிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று அதற்கு பரிசைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று இன்றையதினம் இந்தியாவிலே மிகச் சிறப்பான தொரு முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற மின் துறை 221 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இந்தியாவிலே முன்னணியில் நிற்கின்றது, நஷ்டத்திலே முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த அளவிலே, மீண்டும் மின் துறையில் அதே அளவில் தமிழகம் முன்னணியில் இருக்க வேண்... இந்த நேரத்தில் அன்போடு நான் வாழ்த்திக் கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு குறைபாடுகள் இருந்தன என்பதை கடந்த ஆண்டிலிருந்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். குடும்ப நலத் திட்டத்திலே இருக்கின்ற அவர்கள் குடும்ப நலத்தைச் சிறப்பாகச் செயல் படுத்துகிறார்களா அல்லது புள்ளி விவரத்தை அள்ளி வாரி



1987 மார்ச் 23] [டாக்டர் ந. மாசிலாமணி]

வழங்குகிறார்களா என்பதில் நிறைய கருத்துகள் இருக்கின்றன. நாம் உண்மையாக குடும்ப நலத் திட்டத்தைச் செய்கிறோமா என்பதில் ஒரு ஐயப்பாடு உண்டு என்கின்ற வகையில் பல்வேறு சூழ்நிலைகளிலே நடந்து கொண்டிருக்கிறது. அதற்குக் கைவசம் நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. அதற்கு என்று தனியொரு மானியம் வரும்பொழுது அதைப்பற்றிப் பேசுகிறேன். குடும்ப நலத் திட்டத்தில் நாம் பரிசு பெற்றால்கூட என்னுடைய கருத்து, நான் இந்த அரசைப் பார்த்து அன்போடு கேட்டுக்கொள்வ தெல்லாம், குடும்ப நலத் திட்டத்தில் நாம் பெறுகின்ற பரிசு நமக்கு உகந்தது அல்ல என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருபதம்சத்திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொல்கிறார்கள். பல்வேறு குறைபாடுகளுடன் இது செயல் படுகிறது என்பதைப் பல்வேறு உதாரணங்களோடு நான் எடுத்துக்காட்ட முடியும். ஐ.ஆர்.டி.பி. ஐ.யு.டி.பி, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற பல்வேறு திட்டங்கள்—வறுமை ஒழிப்புத் திட்டங்கள் இந்த நாட்டிலே செயல்பட்டுக் கொண்டிருக் கின்ற இந்த நேரத்தில் பல்வேறு குறைபாடுகளும் ஊழல்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஐ.ஆர்.டி.பி.-யைப் பொறுத்த வரையில் என்னுடைய தொகுதியிலே அந்தத் திட்டத்தை நிறை வேற்றுகின்றபொழுது பல்வேறு குறைபாடுகள். ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அந்தப் பலன்கள் போய்ச் சேரு கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்பு கிறேன். இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டம், மத்திய அரசின் இருபது அம்சத் திட்டமாக இருந்தாலும் சரி, பல்வேறு திட்டங்கள் இன்றையதினம் நாட்டு மக்களின் வளர்ச்சியைவிட கட்சியி னுடைய வளர்ச்சிக்கு அதிகமாகப் பயன்படுகிறது என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அந்த அளவில் இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் களைய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் ந. மாசிலாமணி] [1987 மார்ச் 23

ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே பல்வேறு வகையான கடன்களை நாட்டு மக்களுக்கு, ஏழை மக்களுக்கு நாட்டிலே இன்றையதினம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் ஜெயங்கொண்டத்தை எடுத்துக் கொண்டால் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற ஆணையாளர் எந்த அளவிற்குச் செயல்படுகிறார் என்று சொன்னால் அந்த மானியத்திலே வருகின்ற ஐம்பது சதவீதம் கமிஷனை அவர் பெற்றால்தான் கடன் கிடைக்கும் என்ற நிலையில் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆணையாளரும், அதிகாரிகளும், மற்றவர்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று பல்வேறு திட்டங்கள். ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் பொதுப்பணித் துறையின் சார்பாக கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பல கோடிக்கணக்கான ரூபாய்களை இன்றையதினம் தமிழக அரசுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, கடந்த நிதியாண்டிலே இந்தியாவிலே செலவிடப்பட்ட பத்தாயிரம் கோடி ரூபாயிலே 750 கோடி ரூபாய்க்கு மேலே தமிழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, நிதியை வழங்குகின்ற வேளையிலே எந்த அளவிற்கு மத்திய அரசு பாரபட்சமின்றி தமிழக அரசிடம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல்வேறு பாரபட்சமான முறையில் தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு பகுதி, ஒரு கட்சி, ஒரு பிரிவினர் வளர்வதற்காகவும், வாழ்வு பெறுவதற்காகவும் நடப்பது இந்த நாட்டின் வறுமையை அறவே ஒழிக்க முடியாது என்பதை நான் அன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 மார்ச் 23]

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிலேயிருந்து பெறக்கூடிய நிதியை ஏதோ ஒரு கட்சிக்குப் பயன்படுத்துவதாகக் குற்றம் சொல்கிறார்கள். இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதைப் பார்க்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** எந்தக் கட்சி என்று குறிப்பிட்டு எந்தக் கட்சியின் பெயரையும் அவர் சொல்லவில்லை. வேண்டுமானால் பார்த்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோழி திருடியவனுக்குக் கொண்டையிலே முடி என்பதைப்போல நான் ஒரு கட்சி என்றுதான் சொன்னேன். அவர் ஏன் வருத்தப்படுகிறார் என்று எனக்கு அறவே தெரியவில்லை. ஏதோ தவறு நடக்கிறது. அதற்கு என்னால் உதாரணங்களைச் சொல்ல முடியும். இன்னும் சொல்லப்போனால், இந்தக் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியிலே—ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல, 234 தொகுதிகளிலேயும் நடைபெறுகின்ற வேலைகளிலே என்னுடைய தொகுதியிலே பல்வேறு குறைபாடுகளோடு இந்தத் திட்டம் நிறைவேறிக்கொண்டிருக்கின்றது என்பதற்கு நான் இந்த நேரத்திலே பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். ஆனால் நாகரிகம் கருதி, அவர்களுடைய பெயர்களையும், அவர்களுடைய கட்சியையும் நான் சொல்ல விரும்பவில்லை. (குறுக்கீடு)

இந்த இருபது அம்சத் திட்டத்தைத் தெளிவாக, நல்ல முறையிலே நீங்கள் செயல்படுத்த வேண்டும். தவறு நடக்கிறது என்பதற்கு ஒன்றை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே கருப்பங்கால் ஓடைத் திட்டம் இருக்கிறது. அதற்கு 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் 16 இலட்சம் ரூபாய் கட்டுமானப் பணிக்காகவும், 6 இலட்சம் ரூபாய் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால் அதிகாரிகளுக்கே என்ன நடக்கிறது என்று தெரியாது.

[டாக்டர் ந. மாசிலாமணி] [1987 மார்ச் 23

அதிகாரிகளைக் கேட்டால் எங்களுக்கு ஒன்றும் தெரியாது; உங்கள் ஊரிலே ஒரு முக்கியமான நபர் இருக்கிறார்; அவருக்குத்தான் எல்லாம் தெரியும்; அந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது, யார் யார் வேலை செய்கிறார்கள் என்கின்ற விவரங்கள் எல்லாம் அவரைக்கேட்டால்தான் தெரியும் என்கிறார்கள். அவர் 10 சதவிதம் கமிஷன் வாங்கிக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. 22 இலட்சம் ரூபாய்த் திட்டத்தில் 10 சதவிதம் கமிஷனாகப் பெற்று, அந்தவகையில் 2.2 இலட்சம் பெற்றிருக்கிறார். 22 இலட்சம் ரூபாய் திட்டத்தில் இந்த அளவுக்குக் கமிஷன் என்றால் கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்கள் நடைபெறும்போது எவ்வளவு கமிஷன் போகும் என்பதை நாமே தெரிந்துகொள்ள வேண்டியதுதான். அதிலும் குறிப்பாக ஒருவருக்கே இவ்வளவு போகிறது என்றால் இடையிலே இன்னும் பல கைகளைத் தாண்டி போகும்போது, ஐஸ் கட்டியானது பல கை மாறி செல்லும்போது இறுதியில் ஒரு துளி தண்ணீர்தான் மிஞ்சும் என்பதைப்போலத்தான் திட்டப்பணிகளுக்கு பணம் போய்ச் சேரும். இன்றையதினம் தமிழ்நாட்டிலே 20 அம்சத் திட்டம் செயல்படுகின்ற விதம் இப்படித்தான் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் வருத்தப்படக்கூடாது; குறைகளைக் களைய முயற்சி செய்ய வேண்டும்; தவறுகளை நீக்க அமைச்சரவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய அரசின் கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில், இந்த அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், நவோதயா பள்ளிகளை தமிழ்நாட்டிலும் அமைக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இருபது அம்சத் திட்டத்தை நீங்கள் நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக நிலச்சீர்திருத்தச் சட்டத்தை இன்னும் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும். இருபது அம்சத் திட்டத்தில் ஐந்தாவது திட்டமாக இருப்பது நிலச்சீர்திருத்தத் திட்டம். இந்த அரசு இந்த ஐந்தாவது திட்டத்தைச் செயல்



1987 மார்ச் 23] [டாக்டர் ந. மாசிலாமணி]

படுத்துவது சரியாக இல்லை. இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கின்றபோது பல்வேறு நிலச்சுவாந்தார் கையிலே ஆயிரக்கணக்கான வேலி நிலம் இருக்கிறது. அந்த நிலங்களை எல்லாம் இந்த அரசு கையகப்படுத்த வேண்டும்; கையகப்படுத்திய நிலங்களை எல்லாம் ஏழை எளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். உறுப்பினர் அவர்களுடைய உதவிக்காகத்தான் சொல்கிறேன். உபரி நிலங்களை பலர் இன்னும் வைத்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு நிலங்களை, எத்தனை நிலப்பிரபுக்கள் பினாமி முறையிலே சட்ட விரோதமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற பட்டியலைக் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** அது அரசின் வேலை. உங்களுடைய கட்சி ஆளுகின்ற மாநிலத்திலே சிறப்பாக நடைபெற்றால் அதுபற்றி நீங்கள் பெருமையாகப் பேசிக்கொள்ளலாம். பாராட்டலாம். இங்கே நன்றாகச் செயல்படுகிறது. மேலும் நன்றாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக சிலவற்றைச் சுட்டிக் காட்டுகிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில் இங்கே மிகவும் மோசமான நிலைமை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். மது இருக்கும் போதும் சரி, மதுவிலக்கு இருக்கும்போதும் சரி, நீக்கும்போதும் சரி. இந்த அரசினுடைய நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஒவ்வொரு நேரத்திலும், மதுவிலக்கைக் கொண்டுவரும்போதும் சரி, மதுவிலக்கை எடுக்கும்போதும் சரி, தாய்க் குலத்தின் கண்ணீரைத் துடைக்கவே இதைச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். அன்றைய தினம் நல்ல சாராயம் இந்த நாட்டிலே பெருக்கெடுத்து ஓடும்போது சொன்னார்கள்; இன்றைய தினம் கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடும்போதும் சொல்கிறார்கள், தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கத்தான் இதைச் செய்கிறோம் என்று. இன்றைய தினம் சாராயத்தை எடுத்ததால் நாட்டுக்கும் நன்மை இல்லை: அரசுக்கும் எந்தவிதமான

[டாக்டர் ந. மாசிலாமணி] [1987 மார்ச் 23

நன்மையும் இல்லை. சாராயத்தை எடுத்ததனால் இன்றைய தினம் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்தான் இலட்சாதிபதிகளாக, கோடீஸ்வரர்களாக மாறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும்போது ஏற்படுகின்ற குறைபாடுகளை களைய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். குறைபாடுகள் களையப்படுவதன் மூலம் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்படும், நாட்டுக்கு நன்மை ஏற்படும் என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவே, அரசு இதை ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பல்வேறு கோரிக்கைகள் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. தற்போது 140 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட இருப்பதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியில் உதயநத்தம் மற்றும் விக்ரமங்கலம் ஆகிய இரண்டு ஊர்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையம் வேண்டுமென்று சொல்லி, 10,000 ரூபாயும் 5 ஏக்கர் நிலமும் தந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

எனவே, அந்தக் கிராமங்களில் ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் துவக்கித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பல்வேறு கிராமங்களில் சாலை வசதி இல்லை. குறிப்பாக மீன்சுருட்டி, குண்டவெளி, கல்லாத்தூர் போன்ற பகுதிகளில் சாலை வசதி இல்லாமல் இருக்கிறது. அவற்றுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்து சாலை வசதி செய்து தருவதோடு குடிநீர் வசதியும் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழக சபாநாயகர் அவர்கள் முற்போக்கான எண்ணம் கொண்டவர். அவர் தொடர்ச்சியாகப் பணி புரிந்திட வேண்டும் என்று வாழ்த்தி முடிக்கிறேன்.



1987 மார்ச் 23]

*திரு. செ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒப்புதலோடு மாண்புமிகு நடமாடும் பல்கலைக் கழகம், நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் நாட்டு மக்களின் நன்மைக்காக இந்த மன்றத்தில் அளிக்கப்பட்டு இருக்கும் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டிப் பேச வாய்ப்பளித்ததற்காக முதலில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்த மன்றத்தில் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களை பாதிக்கும்படியான வரிச்சுமை ஏற்றம் உள்ள நிதிநிலை அறிக்கையாகவும், தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் திட்டமாகவும் மட்டுமே இந்த மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகச் சொல்லப்போனால் கூவம் மணக்கும் திட்டம், வீராணம் திட்டம், இலவச கண்ணொளி வழங்கும் திட்டம் ஆகியவற்றைச் சொல்லலாம்.

ஆனால் இன்றைய நிதி நிலை அறிக்கையில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் உள்ளன. குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு இலவச மின் திட்டம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம், சத்துணவுத் திட்டம் முதலிய திட்டங்களைச் சொல்லலாம்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கிராமங்களில் மக்கள் படும் துயரத்தைக் கண்டு இந்த நிதி நிலை அறிக்கையில் இலவச காலணி வழங்கும் திட்டத்தைத் தீட்டி 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டுகிறேன். இந்த அரசு கல்வியில் அதிக கவனம் செலுத்தி சென்ற நிதியாண்டில் 89 உயர்நிலைப் பள்ளிகளை அறிவித்து கிராம மக்களின் கல்விக் கண்களைத் திறந்தது.

[திரு. செ. தங்கராசு] [1987 மார்ச் 23

அதேபோல் ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் 21 உயர் நிலைப் பள்ளிகளை அரசு அறிவித்தது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

பெருந்தொழில்களைப் பொறுத்தவரையில் புகளூர் காகித ஆலையையும், டாமின் தொழிற்சாலையையும் இந்த அரசு ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

அதேபோல் போக்குவரத்துக் கழகத்தை விரிவுபடுத்தி இந்தியாவிலேயே சிறப்பாக இயங்குவது தமிழகத்தில்தான் என்ற நிலைமையை ஏற்படுத்தி பெரிய, பெரிய பேருந்துகளை விட்டு தமிழ்நாட்டில் பேருந்துகள் செல்லாத கிராமங்களே இல்லை என்று சொல்கின்ற நிலைமையை இந்த அரசு உருவாக்கியுள்ளது. அதனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசை நான் பாராட்டுகிறேன்.

இன்றைக்குத் தமிழகம் முழுவதும் வறட்சி இருக்கிறது. புரட்சித் தலைவர் அரசு போர்க்கால அடிப்படையில் குடிநீர் வசதிக்காக ஆழ்துளைக் குழாய் கிணறுகளைத் தோண்ட உத்தரவிட்டுள்ளது. குறிப்பாக வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட தென்னாற்காடு மாவட்டத்தில் சுமார் 982 ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைக்க அரசு அனுமதித்துள்ளது. இன்னும் அதிகப்படியான கிராமங்களில் தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே அந்த மாவட்டத்தில் அதிகப்படியான குழாய் கிணறுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மங்களூர் தொகுதி மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு கிராம மக்கள் குடிநீருக்காக மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே அந்தப் பகுதியினை வறட்சித் திட்டத்தில் சேர்த்து எரி மாராமத்து குழாய் கிணறு அமைத்தல் ஆகியவற்றைச் செய்யும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள திட்டக்குடியில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இரண்டாவது குற்றவியல் நீதிமன்றம் அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களையும், நிதி ஒதுக்கீடு



[திரு. செ. தங்கராசு] [1987 மார்ச் 23

செய்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தொகுதியையும் இணைக்கின்ற வெள்ளாற்றில் தரைப்பாலம் அமைக்க உத்தரவிட்டதற்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் அதற்கு உதவி செய்த மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சருக்கும் இரண்டு தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்து பாராட்டுகிறேன். இந்தப் பாலத்திற்கு இந்த ஆண்டே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். திட்டக்குடி, தாலுகா தலைநகராகும். ஆகையினால் அங்கு தீயணைப்பு நிலையம் அமைக்க உத்திரவிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் பெண்ணாடத்தில் 8 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக் கட்டிடம் கட்ட உத்தரவிட்ட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியில் 2 அரசு உயர்நிலைப் பள்ளிகளை கொடுத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் அதேபோல் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளைக் கொடுத்த மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சருக்கும் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியில் மேற்கொண்டும் கீழ்க்கண்ட கோரிக்கைகளை இந்த நிதி ஆண்டில் நிறைவேற்றித்தர மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

முருங்ககுடிக்கு அருகில் வெள்ளாற்றின் குறுக்கே தரைப் பாலம் கட்டவும், சாத்துக்கூடல் உச்சிமேடு அருகில் ஓடையில் ஒரு பாலம் கட்டவும், சிறுகரம்பலூர் ஓடையில் ஒரு பாலம் கட்டவும், புலிவளம் ஓடையில் ஒரு பாலம் கட்டவும், பொயனப்பாடி விநாயகனேந்தல் சாலையில் ஓடையில் ஒரு சிறு பாலம் கட்டவும், கீழகல்பூண்டி ஓடையில் ஒரு சிறு பாலம் கட்டவும், கீழத்திருப்பூண்டி சாலையை தார் சாலையாக மாற்றவும், ஈ. கீரனூர் திட்டக்குடி சாலையை தார் சாலையாக மாற்றவும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் உத்தரவிட வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

[திரு. செ. தங்கராசு] [1987 மார்ச் 23

கடைசியாக மிகவும் முக்கியமான கோரிக்கையை கோரி விடை பெறுகிறேன். என் சொந்த கிராமமான தொழுதூர், திருச்சி- சென்னை நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கு அடிக்கடி விபத்துக்கள் நடைபெற்று வருகின்றன. தினமும் நூற்றுக் கணக்கானவர்கள் விபத்துக்குள்ளாகிறார்கள். அங்கே பொது மருத்துவ மனை 25 மைல்களுக்கு அப்பால்தான் உள்ளது. தொழுதூரில் அரசு மருந்தகம் தற்போது இயங்கி வருகிறது. அதை மருத்துவ மனையாக உயர்த்தி, 20 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்ட அரசுக்கு முன்மொழிவு வந்துள்ளது. பல ஆண்டு காலமாக இருந்துவரும் அந்தப் பகுதி மக்களின் இந்தக் கோரிக்கையை ஏற்று, மருத்துவ மனையாக உயர்த்தி புதிய கட்டிடம் கட்ட உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரை வேண்டுகிறேன்

தொழுதூர், பிர்க்காவினுடைய தலைநகரம். ஆகையால் அங்கே பத்திரப் பதிவாளர் துறையின் சார்பாக துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்றைத் திறக்க அரசுக்கு முன்மொழிய வேண்டு கிறேன். மாண்புமிகு செய்தி சுற்றுலா மற்றும் மின் துறை அமைச்சரவர்கள், இந்த ஆண்டிலேயே தொழுதூருக்கு துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வாசித்து அளித்த 1987-88ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று வதற்கு முன் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்தில் பிற்பட் டோர்கள், ஏழை எளியவர்கள், முதியோர்கள், பள்ளிக் குழந் தைகள் ஆகியோர் இதய தெய்வம் புரட்சித் தலைவரை தங்களின் இதய தெய்வமாக நினைத்து வழிபடுகின்றனர் என்பதைச்



1987 மார்ச் 23] [திரு. சி. சுப்புராயர்]

சொல்லிக் கொண்டு, இந்த மக்களின் நலன்கள் கருதி புரட்சித் தலைவரது அரசு பல நல்ல திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது என்றும் கூறிக் கொள்கிறேன்.

சத்துணவு திட்டங்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடைகள், முதியோர் உதவித் தொகை இப்போது புதியதாக இலவச காலணி போன்ற ஏராள மான திட்டங்கள் இந்த அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டன. திட்டங்கள் அனைத்தும் ஏழை மக்களுக்கு நேரிடையாகச் சென்று அடைகின்றன. அனைத்து திட்டங்களும் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன.

கிராமப்புறங்களில் சிறு குழந்தைகளை வைத்துக் கொண் டிருக்கும் ஏழைத் தாய்மார்கள் சத்துணவு திட்டங்கள் வருவதற்கு முன்பு மிகவும் சிரமப்பட்டார்கள். அந்த ஏழைத் தாய்மார்கள் அன்றாடம் வேலைக்குச் சென்றால்தான் அவர்களுக்கு பணம் கிடைக்கும். சிறு குழந்தைகளை பராமரிப்பதற்காக வேலைக்குச் செல்லவில்லை என்றால் அன்று அவர்களுக்கு உணவு கிடையாது. பட்டினிதான் இருக்க வேண்டும். ஆனால் சத்துணவு மையங்கள் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகு, அந்த ஏழைத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை சத்துணவு மையங்களில் விட்டு விட்டு நிம்மதியாக வேலைக்குப் போகிறார்கள். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு முதலில் சத்துணவு, பின்பு இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடைகள் ஆகிய திட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித் தார்கள். இப்போது இதற்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல் இலவச காலணி திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் ஏழைத் தாய்மார்கள் கால்களுக்கு செருப்பு இல்லாமல் வெய்யில் காலங்களில் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை நேரில் கண்டு அறிந்த பின்பு தான், இந்த இலவச காலணி திட்டத்தை ஏழைத் தாய்மார்களுக்கும் அறிவித்துள் ளார்கள். இந்த திட்டத்தை உடனடியாக செயல்படுத்தும் வகையில் 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இலவச காலணி

[திரு. சி. சுப்புராயர்] [1987 மார்ச் 23

திட்டம் செயல்படுத்தும் முறை பற்றியும் நிதிநிலை அறிக்கையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறை மூலமாக கூட்டுறவு காலணி தயாரிப்புச் சங்கங்கள் அமைத்து பல்லாயிரக் கணக்கான காலணி தயாரிப்புகளை செய்யும்போது, பல ஏழைத்

(பிற்பகல் 1.40)

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். என்னுடைய தொகுதியில் செருப்பு தைக்கும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். எனவே என்னுடைய தொகுதியில் கூட்டுறவு காலணி தயாரிப்பாளர் சங்கம் ஒன்றினைத் தொடங்குவதற்கு உதவிட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை ஏற்கனவே வழங்கி உள்ளது. வரும் ஆண்டில் வண்ண தொலைக்காட்சிப் பெட்டியினை வழங்க உள்ளதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். இது ஒரு வரவேற்கத்தக்க திட்டமாகும். அதைப்போல வீடியோ கேசட் பிளேயர் வழங்கும் திட்டமும் சிறந்த திட்டமாகும். வீடியோ கேசட் பிளேயர் வழங்குவது கிராமப்புற ஏழை மக்களுக்கு சிறந்த ஒரு வரப்பிரசாதம் ஆகும். இதன்மூலம் அரசு பல திட்டங்களை நிறைவேற்றலாம். கிராமங்களில் ஒரு வி.சி.ஆர். அல்லது ஒரு வி.சி.பி. வழங்குவதன் மூலம் நிவர்த்திக்கக்கூடிய குறைகள் சில ஏற்படலாம். ஆனால் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் இரண்டு வி.சி.பி. அல்லது இரண்டு வி.சி.ஆர். வழங்கினால் அவற்றை யூனியன் பொறுப்பில் வைத்து அந்த கிராமங்களுக்கு ஒரு ரொட்டேஷன் பேசிஸ்ஸில் கொடுத்து, இந்தத் திட்டம் சிறப்புற பயன்பெறச் செய்யலாம்.

கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் மூன்று ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை அறிவித்ததையொட்டி 30 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கும் திட்டம் தமிழ் நாட்டில் மிகச்



1987 மார்ச் 23] [திரு. சி. சுப்புராயர்]

சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. அந்த எண்ணத்தை ஈடேற்றும் வகையில் பல திட்டங்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பருவ மழை தவறியதன் காரணமாக தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகளை மிகவும் தெளிவான முறையில் மதிப்பீடு செய்து புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மத்திய அரசுக்கு அனுப்பி உள்ளது. வறட்சியின் கடுமையினை நன்கு உணர்ந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆங்காங்கு ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் வேலைகளும், கிணறுகள் தூர் வாரும் வேலையும் விரைவாகவும் வேகமாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. வறட்சியைப் போக்குவதற்கு இந்த அரசு எடுத்துள்ள திட்டங்கள் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

என்னுடைய தொகுதியில் கடுமையான வறட்சி நிலவுகிறது. என்னுடைய தொகுதியில் தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. மக்கள் அனைவரும் விவசாயத்தை மட்டும் தான் நம்பியுள்ளார்கள். உத்தமபாளையத்திலிருந்து சுருளி தீர்த்தம் செல்லும் சாலையில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். தேனி போடி நகரிலும் கடுமையான வறட்சி நிலவுகிறது. பெரியாற்றில் தண்ணீரின் அளவு குறைவாக உள்ளதால் இந்த வருடம் நெல் பாசனம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொன் விளையும் பூமியாக இருந்த எனது தொகுதியில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டுள்ளது. விவசாயப் பெருமக்களுக்கு இதனால் பல கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய தொகுதியில் எல்லா பகுதிகளிலும் நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்கள். உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்து, என்னுடைய தொகுதியை பார்வையிட்டு, விவசாய பெருமக்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டங்களைக் கண்டறிந்து,

[திரு. சி. சுப்புராயர்] [1987 மார்ச் 23

அவர்களுக்கு தகுந்த நஷ்டஈடு வழங்க ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சுருளி நீர்வீழ்ச்சி என்ற சிறந்த சுற்றுலா மையம் உள்ளது. இங்கு வருடம் முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். சுருளி நீர்வீழ்ச்சியை சுற்றுலா மையமாக அறிவித்து அங்கு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கும், உணவு அருந்துவதற்கும் தேவையான சுற்றுலா விடுதிகளையும், உணவு விடுதிகளையும் ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கண்ணகிக்கோட்டம் என்னுடைய தொகுதியில்தான் அமைய உள்ளது. வள்ளுவர் கோட்டம், பூம்புகார் போன்று கண்ணகிக் கோட்டம் சிறந்த ஒருவரலாற்று நினைவு இடமாக அமைய உள்ளது. புரட்சித் தலைவரது அரசின் ஞாபகார்த்தமாக, சின்னமாக விளங்கும் வகையில் கண்ணகிக் கோட்டத்தை சிறந்த முறையில் உருவாக்க வேண்டுமென்று இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அடிக்கல் நாட்டிய சண்முகா நதி நீர்த்தேக்கத் திட்டம் என்னுடைய தொகுதியில்தான் அமைய உள்ளது. மழை பெய்யும் இடம், கேச்மெண்ட் ஏரியா என்று அழைக்கப்படும் தண்ணீர் பெருகும் இடம் மற்றும் அணை அமைய இருக்கும் இடம் இவை அனைத்தும் எனது தொகுதியில்தான் உள்ளன. ஆனால் என்னுடைய தொகுதியில் சுமார் 200 ஏக்கர் நிலங்கள் தான் இந்தத் திட்டத்தினால் பாசன வசதி பெறுகிறது. அணைப்பட்டி, இராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி மற்றும் கோகிலாபுரம் ஆகிய கிராமங்களில் மக்கள் பயன்பெறும் வகையில் மேலும் 500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 23] [திரு. சி. சுப்புராயர்]

அடுத்து பெரியாறு அணையினை பலப்படுத்தும் பணி முடியும் கட்டத்தில் உள்ளது. அவ்வாறு அந்த அணையைப் பலப்படுத்தினால், தமிழக அரசும், பொதுப்பணித் துறையினரும் 156 அடித் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளலாம். இப்போது 136 அடித் தண்ணீரைத்தான் தேக்கி வைக்க முடியும். ஆகவே அணையைப் பலப்படுத்தும் வேலை முடிந்த பின்பு, 156 அடித் தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். அப்படி கூடுதலாகத் தேக்கி வைக்கப்படும் தண்ணீரை என்னுடைய தொகுதியில் உள்ள தரிசு நிலங்களின் பாசனத்திற்குப் பயன்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்றும், பதினெட்டாம் கால்வாய்த் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்றும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் எனது தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஏராளமான ஆதி திராவிடர்கள் வசிக்கிறார்கள். எனவே ஹட்கோ மூலமாக ஏராளமான வீடுகளைக் கட்ட ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியான கம்பம் கேரளாவிற்கு அருகே, கேரளாவின் எல்லையில் உள்ளது. எஸ்.டி.எம். கோர்ட் என்று அழைக்கப்படும் உட்கோட்ட குற்றவியல் நீதிமன்றத்திற்கு 50 மைல்களுக்கு அப்பாலுள்ள உசிலம்பட்டிக்குத்தான் செல்லவேண்டும். ஏற்கனவே உத்தமபாளையத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஒன்றும் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் ஒன்றும் இருக்கிறது. எனவே அங்கே எஸ்.டி.எம். கோர்ட் ஒன்றை அமைத்தால், என் தொகுதியில் உள்ள அனைத்து மக்களும் பயன் பெறுவார்கள்.

அதேபோல் கம்பத்தில் அரசாங்க மருத்துவமனை ஒன்று உள்ளது. கம்பத்திலிருந்து குமுளிக்கு செல்லும் பாதை மலைப் பாதையாகும். எனவே அங்கே விபத்துக்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களை கம்பத்தில் உள்ள ஆஸ்பத்திரிக்குத்தான் கொண்டுவர வேண்டும். கம்பம்

[திரு. சி. சுப்புராயர்] [1987 மார்ச் 23

ஆஸ்பத்திரியில் ஆக்சிடென்ட் வார்ட் கிடையாது. ஏலக்காய் வாரியத்தில் இருந்து சுமார் 3 லட்சம் ரூபாய்வரை, கட்டடம் கட்டுவதற்கு, ஆக்சிடென்ட் வார்ட் கட்டுவதற்குத் தரத் தயாராக உள்ளார்கள். எனவே இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கம்பம் அரசாங்கம் மருத்துவமனையில் ஆக்சிடென்ட் வார்ட் ஒன்றை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏழை மக்களின் நல்வாழ்விற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் இந்த நிதிநிலை அறிக்கை என்று கூறிக்கொண்டு, பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24—3—1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

## 4. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

38. 1985-86 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

39. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்)



1987 மார்ச் 23]

40. 1985-86 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

41. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

42. 1985-86 ஆம் ஆண்டிற்கான சேரன் பொறியியற் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

43. 1985-86 ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை, (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] . (தமிழ், ஆங்கிலம்).

44. 1985-86 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

20. 1986-87 ஆம் ஆண்டிற்கான 1, 2, 7, 8, 9 11, 44 மற்றும் 47 ஆகிய கோரிக்கைகளின் திருத்த மதிப்பீடுகள்.

21. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 3 மற்றும் 13 முதல் 16 வரையிலான விரிவான திருத்த மதிப்பீடுகள்.

22. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 5, 6 மற்றும் 12 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

— [1987 மார்ச் 23

23. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 10 மற்றும் 22 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

24. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20 மற்றும் 50 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

25. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 17-ன் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

26. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 18, 19 மற்றும் 49 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

27. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 21, 25, 45 மற்றும் 56 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

28. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 23, 28 மற்றும் 35 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

29. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 24, 26, 27, 48, 51 மற்றும் 57 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

30. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 30 முதல் 32-வரையிலான கோரிக்கைகளின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

31. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 29, 33 மற்றும் 34 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

32. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 36 மற்றும் 52 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

33. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37, 38 மற்றும் 53 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

34. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 மற்றும் 54 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

35. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39—சாலைகளும் பாலங்களும், 54 — சாலைகளும் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள்.

36. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 40, 44 மற்றும் 55 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.



1987 மார்ச் 23]

37. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 42, 46 மற்றும் 59 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

38. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 43 மற்றும் 58 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.

39. 1987-88 ஆம் ஆண்டிற்கான 1, 2, 7, 8, 9, 11, 41 மற்றும் 47 ஆகிய கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

40. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 3 மற்றும் 13 முதல் 18 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள்.

41. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 5, 6 மற்றும் 12 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

42. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 10 மற்றும் 22 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

43. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20 மற்றும் 50 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

44. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 17-ன் விரிவான மானியக் கோரிக்கைகள்.

45. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 18, 19 மற்றும் 49 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

46. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 21, 25, 45 மற்றும் 56 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

47. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 23, 28 மற்றும் 35 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

48. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 24, 26, 27 48, 51 மற்றும் 57 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

— [1987 மார்ச் 23

49. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 30 முதல் 32 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

50. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 29, 33 மற்றும் 34 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

51. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 36 மற்றும் 52 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

52. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37, 38 மற்றும் 53 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

53. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 37 — பொதுப் பணிகள் — கட்டிடங்கள் மற்றும் 53 — பொதுப் பணிகள் — கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள். (திருத்த மதிப்பீடுகள், வரவு-செலவு திட்ட மதிப்பீடுகள்.)

54. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 மற்றும் 54 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

55. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 — சாலைகளும் பாலங்களும், 54 — சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள்.

56. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 40, 44 மற்றும் 55 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

57. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 42, 46 மற்றும் 59 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

58. 1987-88 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 43 மற்றும் 58 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.



1987 மார்ச் 23]

59. பதவிகள் சம்பள விகிதங்கள் பற்றிய விவர அறிக்கை (1987-88). (ஆங்கிலம்.)

60. 1986-87 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான திருத்த மதிப்பீடுகள்.

61. 1987-88 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

62. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை. (திருத்த மதிப்பீடுகள்.)

63. 1987-88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

64. 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்.)

65. 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைகுறிப்பின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

66. 1987-88 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்). (தமிழ், ஆங்கிலம்.)

67. 1986-87 ஆம் ஆண்டு திட்டம் (நிதி நிலைக் குறிப்பு —திட்ட இணைப்பு). (திருத்த மதிப்பீடுகள்).

68. 1987-88 ஆம் ஆண்டு திட்டம் (நிதி நிலைக் குறிப்பு —திட்ட இணைப்பு).

69. 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள். (தமிழ், ஆங்கிலம்).

70. வரவு-செலவுத் திட்ட விளக்க நூல், 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

71. 1987-88-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

72. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்த வரவு-செலவு திட்ட வெளியீடுகளின் பட்டியல்.

73. 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து, நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு.

(218 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

ஐந்தாண்டுத் திட்டங்களையும் மற்றும் ஆண்டுத் திட்டங்களையும், மைய திட்டக் குழுவின் ஒப்புதலுடன், வரையறுத்து இறுதியாக்கும் பணியில் மாநிலத் திட்டக் குழுவும் பங்கேற்கிறது.

2. மாநிலத் திட்டக் குழுவிற்கு, 1986 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்தின் பகுதி II திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இறுதியாக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. இதற்கு முன் பகுதி II திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, மாநிலத் திட்ட குழு ஆய்வு செய்த,பிறகு அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. அந்தப் பட்டியல்களின்படி தலைமைச் செயலகத் துறையின் கருத்துக்கள் நிதி மற்றும் திட்டம் (மற்றும்) வளர்ச்சித் துறைகளின் பரிசீலனைக்கும், ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டு அதன் பிறகு, அவை 'நிலைத்த நிதி ஆணைக் குழு'வின் முடிவிற்கு அனுப்பப்பட்டு வந்தன. தற்பொழுது, மாநிலத் திட்டக் குழு பகுதி திட்டங்களை இறுதியாக்கும் முழுப் பொறுப் பையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் பகுதி II திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நேராக நிதி நிலைக் குழுவின் முடிவிற்கு அனுப் பப்படும்.

3. மாநிலத் திட்டக் குழு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1987-88 ஆம் ஆண்டுக்கான 'குன்னூர் ஹல்லா' நீர்ப்பிரிமுகடு (Water shed management) மேலாண்மைத் திட்டத்தை வகுக்கும் பொறுப்பையும் மேற்கொண்டுள்ளது.

கீழ்க்கண்ட மாவட்டங்களில், மாவட்டத் திட்டப் பிரிவுகள் (District Planning Cells) ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
3. நீலகிரி மாவட்டம்.
2. திருநெல்வேலி கட்டப்பொம்மன் மாவட்டம் (மற்றும்)

இம்மாவட்டத் திட்டப் பிரிவுகள் மாநிலத் திட்டக் குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கி திட்டம் தொடர்புள்ள பல்வேறு பணி களைக் கவனிக்கும். படிப்படியாக இத்திட்டம் மற்ற மாவட்டங் களுக்கும் நீட்டிக்கப்படும்.

—

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]ghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R B. Gandhi Street, Calcutta-11



© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.



வெளியீடு 4-9-1987

Issued 4-9-1987



2961

1620/87


# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை மார்ச் 24, 1987—தொகுதி 34 எண் 3

Tuesday the 24th March 1987 Volume 34 No. 3


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009

[Price Rs. 3

விலை ரூ. 3]

உள்ளடக்கம்

24-3-1987


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 349—389 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 390—411 |
| 2 ஸ்ரீஹரிக்கோட்டாவிலிருந்து செயற்கைக்கோள் செலுத்தவிருப்பதற்கு வாழ்த்துக்கள். | 412—413 |
| 3 தகவல் கோரல்— | |
| பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத் தாள் வெளியானது குறித்து. | 413—414 |
| 4 கவன ஈர்ப்பு— | |
| (அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை தூசியினால் பயிர்கள் பாதிப்பு. | 414—418 |
| (ஆ) முத்திரைத் தாள்கள் தட்டுப்பாடு .. | 419—423 |
| 5 முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88, அளித்தல். | 423 |
| 6 இறுதித் துணை நிதி அறிக்கை, 1986-87, அளித்தல். | 424—426 |
| 7 அறிவிப்பு— | |
| இறுதித் துணை நிதி அறிக்கை 1986-87, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல், | 426 |
| 8 வரவு-செலவுத் திட்டம், 1987-88—பொது விவாதம் (தொடர்ச்சி) | 426—508 |
| திரு. எஸ். வேணுகோபால் .. .. | 426—438 |
| திரு. ஆ. பிரேம்குமார் .. .. | 439—448 |
| திரு. ஆ. நடராசன் .. .. .. | 448—457 |
| திரு. என். விஜயபாலன் .. .. | 457—466 |
| திரு. வி. பி. சிந்தன் .. .. .. | 466—476 |
| திரு. இரா. சண்முகம் .. .. | 476—483 |
| டாக்டர் க. நல்லமுத்து .. .. | 484—491 |
| திரு. பொ. உத்திராபதி .. .. | 491—500 |
| திரு. அ. பெரியசாமி .. .. | 500—505 |
| திரு. ஆ. சிவக்குமார் .. .. .. | 505—508 |
| 9 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 509—513 |


டி. 2 எ 23—1

296

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1987, மார்ச் 24, செவ்வாய்க்கிழமை.

பங்குனி 10, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி'.

கொடை, அருளி, செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 141 மற்றும் 142 மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

### நீர்ப்போட்டி விளையாட்டுகள்

**143—(*வினா எண் 3013) திரு. க. சேர்லைராசு மற்றும் திரு. சா. ஞானசுந்தரம் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்போட்டி விளையாட்டுக்களை ஊக்குவிக்கிற உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1987 மார்ச் 24

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை மாமல்லபுரம் செல்லும் வழியில் முத்துக்காட்டில் முதற்கட்ட பணியாக விண்ட் சர்பிங் என்ற நீர்ப்போட்டி விளையாட்டை 1984 ஆகஸ்ட் முதல் அறிமுகப்படுத்தி, இளைஞர்களுக்கு இலவசமாக பயிற்சியும் அளித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகமண்டலம், முத்துக்காடு முதலிய இடங்களில் படகுப்போட்டிகளை நடத்தியுள்ளது. 1985-ல் அகில இந்திய படகுப்போட்டி முத்துக்காட்டில் நடந்தது. கூடிய விரைவில் ஆசிய, உலக படகுப்போட்டிகள் முத்துக்காட்டில் நடக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

## பாலர் பள்ளிகளை நெறிப்படுத்தல்

144—(* வினா எண் 3016) **திரு. குமரி அனந்தன்** :- மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலர் பள்ளிகளை நெறிப்படுத்தும் சட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலர் பள்ளிகளை முறைப் படுத்தும் செயற்குறிப்பு உள்ளது என்று சொன்னார்கள். 23—1—1968-ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த நேரத்தில் தமிழகத்தில், தமிழ் பயிற்சி மொழியாகவும் பாட மொழியாகவும் எல்லாக் கல்வி நிலையங்களிலும் கொண்டு வருவதற்கு ஐந்து ஆண்டுகளுக்குள்ளேயே முயற்சி செய்யப்படும் என்று ஒரு தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்றியிருக்கிறது. அது ஐந்து ஆண்டுகள் கழிந்தபிறகும் நிறைவேறவில்லையென்று சொன்னாலும் செயற்குறிப்பிலே இப்பொழுது இருப்பதிலே யாவது அவர்கள் உடனடியாக எல்லாக் கல்வி நிலையங்களிலும் பாலர் பள்ளி என்று சொல்கின்றபொழுது, 'டாடி' 'மம்மி' என்று சொல்லப்படுகின்ற நிலையில்லாமல், தமிழிலேயே பயிற்சி அளிப்பதற்குரிய செயற்குறிப்பை அரசு வெளிப்படுத்துமா ? 1968-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நனவாக்கு வதற்குச் செயற்குறிப்பிலே இடம் இருக்கிறதா ?



1987 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பாலர் பள்ளிகளைப் பொறுத்தவரைக்கும் நாட்டினுடைய மூலை முடுக்குகளில், ஒவ்வொரு பகுதிக்கும், குறிப்பாக பட்டிதொட்டிகளில் கூட நடக்கவேண்டிய அளவில் அவற்றை எப்படிச் சீரமைத்து அரசு உதவியோடு கொண்டு வருவது என்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழிலே கொண்டுவருவதை நாங்கள் வரவேற்கிறோம், ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், யாராவது ஆங்கிலமும் இந்தியும் படிக்க வேண்டுமென்று விரும்பினால், அதற்குத் தடை விதிக்காமல் இருக்க அமைச்சர் அவர்கள் வழி வகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் கொள்கையான இருமொழிக் கொள்கை, தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அரசு பழக்கத்தை விதைத்து ஒழுக்கத்தை அறுவடை செய்யக்கூடிய பல்வேறு முயற்சிகளிலே ஈடுபட்டு வருகிறது. சத்துணவுத் திட்டத்தின் மூலமாக நடைபெறக்கூடிய வகையிலே, பாலர் பள்ளிகளை நெறிப்படுத்தும் வகையில் சட்டம் கொண்டு வந்தால்தான் எதிர்காலத்தில் நல்ல ஒரு கல்வி முறை அமையும் என்பதுதான் எல்லோரும் சொல்வது. சிம்பிலே வளையாதது என்பதுதான் எல்லோரும் சொல்வது. கொம்பிலே வளையாது என்று சொல்வார்கள். ஆகவே, தமிழ் நாட்டினுடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றை எதிரொலிக்கக் கூடிய முறையில், இதற்கு மாறாக நடக்கக்கூடிய மற்ற பள்ளிக்கூடங்களை தடை செய்யக்கூடிய ஒரு நிலை அரசுக்கு இருக்கிறதா ? அதை மேலும் நெறிப்படுத்த என்னென்ன திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா ?

[1987 மார்ச் 24

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரி என்று சொல்லப்படுகின்ற பாலர் பள்ளிகளை எல்லாம் நெறிப்படுத்த மசோதா கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மசோதா கொண்டுவரப் பட்டவுடன் பிரச்னைகள் சீரமையும் என்று அரசு நம்புகிறது.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேகமாக ஆங்கில மோகம் பரவி வருகிற இன்றைய நிலையில் தமிழ் நாட்டின் பிஞ்சுக் குழந்தைகளெல்லாம் தங்களுடைய தாயோடும் தந்தையோடும் உறவு கொள்வது கூட தாய்மொழியி லன்றி ஆங்கில மொழியில் என்ற ஒரு தீய முறை நடைமுறையில் இருந்து வருகிறது. இந்தப் பேரபாயம் எதிர்காலத்தில் வளர்ந்து தமிழையே ஒழிக்கின்ற அளவிலே நிற்கும் என்பதை அரசு உணர்ந்து கட்டாயமாக ஆரம்பக் கல்வி கற்பிக்கின்ற பாலர் பள்ளிகளில், தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலேயும், தமிழில் கற்றுக் கொடுப்பதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழிக்கு ஆங்கிலத்தால் அபாயம் வரும் என்று அரசு கருதவில்லை. வரவும் செய்யாது. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டையும் சேர்த்து இருமொழிக் கொள்கை என்ற முறையில் அரசு கடைப்பிடித்து வருகிறது. ஆகவே இரண்டையும் ஊக்குவித்து வருகிறது. பாலர் பள்ளிகளில் தமிழ் மொழி பயிற்றுமொழியாக இருக்கவேண்டுமென்பதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

**திரு. இரா. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனுமதி பெற்றுத்தான் இந்த பாலர் பள்ளிகளைத் துவங்கவேண்டுமென்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு இது அதில் மேற்கொள்ளப்படும்.



1987 மார்ச் 24]

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலர் பள்ளிகளிலே எல்லாம் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருப்பதால் அரசுப் பள்ளிகள் முதல் கல்லூரிகள் வரை தமிழ்மொழி பின்னுக்குத் தள்ளப்பட்டு அங்கேயும் ஆங்கில மொழியே இருப்பதால் விரைவில் தமிழ்மொழி பயிற்றுமொழியாக இல்லாமல் போகக்கூடிய அபாயம் இருக்கிறதே, அதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. பாலர் பள்ளிகள் 3,500 தான் இருக்கின்றன. பாலர் பள்ளிகளினால் தமிழ்மொழி பயிற்றுமொழியாக இருப்பதற்கு அபாயம் எதுவும் ஏற்படாது. பாலர் பள்ளிகளிலே தமிழ் பயிற்றுமொழியாக இருக்கவேண்டு மென்று அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதைத்தான் ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளிலே மாணவர்கள் போய்ச் சேருகிறார்கள் என்று சொன்னால் வேறு வழியில்லாமல் வகை யில்லாமல்தான் போய்ச் சேருகிற நிலை இருக்கிறது. அரசுப் பள்ளிகளிலே பயில்கிறவர்கள் எல்லாம் இரண்டாம்தர மாணவர்கள் என்ற நிலைக்குத்தான் ஆளாகிறார்கள். 1985 ஆம் ஆண்டு அரசு புள்ளிவிவரப்படி தமிழகத்திலே 2,645 ஓராசிரியர் பள்ளிகளும், ஒன்பதாயிரம் ஈராசிரியர் பள்ளிகளும் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஈராசிரியர் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாகவும், ஓராசிரியர் பள்ளிகள் ஒரு ஆசிரியரும் இல்லாத பள்ளிகளாகவும் இயங்கி வருகிற நிலை அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓராசிரியர் பள்ளிகள் ஆங்காங்கே செம்மையாக நடந்து வருகின்றன. அங்கே இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கவேண்டுமென்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்து அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

[1987 மார்ச் 24

குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

145—(*வினா எண். 7081) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், வணிகவியல் பிரிவில் மேலும் சில இடங்கள் அதிகரிக்கவேண்டி விண்ணப்பம் ஏதேனும் இத்துறைக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் வணிகவியல் வகுப்பு 1983-84 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினால் 40 இடங்கள் மட்டும் அங்கீகரிக்கப்பட்டு தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் வணிகவியல் பட்ட வகுப்பிற்கு அதிக மாணவிகள் விண்ணப்பிப்பதால் மேலும் 20 இடங்களுக்குக் கல்லூரி கல்வித்துறை வழியாக பாரதிதாசன் பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கலைக்கல்லூரி ஆரம்பிப்பதற்கு இடம் கிடைக்காததால் இருக்கின்ற மகளிர் கல்லூரியில் அதிகமான கட்டடங்களைக் கட்டுவதற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசு ஏற்கெனவே பரிசீலித்து அவ்வப் போது நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்து வருகிறது.

**சிறப்பு நீதிபதிகள் அமர்த்தல்.**

146—(*வினா எண் 8697) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விசாரிக்கப்படாத பல வழக்குகளை விரைவில் விசாரித்து, தீர்ப்பு வழங்க "சிறப்பு நீதிபதிகள்" அமர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.



1987 மார்ச் 24]

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் எத்தனை வழக்குகள் இன்னும் தீர்ப்பு வழங்கப்படாமலும், விசாரிக்கப்படாமலும் இருக்கின்றன? அப்படி இருக்கின்ற வழக்குகளை விரைந்து எடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? நீதிமன்றங்களில் எல்லா வழக்குகளுக்கும் தடையாணை வாங்கிவிடுகிறார்கள். உதாரணமாக அரசே ஒரு காரியத்தை நடைமுறைப்படுத்தும்போதும் சரி, அல்லது மாநகராட்சி ஒரு காரியத்தை நடைமுறைப்படுத்தும் போதும் சரி அல்லது தனியார் வீட்டை காலிசெய்கின்ற நேரத்திலேயும் சரி தடையாணைகளை வாங்கிவந்துவிடுகிறார்கள். இதனால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. அதுபோன்ற நிலையை மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையாக இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதில் முதற்கண் வழக்குரைஞர்கள் அடிக்கடி வாய்தா வாங்குவதும் ஒரு பிரதியோகக் காரணமாக அமைந்து விடுகின்றது. நீதிமன்றங்கள் போதாமையும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. அவற்றை எல்லாம் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க, கடந்த காலத்தில் இல்லாத அளவுக்கு 1977-ல் இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்பு 108 நீதிமன்றங்கள் என்ற நிலையிலிருந்து, தற்போது கூடுதலாக 162 நீதிமன்றங்கள் பல்வேறு பகுதிகளில் துவக்கப்பட்டு, அதற்கு நீதிபதிகளை நியமித்து, அதன் காரணமாக வழக்குகளின் நிலுவையைக் குறைக்க அரசு தக்க நடவடிக்கையை எடுத்து வருகிறது. இதற்கு முன்னால் வழக்குகள் நிலுவையில் இருந்து வந்ததற்குக் காரணம் போதிய அரசு வழக்குரைஞர்கள் இல்லையென்ற குறையும் இருந்து வந்தது. அந்தக் குறையையும் போக்குவதற்காக, சிவில், கிரிமினல் ஆகிய பல்வேறு துறைகளிலும் 295 புதிய வழக்குரைஞர்கள் பல்வேறு மட்டங்களில் நியமிக்கப்பட்டு அதன் மூலமாகவும் வழக்குகளுடைய நிலுவையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒவ்வொரு நீதிபதியும் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் இவ்வளவு வழக்குகளை மாதாமாதம் முடிக்க வேண்டுமென்று ஒரு டார்கெட் பிக்ஸ் செய்து, உயர்நீதிமன்றம் நீதிபதிகளுக்குத் தக்க ஆணை பிறப்பித்து, நிலுவையைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுத்து

வருகிறது. இருப்பினும் இது பிரச்னையாகத் தொடர்ந்து இருந்து வருகிற காரணத்தால் இன்னும் அதிகமான நீதிமன்றங்களை உருவாக்குவதுதான் இதற்குப் பரிகாரம் என்ற முறையில் அதையும் அரசும் நீதிமன்றமும் கலந்து பரிசீலித்து வருகின்றன.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பைசல் ஆகாத வழக்குகள் என்பது ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. இந்த நிலையில் அரசு எதிர்காலத்தில் வழக்குகள் தேங்காமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகின்றது என்றாலும், ஆண்டின் 365 நாட்களில் 96 நாட்கள் சனி, ஞாயிறு விடுமுறை என்று போய் விடுகிறது. சிவில் நீதிமன்றங்களுடைய கோடை விடுமுறை 60 நாட்கள் போய்விடுகிறது. நீதிபதிகள் காஷுவல் லீவ் என்று 20 நாட்கள் போய் விடுகின்றன. அதைப் போல், அரசாங்க விடுமுறை என்று 15 நாட்கள் போய் விடுகின்றன. ஆக, ஆண்டின் 365 நாட்களில் 161 நாட்கள்தான் நீதிமன்றம் செயல்படுகிற ஒரு நிலையிருக்கிறது. பெரும்பாலும் கடந்த காலங்களில் ஆங்கிலேயர் ஆண்டபொழுது இங்கிலாந்து நாட்டு நீதிபதிகள் தங்கள் சொந்த ஊருக்குப் போகத்தான் இந்த சிவில் நீதிமன்றங்களுக்குக் கோடை விடுமுறை என்ற பழக்கமே உருவானது. தற்போது கூட கிரிமனல் நீதிமன்றங்களில் கோடைக்காலங்களிலும் பணியாற்றுகிறார்கள். எனவே அதே போல் பல்வேறு துறைகளில் முன்னோடியாக இருக்கிற இந்த மாநிலம், நீதித்துறையில் சிறப்படைவதற்கு இந்தக் கோடை விடுமுறையை சிவில் நீதிமன்றங்களுக்கு ரத்து செய்வதற்கும் வாரத்தில் ஆறு நாட்கள் வேலை நாட்களாக நீதிமன்றத்தில் ஆக்குவதற்கும் அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி, பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனை நல்ல ஆலோசனை. இதை ஏற்கனவே அரசு ஆய்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1983 ஆம் ஆண்டே, நீதிமன்றங்களைப் பொறுத்தவரைக்கும் இது போன்று வெள்ளைக்காரன் ஆட்சிக்காலத்தில் அளிக்கப்பட்ட விடுமுறை நமக்கு ஒவ்வாத ஒன்று. வழக்குகள் பல்லாண்டுகளாகத் தேங்க நிலையடைவதற்கு, இதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதால்



இதை மாற்ற வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திற்குத் தாக்கீது தெரிவித்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்றம் அதற்கு இன்னும் இசைவு தெரிவிக்கவில்லை. தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். உயர்நீதிமன்றத்தினுடைய இசைவு பெற்றவுடன் தக்க நடவடிக்கையை அரசு உடனே எடுக்கும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாகப் புதிதாக நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி எத்தனை நீதிமன்றங்கள் அமைக்க இருக்கிறோம் என்ற விவரத்தையும் ஒவ்வொரு வழக்கிலும் தடை ஆணை வாங்குவதற்கு, வாங்கிய தடையாணையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு ஏற்ற வகையில், சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, 162 புதிய நீதிமன்றங்களை நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கிற வழக்குகளைக் குறைக்கவும், மக்களுக்கு உதவிகரமாகவும் இருக்க அரசு ஏற்கனவே துவக்கியிருப்பதை நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். தடையாணையைப் பொறுத்தவரைக்கும் இதிலே ஒரு பிரச்னை Discretionary power s vested under law with the Judiciary அந்த நிலையிலே அவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள். பொதுமக்களின் பிரச்னை, குறிப்பாக, அணை கட்டுதல், அதுபோன்று ஏழைகளுக்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்வது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்ட தருகின்ற அளவில், இதுபோன்ற வழக்குகளில் கூட நீதிமன்றம் அவ்வப்போது தடை ஆணை விதித்து, அந்தத் தடையாணையைப் போக்குவதற்காக, நீக்குவதற்காக அரசு முயல்கிற பொழுது, The stay is being made absolute, என்ற முறையிலிருந்து, நீதிமன்றத்திற்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் செய்கின்ற காரணத்தால், பொது மக்களுக்கு இன்னலும் இடர்ப்பாடும் ஏற்படுகிறது. இதை உயர் நீதிமன்றத்திற்கு அரசு பலமுறை தெரிவித்து இருக்கிறது. அகில இந்திய அளவிலே நீதிபதிகள் மாநாட்டிலும் கூட பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் கூட இந்த முறை மாற வேண்டும், பொதுமக்களின் நலன் கருதி எடுக்கப்படும்

[1987 மார்ச் 24

நடவடிக்கைகளுக்கு அரசுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் நீதிபதிகள் தடை ஆணை வழங்குவது முறை அல்ல; அதற்கு நீதிமன்றங்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வந்தாலொழிய இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாத நிலைமை இருக்கிறது. நீதிமன்றங்கள் மத்தியிலே மக்களின் நலன் கருதி, மன மாற்றம் ஏற்படுகிறபொழுது, இந்தப் பிரச்னைக்கு ஒரு சுமுக முடிவு ஏற்படும் என்று அரசு நினைக்கிறது.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய பாராளுமன்றத்தில் நேற்றையதினம் 20 நீதிபதிகளை, அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட லஞ்ச ஊழல் மற்றும் இதர ஊழல்கள் சம்பந்தமாக வழக்குகளை விசாரிப்பதற்கு நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு மசோதா தாக்கல் ஆகியிருக்கிறது. அதேபோல் தமிழகத்திலும் அரசு ஊழியர்களின் வழக்குகளை தனிப்பட்ட முறையில் விரைவுப் படுத்தி விசாரிப்பதற்கு தனியான நீதிபதிகளை நியமிக்க சிறப்பான மசோதாவினை தாக்கல் செய்ய அரசு முன்வருமா? அதன் மீது தக்க நடவடிக்கையை விரைந்து எடுக்க அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதற்கு தனியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது. அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிரிபுனல் விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. அது அந்த வழக்குகளை தனியாகப் பரிசீலிக்கும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதமாக இருப்பதற்கு அரசுக்கு எதிராக தனியார் போடும் வழக்குகளில் கூட அரசுக்கு முன் அறிவிப்பு கொடுக்காமல் கூட நீதிமன்றங்கள் தடையை வழங்குவது ஒரு காரணமாக இருக்கிறதா? பல சந்தர்ப்பங்களில் அரசு வழக்கறிஞர்கள், அரசுக்கு எதிரான வழக்குகளில் எக்ஸ் பார்ட்டி டெஸிஷன் கொடுப்பதற்கு ஆதரவாக, ஆஜராகாமல் இருப்பதன் காரணமாகக்கூட வழக்குகள் தாமதமாக இருப்பதற்கு காரணம் என்று நான் அறிகிறேன். ஆகவே அப்படிப்பட்ட நேரங்களில் அரசுக்கு எதிராக எக்ஸ் பார்ட்டி டெஸிஷனுக்குக்



1987 மார்ச் 24]

காரணமாக இருக்கின்ற அந்த அரசு வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் தடை ஆணை வழங்குவது பெரும்பான்மையாக அகில இந்திய அளவில் வழக்கமாக இருந்து வருகிறது. எல்லா மாநிலங்களும் உயர்நீதி மன்றங்களோடு இது குறித்து தீவிரமாக பேசி வருகிறது. இன்றைக்கு அந்தத் தடை ஆணையை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறபோது பல நேரங்களில் ஏற்கனவே நான் சொன்னது போல் the stay is being made absolute என்ற முறையில் அதையும் ஊர்ஜிதம் செய்து விடுகிறார்கள். இதைத்தான் அகில இந்திய அளவில் பாரதப் பிரதமர் அவர்கள் நீதிபதிகள் மாநாட்டில் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். சட்டத்திருத்தம் கூட கொண்டு வரவேண்டும் என்று அனைத்து மாநில அரசுகளும் மத்திய அரசிடம் இது குறித்து வற்புறுத்தி வந்திருக்கின்றன. Ex-parte order given because of the absence of Government advocate. என்ற முறையில் அப்படி எல்லாம் நடந்ததாக தகவல் இதுவரையில் இல்லை. அப்படி ஏதேனும் தகவல் இருந்தால் அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிமன்றங்கள் அதிகப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். இப்போதே பல நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். 77 நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லை என்று அறிகிறேன். உதாரணமாக சாத்தூரில் சென்ற ஒரு வருடமாக நீதிபதி இல்லாமல் இப்போது தான் 2 மாதத்திற்கு முன்பு போட்டு இருக்கிறார்கள். அதேபோல் விருதுநகரில் கடந்த 8 மாதங்களாக நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறது. இதை எல்லாம் போக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

அது தவிர கேள்வி எண் 143 எடுக்கப்படாமல் இருக்கிறது. இதை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண் 143 எடுக்கப்பட்டது. உங்களுக்குச் சரியாகக் கவனம் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் நீதிமன்றங்களில் நீதிபதிகள் இடம் வந்து காலியாக இருக்கிறது என்பது குறித்து இந்த அவையில் பல முறை விவாதிக்கப்பட்டு இருக்கிறது. Temporary Sub-Magistrates. உயர்நீதிமன்றத்தில், உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டவர்கள் இதுகாறும் தற்காலிகமாக இருந்து கொண்டு அவர்களுடைய Conduct and performance. எல்லாம் எக்ஸ்சலண்ட் என்ற முறையில் உயர்நீதிமன்றத்தினுடைய Portfolio, Reporting Judges எல்லாம் தீர்ப்பினை வழங்கியிருக்கிற காரணத்தால் அவர்களை நீக்கவும் முடியாமல் ஒரு நிலை ஏற்பட்டு உயர்நீதிமன்றத்தால் இந்தத் தாமதம் ஏற்பட்டது. அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று உச்ச நீதிமன்றத்தில் Temporary Sub-Magistrates. வெற்றி பெற்றுவிட்டார்கள். உடனே தற்போது சர்வீஸ் கமிஷன் மூலமாக இந்தப் பதவிகளை உடனடியாக நிரப்பவேண்டும் என்று அரசு உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெற்ற உடன் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. Names are being called for by the Service Commission. இண்டர்வியூ நடக்க இருக்கிறது விரைவில் மீதி இருக்கின்ற இடங்கள் நிரப்பப்படும். சப்-மெஜஸ்ட்டிரேட் என்ற முறையில் 14 இடங்கள்தான் காலியாக இருக்கின்றன.

**திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, ஒன்றாக இருந்த இராமநாதபுரம் மாவட்டத்தை 3 ஆகப் பிரித்து விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய இடங்கள் தலைநகரங்களாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. அப்படி ஆக்கப்பட்டு இருந்தும் அதனுடைய மாவட்ட செசன்ஸ் மற்றுமுள்ள நீதிமன்றங்கள் எல்லாம் மதுரையில் தான் இருந்து வருகின்றன. ஆகவே புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் தலைநகரங்களில் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1987 மார்ச் 24]

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் நீதிமன்றம் நிறுவ அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துவிட்டது. விரைவிலே அது துவக்கப்படவிருக்கிறது. சிவகெங்கையா, காரைக்குடியா என்ற பிரச்சினை எழுந்து, வழக்கறிஞர்கள் மத்தியிலே இது ஒரு போராட்டமாக எழுப்பப்பட்டு, சிவகெங்கையில் ஆரம்பிக்கலாம் என்று ஒரு பிரிவினரும், காரைக்குடியில் ஆரம்பிக்கலாம் என்று ஒரு பிரிவினரும், மனுக்கள் கொடுத்து, உயர்நீதிமன்றம் ஆய்ந்து வருகிறது. விரைவிலே இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திலே கூடுதலான நீதிபதிகளை நியமிக்க ஒரு செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புவதோடு, ஜாதி பிரதிநிதித்துவம் உயர்நீதிமன்ற நியமனத்தில் கொடுக்கப்படுவது என்ற நியதி கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தைப் பொறுத்தவரைக்கும், தகுதியின் அடிப்படையில்தான் அது நியமிக்கப்படுகிறது. உயர்நீதிமன்றத்தில் காலியுள்ள இடங்களுக்கு நீதிபதிகளை நியமிப்பதற்கு உயர்நீதிமன்றமும், தமிழக அரசும் மத்திய அரசுக்கு பரிந்துரைகள் அனுப்பியிருக்கின்றன.

**மயிலாடுதுறையில் கூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றம்.**

**147—(*வினா எண் 9779) திரு. மு. தங்கமணி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறையில் கூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்தித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். இதைப் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1987 மார்ச் 24

**திரு. மு. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கூறுகின்ற பொழுது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மயிலாடுதுறை ஒரு டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ். அதிலே நன்னிலம், மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி போன்ற தாலுக்காக்களிலே வழக்குகள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. வந்து கொண்டிருக்கின்ற வழக்குகளை உடனடியாக பைசல் செய்ய முடியாத நிலையில் வழக்குகள் ஆயிரக்கணக்கில் தேங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே துரிதமாக நடவடிக்கை எடுத்து, வருகிற ஆண்டிலாவது கூடுதலான நீதிமன்றங்களை அமைத்துத் தந்து, அத்தோடு நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்குப் போதிய இருக்கைகள் இல்லாத காரணத்தினால், இடவசதியும், குடிதண்ணீர் இல்லாத காரணத்தினால், குடிதண்ணீர் வசதியும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் கூறியவாறு அங்கே ஒரு "First Class Judicial நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவிலே அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

## கோவை சட்டக் கல்லூரியில் சட்ட முதுகலை வகுப்பு தொடங்குதல்.

148—(* வினா எண் 10273) **திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சட்டக்கல்லூரியில் சட்ட முதுகலை வகுப்பு (Master of Law) தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினா எழவில்லை.



1987 மார்ச் 24]

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, புதிய வகுப்பு ஆரம்பிக்கிறது என்பது ஒருபக்கம் இருக்க, வகுப்புகளை ஒழுங்காக நடத்துவதற்கு அங்கே கட்டிட வசதி இல்லை என்பதையும் வாடகைக் கட்டிடத்தில் அங்கு இருக்கிற வகுப்புக்களை நடத்தமுடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இதே சட்டமன்றத்தில் பல தடவை தெரிவித்திருக்கிறேன். புதிய கட்டிடமே கட்டப் போவதாக எனக்கு அப்போது பதிலும் சொல்லப்பட்டது. எப்போது அந்தக் கட்டிடம் கட்டப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் படிப்பதற்கு இடவசதிதான் முக்கியம். சொந்தக் கட்டிடமா, வாடகைக் கட்டிடமா என்பது பிரச்சினை அல்ல. வாடகைக் கட்டிடம் போதிய அளவு கிடைக்குமானால், சொந்தக் கட்டிடத்திற்காக, அரசு பல இலட்சக்கணக்கான ரூபாயை செலவு செய்வதிலிருந்து விடுபட்டு, அந்தப் பணத்தை மிச்சம் செய்து, வேறு நல்ல பணிகளுக்கு செலவழிக்க முடியும். வாடகைக்கே வேறு கட்டிடம், போதிய அளவு அதிக இடம் கிடைக்குமா என்று அரசு பார்க்கச் சொல்லியிருக்கிறது. நிதித் தட்டுப்பாடு காரணமாக சொந்தக் கட்டிடம் கட்ட தற்போது இயலாது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பணிகள் போன்றவற்றிலே பணியாற்றுகின்றவர்கள், இப்படி முதுகலைப் பட்டங்களைக் கல்லூரிக்குச் செல்லாமல் நேரடியாக எழுதுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே இதுபோன்று, சட்டத்துறையிலே, சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், நீதித்துறையில் பணியாற்றுகின்றவர்கள் இப்படி சட்டத்தில் முதுகலைப் பட்டங்களை கல்லூரிக்குச் செல்லாமல் சில குறிப்பிட்ட காலங்களிலே நேரடியாக பல்கலைக்கழகத்தில், தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'லேபாரட்டரி அண்டு எக்விப்மெண்ட்ஸ்' என்ற சேவைகள் இல்லாத அளவிற்குப் பெறக் கூடிய பட்டங்

களைப் பெறுவதற்கு ஏற்கனவே சென்னைப் பல்கலைக்கழகத்திலும், மதுரை—காமராசர் பல்கலைக் கழகத்திலும், அதற்கான வசதிகள் இருந்து வருகின்றன. எந்தெந்தப் பட்டப் படிப்பு என்பதனைப் பொறுத்து, அதற்கான முடிவு எடுக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த பட்டப் படிப்பு என்று தனியாகச் சொல்வார்களேயானால், அது குறித்து அரசு ஆராயும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதியதாக சட்டக் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசம் உள்ளதா? அப்படி ஆரம்பிக்கப்படுமானால், (Professional Courses) கல்லூரிகள் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை தந்து, அங்கே ஒரு சட்டக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும், இருக்கின்ற சட்டக் கல்லூரிகளே அதிகம் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. புதிய சட்டக் கல்லூரி அமைக்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

**திரு. ஆ. நடராசன்:** தலைவர் அவர்களே சட்டக் கல்லூரி வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. அடுத்த ஆண்டாவது புதிய கட்டிடம் எழுப்ப அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல நிதித் தட்டுப்பாடு காரணமாக அதை தற்போது எடுக்க இயலாத நிலை இருக்கிறது. இன்னும் வாடகைக்கு நல்ல இடம் தேடும்படி அரசு அதிகாரிகளைப் பணித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 149 முதல் 151 முடிய மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.



**மானாமதுரை—கிருஷ்ணராஜபுரத்தில் அரிசனங்களுக்கு செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைத்தல்.**

152—(* வினா எண் 10189) **திரு. க. பாரமலை:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை—கிருஷ்ணராஜபுரத்தில் வசிக்கும் அரிசனங்களுக்காக கதர்த் துறை மூலம் செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த சங்கம் எப்போது செயல்படத் துவங்கும்?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, கேள்விக்கு இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு விசயலட்சுமி அவர்கள் அமைச்சராக இருந்தபோது அவர்களிடம் நானே இந்த விண்ணப்பத்தை கொடுத்திருக்கிறேன். பலதடவை அது சம்பந்தமாக பரமக்குடி உதவி இயக்குநர் விசாரித்து அரசுக்கு அறிக்கை அனுப்பி இருப்பதாக எனக்கு தகவல் அனுப்பினார். மானாமதுரை மட்பாண்டம், ஓட்டு தொழில்களில் மிகச் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. அங்கிருக்கின்ற மண், இந்தத் தொழிலுக்கு ஏற்ற மண் என்பதையும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரையில் ஏற்கனவே ஒரு செங்கல் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. அந்த எல்லைக்குள்தான் கிருஷ்ணராஜபுரம் சேர்கிறது. அப்படி ஒரே எல்லைக்குள் கூட்டுறவுச் சங்க சட்டத்தின்படி இன்னொரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிப்பதற்கு இடம் இல்லை. ஆகவே அந்த ஆதிதிராவிட மக்கள் இந்தச் சங்கத்திலேயே உறுப்பினர்களாக சேர்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

**திரு. க. பாரமலை :** தலைவர் அவர்களே, ஒரே எல்லைக்குள் இரண்டு சங்கங்கள் இருக்கலாம். அதற்கு பைலாவை திருத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சங்கம் அமைப்பதற்கு—அவ்வாறு பல சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்த வகையில் பைலாவை அமெண்ட் செய்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சங்கம் அமைப்பதற்கு—அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, இது ஒரே பஞ்சாயத்துக்குள்ளே வருகிறது. பஞ்சாயத்து என்பதே மிகக் குறுகிய ஒரு வட்டம்தான். அந்த வட்டத்திற்குள் இன்னொரு கூட்டுறவுச் சங்கம் துவங்குவது என்பது வியாபாரத்திற்கும் அவ்வளவு ஏற்றதாக இருக்காது என்பது என் கருத்து.

## சத்துணவு மையம்.

153—(* வினா எண் 10635) **திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள எந்தச் சத்துணவு மையத்திலாவது ஆதி திராவிடர் குழந்தைகளை தனித்து பிரித்து வைத்து உணவு வழங்கப்படுகிறதாக ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள எந்தச் சத்துணவு மையத்திலும் இதுபோன்ற பிரச்சனை எழவில்லை.

## உடல் ஊனமுற்றோருக்கு சத்துணவுக் கூடங்களில் பணிபுரிய முன்னுரிமை வழங்கல்.

154—(* வினா எண் 12195) **திரு. ஆ. சந்திரசேகரன் :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுக் கூடங்களில் பணிபுரிவதற்கு உடல் ஊன முற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்ற விதவைப் பெண் களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.



**திரு. ஆ. சந்திரசேகரன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசிலே பல்வேறு துறைகளிலே ஊனம் உற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதைப் போல நம்முடைய சத்துணவுக் கூடங் களிலும் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. ஆ. சந்திரசேகரன் :** தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் சத்துணவுக் கூடங்கள் மேல் கூரை இல்லாமல் இருப்பதைத் தவிர்த்து நிரந்தரக் கட்டிடங்கள் கட்டுவதற்கு உலக வங்கியின் நிதி உதவியை பெற்று நிறைவேற்றிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் அதுபற்றிய பதில் சொல்லப்படும்.

**திரு. துரை அன்பரசன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பயன்படுத்துகின்ற காய்கறிகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் வாங்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறதா ? அப்படி ஆணை பிறப்பித்தும் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக காய்கறிகள் வாங்காத அமைப்பாளர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் இதுபற்றி விளக்கமாக பதில் சொல்லப்படும்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய "வீட்டுக்கு ஒருவருக்கு வேலை" வழங்கும் திட்டத்தின் மூலமாக, அந்தச் சத்துணவு மையங்களுக்கு அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு வருவதாக அறிகிறேன். ஆனால் பல இடங்களில்

கணவன் ஆசிரியராக இருக்கும் இடத்திலே மனைவி அமைப்பாளராக பணிபுரிகிற வகையில் அவர்கள் பணியைப் பெற்றிருக்கிறார்கள். அவைகளைக் கண்டறிந்து, வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் சத்துணவு அமைப்பாளர் பணிக்கு நியமிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற அந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டதற்குப் பிறகு அமைக்கப்படுகின்ற எல்லா சத்துணவுக் கூடங்களிலும் அந்த வழிமுறைகள் பின்பற்றப் படுகின்றன. அதற்குப் பிறகு எங்கேயாவது வீட்டிலே ஏற்கனவே பணியிலே இருக்கின்றவர்கள் மற்றவர்களுக்கு பணி தந்திருப் பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொல்வார் களானால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரையில், சத்துணவுக் கூடங்களிலே பணியாற்றுவதற்கு, ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படுகிறது என்ற விவரத்தைக் கூறினார்கள். தமிழகத்திலே எத்தனை சத்துணவுக் கூடங்களிலே, எவ்வளவு பேருக்கு, ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அரசு ஏற்படுத்தித் தந்து இருக்கிறது என்ற அந்த விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்விபோட்டால் பதில் சொல்லப்படும்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களிலே பணிபுரிகின்ற ஆயாக் களுக்கு ரூபாய் 300 பொங்கல் பரிசாக தமிழக அரசு வழங்கியது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், சில இடங்களில் மட்டும் அந்த ரூபாய் 300 வழங்கப்பட்டு, சில இடங்களில் அதிகாரிகள் நிறுத்திவைத்துள்ளார்கள். இதுகுறித்து





அமைச்சரவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, வெகு விரைவில் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எல்லா இடத்திலேயும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில இடங்களில் கொடுக்கவில்லை என்ற புகார்கள் வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. மேலும் இதுபோன்ற தவறுகள் எங்கேயாவது நடந்திருக்கின்றன என்று சுட்டிக் காட்டினால் அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் தான், சத்துணவு மையங்களில் அரிஜன மக்களுக்கும், மலைஜாதி மக்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. அந்தச் சத்துணவு மையங்களிலே வேலை செய்கின்ற அரிஜன மக்கள் மீது, அங்கே வேலை புரியும் மற்ற ஜாதியினர், வீணாகக் குற்றம்சாட்டி அந்த சத்துணவு அமைப்பாளர்கள் மீதும், சமையல் செய்கின்ற ஆயாக்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து, அதைத் தடுக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் வந்தவுடன் உரிய அதிகாரிகளை அனுப்பி அங்கே விசாரணை செய்து, அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றனவா என்று பார்த்துத்தான் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இதுவரையில் ஜாதியின் அடிப்படையில் எங்கேயும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை; தவறுகள் செய்ததற் காகத்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு ஆரம்பத்திலே எடுக்கப் பட்ட காப்பாளர்கள் நியமனத்தில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்கள் தான் எடுத்துக்கொள்ளப்படுவர் என்ற விதியை அரசு அறிவித்ததால், அந்த நேரத்தில் கணவனை இழந்த தாய்மார்கள், அதாவது கைம்பெண்ணாக இருக்கக்கூடியவர் களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறமுடியாமல் இருந்ததனால்,

[1987 மார்ச் 24

நிறையப் பேருக்கு வேலை கிடைக்கவில்லை. இப்போது எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே வெற்றி பெறாதவர்களுக்கும் அதிலே உரிமை உண்டு; அவர்களை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில், அதாவது கணவனை இழந்த தாய்மார்கள், இப்போது வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு, எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு மற்ற வேலைகளுக்கு சத்துணவிலேயிருந்து போனவர்கள் இடத்தினை, அது எத்தனை இடம் என்று தமிழ்நாடு அளவில் உடனடியாக கணக்கெடுத்து, அது மாதிரி கணவனால் கைவிடப்பட்டவர்கள், கணவனை இழந்த தாய்மார்கள் ஆகியோருக்கு முன்னுரிமை, எந்த ஒரு கட்டுப்பாடும் விதிக்காமல் அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விதவைகளாக இருக்கின்றவர்களுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்கள் வேலையிலே அமர்த்திக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால் அப்படி சத்துணவுக் கூடத்திலே பணிக்கு அமர்த்தப்படுகிறபோது, மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே இருக்கவேண்டும் என்ற சட்டதிட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, மூன்று கிலோ மீட்டருக்கு மேலே இருந்தால், அந்த விதியைத் தளர்த்தி அவர்களை அந்தப் பொறுப்பிலே நியமிப்பது என்பது, அவர்களால் வந்து போகின்ற செலவை அந்த சம்பளத்தில் தாங்கமுடியாது என்ற காரணத்தினால், அப்படிப்பட்ட சலுகைகளை வழங்க இயலாது. தற்போது நம்முடைய குழந்தை நல மையங்களில், பின்னால் நர்சரி பள்ளிக்கூடங்களாக மாறவேண்டும் என்ற எண்ணத்தை வைத்து, எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்களாக இருக்கவேண்டும் என்ற சட்டதிட்டத்தை நாம் வைத்து அந்தப் பணியிலே தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற சத்துணவு மையங்களுக்கு, அத்தகைய முன்னுரிமை வழங்கி, எஸ்.எஸ்.எல்.சி.-யில் பெயில் ஆகியிருந்தாலும், தற்போது அவர்களை அமைப்பாளர்களாக நியமித்து வருகிறோம்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள்



1987 மார்ச் 24]

...றினார்கள், அதை வரவேற்கிறேன். இருந்தாலும்கூட உடல் ஊனமுற்றவர்களுக்கு சத்துணவுக் கூடங்களில் எந்தமாதிரி வேலைகளை, குறிப்பாக, சமையல் வேலைகளா, பாத்திரங்கள் கழுவுவதா அல்லது பரிமாறுவதா என்பதை அமைச்சர் அவர்கள் கூற வேண்டும். ஏனென்றால் இத்தகைய வேலைகளை உடல் ஊனமுற்றவர்களால் சரிவர செய்ய முடியாது என்று நினைக்கிறேன். ஆகவே இதைத் தெளிவாக அரசு விளக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு மாற்று கால், கை வைக்கின்ற அலுவலகத்தில் மிகப் பெரிய அளவில் அவர்கள் என்னென்ன பணிகளை எப்படி எப்படி யெல்லாம் செய்கிறார்கள் என்பதை நேற்று மாலையிலே செய்து காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் போய் பார்த்திருந்தால் உடல் ஊனமுற்றவர்கள் எந்தப் பணியையும் செய்வதில் சளைத்தவர்களாக இல்லை என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். சமீபத்தில்கூட மைய அரசு இரு கண்ணும் இல்லாத ஒரு ஸ்டெனோகிராபர் தம்முடைய வங்கியிலே பணியாற்றியதற்கு பரிசை வழங்கியது, அவர் மிகத் திறமையாக பணியாற்றியதற்காக. கண் இல்லாதவர் அந்தப் பணியை செய்திருக்கிறார். ஆகவே சமையல்காரர் போன்றவர்களுக்கு உதவியாக இருப்பதற்கு உதவியாளர் பணிக்கு நாம் ஊனமுற்றவர்களை எடுப்பதால் எந்தவிதமான ஐயப்பாடும் வருவதற்கு இடமில்லை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடல் ஊனமுற்றவர்களை நியமிப்பதில் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள் மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கவேண்டுமென்று. ஆனால் Something is better than nothing என்று சொல்வார்கள். அந்த வகையில் வருவது கொஞ்ச வருமானமாக இருந்தாலும் மிகமிக பிரயோசனம் என்ற வகையிலே இந்த ஊனமுற்றவர் களுக்கு அந்தப் பகுதியிலேதான் போஸ்டிங் கொடுக்கப்படும் என்ற விதியைத் தளர்த்தி வேலை கொடுப்பதற்கும், மேலும் புதிதாக ஆரம்பிக்கப்படும் சத்துணவு மையங்களில் மற்றும்

[1987 மார்ச் 24

சத்துணவுக் கூடங்களில் வேலை காலியாகின்ற இடங்களிலும் அவர்களைத்தான் போடவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடல் ஊனமுற்றவர்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் மூன்று கிலோ மீட்டருக்கு மேலே இருந்து எப்படி வர முடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள விதிகளின்படி சத்துணவுக் கூடங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அங்கு இருப்பை சரிபார்க்கக்கூடிய அதிகாரம் வழங்கப்படவில்லை. சத்துணவுக் கூடங்கள் செம்மையாக நடைபெற சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு இருப்பை சரிபார்க்கக்கூடிய அதிகாரத்தை வழங்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற இருப்பை பரிசீலிக்க அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களே போதுமானதாக இருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் அந்தப் பரிசீலனைக்கு கொண்டு வந்துவிட்டால் அங்கு நடைபெறுகின்ற நித்தியப்படி வேலைகள் தடங்கலாகும் என்பது தான் அரசினுடைய கருத்து.

### காவிரி ஆற்றில் வெள்ள அரிப்பு

**77—(*வினா எண் 9149) திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றின் இருகரைகளிலும் வருடா வருடம் அரிப்பு ஏற்பட்டு வெள்ளக் காலங்களில் உடைப்பு ஏற்படுவது குறித்து அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?



1987 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) காவிரி ஆற்றில் அபரிமிதமான வெள்ளம் வரும்போது கரைகளில் அரிப்பு, மற்றும் உடைப்புகள் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் பாராமரிப்பு நிதி ஒதுக்கீடுக்கு ஏற்ப கரைகள் கோடையில் செப்பனிடப்படுகின்றன.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் காவிரியாற்றினுடைய கரைகளில் அரிப்பு ஏற்பட்டு ஆண்டுதோறும் அங்கு பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டு பயிர்கள் பாழ்படுவதோடு, சிறிய கிராமங்கள்கூட பாழ்படுகின்ற நிலை இருக்கிறது. இதனால் ஆண்டுக்கு ஒதுக்கப்படுகின்ற அந்த நிதி குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே அதை செய்ய முடியாமல் இருக்கிற நிலையைத் தவிர்க்க ஒரு விரைவு திட்டத்தை தீட்டி உடனடியான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். காவிரி-வெண்ணாறு பகுதிக்கு வருடத்துக்கு 170 இலட்சம் வரைக்கும் இப்போது செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இதேபோன்று காவிரி-மேட்டூர் பகுதி கல்லணை கால்வாய்க்கு ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாயை அந்தப் பணிகளுக்காக செலவு செய்து கொண்டிருக்கிறோம். இப்போது 'காவிரி மாடர்னைசேஷன்' என்று சொல்லக்கூடிய அந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டு வருகிறது. அப்படி வருகின்ற நேரத்தில் ஒரு நிரந்தரமான பரிகாரம் ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவிரி-வெண்ணாறு-கல்லணைக் கால்வாய்ப் பகுதிக்கு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வாறு ஒதுக்கியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் கல்லணைக் கால்வாய், கல்லணை எல்லையிலிருந்து பிரிக்கப்பட்டு ஏறத்தாழ

[1987 மார்ச் 24

150 கிலோ மீட்டர் நீளம் வரை தஞ்சை வட்டம், ஒரத்தநாடு, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, பேராவூரணி மற்றும் புதுக்கோட்டைப் பகுதியான அறந்தாங்கி வட்டம் போன்ற எல்லா வட்டங்களிலும் உள்ள விவசாயிகள் அதிகமான உணவு உற்பத்தி செய்கிற வகையில் பயன்பட்டு வருகிற காரணத்தால் அந்தக் கல்லணைக் கால்வாய்க்காக என்று அதாவது அந்தப் பகுதி மக்களுக்கு பயன் தருகிற வகையில் ஒரு விரிவான திட்டத்தைத் தீட்டி செயல்படுத்த அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்வதோடு இந்தத் திட்டங்களுக்கெல்லாம் உலக வங்கியினுடைய கடன் உதவியைப் பெற்றுத்தான் செய்யும் நிலை இருப்பதாக நான் அறிவதால் அதுதான் இந்தத் திட்டங்களுக்குத் தடையாக இருக்கிறதோ என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் காவிரி-கல்லணைப் பகுதியை மேம்பாடு செய்யும் முயற்சியை ஆராய்ந்து பார்த்து வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதே நேரத்தில் காவிரி மாடர்னைசேஷன் பிரச்சினையில் நமக்கும் கருநாடக மாநிலத்திற்கும் இருக்கிற பிரச்சினை காரணமாக இந்தத் திட்டத்திற்கு கருநாடக அரசும் கிளியரன்ஸ் கொடுக்க வேண்டும். ஆனால் அப்படி அவர்கள் கிளியரன்ஸ் கொடுக்காமல் இருப்பதன் காரணமாக அந்தத் திட்டம் அரைகுறையாக இருக்கிறது. உலக வங்கி ஒப்புக் கொண்டாலும்கூட அந்தத் திட்டத்தை தற்போது நிறைவேற்ற முடியாத நிலைமைதான் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட தொகை முழுவதும் அநேகமாக நெய்வேலி-காட்டாமணி செடிகள் வெட்டும் திட்டம் போன்ற பயனற்ற காரியங்களுக்குத்தான் பயன்படுகிறது என்று எண்ணுகிறேன். உதாரணமாக பட்டீஸ்வரம் கிராமத்தில் குடமுருட்டி ஆற்றின் கரையை வெட்டி எடுத்துச் சென்று பலர் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைக் குறித்து அங்கே உள்ள லஸ்கர் மற்றும் அதிகாரிகளிடம் சொல்லியும் கூட அவர்கள் இதைத் தடுப்பதில்லை. காவிரியில் தற்போது தண்ணீர் வராத நிலையில் கரையை வெட்டிக் [illegible]



1987 மார்ச் 24]

மாறாக காவிரி மற்றும் அதன் உப நதிகளில் தண்ணீர் வந்தால் கிராமங்கள் எல்லாம் இதன் காரணமாக வெள்ளக்காடாக மாறி விடும். தற்போது திருமலைராயன் ஆற்றின் கரையில் ஆத்திக்குளம் கிராமம் அருகே ½ அடி அல்லது ¾ அடி தான் கரை இருக்கிறது. அந்த அளவுக்கு அந்தப் பகுதியில் கரை அரிக்கப் பட்டுள்ளது. எனவே அத்தகைய கரைகளை எல்லாம் அரசு பலப் படுத்த முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தவறுகள் எங்காவது நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதைப் போலவே உடைப்பு ஏற்பட்ட கரைகளைப் பலப்படுத்தும் முயற்சிகளை நாங்கள் எடுப்போம் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. துரை கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது வெள்ளக் காலங்களில் ஏற்படுகிற கரை அரிப்புகளைத் தடுப்பதற்கு நிரந்தரமான பரிகாரம் மேற்கொள்ளுகிறோம் என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சையை ஒட்டிய நகர்ப்புறத்தில் கடந்த காலத்தில் வெண்ணாறு ஆற்றின் பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டது. அதனால் பஸ் போக்குவரத்தைக்கூட விட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. மீறி விட்டாலும் பஸ் ஆற்றில் விழுகிற நிலைமை ஏற்பட்டது. எனவே இத்தகைய நிலைமைகள் வெண்ணாறு கரையோரத்தில் இருப்பதைத் தடுத்து நிறுத்திட பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையான கரைகளை பலப்படுத்தும் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு நிதிநிலைக்கு ஏற்றாற்போல் எடுத்துச் செயல்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ரூ. 170 லட்சம் ஆற்று உடைப்புகளை அடைக்கச் செலவிடுவதாகச் சொன்னாகள். ஒவ்வொரு ஆண்டும் தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் துணை ஆறுகளான முல்லையாறு, பாமணியாறு, கோரையாறு, ஹரிச்சந்திரா நதி போன்ற பெரிய ஆறுகளில் வெள்ளக் காலங்களில் உடைப்புகள் ஏற்பட்டு அதன் காரணமாக விவசாயமே பாதிக்கப்படுவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். இதற்காகத்தான் பெரும் அளவுக்குப் பணம் செலவழிக்கப்படுகிறது. அப்படி பணத்தைச் செலவழிக்கும்போது அந்தந்த ஆறுகளுக்குட்பட்ட விவசாயி களையும் கொண்ட அமைப்புகளோடு வேலைகளைத் துவக்கி நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் கருநாடக அரசு நமது மாநிலத்தில் செய்யக் கூடிய இத்தகைய வேலைகளுக்கெல்லாம்கூட தடை செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் கருநாடக மாநிலத்தில் நமக்கு வருகிற தண்ணீரை அவர்கள் அங்கேயே தேக்கி வைத்துக் கொள்ள அணைகளை நம்மைக்கூட கேட்காமலேயே கட்டிக் கொண்டிருக்கிறார்களே, அந்த அடிப்படையில் நமது மாநில அரசும் நமது விவசாயத்தைப் பெருக்கத் தேவையான இத்தகைய காரியங்களை நிறைவேற்று வதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த உணர்வு சரியான உணர்வுதான். காரணம் ஒரு கால்வாயில் ஏற்படும் உடைப்புகளைச் சரி செய்வது என்றாலும் சரி அல்லது வேறு வேலைகளைச் செய்வது என்றாலும் சரி, அரசாங்கமே முழுமையாக அதைச் செய்கிற காரணத்தால் விவசாயிகளுக்கு அக்கறை இல்லாமல் போய் விடுகிறது. இத்தகைய வேலைகளில் விவசாயிகளையும் இணைத்து அவர்களைப் பயன்படுத்தி, அவர்களின் உடல் உழைப்பையும் பயன்படுத்தி செய்தால் இந்தத் திட்டங்கள் நன்றாக நிறைவேறும். எனவே, அதை எப்படி செய்யலாம்—எப்படி நடைமுறைப் படுத்தலாம் என்று ஆராய்ந்து பார்த்து அதற்குரிய வகையில் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து காவிரி ஆற்றில் அவர்கள் நம்மைக் கேட்காமலேயே குறுக்கே அணைகளைக் கட்டுகிறார்கள் என்றால் அவர்கள் அவர் களுடைய சொந்தப் பணத்தில் அதைச் செய்கிறார்கள். பிளானில் சேராத திட்டம் என்ற அடிப்படையில் செலவு செய்கிறார்கள். எனவே நாம் மத்திய அரசிடம் சொன்னாலும் அது பிளானில் சேராதது, அதை நாங்கள் பிளானில் சேர்க்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் சொந்தப் பணத்தில் அவைகளை கட்டிக் கொண்டிருக் கிறார்கள். அணைகள் கட்டும் பணியை விரைவு செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பகுதியில் காவிரி மாடர்னை சேஷனை எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் தேவை. இவ்வளவு பெரிய நிதியை நம்முடைய மாநில பட்ஜெட்டிலிருந்து ஒதுக்க முடியாது. ஆகவே உலக வங்கியிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது மத்திய அரசாங் கத்திடம், "எங்களைப் பொறுத்த வரையில் தண்ணீரைப் பயன் படுத்தப் போகிறோம், சிக்கனமாக நடத்துவதற்கு கர்நாடக அரசின் ஒப்புதல் தேவையில்லை, மத்திய அரசாங்கம் உடனடியாக ஒத்துழைப்புத் தர வேண்டும்" என்ற கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சரிடத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### குடியாத்தம் தாலூகா கனவா மேட்டூர் கிராமத்தில் சிறிய நீர்த்தேக்கம்.

78—(*வினா எண் 9310) **திரு. ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூகாவிலுள்ள கனவா மேட்டூர் கிராமத்தில் சிறிய நீர்த்தேக்கம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இத்திட்ட மதிப்பீடு தல அதிகாரிகளால் இறுதியாக்கப்பட்டு வருகிறது. பின்னர் சாத்தியக்கூறுகள் மற்றும் அலுவியம் முதலானவற்றை ஆராய்ந்து அளிக்கப்படும் ஒப்புதலுக்குப்பின் பணி ஆரம்பிக்கப்படும்.

**திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே கனவா மேட்டூர் என்கின்ற ஒரு சிறு நீர்த்தேக்கம் இருக்கிறது. எங்கள் பகுதியில் காவிரி போன்ற பெரிய ஆறு, பல்வேறு ஆறுகள் அங்கே ஓடுவதற்கு வாய்ப்பில்லை. எங்கள் பகுதி மேட்டுப் பகுதியாக இருப்பதாலும், இரண்டு மலைக்களுக்கிடையிலே அந்தப் பகுதி அமைந்திருப்பதாலும், அங்கே ஒரு சிறு நீர்த்தேக்கத்தைக் கட்டினால் அங்கேயுள்ள மேட்டுப் பகுதியில் வாழும் ஏழையெளிய விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

சேம்பளி, மோர்ஜனா என்று ஆறுகளின் மேல் ஒரு சிறு நீர்த்தேக்கம் கட்டித் தர வேண்டும் என்று அமைச்சரிடத்திலே நான் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறேன். இதே போன்று எங்கள் பகுதியில் உள்ள ஏரிகள் அத்தனையும் தூர்ந்துபோய் நிலமாக்கப் பட்டிருக்கின்றன. அதை தூர் எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேதிக்கேரி, உம்மனாகுப்பம் போன்ற ஏரிகளில் எல்லாம் வீடுகள் கட்டப்பட்டு நிலமாக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்று ஆறுகள் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவற்றையெல்லாம் நீர்ப் பாசன மானியத்தின் மீது பேச வேண்டும். கேள்வியாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் நேராகவே சொல்லியிருக்கிறார்கள். அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து மாறன் குளத்திற்கு விடப்படும் தண்ணீர்.**

**79—(* வினா எண் 9366) டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து பாப்பாக்குடி ஒன்றியம்; வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள மாறன் குளத்திற்கு விடப்படும் தண்ணீர் முழுமையும் சில தனியார்களுடைய உபயோகத்திலேயே இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், பொதுமக்களுக்குப் பலன் ஏற்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

1987 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கடனா நதி நீர்த்தேக்கத்திலிருந்து பாப்பாக்குடி ஒன்றியம் வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள மாறன்குளத்திற்கு விடப்படும் தண்ணீர் எந்த தனியார்கள் உபயோகத்திலும் இல்லை. இக்குளத்தில் பதிவு செய்யப்பட்ட பாசன பரப்பு 323.65 ஏக்கர். இந்த நிலங்களுக்கு முழு பாசனம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர தனியார் நிலங்களான 2.16 ஏக்கருக்கு தண்டத் தீர்வை மூலம் பாசனம் கிடைக்கிறது. இதனால் பதிவு செய்யப்பட்ட 323.65 ஏக்கருக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் உபயோகத்தில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் தண்டத் தீர்வை மூலம் தனியார் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி தண்டத் தீர்வை மூலம் பாசனம் பெறும் தனியார்கள் அதிகமான தண்ணீரை பயன் படுத்திக் கொள்வதால் முறையாக அந்த தண்ணீர் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதற்காக நேரிடையாக பார்த்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கும் நேரத்தில், தண்ணீர் முழுமையும் சில தனியார்களுடைய உபயோகத்தில் இருப்பதாக கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். தண்ணீர் முழுமையாக இல்லை. 323.65 ஏக்கர் பாசனம் போக கடைசிப் பகுதியில் உள்ள கடைமடைப் பகுதியில் உள்ள 2.16 ஏக்கருக்கு தண்டத் தீர்வை மூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனால் ஏற்கெனவே இருக்கின்ற பாசனப் பரப்புக்கு பற்றாக்குறை ஏற்படும் என்றால் வருவாய்த் துறையிடம் கேட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப் படும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு அரியநாயகிபுரத்தில் உள்ள விவசாயிகளுக்கு பெரிதும் பயன்படும் விதத்தில் கடனா நீர்த் தேக்கத்தில் புதிய கால்வாய் வெட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் அரசின் குறிப்பிலே இல்லை.

**கடலூர் தொகுதி திருவதி அணைக்கட்டு வாய்க்கால்**

80—(* வினா எண் 10507) **திரு. வி. கோ. செல்லப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதியான வெள்ளப்பாக்கம், மருதாடு, தோட்டப்பட்டு, நந்தப்பட்டு கிராமங்களுக்கு திருவதி அணைக்கட்டிலிருந்து வரவேண்டிய தண்ணீர் வாய்க்கால் தூர்ந்து உள்ளதால் பாசன வசதி பெற முடியவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நெல்லிக்குப்பத்திலிருந்து வெள்ளப்பாக்கம் ஏரி வரை வெள்ளப்பாக்கம் கால்வாயில் ஜூலை 1986-ல் தூர் அகற்றப்பட்டது. நந்தம்பட்டு, தோட்டப்பட்டு பகுதிகளில் தூர் அகற்றும் பணி நடப்பு நிதி ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-50)

**திரு. வி. கோ. செல்லப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தூர் வாரப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் அந்தப் பகுதியில் தூர் வாரப்பட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அந்த வாய்க்கால் பகுதியில் குடிசைகள் கட்டி வாய்க்கால் தூர்ந்துபோய்





இருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் குடிசைகளை அகற்றி, வாய்க்காலைத் தூர் எடுத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாய்க்கால் தூர்ந்து போவதற்கு குடிசைகள் கட்டியிருப்பது காரணம் என்று உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக அதைக் காலி செய்ய முயற்சி எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கோ. செல்லப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், திருவதி அணைக்கட்டிலிருந்து எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்கிறது என்பதையும், அதனால் எத்தனை பேர்கள் பயனடைகிறார்கள் என்பதையும் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்கான குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் கிடைக்கும்.

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வியிலே குறிப்பிடப்பட்டுள்ள திருவதி அணைக்கட்டிலிருந்து வரும் அந்தத் தண்ணீர் பண்ருட்டி தொகுதியில் ஆரம்பமாகி முழுக்க முழுக்க நெல்லிக்குப்பம் தொகுதியில் வாய்க்காலில் ஓடி, கடலூர் தொகுதியில் முடிகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும்போது தூர் வாரி இருக்கிறோம் என்று சொன்னார்கள். தூர் வாரியிருப்பது உண்மை. அங்கே இப்போது வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதும் உண்மை. ஆனால் அந்த வாய்க்காலில் தண்ணீர் வந்து 10, 15 ஆண்டுக்காலமாக வராமல் இருக்கிறது. காரணம், வீட்டு மனைகளாக அந்த வாய்க்காலை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, மீண்டும் அந்த வாய்க்காலில் தண்ணீர் வர தக்க ஏற்பாடுகளை உருவாக்கித் தருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, அங்கே வேலை நடப்பதை ஒத்துக் கொண்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயுள்ள குடிசை களை அகற்ற அரசுக்கு எந்தவிதத் தடையும் இல்லை. உடனடியாக காலி செய்யப்படும். அப்படி காலி செய்யும்போது, இங்கே பேசிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் சிபாரிசுக்கு வராமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பல வாய்க்கால்கள் தூர் எடுக்காமல் இருப்பதாக அரசுக்கு தகவல் வந்திருக்கிறதா? அப்படியென்றால் அது பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் குண்டியநல்லூர் பகுதியில், பெருமாள் ஏரி தூர் எடுக்காமல் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகிறார்கள். அதுகுறித்து அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பல பகுதி களிலிருந்து கால்வாய்கள் தூர் எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. அந்தந்தப் பகுதிக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய நிதி ஆதாரங்களைப் பொறுத்து அந்தந்தப் பகுதியில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப் பற்றி எழுதிக் கொடுத்தால், இந்த ஆண்டு எடுத்து, வேலை நடத்தப் படும்.

**நெல்லை மாவட்டம், மணிமுத்தாறு பாசனக் கால்வாய்.**

155—(*வினா எண் 3448) **திரு. மு. ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், மணிமுத்தாறு பாசனக் கால்வாய் ரிசர்வ் டாங்குகளை ரெகுலர் டாங்குகளாக மாற்ற அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

1987 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு பாசனக் கால்வாயின்கீழ் மொத்தம் 353 குளங்கள் பயனடைகின்றன. அம்பை, நான்குநேரி, பாளையங்கோட்டை, சாத்தான்குளம், திருச்செந்தூர் ஆகிய 5 தாலூக்காக்களைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைகிறார்கள். அந்த 353 குளங்களில் சில குளங்கள் இடையிடையே பாதிக்கப்பட்டு, அவற்றை ரிசர்வ் டாங்கிகளாக மாற்றியிருக்கிறார்கள். இவற்றை ஆரம்பத்திலேயே ரிசர்வ் டாங்கிகளாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் செழிப்பாக மழை பெய்யும்போது இந்த ரிசர்வ் டாங்குகளுக்கு தண்ணீர் விடுகிறார்கள். இதை மறுபரிசீலனை செய்து, மணிமுத்தாறு கால்வாயிலிருந்து ரெகுலர் டாங்குகளுக்குக் கொடுக்கும் அதே கொள்ளளவு தண்ணீரை ரிசர்வ் டாங்குகளுக்கும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, ரிசர்வ் டாங்க் என்று சொல்வது எக்ஸ் ஜமின் டாங்குகள்தான். இந்தத் திட்டத்திலே அதைச் சேர்க்காமல் அப்போதே இருந்திருக்கிறார்கள். காரணம், ரெகுலர் டாங்குகள் ஏறத்தாழ 308 இதன் மூலமாகப் பயனடைகின்றன. கடந்த ஒருசில ஆண்டுகளாக ரெகுலர் டாங்குகளுக்கே இந்தத் திட்டத்தின் மூலமாக தண்ணீர் கொடுக்க முடியவில்லை. பற்றாக்குறை இருக்கிறது. இந்தத் தடவை 20 நாட்கள்தான் அந்த அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்து விட்டிருக்கிறோம். எனவே 39 ரிசர்வ் டாங்குகளை ரெகுலர் டாங்குகளாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறு இல்லை. ஆனால் தண்ணீர் நிறைந்திருக்கும்போது தண்ணீர் கொடுப்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, அணைக்கட்டில் 100 அடிக்குமேற்பட்ட தண்ணீர் இருக்கும் காலத்தில் ரிசர்வ் டாங்குகளை ரெகுலர் டாங்குகளாக மாற்றி, அவற்றுக்கும் தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா? இப்போது

நிலை இருக்கிறது என்று நான் சொல்கிறேன். ஆகவே தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் இந்த * மீதி இருக்கின்ற.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆறு நாட்கள்தான், 20 நாட்கள் அல்ல.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களுடைய தொகுதி அது. தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால்தான் தண்ணீர் வழங்க முடியவில்லை. தண்ணீர் நிரம்ப இருக்கின்ற நேரத்தில் அந்த பிரச்சினை வருவதில்லை.

**திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மணிமுத்தாறு அணைக்கட்டிலே நீர் வரத்திலே கீழ் பகுதி குளங்களுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக தண்ணீர் விட சாத்தியமில்லை என்று சொன்னார்கள். ஆனால் அதன் மேல்பகுதியிலே, மக்கள் நலனை கருத்தில் கொண்டுள்ள நமது சட்டப் பேரவையை நடத்தி வருகின்ற தலைவர் அவர்கள் தொகுதியிலே இரண்டு முறை கொடுக்கக்கூடிய காலத்தில், எங்களுக்கு முதல் போகத்திற்குக்கூட தண்ணீர் கிடையாது. தட்டுப்பாடு இருக்கிறது. எனவே தாமிரவருணி பாசனத்திலேயிருந்து முதல் போகத்திற்காவது குறைந்தபட்சம் தட்டுப்பாடு இல்லாத காலங்களிலாவது கொடுக்கவேண்டும். மணிமுத்தாறு அணைக்கட்டிலே மதகை திறந்து விடுவதற்கும் முன் உரிமை அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே இருக்கின்ற அவைத் தலைவர் அவர்கள், பொதுநலத்திற்கு மட்டுமன்றி சுயநலத்திற்கு—அவர் தொகுதிக்கு வந்த பிறகுதான் அது வந்து கொண்டிருக்கிறது—முதலிலே அது எப்படி என்று சொன்னால், அந்த பகுதியிலே * வேண்டும். நீங்கள் கூறியே இருக்கின்ற காரணத்தினால் அங்கே தண்ணீர் கொடுக்க முடியவில்லை. அங்கே தண்ணீர் இல்லை. தண்ணீர் எடுப்பதற்கு பெருத்த சிரமத்தினை மேற்கொண்டு அந்த 6 நாட்களில் தண்ணீர்கூட

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1987 மார்ச் 24]

கொடுக்க முடிந்ததே ஒழிய, தண்ணீர் இருக்கும் என்று சொன்னால் எல்லா பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுப்பதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

### தேனீ தொகுதியிலுள்ள சண்முகா நதி நீர்த்திட்டம்

156—(*வினா எண் 9693) **திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனீ தொகுதியிலுள்ள பல கிராமங்கள் பயனடையும் வகையில் ஆய்வு செய்யப்பட்டுள்ள சண்முகா நதி நீர்த் தேக்கத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நிர்வாக ஒப்பளிபபு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(முற்பகல் 11-00)

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக பாசனப் பயனடையும் பகுதிகளுடன் கூடவே, கருவேலங்குளம், நாயக்கர்குளம், திருமித்தம் குளம், தாதழுத்தன்குளம் ஆகிய குளங்களையும் சேர்த்து பாசன நீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று கண்மாய்களையும் இந்தத் திட்டத்தில் சேர்க்க முடியுமா என்று ஆராய்ந்து பார்க்குமாறு அதிகாரிகளிடத்தில் சொல்லியிருக்கிறோம். அவர்கள் ஆராய்ந்து பார்த்து சேர்க்கலாம் என்று சொன்னால் அதுபற்றி ஆவன செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * என்ற வார்த்தை இருக்க வேண்டாம். அந்த வார்த்தை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

**திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் கோயில் பின்புறம் விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்திலுள்ள ஆக்கிரமிப்பு.**

1—(வினா எண் 7425) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில், கோட்டை மாரியம்மன் கோயில் பின்புறம் விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் நகரில் கோட்டை மாரியம்மன் கோவில் பின்புறம் உள்ள மைதானம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. அதன் மொத்த 'பரப்பளவு 2 எக்கர் 82.974 சதுர அடியாகும். இதில் சுமார் 1.00 ஏக்கர் நிலத்தில் 19 நபர்கள் குடிசைகள் மற்றும் கயிறு திரிக்கும் கொட்டங்கள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்து இருந்தனர். இவ்வாக்கிரமிப்பு ஆட்சேபணையாக இருந்ததால், 19—1—1986 அன்று நகர அளவை அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களால் அகற்றப்பட்டது. பிற்காலத்தில் அங்கு ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் தக்க அறிவுரை வழங்கியுள்ளார்.

**உசிலம்பட்டி தொகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்தல்.**

2—(வினா எண் 8285) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்யப்படுமா ?



விடை—

அரசு 4—8—1986 ஆம் நாளிட்ட அரசாணையில் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம மற்றும் பெரியகுளம் வட்டங்களில் முழுவதிலுமுள்ள, பருவமழை பெய்யாததினால் பாதிக்கப்பட்ட நன்செய் மற்றும் புன்செய் நிலங்களுக்கு வருவாய் நிலை எண். 14-ன் விதி முறையின் கீழ் 1395 ஆம் விளைச்சல் ஆண்டுக்கு செலுத்தவேண்டிய நிலவரி முதலியவற்றை தள்ளுபடி செய்து ஏற்கனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

**ஊராட்சி ஒன்றியம் மூலம் சாலைகளில் வைக்கப்பட்டுள்ள மரங்கள்.**

3—(வினா எண் 9685) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத்துறை, ஊராட்சி ஒன்றியம் மூலம் சாலைகளில் வைக்கப்பட்டுள்ள மரங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை கிராம நிர்வாக அலுவலர்களிடம் ஒப்படைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

பொதுச்சாலைகள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகிய எவற்றின் பொறுப்பிலிருந்தாலும், நெடுஞ்சாலைத்துறையினர் பொறுப்பில் இருந்தாலும் அத்தகைய பொதுச் சாலைகளிலுள்ள மரங்களை எக்கிராமங்களின் எல்லைகளில் அவை உள்ளனவோ, அக்கிராமங்களின் கிராம நிர்வாக அலுவலர்கள், பாதுகாப்பதற்கான நெறி முறைகள் ஏற்கனவே கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ரயத்துக்களுக்கான நூலில் வகுக்கப்பட்டுள்ளன. எனவே இப்பொறுப்புகளை கிராம நிர்வாக அலுவலரின் பொறுப்பில் புதிதாக ஒப்படைக்கும் அவசியம் இல்லை.

**அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கிய குற்றத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

4—(வினா எண் 9865) திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கிய குற்றத்திற்காக கடந்த ஆண்டு (1985) பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(ஆ) எத்தனை பதுக்கல்கள் கண்டுபிடிக்கப்பட்டன ?

விடை—

(அ) அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கிய குற்றத்திற்காக 1985-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 562 ஆகும்.

(ஆ) 562 பதுக்கல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**திருப்பூர் நகராட்சியில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள்.**

5—(வினா எண் 5607) திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் எத்தனை?

(ஆ) அவற்றில் அங்கீகரிக்கக்கோரி எத்தனை மனைப்பிரிவுகள் அரசுக்கு அனுப்பியுள்ளன?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருப்பூர் நகராட்சியில் 55 அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் உள்ளன.

(ஆ) அவற்றில், ஏ.வி.பி. லே-அவுட், அவனாசிரோடு மற்றும் அப்பாச்சி நகர் லே-அவுட் என்ற இரண்டு மனைப்பிரிவுகளை அங்கீகரிக்கக் கோரி, கோவை முதுநிலை துணை நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு வந்துள்ளது.

(இ) கோவை முதுநிலை துணை நகர் ஊரமைப்பு இயக்குநர், மேற்சொன்ன இரண்டு மனைப்பிரிவுகள் பற்றி சில விவரங்கள் கோரி, திருப்பூர் நகராட்சி ஆணையருக்குத் திருப்பி அனுப்பியுள்ளார். மற்றைய அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளைப் பொறுத்தவரையில் அவற்றின் உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் எதும் திருப்பூர் நகராட்சியில் பெறப்பெறவில்லை.



**தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்ட கறவை மாட்டுக் கடன் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை.**

6—(வினா எண் 7962) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், சென்ற ஆண்டு வழங்கப்பட்ட கறவை மாட்டுக் கடன் மூலம் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் ஆதி திராவிடர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டில் மொத்தம் 3,400 பேர்களுக்கு கறவை மாட்டுக் கடன் வழங்கப்பட்டது.

(ஆ) அவர்களில் 1,758 பேர்கள் ஆதி திராவிடர்கள்.

**பத்தவாசல் ஆதி திராவிடர் காலனிக்கு போடப்பட்டுள்ள சாலையைப் பராமரித்தல்.**

7—(வினா எண் 8033) திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆழ்வார் திருநகரி ரயில் நிலையத்திலிருந்து பத்தவாசல் ஆதி திராவிடர் காலனிக்கு போடப்பட்டிருக்கும் ரோட்டில் கல் விரித்து பராமரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதா?

விடை—

திருநெல்வேலி மாவட்டம், ஆழ்வார் திருநகரி ரயில் நிலையத்திலிருந்து பத்தவாசல் ஆதி திராவிடர் காலனிக்கு போடப்பட்டிருக்கும் சாலையில் கல் விரித்து பராமரிக்கும் பணியினை 1986-87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடுத்து செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1987 மார்ச் 24

**நீலகிரி மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டம் மூலம் பயனடைந்த பேரூராட்சிகள்.**

8—(வினா எண் 10991) **திரு. கே. உச்சி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, உதகை, கூடலூர் வட்டங்களில் 1985-86 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டம் மூலம் பயனடைந்த பேரூராட்சிகள் யாவை?

(ஆ) செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு?

(இ) நிறைவேற்றப்பட்ட பணிகள் எத்தனை?

விடை—

(அ) 1985-86 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட வில்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினா எழவில்லை.

**பாப்பாரப்பட்டியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம்.**

9—(வினா எண் 1511) **திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதியிலுள்ள பாப்பாரப்பட்டியில் குடிநீர் மேல்நிலைத்தொட்டி கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி குடிநீர்த் திட்டத்தின் கீழ் பாப்பாரப்பட்டி பேரூராட்சிக்கு மேல்நிலை நீர்த்தொட்டி கட்டி குடிநீர் வழங்க ரூ. 50.557 இலட்ச மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால் தர்மபுரி குடிநீர்த்திட்டத்தின் நீர் ஆதாரம் குறைந்துவிட்டதால் மேற்படி திட்டத்தினை செயல்படுத்த இயலவில்லை. பாப்பாரப்பட்டியில் தற்போது நிலவி வருகின்ற கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினைத் தவிர்க்க ஒரு நிவாரணத் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நடப்பாண்டு இறுதிக்குள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



1987 மார்ச் 24]

**நத்தம் தொகுதியில் குடிநீர் வசதிகள்.**

10—(வினா எண் 1950) **திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், சோத்தம்பட்டி கிராமம், பூவக்கிழவம்பட்டியைச் சேர்ந்த 7 கொட்டத்தில், குடிநீர் வசதியின்றி மக்கள் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர்க் கஷ்டம் தீர அரசு ஆவன செய்யுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பூவக்கிழவம்பட்டியைச் சேர்ந்த 7 கொட்டம் என்பது புதிதாக அமையப்பெற்ற கிராமமாகும். 7 கொட்டம் என்பது விவசாயத் தோட்டங்களில் ஆங்காங்கே அமைக்கப்பெற்ற தனித் தனி வீடுகளை உள்ளடக்கியதாகும். இவ்வீடுகளுக்குத் தனித் தனியாகக் கையிறைப்பான் அமைக்கவியலாது. மேற்குறிப்பிட்ட தோட்டங்களில் ஆங்காங்கே நீர்ப்பாசனக் கிணறுகள் உள்ளன. மேலும் இக்குடியிருப்பிலிருந்து 1 கி.மீ. தொலைவிலுள்ள பூவக்கிழவன்பட்டி கிராமத்தில் கையிறைப்பான் ஒன்று நல்ல நிலையில் இயங்கி வருவதால் போதிய நீர் வசதி கிடைக்கிறது.

**சிதம்பரம் அருகே பெட்ரோல் கிணறு தோண்டும் பணி.**

11—(வினா எண் 6797) **திரு. இராசு. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அருகே பெட்ரோல் கிணறு தோண்டும் வேலை நடந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனத்தினால் தற்போது சிதம்பரம் அருகே துருவுதல் பணி எதும் நடைபெறவில்லை. ஆனால், இந்நிறுவனத்திற்கும்,

சோவியத் நாட்டின் டெக்னோ எக்ஸ்போர்ட் நிறுவனத்திற்கும், அரியலூர்—பாண்டிச்சேரி வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மற்றும் செறிவான ஆய்வுப் பணியை மேற்கொள்ள ஒரு ஒப்பந்தம் 1—10—1985-ல் கையெழுத்தாகியுள்ளது. இப்பணி 1986—93-ல் மேற்கொள்ளப்படும் (காவிரி வடிநிலப்பகுதியின் துணை வடிநிலப் பகுதியான அரியலூர் மற்றும் பாண்டிச்சேரி பகுதியிலும், சிதம்பரம் பகுதியும் அடங்கும்) சோவியத் குழு இப்பணியை விரைவில் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

**சுவாமிமலை பேரூராட்சி கீழ்ப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.**

**12—(வினா எண் 7075) திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி சுவாமிமலை பேரூராட்சியில் கீழ்ப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**விளாத்திகுளம் தொகுதி கிராமங்களிலுள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர்க் குழாய்கள்.**

**13—(வினா எண் 7844) திரு. ச. குமரகுருபர ராமநாதன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில், விளாத்திகுளம், கமலாபுரம், பிள்ளையார் நத்தம், வைப்பார், கீழ வைப்பார், சிப்பிகுளம், கல்லூரணி, வேடநத்தம், சக்கம்மாள்புரம், சண்முகபுரம் ஆகிய கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் செல்கின்ற குழாய்கள் உடைக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





**விடை—**

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதியில், விளாத்திகுளம், கமலாபுரம், பிள்ளையார் நத்தம், வைப்பார், கீழ் வைப்பார், சிப்பிகுளம், வேடநத்தம், சக்கம்மாள்புரம் மற்றும் சண்முகபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர் செல்கின்ற குழாய்கள் உடையாமல் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கல்லூரணி கிராமத்தில் குடிநீர் ஆதாரம் உப்புத் தன்மை உள்ளதாகிவிட்டதாலும், மாற்று ஆதாரம் தேர்வு செய்யப்பட்டு வருவதாலும், பழுதடைந்த குழாய்கள் புதுப்பிக்கப்படவில்லை.

ஊராட்சி ஒன்றியத்தினால் பராமரிக்கப்படும் குடிநீர்த் திட்டத்தில் உடைந்த குழாய்களைப் பழுதுபார்க்க, வறட்சி நிவாரண நிதியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பழுதுபார்க்கும் வேலை வாரியத்தால் செய்யப்படுகின்றது.

வாரியத்தால் பராமரிப்பு செய்யப்படுகின்ற திட்டங்களில் உள்ள பழுதுகளை வாரியம் நிவர்த்தி செய்து தடங்கல் இல்லாமல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

**உசிலம்பட்டி நகரிலுள்ள குடிநீர் மேல்நிலைத்தொட்டி**

**14—(வினா எண் 8279) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உள்ள உசிலம்பட்டி நகர் குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு மோட்டார் பொருத்தும் பணி எப்போது முடியும் ?

**விடை—**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியிலுள்ள உசிலம்பட்டி நகர், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு 75 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றி இயந்திரம் பொருத்தும் பணி 31—3—1987-க்குள் நிறைவுபெறும். தற்காலிகமாக நீரேற்றி இயந்திரமொன்று பொருத்தப்பெற்று மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றப்பட்டு 30—8—1984 முதல் முன்னோடி குடிநீர்த் திட்டம் ஒன்று அப்பகுதி மக்களுக்குப் பயனளித்து வருகிறது.

[1987 மார்ச் 24

### சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல்

15—(வினா எண் 8536) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் இரண்டு வருடம் (480 நாட்களுக்கு மேல்) பணிபுரியும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப் படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணியிடங்களும் தற்போது நிரப்பப் பட்டுள்ளன. அவ்வப்போது நிரந்தரப் பணியிடங்கள் ஏற்படுகின்ற பொழுதெல்லாம், அவற்றில் தற்காலிகப் பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்படுகிறார்கள்.

சென்னை மாநகராட்சியில் அனைத்துத் துறைகளிலும் உள்ள இரண்டு வருட காலத்திற்குள் 480 நாட்களை பணியில் முடித்த, தற்காலிகப் பணியாளர்களை, 1981 ஆம் ஆண்டில் தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டத்தின்கீழ், நிரந்தரம் செய்வது சென்னை மாநகராட்சி ஆணையரின் ஆய்வில் உள்ளது.

### நாயகனைப்பிரியாள் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து தரும் திட்டம்

16—(வினா எண் 9937) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள நாயகனைப் பிரியாள் கிராமத்திற்குக் குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1987 மார்ச் 24]

### வெண்ணங்குழி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம்

17—(வினா எண் 9940) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள வெண்ணங்குழி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

ஆம்.

### 1984-85 ஆம் ஆண்டு அரசுத்துறை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை

18—(வினா எண் 10094) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984-85 ஆம் ஆண்டு தமிழகத்தில் அரசுத்துறை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு என்ன?

**விடை—**

49,089 டன்கள்.

### 1984-85 ஆண்டுகளில் அரசுத்துறை நிறுவனங்களில் உற்பத்தியான சிமெண்ட்

19—(வினா எண் 10112) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் 1984-85 ஆம் ஆண்டுகளில் அரசுத்துறை நிறுவனங்களில் உற்பத்தியான சிமெண்ட் அளவு என்ன?

**விடை—**

1984-85-ம் ஆண்டுகளில் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் 3,40,030 மெட்ரிக் டன் சிமெண்டும், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையில் 2,84,366 மெட்ரிக் டன் சிமெண்டும் உற்பத்தியாகி உள்ளன.

[1987 மார்ச் 24

## வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை

20—(வினா எண் 10429) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85, 1985-86 ஆம் ஆண்டுகளில் வேளாண்மைப் பயிற்சி பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

(அ) 1984-85 கல்வி ஆண்டில் 300 மாணவர்களும், 1985-86 கல்வி ஆண்டில் 298 மாணவர்களும் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்றார்கள்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

## வேளாண்மைப் பொறியியல் சேவைக் கூட்டுறவு மையங்களிலுள்ள பவர் டிரில்லர்கள்

21—(வினா எண் 10501) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

? விவசாயப் பொறியியல் சேவைக் கூட்டுறவு மையங்களில் எத்தனை பவர் டிரில்லர்கள் உள்ளன?

**விடை—**

தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையத்தில் மட்டும் 'இன்வெல் ரிக்' (In-well Rig) எனப்படும் ஒரே ஒரு பவர் டிரில் உள்ளது.

## தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்ட ஆதி திராவிடர், மலை ஜாதியினருக்காகக் கட்டப்பட்ட வீடுகள்

22—(வினா எண் 11081) திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1984-85, 1985-86 ஆம் ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் மலை ஜாதியினருக்காகக் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?



1987 மார்ச் 24]

(ஆ) 1986-87 ஆம் ஆண்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ள வீடுகள் எண்ணிக்கை என்ன?

**விடை—**

(அ) நீலகிரி மாவட்டத்தில், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக 1984-85 ஆம் ஆண்டு வீடுகள் கட்டப்படவில்லை. ஆனால் 1985-86-ல் இம்மாவட்டத்தில் 48 வீடுகள் கட்டப்பட்டன.

(ஆ) நடப்பாண்டு இம்மாவட்டத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 203 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

## சென்னை நகரில் அலையும் நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கை

23—(வினா எண் 11464) திரு. கே. உச்சி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அலையும் நாய்களைப் பிடிக்க மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு நகரில் பிடிக்கப்பட்ட நாய்கள் எத்தனை?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) ஆம். கடந்த 1985-ம் ஆண்டு, தெருக்களில் அலைந்து திரிந்த 13,862 நாய்கள் சென்னை மாநகராட்சியால் பிடிக்கப்பட்டன.

## கோவை அண்ணாநகரில் கழிப்பிடம் கட்டுதல்

24—(வினா எண் 11717) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சிப் பகுதியிலுள்ள வெங்கிட்டாபுரம் அருகில் உள்ள அண்ணா நகரில் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. வெங்கிட்டாபுரத்தில் பொதுக்கழிப்பிடம் கட்ட கோவை மாநகராட்சி முடிவு செய்து அதற்கேற்ப மேற்படி வேலையைச் செய்து முடிக்க அனுமதி வழங்கியுள்ளது.

[1987 மார்ச் 24

**பழவேற்காடு ஏரியைக் கடக்க நடைபாதை மேம்பாலம் அமைக்கும் திட்டம்.**

25—(வினா எண் 8432) திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி தொகுதி பழவேற்காடு கிராமத்திற்கும் கலங்கரை விளக்கம் பகுதிக்கும் இடையில் உள்ள பழவேற்காடு ஏரியைக் கடக்க நடைபாதை மேம்பாலம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**உடையார்பாளையம் அரசு மருந்தகத்திற்குப் புதிய கட்டிடம்**

26—(வினா எண் 9439) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டான் தொகுதியிலுள்ள உடையார் பாளையம் அரசு மருந்தகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மயிலாடுதுறை அரசு மருத்துவமனை அறுவை அரங்கை விரிவுபடுத்தும் திட்டம்**

27—(வினா எண் 9444) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனை அறுவை அரங்கை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.



1987 மார்ச் 24]

**சானார்பட்டி ஒன்றியத்திலுள்ள தனியார் இந்து நடுநிலைப் பள்ளியை அரசு ஏற்று நடத்தல்**

28—(வினா எண் 1316) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சானார்பட்டி யூனியன், தீத்தாம்பட்டி கல்லுப்பட்டியில் உள்ள தனியார் இந்து நடுநிலைப்பள்ளியை அரசு ஏற்று நடத்த முன்வருமா?

விடை—

நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம் கல்லுப்பட்டி கிராமத்தில் தனியார் பள்ளி ஏதுமில்லை. ஆனால் தீத்தாம்பட்டி கிராமத்தில் ஒரு தனியார் நடுநிலைப்பள்ளி இயங்கி வருகிறது. அப்பள்ளி முறைகேடு ஏதுமின்றி நடைபெறுவதால் அதனை ஏற்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

**கோட்டூர் மேல்நிலைப் பள்ளிக்குக் குடிநீர் வசதி திட்டம்.**

29—(வினா எண் 6471) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் கோட்டூர் மேல்நிலைப் பள்ளிக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

**திருச்சி சட்டக்கல்லூரி நூலகத்திலுள்ள பாடப்புத்தகங்கள்**

30—(வினா எண் 10408) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சட்டக்கல்லூரியில் உள்ள நூலகத்தில் போதிய பாடப் புத்தகங்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருச்சி சட்டக்கல்லூரியில் உள்ள நூலகத்தில் போதிய பாடப் புத்தகங்கள் இல்லை என்ற கூற்று மெய் அல்ல.

(ஆ) வினா எழவில்லை.

**கூடலூர் தொகுதியில் தட்டச்சுத் தேர்வு மையம் அமைத்தல்**

31—(வினா எண் 10910) திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் தட்டச்சுத் தேர்வு மையம் அமைக்கக்கோரி கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் தட்டச்சுத் தேர்வு மையம் அமைக்கக் கோரி கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) தற்போதைய தேர்வு மையமான குன்னூரில் மிகக் குறைந்த அளவே—சராசரியாக ஓர் அணிக்கு 60 மாணவர்களே—தேர்வு எழுதுவதால், இதனை இரண்டாகப் பிரித்து கூடலூரில் ஓர் தேர்வு மையம் அமைக்கும் சாத்தியமில்லை.

**மத்திய சிறைச்சாலைகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கும் திட்டம்**

32—(வினா எண் 10926) திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய சிறைச்சாலைகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

தற்பொழுது அரசிடம் தொலைக்காட்சிப் பெட்டி எல்லா மத்திய சிறைகளிலும் வைக்க எந்த செயற்குறிப்புமில்லை. சென்னை மத்திய சிறையில் மொத்தம் ஒன்பது தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளன (2 கலர், 7 கறுப்பு-வெள்ளை). இத்தொலைக் காட்சிப் பெட்டிகள் இரக்கமுள்ள கொடையாளர்கள் மற்றும் அரிமா சங்கம் முதலியன மூலம் பெறப்பட்டன. கோவை மத்திய சிறையில் கோவை மெட்ரோபாலிடன் ரவுண்ட் டேபிள் என்ற நிறுவனம் கறுப்பு-வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்பாக அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.





**உதகமண்டலம் அரசு கலைக் கல்லூரிக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டும் திட்டம்.**

33—(வினா எண் 11011) திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்திலுள்ள அரசு கலைக்கல்லூரிக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

**மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலையை விரிவுபடுத்துதல்.**

34—(வினா எண் 4559) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை கோட்டத்தின்கீழ் உள்ள மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலை நன்னிலம் உட்கோட்டத்திற்கு உட்பட்ட சாலை விரிவுபடுத்தாததால் போக்குவரத்து இடர்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் சாலை மயிலாடுதுறை, நன்னிலம் மற்றும் திருவாரூர் நகரங்களை இணைக்கவும், தென்னாற்காடு மாவட்டம் மற்றும் சென்னை மாநகரம் செல்லவும் இச்சாலை ஒரு முக்கிய சாலையாகவும், சுற்றியுள்ள பகுதியில் உள்ள விளைபொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் செல்லும் முக்கிய சாலையாகவும் உள்ளது. அத்துடன் வாகனப் போக்குவரத்து நாளுக்கு நாள் பெருகி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. தற்போது 3.66 மீட்டர்

[1987 மார்ச் 24

அகலம் கொண்ட தார்ச்சாலையை 7.00 மீட்டர் அகலத்திற்கும் தார்ச்சாலையாக அமைக்கவும் சாலையில் தக்க பாதுகாப்பு வேலைகள் செய்திடவும், சில இடங்களில் குறுகிய சிறிய மற்றும் பெரிய பாலங்களைத் திரும்பக் கட்டவும் சுமார் ரூ. 175 இலட்சம் தேவைப்படுகிறது. இனிவரும் ஆண்டுகளில் இதனை எடுத்துச் செய்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

**தஞ்சை பெரிய கோயிலின் சராசரி ஆண்டு வருமானம்.**

**35—(வினா எண் 5033) திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பெரிய கோயிலின் சராசரி ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) கோயிலின் தொன்மையை அறிகின்ற வகையில் ஒலிப் பதிவு நாடா அடங்கிய பேச்சு வைக்கப்படுமா?

விடை—

(அ) தஞ்சை பெரிய கோயிலின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 68,944.14.

(ஆ) இக்கோயிலில் ஒலிப்பதிவு நாடா அடங்கிய பேச்சு வைப்பதற்கு மத்திய தொல்பொருள் துறையின் அனுமதி தேவை. இதற்கான கருத்துரு ஏதும் இல்லை.

**கோடியக்கரை வனவிலங்குப் பாதுகாப்பகத்திலுள்ள நீர் நிலைகள்.**

**36—(வினா எண் 5326) திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோடியக்கரை வனவிலங்குப் பாதுகாப்பகத்தில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் வறண்டுவிட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தண்ணீர்த் தேவைக்கு மாற்று ஏற்பாடாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



1987 மார்ச் 24]

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லை. இங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, 22 குளங்கள், 19 கோடை குடிநீர்த் தொட்டிகள், 7 கிணறுகள் மற்றும் 7 சிறு அணைகள் அமைக்கப்பட்டுள்ளன. வனவிலங்குகளுக்குத் தண்ணீர் கிடைக்கும்படி கோடை குடிநீர்த் தொட்டிகள் நாள்தோறும் நிரப்பப்படுகின்றன.

**தேயிலைத் தோட்டக்கழகம் மற்றும் அரசு ரப்பர் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட வனத்துறை நிலங்களுக்கு நிர்ணயிக்கப் பட்ட குத்தகை.**

**37—(வினா எண் 6273) திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தேயிலைத் தோட்டக் கழகத்திடமும், அரசு ரப்பர் கழகத்திடமும் ஒப்படைக்கப்பட்ட வனத்துறை நிலங்களுக்குக் குத்தகை எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது?

விடை—

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திடமும், அரசு ரப்பர் கழகத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள வனத்துறை நிலங்களுக்கு நிலத்தின் தன்மை மற்றும் உற்பத்தித்திறன், விற்பனைப்பொருளின் சந்தைவிலை, கழகம் ஈட்டும் வருமானத்தின் இயல் திறன் இவைகளை அடிப்படையாகக்கொண்டு அரசால் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

**ஈரமங்கலம் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குப் புதிய கட்டிடம்.**

**38—(வினா எண் 8449) திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரமங்கலம் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு சுமார் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்ட திட்டமிடப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது முடிக்கப்படும்?

விடை—

(அ) கீரமங்கலம் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு ரூ. 95,000 திட்ட மதிப்பீட்டில் ஆய்வகத்துடன் கூடிய கிடங்குக் கட்டிடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கட்டிடம் இன்னும் மூன்று மாதத்தில் கட்டி முடிக்கப்படும்.

**பட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள கோயில்களின் திருப்பணித் திட்டம்.**

39—(வினா எண் 8078) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலத்தூர் அருள்மிகு சிவன் திருக்கோயில் திருப்பணி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை வட்டம் ஆலத்தூர் அருள்மிகு அழகியநாதசுவாமி திருக்கோயிலில் திருப்பணி செய்யும் திட்டம் தற்போது ஏதும் இல்லை. இத்திருக்கோயில் திருப்பணி செய்ய வேண்டி அறங்காவலர் குழு நடவடிக்கை மேற்கொண்டால் திருப்பணி வேலை செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

40—(வினா எண் 8079) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள கரம்பயம் அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயில் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



விடை—

(அ) ஆம்.

(ஆ) அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் மதில் சுவர், அம்பாள் விமானம் ஆகியவை பழுதடைந்துள்ளன. முற்புறம் மண்டபத்தை ஆர்.சி.சி. மண்டபமாக மாற்றிக் கட்டுவதுடன் தளவரிசையும் போட வேண்டி உள்ளது. இத்திருப்பணிகளை நிறைவேற்ற திருப்பணிக்குழு ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருப்பணிக்குரிய மதிப்பீடு தயாரித்து வேலைகளைத் துவங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

41—(வினா எண் 8080) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலத்தூர் முசிரி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருப்பணி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயிலில் திருப்பணி செய்யும் திட்டம் தற்போதைக்கு இல்லை.

42—(வினா எண் 8082) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள காரப்பன்காடு கிராமத்தில் உள்ள புகழ்வாய்ந்த பெருமாள் திருக்கோயில் திருப்பணி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், காரப்பன்காடு அருள்மிகு அவிஷ்ட வரதராஜப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிகள் செய்யப்பெற்று 24—4—1984-ல் குடமுழுக்கு செய்யப்பெற்றுள்ளது. இத்திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளபடியால் திருப்பணி வேலைகள் ஏதும் இல்லை.

**வால்பாறை குரங்கு அருவிக்கு செல்லும் பக்தர்களிடம் வசூலிக்கப்படும் தொகை.**

43—(வினா எண் 8382) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் குரங்கு அருவிக்கு சாமி கும்பிட போகும் பக்தர்களிடம் ரூபாய் இரண்டு வசூல் செய்வதை அரசு அறியுமா?

(ஆ) வனத்துறைக்கு இதிலிருந்து கிடைக்கும் வருட சராசரி வருமானம் எவ்வளவு?

விடை—

(அ) குரங்கு அருவிக்கு குளிக்கப்போகும் சுற்றுலாப் பயணிகளிடம் மட்டுமே 1975-ம் ஆண்டு தமிழ்நாடு வனவிலங்கு (பாதுகாப்பு) விதியின்படி சரணாலய நுழைவுக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு ரூ. 2 வசூலிக்கப்படுகிறது. குரங்கு அருவிக்கு அருகில் வால்பாறைச் சாலையில் உள்ள கோயிலுக்குச் சாமி கும்பிடப் போகும் பக்தர்களிடம் கட்டணம் வசூலிப்பதில்லை.

(ஆ) மேற்கூறிய சரணாலய நுழைவுக் கட்டணமாக அக்டோபர் 1985 முதல் மார்ச் 1986 வரை ரூ. 27,251-ம் ஏப்ரல் 1986 முதல் 15—6—1986 வரை ரூ. 11,511-ம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**காஜாமுடி மலைப்பகுதியில் காட்டெருமை தாக்குதலிலிருந்து தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.**

44—(வினா எண் 8453) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, காஜாமுடி மலைப்பகுதியில் காட்டெருமை போன்ற வனவிலங்குகளின் தாக்குதல்களிலிருந்து காட்டு தொழிலாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லாமையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





விடை—

(அ) மற்றும் (ஆ) வால்பாறை காஜாமுடி மலைப்பகுதியில் நீரோடை இருப்பதால் இரவு நேரங்களில் காட்டெருமைகள் தண்ணீர் குடிப்பதற்கு என்று அப்பகுதிக்கு வரும். பகல் நேரங்களில் வராது. காஜாமுடியைச் சுற்றிலும் தேயிலைத் தோட்டங்கள்தான் உள்ளன. இந்த மலைப்பகுதியில் காட்டுத் தொழிலாளர்களைக் காட்டெருமைகள் தாக்கியதாக வனத் துறைக்குத் தகவல் ஏதும் இதுவரை வரவில்லை.

**தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்**

45—(வினா எண் 9427) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**வெளி மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்ட வெண்ணெய், நெய்**

46—(வினா எண் 9758) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86-ம் ஆண்டில் வெளி மாநிலங்களில் எத்தனை டன் வெண்ணெய், நெய் போன்ற உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன?

(ஆ) விற்பனையை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

**விடை—**

(அ) 1985-86-ம் ஆண்டில் வெளி மாநிலங்களில் 406.800 டன் வெண்ணெய், மற்றும் 2,166.064 டன் நெய் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

(ஆ) மேற்சொன்ன பொருட்களை இந்தியா முழுவதும் சிறிய பாக்கெட்டுகளில் நுகர்வோர்களுக்கு கிடைக்கும் வண்ணம் சீரான விநியோகம் மற்றும் பலன்தரும் விளம்பரத்தின் மூலமாக விற்பனை செய்ய கொள்கை அளவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### பாலமலையில் இருக்கும் யானைகளுக்கு குடிதண்ணீர் வசதி

47—(**வினா எண் 9991) திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள பால மலையில் இருக்கும் யானைகள் குடிதண்ணீர் இல்லாமல் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே உள்ள 'பாலமலை' ஈரோடு வனக் கோட்டத்தைச் சேர்ந்த பகுதி யாகும். இங்கு யானைகள் கிடையாது. இவ்வனக் கோட்டத்தில், யானைகள் உள்ள மற்றப்பகுதிகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. எனவே, ஆங்காங்கே நீர்த் தொட்டிகள் அமைத்து தண்ணீர் நிரப்பி யானைகளுக்குத் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

### சாக்கப்பிள்ளையூரில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம்

48—(**வினா எண் 10072) திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் சாக்கப்பிள்ளையூரில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?



**விடை—**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### 1984-85 ஆம் ஆண்டு அவினாசி தாலுக்காவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட ஆதி திராவிடர்கள் எண்ணிக்கை.

49—(**வினா எண் 5705) திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984-85 ஆம் ஆண்டு, அவினாசி தாலுக்காவில் ஆதி திராவிட மக்களுக்கு எத்தனை வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன?

**விடை—**

1984-85 ஆம் ஆண்டு அவினாசி தாலுக்காவில் ஆதி திராவிட மக்களுக்கு 268 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### மீன்சுருட்டி கிராமம் ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டுதல்.

50—(**வினா எண் 8809) டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள மீன்சுருட்டி கிராமத்தில் ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கிடமில்லை.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

[1987 மார்ச் 24

## 2. ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து செயற்கைக் கோள் செலுத்த இருப்பதற்கு வாழ்த்துக்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியர்களாகிய நமக்குப் பெருமையளிக்கின்ற நிகழ்ச்சியாகவும், விண்வெளிச் சாதனையில் மேலும் ஒரு புகழ் மிக்க அத்தியாயமாகவும் இந்தியப் பேரரசினுடைய மேன்மைக் குரிய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் முன்னிலையில் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ரோகிணி செயற்கைக் கோளை தாங்கிச் செல்லும் ஏ.எஸ்.எல்.வி. ராக்கெட்டை விண்வெளியில் செலுத்தும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி இன்று காலை நிகழ்கிறது. பெருமைக்குரிய இந்த வேளையில் இச் சாதனையை நிகழ்த்தும் நம் இந்தியப் பேரரசுக்கும், சாதனையின் பின்னணியிலுள்ள நம் நாட்டு விஞ்ஞானிகளுக்கும் தமிழக மக்கள் சார்பில் இந்த அவை தன்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் ஒரு நாள் பொறுத்திருக்கலாம். இன்றுதான் மாண்புமிகு பிரதமர் அவர்கள் போயிருக்கிறார்கள். அந்த ராக்கெட் ஏற வேண்டும் (சிரிப்பு). அந்த நிகழ்ச்சியைப் பாராட்டலாம். பிரதமர் வந்ததைப் பாராட்டலாம். முயற்சி எடுத்ததை எல்லாம் பாராட்டுவோம். சாதனை முழுவதும் வெற்றிகரமாக ஆக வேண்டுமென்று நாம் வாழ்த்தவும் கடமைப் பட்டிருக்கிறோம். அந்தவகையில் இந்த அவையின் சார்பாக பாராட்டுக்கள் தெரிவிப்பதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனால் இந்த நிகழ்ச்சி எல்லாம் முடிந்து செய்தித் தாள்களில் எல்லாம் முழு விவரம் வந்து, வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வந்திருக்குமானால், முழு முயற்சியோடு அதற்கான காரண கர்த்தாக்களாக யார் யார் இருந்தார்கள், அறிவியல் அறிஞர்கள், விற்பன்னர்கள் என்று எல்லாவற்றையும் தெரிந்து சொல்லி யிருப்போமானால் மிக நன்றாக இருக்கும். எப்போதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் முந்திக் கொள்வார்கள். இதில் முந்திக்கொண்டு இருக்க வேண்டியதில்லை (சிரிப்பு). ஒரு நாள் பொறுத்திருக்கலாம். இதுவரையிலும் . . .



1987 மார்ச் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளைக்கு முழுமையாக நம்முடைய வாழ்த்துக்களை வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதுவரையில் நிகழ்ந்த சாதனைகளுக்கு நம்முடைய வாழ்த்துக்கள் உரியன வாகுக.

## 3. தகவல் கோரல்.

### பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு வினாத்தாள் வெளியானது குறித்து.

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினமணி நாளிதழிலே எஸ்.எஸ்.எல்.சி. ஆங்கில கேள்வித்தாள் அவுட் என்று ஒரு செய்தி வெளியாகி யிருக்கிறது. 10 ஆம் வகுப்பு ஆங்கிலம் இரண்டாவது தாள் தேர்வுக்கான வினாத் தாள்கள் விடையுடன் காஞ்சிபுரம், மதுராந்தகம், செங்கல்பட்டு போன்ற இடங்களில் ஞாயிற்றுக் கிழமை முதலே தாராளமாக விற்பனைக்கு வந்துள்ளது. சுருங்கச் சொன்னால் இந்த வினாத் தாள் அவுட்டாகிவிட்டது என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'செய்தி அவுட்', இத்துடன் விடுங்கள். முழுமையாக இங்கே சொல்ல வேண்டாம். கல்வி அமைச்சரும் வரவில்லை. பொது நலன் கருதி எழுப்பி விட்டீர்கள். இத்துடன் விடுங்கள் (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றி முழுமையையும் ஆராய்ந்து நிலைமையை அறிவிக் கின்ற தன்மை ஏற்படுகின்றவரையில் அதுபற்றி எதுவும் கூறுவதற்கில்லை. மேலும் இதுபற்றிய முழுமையான விவரமும் என்னிடத்தில் இல்லை. அதை கல்வித் துறைதான் ஆராய வேண்டும். மேலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நிலையில் முழு விவரத்தையும் சொல்லும் நிலையில் இருப்பார்களா என்று சொல்லுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருப்பதன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 24

காரணமாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், கல்வித் துறை, நிலைமையை ஆராய்ந்து வாய்ப்பு ஏற்படும்போது இந்த அவைக்கு அதுபற்றிய விவரக் குறிப்புகளை அளிப்பார்கள்.

### 4. கவன ஈர்ப்பு.

**(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை தூசியினால் பயிர்கள் பாதிப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் வி. பால கிருஷ்ணன், எ. எஸ். ஏ. ஆறுமுகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராஜர் மாவட்டம், ஆலங்குளத்திலுள்ள தமிழ் நாடு சிமெண்ட் ஆலைக் கழிவுப் புகையினால், பல விவசாயிகளின் விளைநிலங்களும், புன்செய் பயிர்களும் பலன் தாராமல் கெட்டுப் போவதால் அந்தப் பகுதி விவசாய மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட் ஆலங்குளம் தொழிற்சாலை, காமராஜ் மாவட்டத்தில் இராசபாளையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இத்தொழிற் சாலை 1970 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை மாதமொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் போர்ட்லண்ட் போஸலோனா சிமெண்ட்டும் 3,300 மெட்ரிக் டன் சாதாரண போர்ட்லண்ட் சிமெண்ட்டும் தயாரிக்கிறது.



1987 மார்ச் 24] [திரு. ப. உ. சண்முகம்]

இத்தொழிற்சாலை ஈர முறையில் சிமெண்ட் தயாரிக்கிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு பிரதான மூலப்பொருள் சுண்ணாம்புக் கல் ஆகும். சுண்ணாம்புக்கல் தேவையான அளவிற்கு உடைக்கப் பட்டு, கலவை மில்களுக்கு அனுப்பப்படுகிறது. அங்கு சுண்ணாம்புக்கல் கலவையாக்கப்படுகிறது. இந்தக் கலவையானது சூளைகளில் எரியூட்டப்பட்டு கிளிங்கர் தயாரிக்கப்படுகிறது. தூளாக்கப்பட்ட நிலக்கரியானது எரியூட்டுவதற்குப் பயன் படுத்தப்படுகிறது. பின்னர் கிளிங்கருடன் ஜிப்சம் சேர்க்கப்பட்டு சிமெண்ட் ஆலையில் தூளாக்கப்பட்டு, சிமெண்ட் தயாரிக்கப் படுகிறது.

இத்தொழிற்சாலையிலுள்ள இரண்டு சூளைகள் மற்றும் இரண்டு சிமெண்ட் மில்கள், தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் தூசுக்கு ஆதாரமாகும். சூளைகளிலிருந்து வெளிவரும் மாசுப் பொருட்களை வெளியேற்றுவதற்கு மட்டும் 60 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கி அமைக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் மில்களிலிருந்து வெளிவரும் மாசுப் பொருட்களை வெளியேற்றுவதற்கு மட்டும் மற்றொரு 18.5 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கி அமைக்கப் பட்டுள்ளது. இத்தொழிற்சாலை, ஒவ்வொரு சூளையிலிருந்தும் வெளிவரும் தூசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த எலக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேடர்களைப் பொருத்தியுள்ளது. சிமெண்ட் மில்லிலிருந்து வெளிவரும் மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்த ஒரு சிமெண்ட் மில்லுக்கு இரண்டு தூசு தடுப்பான்கள் பொருத்தப் பட்டுள்ளன. நான்கு தூசு தடுப்பான்களும், மாசுப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்காக எலக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டருடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்படித் தொழிற்சாலை அருகிலுள்ள காற்று மண்டலத்தின் தன்மையை அறிவதற்காக ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. தொழிற்சாலையைச் சுற்றி அமைக்கப்பட்ட எட்டு ஆய்வு இடங்களில், மூன்று ஆய்வு இடங்களில் தூசுப் பொருட்களின் அளவானது வாரியம் நிர்ணயித்துள்ள அளவைக் காட்டிலும் அதிகமாக இருப்பது ஆய்வின்படி தெரிய வந்துள்ளது. இத்தொழிற்சாலை வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளை அடைவதற்கு வேண்டிய, நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 மார்ச் 24

மேற்படித் தொழிற்சாலை, மின்தடை (Power cut) மற்றும் தரமற்ற நிலக்கரி இவற்றின் காரணமாக எலக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களைத் தொடர்ந்து செயல்படுத்த முடியவில்லையெனத் தெரிவித்துள்ளது. மேற்படி பிரச்சினைகளைப் போக்க, இத்தொழிற்சாலை ஏற்கனவே 2,500 கே.வி.ஏ. ஜெனரேட்டர் செட் ஒன்றை அமைத்துள்ளது. மற்றொரு 2,500 கே.வி.ஏ. ஜெனரேட்டர் செட் அமைக்கப்பட்டு வருகிறது. இரண்டு ஜெனரேட்டர் செட்டுகளும் அமைக்கப்பட்ட பின்பு, எலக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேட்டர்களைத் தொடர்ந்து செயல்படுத்தி, மாசுப் பொருட்கள் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தலாம். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இப்பொருள் குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தில் உள்ள தமிழக அரசுக்குச் சொந்தமான ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலே ஒருநாளைக்கு 1,200 டன் சிமெண்ட் உற்பத்தி ஆகின்றது. 120 டன் அங்கே கழிவுப் பொருளாக வெளியே வருகிறது. அந்தக் கழிவுப் பொருள்களிலேயிருந்து சிமெண்ட் 30 டன் உடன் வெளியே வந்து கொண்டு இருக்கிறது. இதனால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற கரிசல் நிலங்களிலே இந்தத் தூசிகள் பட்டவுடனே அந்த நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்ற நிலங்களாக இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இதனால் பல குடிநீர்க் கிணறுகளிலே அந்தத் தூசிகள் பட்டவுடனே அந்த நீர்நிலையானது மிகவும் உப்புத் தண்ணீரை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, இதை உடனடியாகப் போக்குவதற்கு அந்த வாரியத்திற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தரவிட்டு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையிலே பிரிசிபிடேடர் ஒன்று இயங்காமல் இருந்ததற்குக் காரணம் மின் தடை இருந்தது என்றும், தரமான கரி இல்லாததன் காரணத்தாலும்தான் என்ற தகவல் கூறப்பட்டிருக்கிறது. மின் தடை இல்லாமல் ஓட்டுவதற்காக ஜெனரேட்டர் ஒன்று வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு ஜெனரேட்டரை வாங்கியிருக்கிறார்கள். அதைப்



1987 மார்ச் 24] [திரு. ப. உ. சண்முகம்]

பொருத்தியானதற்குப் பிறகு, இந்தச் சம்பவம் நடக்காது என்று நம்புகிறேன். இருந்தாலும் இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இதுபற்றி நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எலக்ட்ரோ ஸ்டாடிக் பிரிசிபிடேடர் அமைக்கப்பட்டிருந்தாலும் அது சரியாகப் பொருத்தப்படவில்லை. இரண்டாவதாக அந்த யூனிட்டானது வெட் ப்ராசஸ் யூனிட்டாக இருக்கிறது. அதை டிரை ப்ராசஸ் யூனிட்டாக மாற்றுவதற்கு இந்த ஆண்டு வாரியத்திற்கு உத்தரவிட்டால் நல்லது. அருகில் இருக்கின்ற ராம்கோ போன்ற நிறுவனங்களெல்லாம் அந்த யூனிட்டை டிரை யூனிட்டாக மாற்றியிருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு நல்லமுறையிலே இருக்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான தீங்கும் இன்றி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, அந்த வாரியத்தின் மூலம் அந்த வெட் யூனிட்டை, டிரை யூனிட்டாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி வாரியம் அவர்களுக்கு அறிக்கை அனுப்பும். நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மின் தடை காரணமாக இது செயல்படாமல் இருப்பதாகவும், இதற்காக ஜெனரேட்டர் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள நூற்றுக்கணக்கான மக்களும், அங்கிருக்கின்ற ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் இந்த ஒரு மனுவை அரசுக்கு அனுப்பி மனுவின் நகலைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் சொல்லியிருப்பது தங்களுடைய பணப்பயிர்களான வத்தல், பருத்தி, சோளம் போன்ற சரக்குகளையெல்லாம் தூசி இருப்பதாலே மார்க்கெட்டிலே சரியாக விற்க முடியவில்லை என்று. குடிநீர்

கெட்டுவிட்டதாகவும், அதைப்போல தூசி அடிப்பதாலே கண் எரிச்சல், சளி, மற்றும் டி.பி. ஆகியவைகளால் அதிகமான மக்கள் அவதிப்படுவதாகவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை யெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட விவசாய பாதகம் எதையும் நான் மறுக்கவில்லை. அந்த அளவிற்குப் பாதகம் ஏற்படத்தான் செய்யும். அந்த பிரிசிபிடேடர் வேலை செய்ய ஆரம்பித்த பிறகு இது குறையலாம். மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதைப் பற்றி ஆராய்ந்து நிச்சயம் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வெட்டு இருந்தாலும்கூட அந்தத் தூசியைக் கட்டுப்படுத்துகின்ற இயந்திரம் இயங்குவதற்குத் தனியாக, பிரத்தியேகமான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்றும், இதனால் நாள் ஒன்றுக்கு ஒரு டன் சிமெண்ட் மீதப் படுகிறது என்றும் கணக்குகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மின்வெட்டு இருந்தாலும்கூட இதற்குரிய இயந்திரம் இயங்குவதற்கு உண்டான விசேஷ ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே அதைத்தான் சொன்னேன். ஏற்கனவே ஒரு ஜெனரேட்டர் வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு ஜெனரேட்டர் பொருத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஜெனரேட்டர்களையும் வைத்த பிறகு இந்த பிரிசிபிடேடர் தடங்கல் இல்லாமல் வேலை செய்யும் என்று அரசுக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். அது இயங்க ஆரம்பித்த தற்குப் பிறகு இம்மாதிரி குறைபாடு இருக்குமேயானால் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அரசு எடுக்கும்.





### (ஆ) முத்திரைத்தாள்கள் தட்டுப்பாடு.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகமெங்கிலும் நீதிமன்றம் மற்றும் நீதிமன்றம் அல்லாத முத்திரை காகிதங்களுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான தட்டுப்பாட்டினால், முத்திரை காகிதங்கள் கருப்பு மார்க்கெட்டில் கூடுதல் விலைக்கு விற்கப் படுவதால் பொது மக்களிடையே தோன்றியுள்ள கசப்பு உணர்வு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் தேவையான நீதிசார்ந்த மற்றும் நீதிசாரா (Judicial and Non-Judicial stamp papers) முத்திரைத்தாள்கள் யாவும் நாசிக்கில் உள்ள இந்திய பாதுகாப்பு அச்சகத்தில் அச்சடித்து வழங்கப்படுகின்றன.

தமிழகத்திற்குத் தேவையான முத்திரைத்தாள்களைக் குறித்து ஒவ்வொரு காலாண்டிற்கும் தேவைப்பட்டியல் அனுப்பப் பட்டு வருகிறது. ஆனால் இத்தேவைப்பட்டியலில் குறிப்பிட் டுள்ள அளவு குறைந்தவிலை முத்திரைத்தாள்கள் (Stamp papers of lower denominations) இந்த அச்சகத்திலிருந்து அனுப்பாத காரணத்தால் தமிழகத்தில் இந்த முத்திரைத்தாள் இனங்களில் பற்றாக்குறை ஏற்பட்டது. இப்பற்றாக்குறையைப் போக்கும் பொருட்டு, கடிதம், தொலைச்செய்தி ஆகியவை மூலமாக அவ்வப்போது அச்சகத்துடன் தொடர்பு கொண்டு, தமிழகத்திற்குத் தேவையான அளவிற்கு சரக்கினை அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டது. தமிழகத்தில் ஏற்பட்ட இந்த முத்திரைத்தாள் பற்றாக்குறை பற்றி மைய அரசின் கவனத்திற் குக் கொண்டு வரப்பட்டு தமிழகத்திற்குத் தேவையான முத்திரைத் தாளின் முழு அளவை அனுப்பி வைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மைய அரசு கோரப்பட்டுள்ளது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 மார்ச் 24

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள முத்திரைத்தாள் தட்டுப்பாட்டினை அச்சக அதிகாரிகளுக்கு நேரில் தெரிவித்து பற்றாக்குறையை களையும்பொருட்டு, இரண்டு முறை (15—4—1986 ஆம் நாளன்றும், 11—8—1986 ஆம் நாளன்றும்) அதிகாரிகள் அச்சகத்திற்கு அனுப்பப்பட்டனர். மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளின் பயனால் தற்போது அச்சகத்திலிருந்து பெறும் சரக்கு அளவில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

தமிழகத்திற்குத் தேவையான சரக்கினை உடன் அனுப்பி வைக்கவேண்டிய அவசியம் பற்றி தெரிவித்துள்ள கடிதத்திற்கு அச்சகப் பொது மேலாளர் தனது பதில் கடிதத்தில் கல்கத்தாவில் உள்ள "திட்டாகூர்" காகித தொழிற்சாலை நிறுவனத்திடமிருந்து முத்திரைத்தாள் அச்சடிப்பதற்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்படும் நீர்க்குறியிட்ட (Water Marked) தாள்கள் தேவையான அளவிற்கு கிடைக்கவில்லையென்பதாலும், தொழிலாளர் பிரச்சினைகளையொட்டி இந்நிறுவனம் அடிக்கடி கதவடைப்பு செய்து விடுவதாலும் உற்பத்திக் குறியீட்டை அச்சகத்தால் எட்ட முடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களுக்கும் முத்திரைத் தாள்கள் அச்சடித்து வழங்க வேண்டியிருப்பதால் ஒவ்வொரு மாநிலத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் பட்டுவாடா செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் முத்திரைத்தாள்கள் அச்சடிப்பதற்காகத் தேவைப்படும் பிரத்தியோகமான நீர் குறியிட்ட (Water Marked) தாள்கள் கிடைப்பதில் உள்ள சிக்கலைத் தவிர்க்கும் வகையில், இவ்வகைப் பேப்பர்கள் தயாரிக்கும் இதர தொழிற்சாலைகளையும் அச்சகம் தொடர்புகொண்டு வருவதாகப் பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

முத்திரைத்தாள் பற்றாக்குறையினால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில், பத்திரம் பதிவு செய்யும் அதிகாரிகள், இந்திய முத்திரைச்சட்டத்தின் பிரிவு '41'-படி முத்திரைத்தீர்வை செலுத்தும்போது முத்திரைத்தாள்களுக்கு பதிலாக அதற்கு சமமான தொகையை ரொக்கமாகவும் பெற்றுக் கொண்டு பத்திரங்கள் பதிவு செய்யும்படி பதிவு அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பதிவுத்துறைத் தலைவர் கூறியுள்ளார்.



1987 மார்ச் 24] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

நீதிசாரா முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் உள்ள பற்றாக்குறை நிலைமையை ஈடு செய்யும் வகையில் சிறப்பு ஒட்டு வில்லைகள் (Special adhesive stamps) போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பற்றாக்குறையை பயன்படுத்தி இலாபத்தைக்குறியாகக் கொண்டு முத்திரைத்தாள்களை உரிய விலைக்குமேல் அதிகமாக விற்றால் அவ்வாறு விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பதிவுத்துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் மட்டும் அல்ல; இப்பற்றாக்குறை இந்திய நாடு முழுவதும் உள்ளதென கருவூலக் கணக்குத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மேலே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளுக்குப்பின் பற்றாக்குறை தற்போது ஓரளவுக்கு மாறி வருகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இரண்டு ரூபாய்க்கான முத்திரைத் தாள் 20 ரூபாய்க்கு விற்கிறது. முத்திரைக் காகிதத் தட்டுப்பாடுதான் இதற்குக் காரணமாக இருக்கிறது. இந்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நான் ஏற்கெனவே அரசுக்கு இரண்டு ஆலோசனைகளைச் சொல்லி இருக்கிறேன். அந்த ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து, இப்படிப்பட்ட தவறுகள் மீண்டும் நடக்காமலிருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்திரைக் காகிதம் 1000 ரூபாய், 2000 ரூபாய் மதிப்புள்ளவைகளுக்கு குறைந்த கமிஷன் கிடைக்கிறது. அதேநேரத்தில் 2 ரூபாய், 10 ரூபாய், 100 ரூபாய் முத்திரைக் காகிதங்களாகக் கொடுத்தால் நிறைய கமிஷன் கிடைக்கிறது. ஆகவே 1,000 ரூபாய்க்கு முத்திரைக் காகிதம் வேண்டுமென்று கேட்டால் 10 ரூபாய், 100 ரூபாய் முத்திரைக் காகிதங்களை 1,000 ரூபாய்க்குக் கொடுத்துவிடுகிறார்கள். அதிகமான கமிஷன் காரணமாக, அதன் காரணமாக குறைந்த மதிப்புள்ள முத்திரைக்

காகிதங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதைத் தடுக்க வேண்டுமென்றால் ஒரு முத்திரைக் காகிதத்திற்கு இவ்வளவு கமிஷன் என்று வைக்காமல் மொத்த மதிப்புக்கு இவ்வளவு கமிஷன் என்று வைத்துவிட்டால் மேலும் இந்தத் தவறு நடக்காது. 1000 ரூபாய் மதிப்புக்கு முத்திரைக் காகிதம் கேட்டால் 1000 ரூபாய் மதிப்புள்ள ஒரே முத்திரைக் காகிதத்தைக் கொடுப்பார்கள். ஆகவே, இந்தக் கமிஷன் பிரச்சனையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு· வி· வி· சுவாமிநாதன் :** துணைத தலைவர் அவர்களே, கமிஷன் பிரச்சனை காரணமாக நீதிமன்றம், நீதிமன்றம் சாராத முத்திரைத் தாள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தமிழக அரசு முத்திரைத் தாள்கள் எவ்வளவு தேவை என்ற விபரத்தை மத்திய அரசின் நாசிக்கிலுள்ள அச்சகத்திற்கு முன்கூட்டியே தெரிவித்து வருகிறது. அவர்களுக்குத் தேவையான நீர்க்குறியிட்ட (Water Marked) தாள்கள் பெறமுடியாததால் குறைந்த அளவுக்குத்தான் தயாரிக்கப்படுகிறது; அதனால் மாநிலங்களுக்கு இந்தத் தட்டுப்பாடு இருக்கிறது; ஆகவே முன்னுரிமை அடிப்படையில் நாங்கள் கொடுத்து வருகிறோம் என்று சொல்கிறார்கள். நாசிக் அச்சகத்திலிருந்து நமக்குத் தேவையான அளவுக்கு முத்திரைத் தாள்களை அனுப்பினால் இந்தத் தட்டுப்பாடு இருக்காது. கடிதம் மூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும், அலுவலர்களை நேரில் அனுப்பியும் தட்டுப்பாடு இல்லாமல் முத்திரைத் தாள்களைப் பெற ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு நீதிமன்றம் அல்லாத பத்திரப் பதிவுகளைச் செய்யும்போது இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 41-ன்படி முத்திரைத் தாள்களுக்கு சமமான தொகையை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு, பதிவு செய்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அதைப்போன்று நீதிமன்றங்களில் வழக்கு போடும்போது சப் கோர்ட்டாக இருந்தாலும், முன்சீப் கோர்ட்டாக இருந்தாலும், மற்ற கோர்ட்டுகளாக இருந்தாலும் முத்திரைக் காகிதத்திற்கு சமமான தொகையை ரொக்கமாகச் செலுத்த அரசு ஏற்பாடு செய்தால் அதன் மூலம் முத்திரைக் காகிதத் தட்டுப்பாட்டை சமாளிக்க முடியும். அதைப்போன்றே





ஜுரிஸ்டிக்ஷன் தாண்டி வந்து முத்திரைக் காகிதங்களை வாங்கிச் சென்று அதிக விலைக்கு விற்கின்ற சூழ்நிலையும் இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் தென்காசியிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து முத்திரைக் காகிதங்களை வாங்கிக் கொண்டு போய் அங்கே அதிக விலைக்கு விற்கின்ற நிலைமை ஏற்படுவதால் சென்னையில் தட்டுப்பாடு வருகிறது. இதைப்போன்று மற்ற இடங்களிலும் ஏற்படும். இந்த நிலையைப் போக்க, அந்த அந்த ஜுரிஸ்டிக்ஷனுக்குள் வாங்கக் கூடிய முத்திரைக் காகிதம்தான் செல்லுபடியாகும் என்று உத்தரவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** துணைத் தலைவரவர்களே, உரிய விலைக்கு மேல் விற்றால் அப்படி விற்கின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்காவது இப்படிப்பட்ட தவறு நடக்கிறது என்று சுட்டிக்காட்டினால் சம்பந்தப்பட்ட பதிவாளருக்கு தகவல் கொடுத்து, சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அதிக விலைக்கு விற்பவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்படும். முத்திரைத் தாள் தட்டுப்பாட்டை உத்தேசித்து பொது மக்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்க முத்திரைச் சட்டத்தின் பிரிவு 41-ன்படி முத்திரைத் தாள்களுக்கு சமமான தொகையை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போன்று நீதி மன்றங்களிலும் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88, அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1987-88 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப்* பேரவை முன் வைக்கிறேன்.

* 510–513 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

## 6. இறுதித் துணை நிதி அறிக்கை 1986-87 அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே,

1986-87 ஆம் ஆண்டிற்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 450.69 கோடியில், வருவாய்க் கணக்கில் ரூ. 352.10 கோடியும் மூலதனக் கணக்கில் ரூ. 98.59 கோடியும் அடங்கும்.

1986-87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை தயாரிக்கும்போது எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்திற்கும் போதுமான அளவிற்கு நிதி ஒதுக்க மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும், மிக வேகமாக மாறி வருகின்ற காலக் கட்டத்தில், வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிற இந்த அரசு, இத்தேவைகளை நிறைவு செய்ய, செலவினங்களுக்கு அனுமதி வழங்க வேண்டிய அவசியமேற்படுகிறது. இதன் பயனாக, 1986-87-இல் புதிய செலவினங்கள் பலவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளில் இந்த செலவினங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களுள் முக்கியமான செலவினங்கள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிட விழைகிறேன்.

மாநிலத்தில் நிலவும் வறட்சி நிலையைச் சமாளிக்க, வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கான செலவுகள் பலவற்றிற்கு அரசு அனுமதி வழங்க வேண்டியிருந்தது. உழைப்பை நோக்கமாகக் கொண்ட திட்டப் பணிகளுக்கு இறுதித் துணை மதிப்பீட்டில் ரூ. 12.14 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. துளைக் கிணறுகள் தோண்ட ரூ. 5 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. லாரிகள் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லவும், திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கவும் ரூ. 2.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசு, மின்சக்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1986-87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேற்பட்டு உதவித் தொகையாக ரூ. 30 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும்,



கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் தயாரிக்கும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்குத் தள்ளுபடி அளிப்பதற்காக அவற்றிற்கு உதவித் தொகை வழங்கும் வகையில் அரசு ரூ. 14.51 கோடி அனுமதித்தது. காவிரி கழிமுகப் பகுதியில் உள்ள உழவர்களுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கும் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்காக இறுதித் துணை மதிப்பீட்டில் மேலும் ரூ. 20.83 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. 31—3—1986 அன்றுள்ள நிலவரப்படி, நிலுவையாக உள்ள கூட்டுறவுக் கடன்களுக்கு உரிய வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்ய அரசு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. இதற்காகத் துணை மதிப்பீட்டில் ரூ. 10 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

1986-87-இல், பொதுத் துறை நிறுவனங்கள் பலவற்றிற்கான ஒதுக்கீட்டை அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழிவகை முன்பணமாக ரூ. 15 கோடி அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூ. 5 கோடியும், தமிழ்நாடு தோல்பொருள் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூ. 1 கோடியும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குக் கடனாக ரூ. 2.50 கோடியும் அனுமதிக்கப்பட்டன. இவை யாவும் இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டிடமிருந்து 2-வது, 3-வது கப்பல்களை வாங்க பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குக் கடனாக ரூ. 5.85 கோடியை அரசு வழங்கியுள்ளது.

மூன்பு கள் இறக்கி வந்தவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்க, கடனாகவும் மானியமாகவும் ரூ. 6 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 4 கோடி இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 2.88 கோடி அனுமதிக்கப்பட்டது.

அனைத்து வகை அரசுப் பணியாளர்களுக்கும் ஒரு மொத்த கருணைத் தொகை வழங்க அரசு அனுமதித்தது. இதற்கென எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 25 கோடி முன்பணமாக வழங்கப்பட்டது. இது இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. நகராட்சிகள் பலவற்றுக்கு அவற்றின் நிதி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 24

நெருக்கடியைச் சமாளிக்க, வழிவகை முன்பணமாக பல்வேறு தவணைகளில் மொத்தம் ரூ. 2.60 கோடியை அரசு வழங்கி உள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழ் மேற்கொண்ட பணிகளை முடிக்க 25 நகராட்சிகளுக்கு ரூ. 1.25 கோடி அனுமதிக்கப்பட்டது. துணை மதிப்பீட்டில் இத்தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 8,222 வீடுகள் கட்ட ரூ. 4.95 கோடி செலவிடவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1986-87 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்களுக்கு ஒப்புதல் அளித்து, இந்த வளர்ச்சிப் பணிகளை அரசு மேற்கொள்ளத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்கி அனுமதி அளிக்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன்.

வணக்கம்.

## 7. அறிவிப்பு.

### இறுதித் துணை நிதி அறிக்கை 1986-87 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986-87 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதி அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க 25—3—1987 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள்ளாக பேரவைச் செயலகத்திடம் சேர்ப்பிக்க வேண்டும்.

[முற்பகல் 11.20]

### 8. வரவு-செலவுத் திட்டம் 1987-88 பொது விவாதம் (தொடர்ச்சி)

*** திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த போது 45-வது பக்கத்தில் 'இந்த நிதிநிலை அறிக்கையின் மீது



1987 மார்ச் 24] [திரு. எஸ். வேணுகோபால்]

நடைபெற இருக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்ற இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல எண்ணத்தோடும், தூய நோக்கத்தோடும் எடுத்துச் சொல்லும் கருத்துக்கள் அரசுக்குப் பெரிதும் உதவியாக அமைய வேண்டும் என்றும், நியாய முறையில் சுட்டிக்காட்டப்படும் குறைகளும் அழுக்காறில்லாமல் நீதியின் அடிப்படையில் எடுத்துக் காட்டப்படும் குற்றங்களும் உரிய முறையில் களையப்பட அரசுக்கு உதவிகரமாக அமைய வேண்டும் என்றும் விரும்புகிறேன்' என்று சொன்னார்கள்.

அந்த நிலையிலேதான் நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில், தோழமை கட்சியாக இருந்தாலும் கூட, தோழர்களுக்கு நல்ல எண்ணத்தோடு சில கருத்துக்களை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நகரத்திலே நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால், சென்னையைப் பற்றி மிக நன்றாகத் தெரியும். சென்னை நகரம், மாநகராட்சியாகவும், குடிசை மாற்று வாரியப் பகுதியாகவும், வடிகால் வாரியம் என்றும் மூன்று பிரிவுகளாக பிரிந்திருக்கின்றது. சென்னை நகரத்தின் பணிகளே இந்த மூன்றில்தான் உள்ளது. இந்த 3 பிரிவுகள்தான் சென்னை நகரத்தின் முத்தாய்ப்பான வழி முறைகளாக இருக்கின்றன. சென்னை மாநகரத்திலே விளக்குகளே சரியாக எரிவதில்லை. உள்ளாட்சி சம்பந்தமான அமைச்சர்கள் 3 பேர்கள் மாறிவிட்டார்கள். முதலாவதாக அமைச்சராக இருந்த ப. உ. ச. அவர்களிடம் இது பற்றி கேட்டபோது ஒரு காலக் கட்டத்தில் சொன்னார்கள். வட சென்னையிலே விளக்குகளே எரிவதில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த நகரம் பண்டைய காலத்து அமைப்பில் அமைந்த ஒரு நகரம். அதனால் விளக்குகள் எரிய சாத்தியக் கூறுகள் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தால் நிறைய செலவுகள் ஆகும் என்று சொன்னார்கள். இந்த ஆக்கப் பணிக்கு இந்த அரசு உதவி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதிலும் அங்கே இருக்கின்ற முதன்மையான தெருவான சூரிய நாராயண செட்டி தெருவிலே விளக்குகள் முழுமையாக எரிவதே இல்லை.

அடுத்து சாலைகள். கடந்த ஆண்டு நகராட்சி மன்றம் பல சாலைகளை போட்டிருந்தாலும் இன்னும் பல சாலைகள் போடப்படவில்லை. அதுபோல கழிப்பிடங்கள் கட்டுகிறார்கள். கழிப்பிடங்களை கட்டும்போது, அது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கிறது. ஆனால் கட்டியதற்குப் பிறகு அந்த அழகு

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 மார்ச் 24

சீர்குலைந்து செம்மையாக இல்லாமல் போகிறது. ஆகவே அத்தகைய கழிப்பிடங்களில் முறையாக தண்ணீர் வசதியும் பராமரிப்பு வசதியும் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை நகரத்திலே கூவம் இருப்பதால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று நான் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டேன். நேற்றைய முன்தினம் நான் இங்கே பேசுவதற்கு குறிப்பு தயார் செய்யும்போது திருக்கோயில் ஒன்றிய செயலாளர் வடிவேல் அவர்கள் வந்தார்கள். என்ன தயாரிக்கிறீர்கள் கொசு என்று கேட்டார்கள். என்னையே ஏன் கொசு என்று கேட்டார்கள் என்றால் கொசுவைத் தவிர நீங்கள் வேறு எதையும் அதிகமாகப் பேசுவதில்லையே என்றார்கள். அப்படி நான் சொல்வதற்குக் காரணம் சென்னை நகரத்திலே கொசுக்கள் அவ்வளவு அதிகமாகிவிட்டன. சென்னையிலே இருக்கும் கொசுக்கள் ஜாதி இல்லாமல் மதம் இல்லாமல் சந்தர்ப்பம் இல்லாமல் எல்லோரையும் கடிக்கிறது. கொசு மருந்து சரிவர அடிப்பதில்லை என்று பலமுறை சொல்லியும்கூட அது தீர்ந்தபாடில்லை.

அடுத்து 1985 ஆம் ஆண்டு அடித்த புயலிலே என்னுடைய தொகுதியிலே 19-வது வட்டம் சௌகார் தெருவிலே ஒரு பள்ளம் விழுந்து அதிலே பல பேர் விழுந்து இறந்தும் விட்டார்கள். அந்தப் பள்ளத்தை மூட வேண்டும் என்று பலமுறை சொல்லியும் கோப்புகள் மேலே போகிறது, கீழே போகிறது என்று மாறி மாறி நிர்வாகப் பிரச்னைகள் காரணமாக நடைமுறைப்படுத்தப் படாமல் இருக்கிறது. அங்கே இருக்கிற அதிகாரி அலாரணி என்பவர். அவர்தான் அங்கே இருக்கிற அந்தப் பிரச்னைகளைப் பார்ப்பவர். கமிஷனரிடத்தும் பலமுறை சொல்லியாகிவிட்டது, ஸ்பெஷல் ஆபிசரிடமும் சொல்லியாகிவிட்டது. ஆனால் ஒன்றும் பயனில்லை. அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

அடுத்து சென்னை நகரத்திற்கு மேம்பாட்டுக் குழு என்று ஒன்று ஆரம்பித்தார்கள். சென்னை சிங்காரச் சென்னையாக அழகாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் ஒரு குழு போட்டார்கள். நான் இரண்டு ஆண்டுகளாக சொல்லியிருக்கிறேன். 3-வது ஆண்டும் சொல்லுகிறேன். அந்தக் குழு அதிகமாக கூட்டப்படவே இல்லை. 2 தடவை கூடிற்று. சென்னை சிங்காரத் தோட்டமாக, அழகுத் தோட்டமாக மாறிவிடும் என்று எண்ணினோம். ஆனால் அது நடைபெறவில்லை. ஏன்



1987 மார்ச் 24] [திரு. எஸ். வேணுகோபால்]

நடைபெறவில்லை? எதற்காக நடைபெறவில்லை? இப்படி ஒரு கருத்தே கேட்கப்படவில்லை. அதற்குப் பின்னால் கடந்த ஆண்டில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் கே. ஏ. கே. அவர்கள் சொன்னார்கள். அட்வைசரி போர்டு ஒன்று போடப் பட்டிருக்கிறது. அந்த போர்டிலே நகரத்தின் வளர்ச்சி பற்றி ஆய்வு உடனடியாகச் செய்யப்படும். ஜி.ஓ. போடப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். அந்த ஜி.ஓ. போடப்பட்டு விட்டதா என்றால் இதுவரையில் போடப்பட்டதாகத் தெரியவில்லை. அது நடைமுறைக்கே வரவில்லை. சென்னை நகரத்தில் இருப்பவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? சென்னையில் நிறைய மாடுகள் கட்டப்பட்டிருக்கின்றன, சாக்கடைகள் அடைத்திருக்கின்றன என்றும், மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் சொன்னோம். சென்னை நகரத்தை விட்டு மாடுகளை வெளி இடங்களுக்கு மாற்றுங்கள் என்று கேட்டோம். பரிசீலிக்கிறோம், சிந்திக்கிறோம், ஆவன செய்கிறோம், ஆக்கப் பணியில் ஈடுபடுகிறோம் என்று கோர்வையான வார்த்தைகள், சொல் அழுத்தங்கள் இருக்கிறதே தவிர, அதற்கேற்ற செயல்பாடுகள் இல்லையென்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து வடிகால் வாரியம். சென்னையிலே தண்ணீர் தட்டுப்பாடு மிக அதிகம். எங்கே பார்த்தாலும் தண்ணீர் இல்லையென்று பெண்கள் குடங்களைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள்; படித்தவர்கள் பக்கெட்டுகளைத் தூக்கிக் கொண்டு ஒரு பக்கெட் கிடைத்தால் போதும் என்று அலைகிற நிலைமை இருக்கிறது. குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க சென்னையில் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மரியாதைக்குரிய ஜேப்பியார் அவர்கள் எல்லோரையும் அழைத்துப் பேசுகிறார்கள். இப்படி பேசி பணிகளை மேற்கொண்டாலும் இன்னும் தீவிரமான நடவடிக்கை தேவைப் படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் இன்றைக்கு 40 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அதற்கேற்ற அளவிற்கு இன்றைக்கு திட்டங்கள் போடப்படவில்லை. இன்றைக்கு 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தண்ணீர் வழங்குவதற்காக ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். நான் அவரிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் தண்ணீருக்கு இந்த ஆறு கோடி ரூபாய் என்பது போதுமானதாக

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 மார்ச் 24

இருக்காது. இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டும். அப்போது தான் அனைத்துப் பிரிவினருக்கும் தண்ணீர் வழங்க முடியும். சென்னையில் மக்கள் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். என்னுடைய தொகுதியில் பல இடங்களில் மக்கள் தண்ணீர் இல்லாமல் துயரப்படுகிறார்கள். நேதாஜி நகர், சஞ்சய் காந்தி நகர், நெடுஞ்செழியன் நகர், இந்திரா காந்தி நகர், அண்ணா நகர், கோவிந்தசாமி நகர், மூப்பனார் நகர், ஜீவா நகர், காமராஜர் நகர், சாஸ்திரி நகர், பாரதி நகர், திருவள்ளுவர் நகர், கண்ணகி நகர், வ.உ.சி. நகர், போஜராஜ நகர், ரெயில்வே காலனி இப்படி பல்வேறு இடங்களில் என்னுடைய தொகுதியில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு துரிதமான நடவடிக்கையெடுத்து தண்ணீர் அதிகமாகக் கொடுக்க வேண்டும். அங்கே தண்ணீர் வழங்குவதற்கு இருக்கிற லாரிகள் குறைவாக இருக்கின்றன. அவைகளும் ரிப்பேராக இருக்கிறதென்று சொல்கிறார்கள். ஆகவே அவைகளை சரிசெய்து இன்னும் அதிகமான லாரிகளை வைத்து தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்காங்கு இருக்கிற சாக்கடைகள் அடைத்துக் கொண்டு துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றன. அன்றைய மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் பைப்புகளை சிறியதாகப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு மக்கள் தொகை வளர்ந்து விட்ட நிலையில் பெரிய பைப்புகளை மாற்ற வேண்டுமென்றால் போதுமான பணம் இல்லை. திட்டங்கள் தீட்டினாலும் அவைகள் நடைமுறைக்கு வருகின்றபோது காலம் கடந்து விடுகின்றது. ஆகவே சென்னை நகரம் நாற்றமெடுத்து, சீரழிந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தின் தலைநகரமான சென்னை நகருக்கே இப்படி ஒரு நிலைமையென்றால் மற்ற மாவட்டங்கள் எப்படியிருக்கும் என்று பார்க்கிறபோது மிகவும் ஐயப்பாடாக இருக்கிறது. ஆகவே அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கே.என்.எஸ். டிப்போ அருகில் குடிநீர் தொட்டி கட்டியிருக்கிறார்கள். அந்தத் தொட்டிக்கு சீக்கிரம் தண்ணீர் விட வேண்டும். மேல்நிலைத் தொட்டிக்கு சென்ற ஆண்டு 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் அதற்கு இன்னும் நிலம் கையகப்படுத்த வேண்டுமென்ற நிலையில் இருந்து வருகிறது. ஆகவே அரசு உடனடியாக நடவடிக்கை யெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 24] [திரு. எஸ். வேணுகோபால்]

(முற்பகல் 11-30)

அடுத்து குடிசை மாற்று வாரியம். நகரத்தில் நாள்தோறும் குடிசைகள் பெருகிக் கொண்டே போகின்றன. முன்பு இருந்த குடிசைகளுக்கு இடம் கொடுக்க முடியவில்லை. என்னுடைய தொகுதியில் நான்காவது வட்டத்தில் அண்ணா நகர், புதுவண்ணை நகர், பூங்காவனம் நகர், சீனிவாசா நகர் ஆகிய பகுதிகளில் முன்னாள் குடிசை மாற்று வாரியத் தலைவராக இருந்த திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் அட்டைகளை கொடுத்து அவர்களுக்கு வீடுகள் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் அவர்களுக்கு வீடுகள் கிடைக்கவில்லை. ஆனால் புது புதிதாக குடிசைகள் போடப்படுகின்றன. குடிசை மாற்று வாரியத்தால் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு சரியான பராமரிப்பு கிடையாது. அங்கே இருக்கிற வீடுகளில் மாடியிலிருந்து கழிவு நீர் கீழே குடியிருப்பவர்களின் தலையில் விழுகின்றது. ஏன் இப்படியென்றால் வாடகை கட்டவில்லை என்கிறார்கள். ஏன் வாடகை வசூலிக்கவில்லையென்றால் கொடுக்க மறுக்கிறார்கள் என்கிறார்கள். ஏன் கொடுக்க மறுக்கிறார்கள் என்றால், கொடுத்தால் அவர்கள் எதுவும் சரியாகச் செய்வதில்லை என்கிறார்கள். அந்த வீடுகளில் கதவுகள் ஆடுகின்றன. படிகட்டுகள் சரியாக இல்லை. கழிவு நீர் கீழே விழுகிறது. சாலைகள் போட முடியவில்லை. தண்ணீர் கொடுக்க முடியவில்லை என்று இப்படி நிலைமை இருக்கிறது. நான் கேள்வி நேரத்தின்போது ஒன்றைக் கேட்டேன். குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் இருப்பவர்களுக்கு அந்த வீடுகளை அவரவர்களுக்கே சொந்தமாக கொடுக்கும்படியாக ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். எனவே குடிசை மாற்று வாரிய வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்குகிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், அதில் வாழ்பவர்கள் இது தங்களுடைய வீடு என்று நினைத்து, அதை சீராக வைத்துக் கொள்வார்கள். அதில் வசிப்பவர்கள் பணத்தைக் கொடுத்து வாங்கிவிட்டால், சரியாக பராமரித்து வைத்துக் கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் குடிசை மாற்று வாரியத்திற்கும் பணம் வந்து சேர்ந்து விடும் என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 மார்ச் 24

குடிசை மாற்று வாரியப் பராமரிப்பிலே உள்ள வீடுகளில் தண்ணீர் பஞ்சம் என்பது மட்டுமல்ல, அங்கே குப்பைகளை எடுப்பதேயில்லை. அந்த வேலையைச் செய்வதற்கு என்று உள்ள கான்ட்ராக்ட்காரர்கள் முறையாக வேலையைச் செய்வதில்லை. வ.உ.சி. நகர் என்று ஒரு நகர் இருக்கிறது. அங்கே பெரிய தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் தொட்டியிலே இருக்கிற பம்பு சரியாக வேலை செய்வதில்லை. அங்கே தண்ணீர்ப் பஞ்சம் அதிகம். கழிவு நீர் சரியாகப் போவதில்லை. இப்படி பல பகுதிகளைப் பார்க்கும் போது இன்னொன்றையும் சொல்கிறார்கள். நகர மன்றத்திற்குச் சென்று சொன்னால், குடிசை மாற்று வாரியத்திற்குச் சென்று பாருங்கள் என்று சொல்கிறார்கள். குடிசை மாற்று வாரியத்தில் உள்ளவர்கள், மாநகராட்சி மன்றத்தைப் பாருங்கள் என்று சொல்கிறார்கள். இப்படி அவர்கள் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுவதைப் போல் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். ஏழை எளியவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்த இடம் சுத்தமாக்கப்படவில்லை. கழிப்பிடங்கள் சரியாக இல்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலைமையைப் பற்றிச் சொல்கிறபோது, மாநகராட்சி மன்றத்திலே இருப்பவர்கள் சொல்கிறார்கள், குடிசை மாற்று வாரியம் தான் செய்ய வேண்டும் என்று. அவர்களைக் கேட்டால் மாநகராட்சி மன்றத்திற்குக் கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருந்தால் சென்னை நகரம் எப்படி சீராகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து புதிய பகுதிகள். புதிய பகுதிகளில் குடிசைகளைப் போட்டவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு இட மாற்றம் கொடுக்காமல் எப்படி மாற்ற முடியும். அப்படியே தேங்கியிருக்கிறது. குடிசை மாற்று வாரியத்திலே உள்ள ஆலோசனைக் குழுவிலே கட்சிக்காரர்களை மட்டும் போட்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட அதிலே இடமில்லை. இப்படி இருந்தால் எப்படி ஆலோசனை சொல்ல முடியும்.

அதைப்போல குடிசை மாற்று வாரியத்திலே பட்டா கொடுக்க வேண்டிய இடங்கள், அம்பேத்கார் நகர், தியாகப்பச் செட்டி தெரு, ஜோசியக் குடிசை, அனந்தநாயகி நகர், டிரைவர் காலனி,



1987 மார்ச் 24] [திரு. எஸ். வேணுகோபால்]

மூப்பனார் நகர் என்று இப்படி பல இடங்கள் இருக்கின்றன. எனவே இந்தச் சென்னை நகரத்தைச் சீராக வைக்க வேண்டும் என்று சொன்னால், சென்னை மாநகராட்சி, வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகிய இந்த மூன்று துறைகளையும் ஒருங்கிணைத்து திட்டத்தை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால்தான் இந்தச் சென்னை நகரம் சீராகும். தேங்கிக் கிடக்கும் கழிவு நீர் அகற்றப்பட்டு நல்ல நிலைமையை உருவாக்க முடியும் என்று சொல்லி, அடுத்து தண்டையார்பேட்டையில் ரயில்வே மேம்பாலம் ஒன்றை மத்திய சர்க்கார் கட்டி, இரண்டு ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. ஆனால் மாநில சர்க்கார் அதைக் கட்டாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அங்கே 50 ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் தொகை இருக்கிறது.

அடுத்து இந்த நிதிநிலை அறிக்கையிலே மீனவர்களுக்கு என்று அதிகமாக ஒன்றும் சொல்லப்படவில்லை. மீனவர்களுக்கு என்று ஒரு ஆலோசனைக் குழு போடப்பட்டது, அந்த ஆலோசனைக் குழு சரியாகக் கூடவில்லை. ஒரே ஒரு தடவை தான் கூடியது. எனவே மீனவர்களுக்கு வீட்டு வசதியும், சாலை வசதியும், இன்னும் பல்வேறு வசதிகளையும் செய்தாக வேண்டும். இந்த நிதி நிலை அறிக்கையிலே புதிய திட்டங்கள் எதுவும் சொல்லவில்லை.

அடுத்து 1967 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னாலே காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட இயக்கத்தின் தலைவர் தம்முடைய தேர்தல் அறிக்கையிலே, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவோம் என்றார். ஆட்சிக்கு வந்த பின்னாலே அப்படி ரூபாய்க்கு 3 படி அரிசி போட்டார்களா என்றால், இல்லை. நாங்கள் 3 படி அரிசி போடவில்லை என்றால், எங்களை முச்சந்தியில் வைத்து சவுக்கால் அடியுங்கள் என்றெல்லாம் சொல்லிவிட்டு, ஆட்சிக்கு வந்த பின்னாலே, ஏன் 3 படி அரிசி போடவில்லை என்று கேட்டபோது என்ன சொன்னார்கள் தெரியுமா? "3 படி எங்கள் லட்சியம், 1 படி நிச்சயம்" என்றார்கள். சரி அப்படி தமிழகம் முழுவதும் ரூபாய்க்கு 1 படி அரிசி போட்டார்களா என்றால் இல்லை, சென்னைக்கும் கோவைக்கும் மட்டும் போட்டார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியான இந்த ஆட்சியிலே கூட கடந்த ஆளுநர்

[திரு. எஸ். வேணுகோபால்] [1987 மார்ச் 24

உரையின்போது மக்களுக்கு ஒரு அற்புதமான உறுதிமொழி அளிக்கப்பட்டது. அதை நான் இங்கே அப்படியே படிக்க விரும்புகிறேன்.

"வீடில்லாதோருக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் பெரியதொரு திட்டமொன்றை அடுத்த நிதி ஆண்டில் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய வீட்டு வசதியின்றி அல்லலுறும் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர் ஆகியோர்களுக்காக 5 லட்சம் வீடுகள் கட்டப்படும். அதேபோன்று வறுமைக் கோட்டுக்குக் கீழே அவதியுறும் ஏனைய குடும்பங்களுக்கும் 5 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இந்நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டுமென்ற பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது லட்சம் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டி முடித்துவிட வேண்டுமென்பதுதான் இத்திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்" என்று சொன்னார்கள். இது 1986 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட வாசகம். சென்ற ஆண்டு இங்கே அவையிலே பேசியவர்கள் பலரும் இந்தத் திட்டத்தினை உண்மையிலேயே நிறைவேற்ற இயலுமா என்றெல்லாம் தங்களுடைய அச்சத்தைத் தெரிவித்தார்கள். இதற்கு ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமே, அரசு என்ன செய்யப் போகிறது என்று கேட்டார்கள். ஆனால் போன ஆண்டு இதற்காக மத்திய அரசின் நேரடி உதவியாக ரூ. 14 கோடி நிதி ஒதுக்கமும், வரவு செலவு திட்டத்திலே ரூ. 26 கோடியும் ஒதுக்கப்பட்டது, சரி, இந்த ஆண்டு அதற்கான திட்டத்தை நிறைவு செய்கிற வகையில் நிறைய நிதியை ஒதுக்குவார்கள் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 'பெரும் வீட்டு வசதி திட்டம்' என்ற தலைப்பின் கீழ், '30 லட்சம் குடும்பத்தினருக்கு வீட்டு வசதி அளிக்க வேண்டுமென்ற நம்முடைய குறிக்கோளை எய்த, வட்ட அளவிலும் வட்டார அளவிலும் தனித்தியங்கக் கூடிய நிலையில் செங்கல், ஓடு முதலிய கட்டுமானப் பொருட்கள் உற்பத்திச் சங்கங்களை அமைக்க திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 30 லட்சம் வீடுகளைக் கட்டித் தர திட்டமிடப்படவில்லை.



1987 மார்ச் 24] [திரு. எஸ். வேணுகோபால்]

30 லட்சம் வீடுகளைப் பொதுமக்கள் கட்டிக் கொள்ளத் தேவையான செங்கல், ஓடு, ஆஸ்பெஸ்டாஸ் சீட், தயாரிக்க தனித்தியங்கக்கூடிய கட்டுமானப் பொருட்கள் உற்பத்திச் சங்கங்களை அமைக்க திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இது எப்படி இருக்கிறது என்றால் கடந்த ஆண்டு 1967-க்கு பின்னாலே 3 படி லட்சியம் 1 படி நிச்சயம் என்பதைப் போல் "30 லட்சம் வீடுகள் எங்கள் லட்சியம், அதற்குத் தேவையான செங்கல், ஓடு போன்ற கட்டுமானப் பொருள்களை உற்பத்தி செய்து தரும் சங்கங்கள் நிச்சயம்" என்பதைப் போல இருக்கிறது.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 3 படி லட்சியம், 1 படி நிச்சயம் என்று எல்லாம் விவரித்தார்கள். அதை மாண்புமிகு அமைச்சர்களும் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் அந்தக் கொள்கையைச் சொல்லி அதை பின்னாலே வாபஸ் வாங்குகின்ற நேரத்திலே அதற்கான விளக்கங்களை எல்லாம் சொன்னார்கள். அப்போது மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் ஒன்றாகத் தான் இருந்தார்கள். இன்றைக்கு அந்தக் கொள்கையை விமர்சிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் வாளா இருப்பதற்கு என்ன மர்மம் என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் வாளா இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பேசுகிற ஒவ்வொரு கருத்துக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இது பல்முறை பேசி முடிந்து ஆகிவிட்டது. ஆக எவ்வளவோ சொல்லலாம். இந்தியா சுதந்திரம் பெற்று 15 ஆண்டு காலத்தில் எல்லோருக்கும் கல்வி கொடுக்கப்படும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. முடிந்ததா? வறுமையை அடியோடு போக்குவோம் என்று சொன்னார்கள், முடிந்ததா? நான் என்னுடைய உரையில் அடுக்க வேண்டும் என்றால் 50-ஐ அடுக்க முடியும். அதனால் தான் பேசாமல் உட்கார்ந்து இருக்கிறேன்.

[1987 மார்ச் 24

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டிலே எத்தனைப் பழங்குடி மக்கள், எத்தனை நரிக்குறவர்கள், எத்தனை ஆதி திராவிடர்கள் வீட்டு வசதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள்? வட்டார அளவில் எவ்வளவு பேர்? மாவட்ட அளவில் எவ்வளவு பேர்? மாநில அளவில் எவ்வளவு பேர்? இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க மனைகள் எங்கே? அவற்றை எப்போது எப்படி ஆர்ஜிதம் செய்யப் போகிறோம்? இதற்கு நிதி வசதி என்ன? ஒரு புள்ளிவிவரமும் இல்லை. 3 படி லட்சியம் என்பதைப் போல் 30 லட்சம் வீடுகள் லட்சியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவு தான். இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியாதாரம் எங்கே? இவைகள் ஏதும் விளக்கப்படவேயில்லை.

மாநில அரசு ஒதுக்கியுள்ள நிதியும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழும் வீட்டு வசதிக்காக ஒதுக்கப்பட்ட நிதியும் இச்சங்கங்களுக்கு அடிப்படை மூலதனமாக அமையும். இவ்வாறு அளிக்கப்படுகிற மூலதனத்தைக் கொண்டு அவை வெளியில் கடன் வாங்க முடியும் என்று தான் வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர இந்த அளவு தொகை இதற்காக ஒதுக்குகிறோம் என்று எங்கேயும் சொல்லப்படவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி வைத்துக் கொண்டு படித்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி படிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படிப் படிக்கக்கூடாது. கன்னிப் பேச்சுக்கு மட்டும் தான் விதிவிலக்கு.

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 கூட்டங்களில் இப்படி பேசப்பட்டதே தவிர, இப்போது நான் குறிப்புகளைத் தான் வைத்து இருக்கிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. வார்த்தைகள் தடுமாறி விடக்கூடாது என்பதற்காகவும், யாருடைய உள்ளத்தையும் புண்படுத்தக்கூடாது என்பதற்காகவும் குறிப்புகளை வைத்து பேசிக் கொண்டு இருக்கிறேன். என் என்றால் நானாகவே பேசினால் வார்த்தைகள் வேறு எங்கோ போய்விடும். அதற்காகத் தான் பார்க்கிறேன்.



1987 மார்ச் 24] [திரு. எஸ். வேணுகோபால்]

அது மட்டுமல்ல. "இந்திரா ஆவாஸ் யோஜனா" திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்கும் கொள்கையை மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளதால் நாம் தெரிவித்திருக்கும் இப்புதிய அணுகு முறையை மத்திய அரசு ஏற்று மைய அரசின் நிதி உதவிகளை அடிப்படை மூலதனமாக அளித்தும், குறைந்த வட்டி விகிதத்தில் கடன் தொகைகளை நிதியுதவி நிறுவனங்களிலிருந்தும் வங்கிகளிலிருந்தும் பெற்றுத்தந்தும் நமக்கு ஆதரவு அளிக்கும் என்று நாம் நம்புகிறோம்" என்று நம்பிக்கையாகச் சொல்லி முடித்திருக்கிறீர்களே ஒழிய, இந்த ஆண்டு 10 லட்சம் வீடுகளும் கட்டப்படும் என்று சொல்லப்படவில்லை. இதெல்லாம் பொதுமக்களை மயக்குவதற்காகச் சொல்லப்படுகிற திட்டங்களே அல்லாமல் வேறல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் மாநிலங்களுக்கு எழுதியுள்ள இன்னொரு கடிதம் ஆங்காங்குள்ள மின்வாரியங் களின் செயல்பாடு குறித்ததாகும். தமிழகத்தில் உள்ள மின்வாரியம் தொடர்ந்து பல ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மின்வெட்டு என்பது ஆண்டுதோறும சந்திக்கும் ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. தற்போது உயர் அழுத்த மின்சாரத்தைப் பொறுத்தவரையில் 40 சதவீதம் வெட்டு இருந்து வருகிறது. குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பொறுத்தவரை ஓரளவுக்கு தமிழகத்தில் நிலைமை சீராக இருப்பதற்குக் காரணம் அண்டையிலிருக்கும் நெய்வேலி அனல் மின்நிலையமும் கல்பாக்கம் அணுமின் நிலையமும் ஆகும்.

இவை இரண்டுமே மத்திய அரசின் நிறுவனங்கள். இவைகள் சப்ளையை நிறுத்தினால் தமிழகம் இருளில் மூழ்கும் நிலை இருக்கிறது. 20 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக 'தமிழகத்தில் தட்டினால் தங்கம், இடித்தால் இரும்பு, வெட்டினால் வெள்ளி, என்று அடுக்குமொழி பேசி காங்கிரஸ் ஆட்சி மீது வெறுப்பை ஏற்படுத்தினார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்தால் இங்கே எல்லாமே சரியாகப் போய்விடும் என்றும், எந்தப் பஞ்சமும் இருக்காது என்றும் ஒரு பிரமை உருவாக்கப் பட்டது. (குறுக்கீடு).

[முற்பகல் 11.40]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 15 பேர் பேச இருக்கிறார்கள். சீக்கிரம் முடியுங்கள்.**

[1987 மார்ச் 24

திரு. எஸ். வேணுகோபால்: ஆனால் ஆட்சிக்கு வந்து, 20 ஆண்டுகள் ஆகியும், இன்னும் தீர்க்கப்படவில்லை. (குறுக்கீடு).

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, 1947-ல் ஆட்சிக்கு வந்த பிறகு, பொறுப்பிலுள்ளவர்களால் வறுமை நீங்கிவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அறிஞர் அண்ணா சொன்ன சில வாக்கியங்களைச் சொன்னதற்கு நான் வருந்துகிறேன். நான் கொஞ்சம் கடுப்பான வார்த்தைகளைப் போட வேண்டாம் என்றுதான் கொஞ்சம் தாட்சண்யத்தோடு போடுகிறேன். இடித்தால் இரும்பு கிடைக்கிறது, அதைப் படித்தால் புரிய வேண்டும், புரியவில்லையென்றால், நாங்கள் செய்த குற்றமில்லை.

திரு. எஸ். வேணுகோபால்: ஆக இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால்—சென்னையைப் பொறுத்தவரையிலும் எப்படியாவது ஒருங்கிணைத்து, பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். சென்னையிலே மாநகராட்சி தேர்தலை நடத்தியே ஆக வேண்டும். அப்படி நடத்தவில்லையென்றால் இங்கே இருக்கின்ற மக்கள் ஜனநாயகத்தின் மீதே நம்பிக்கை இழந்துவிடுவார்கள். பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலே கடந்த ஆண்டு சொன்னதைப் போல படங்களை ஒட்டி, ஐடெண்டிட்டி கார்டு கொடுங்கள். சென்னை நகரத்திலே தேர்தலை நடத்துங்கள். பக்கத்திலே அண்டை மாநிலமான ஆந்திராவிலே ஐடெண்டிட்டி கார்டு கொடுக்கப்பட்டு, நகராட்சி, ஊராட்சிகள் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது.

இங்கே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், பேசுவதற்காகச் சொல்லவில்லை, உடனடியாகத் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தவில்லையென்றால், எங்களால் சென்னை நகரத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர், 11, 12 வட்டங்களைச் சுற்றிப் பார்க்கிற நேரத்திலே, காலையிலே யிருந்து இரவு வரைக்கும் வேலை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த அரசு நல்ல எண்ணம் கொண்டு, நமது தோழமைக் கட்சிக்கு ஒரு கெட்ட பெயர் சென்னையிலே வரக் கூடாது என்பதற்காக, சென்னையிலே தேர்தல் நடத்தி, நல்லதொரு நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்தப் பேரவையில் கேட்டு, முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.



1987 மார்ச் 24]

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்கள் அளித்திருக்கும் 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று, வாழ்த்தி, சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட்கு இறையென்று வைக்கப்படும்"

என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு எங்களுடைய இதய தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கக் கூடிய புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மலாக இருக்கக்கூடிய தமிழக முதல்வர் அவர்களுடைய புகழுக்கு புகழ் சேர்க்கும் வண்ணம் இந்த நிதிநிலை அறிக்கையானது ஏழைகளுக்கு ஒளிவிளக்காய் இருக்கிறது என்று சொன்னால், சந்தேகத்திற்கு இடமற்ற உண்மை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் எந்த இடத்தில் தட்ட வேண்டுமோ, அந்த இடத்தில் தட்டி, எந்த இடத்தில் வெட்ட முடியுமோ, அந்த இடத்தில் வெட்டி, எந்தெந்த அளவிற்கு நல்ல பல திட்டங்களை செய்ய முடியுமோ, அதை புரட்சித் தலைவர் அவர்கள் அருளால் செய்து முடித்து, இன்றைக்கு ஏழைகளுக்கு ஒளிவிளக்காய் நல்ல பல தொண்டுகளை செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாடு அறியும், நகரம் அறியும், அனைவரும் அறிவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று சொல்வதற்கிணங்க, ஏழைகளினுடைய சிரிப்புக்கு, இன்றைக்கு சத்துணவுத் திட்டமானாலும் சரி, இலவசச் சீருடை திட்டமானாலும் சரி, பல்பொடி கொடுக்கக் கூடிய திட்டமானாலும் சரி, மேலும் அதற்கு எல்லாம் மேலாக இன்றைக்கு காலணி கொடுக்கக் கூடிய திட்டமானாலும் சரி, அந்தத் திட்டங்களின் வாயிலாக ஏழைகளுடைய சிரிப்பில் கண்டு கொண்டிருக்கக்கூடிய இறைவனாக புரட்சித் தலைவர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவரை வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 மார்ச் 24

இலவச காலணி திட்டத்திற்காக ஏறத்தாழ 20 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இதைப் பற்றி கேலி பேசுவோர் ஒரு பக்கம் இருக்க, கிண்டல் செய்வோர் ஒரு பக்கம் இருக்க, இந்த இலவச காலணி திட்டத்தைப் பற்றி மருத்துவர்கள், அறிஞர்கள் எந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை வலியுறுத்தி யிருக்கிறார்கள் என்று பார்ப்போமானால் சென்ற ஆண்டு— இந்த ஆண்டு கூட இல்லை, சென்ற ஆண்டு—டிசம்பரிலே நடந்த மருத்துவர்களுடைய கான்பரன்சிலே இந்த காலணிகள் அணிவதனுடைய முக்கியத்துவத்தை எந்த அளவுக்கு வற்புறுத்தியிருக்கிறார்கள் என்பதைக் கூற விரும்புகிறேன்.

'The Hindu' dated December 13, 1986. "Importance of wearing footwear stressed" — Inaugurating a conference of the Indian Association of Dermatologists, Venereologists and Leprologists, Mr. R. Shanmugham said today that a health education strategy should be evolved before launching programmes to curb various diseases by establishing a link between the target group and the doctors, people should be told about the diseases and what was proposed to be done.

He said that 65 lakh school children in Tamil Nadu were screened during 1985-86, particularly for leprosy and this helped in identifying 20,000 potential cases.

Doctor who inaugurated the scientific session and released a souvenir on the occasion, stressed the need to educate children on the importance of wearing footwear. Walking barefoot would expose people to various diseases."

என்று அழகாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே மருத்துவர்கள் பாராட்டக் கூடிய அளவிற்கு, அதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லக்கூடிய அளவிற்கு, அந்த அருமையான திட்டத்தை இன்றைக்கு பொன்மனச் செம்மலாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவர் அவர்கள் அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கிண்டல் பேசுபவர்களைப் பற்றியும், கேலி பேசுபவர்களைப் பற்றியும் கவலை இல்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்வதிலே பெருமை அடைகிறேன். தமிழ் நாட்டில் இன்றைக்கு காலணிகள் செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய கச்சா மற்றும் பதப்படுத்தப் பட்ட தோல்களுக்கு 2 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என்ற சலுகையும், இந்த தொழிலிலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு ஒரு நன்மை அளிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதைக்



1987 மார்ச் 24] [திரு. ஆ. பிரேம்குமார்]

கூறிக்கொள்கிறேன். அதிகமாக தோல் உற்பத்தி செய்யக் கூடிய இடமாக திண்டுக்கல் இருக்கிறது. அதற்கடுத்து வாணியம்பாடி இருக்கிறது. திண்டுக்கல்லில் அதிகமாக அந்த தொழிலிலே ஈடுபட்டு இருக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அப்படி பார்க்கின்ற சமயத்திலே அதிகமான கூட்டுறவுச் சங்கங்களை அங்கு அமைத்து அதன் மூலமாக இந்த காலணிகளை திண்டுக்கல் வாயிலாகப் பெற்றுவர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே அன்புக் கட்டளையாக வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, பெரும் வீட்டு வசதித் திட்டத்தைப் பற்றி இங்கு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் அழகுற எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 30 இலட்சம் வீடுகள் எந்த அளவிலே கட்டப்பட வேண்டும், அதற்குரிய திட்டங்கள் என்ன, அதற்கு எந்த எந்த வழியில் கடன் வசதிகள் பெற முடியும் அதற்கான செங்கல், அதற்கான மரங்கள் இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய அளவுக்கு திட்டத்தைக் கூறி, அதனுடைய செயல் முறைகளையும் அழகாகக் கூறியிருக் கிறார்கள். படிக்காத நண்பர்கள் இது எப்படி முடியும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இங்கு இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். அலாவுதீனுடைய அற்புத விளக்கு இருந்தால்தான் இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1984-லே அவர்கள் கொடுத்த தேர்தல் அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார்கள். ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மேலும் குடியிருப்பு மனைகளை சொந்தமாக்குவோம், அவர்களுக்கு புதிய வீடுகளை கட்டித் தருவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். ஏழை விவசாயத் தொழிலாளர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் எந்த அளவுக்கு எண்ணிக்கை என்று பார்த்தால் 4 கோடி எண்ணிக்கை என்று வைத்துக் கொள்ளலாம். நாங்கள் 30 இலட்சம் வீடுகளை கட்டித் தருவோம் என்று சொல்லி அழகான திட்டத்தையும், செயல் முறைகளையும், அவற்றை எப்படி நடத்த வேண்டும், எந்த முறையில் செயல்படுத்த வேண்டும் என்று சொல்லிய இந்த நேரத்திலே, எங்களைப் பார்த்து இப்படிப்பட்ட பொய்களையும், புரட்டுகளையும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், இது அலாவுதீன் அற்புத விளக்கு இருந்தால்தான் நடைமுறைப்

[திரு. ஆ. பிரேம்குமார்] [1987 மார்ச் 24

படுத்த முடியும், மேலும் இது மக்களை ஏமாற்றக்கூடிய திட்டம், நடக்க முடியாத திட்டம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்களே, இவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட திட்டம் செயல்படுத்தக்கூடிய திட்டமா, மக்களை ஏமாற்றுகின்ற திட்டமா அல்லது என்ன பெயர் என்பதை இவர்களே சொல்ல வேண்டும் என்பதை நான் அவைத் தலைவர் முன்பாக வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்து இன்னும் கூட முக்கியமான துறைகளுக்கு ஒதுக்கீடு என்று சொல்லி, கல்வி வளர்ந்தால்தான் அறிவு, செயல் திறன் வளர முடியும் என்று சொல்லி, கல்வி ஒதுக்கீட்டிற்கு 51 கோடி ரூபாய் என்பதை 597 கோடியாக உயர்த்தி இருப்பதையும் மேலும் தமிழக மக்களுக்கு வேளாண்மைதான் முக்கியம் என்று விவசாயத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து 118 கோடியை 141 கோடியாக உயர்த்தி இருப்பதையும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கு 177 கோடி ரூபாயை 193 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்லும்போது, 'it shows that it is only a practical Budget' என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

தொலைக்காட்சிப் பெட்டிகளும், தகவல் தொடர்பு நிலையங்களும் வட்டங்கள்தோறும், யூனியன்கள்தோறும் வைக்கப்பட வேண்டும் என்று அழகாக கூறியிருக்கிறார்கள். அது வரவேற்கப் படவேண்டிய திட்டம் ஆகும். மகாத்மா காந்தி அவர்கள், நாட்டினுடைய முன்னேற்றமே கிராமங்களில்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு செவிக்கு உணவு கொடுக்கக்கூடிய திட்டமாக எவ்வாறு நல்ல திட்டங்களாக இருக்குமோ—அத்துடனே வேளாண்மையின் மூலமாக எழக்கூடிய நன்மைகள், இன்னும் முதியோருடைய கல்வி, மருத்துவம் ஆகியவற்றைப் பற்றிய அறிக்கைகள் எல்லாம் அதன்மூலமாக பரப்பிட முடியும் என்பதை சொல்லி, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை—டி.வி. கொடுக்கக்கூடிய, வி. சி. பி. கொடுக்கக்கூடிய திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினையும், விவசாயிகள் உற்பத்தி பொருளுக்கான ஜிப்சம் [illegible] சலுகை கொடுத்து இருப்பதையும் இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



1987 மார்ச் 24] [திரு. ஆ. பிரேம்குமார்]

ஏழைகளுடைய பட்ஜெட் என்று இதைச் சொல்வதிலே ஒரு படி மேலாக சொல்லவேண்டுமென்று சொன்னால், நகைகளுக்கு—ஏழை மக்கள் அவர்களுடைய நகைகளை விற்கின்ற சமயத்திலே அதற்காக விதிக்கக்கூடிய அந்த இரண்டு சதவிகித வரியைத் தள்ளுபடி செய்யக்கூடிய அளவில் இன்றைக்கு இந்த பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறது என்று சொன்னால் ஏழைகளுக்காக உதவக்கூடிய அளவில் இந்த பட்ஜெட் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு நல்லவைகளைச் செய்து இருக்கக்கூடிய புரட்சித் தலைவருடைய அரசிலே ஒன்றே ஒன்றை வேண்டுகோளாக, அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'மிடில் இன்கம் குரூப்' என்று சொல்லும மக்களுக்கு பயன்படக்கூடிய அளவிலே இருக்கக்கூடிய ஆஸ்பெஸ்டாஸ், செங்கல், மரம் போன்றவற்றிற்கு மட்டும் சிறிது வரி உயர்வை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். அதையும் நீக்கி, அதை நடுத்தர மக்களுக்கும் பயன்படக்கூடிய அளவிலே செயல்படுத்தவேண்டும் என்பதை நான் அன்புடனும், அருள்கூர்ந்தும் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா அவர்களுடைய பெயர் ஏதோ ஒரு போஸ்டரிலே இடம் பெறவில்லை; அதனாலே அண்ணாவுக்கு மதிப்பு கொடுக்கவில்லை, மரியாதை கொடுக்கவில்லை என்று பேசக்கூடிய நண்பர்களைப் பார்த்து ஒன்றே ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுக்கும் அளவுக்கு இருக்கக்கூடிய இந்த அரசுக்கு, இந்த புரட்சித் தலைவர் அரசுக்கு இணையான ஒரு அரசு உண்டா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்,

அதற்கு அடுத்து வந்த போஸ்டர்களானாலும் சரி, அந்த பொருட்காட்சியின் உள்ளே நுழைந்தவுடனே எந்த அளவுக்கு அண்ணாவினுடைய திருவுருவப் படங்கள், கட்-அவுட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை பார்த்த நண்பர்கள், அண்ணாவைப் பற்றி எங்களிடம் பேசுகிறார்கள். சாத்தான் வேதம் ஓதலாமா அல்லது கசாப்புக் கடைக்காரர் ஜீவகாருண்யம் பற்றிப் பேசலாமா என்பதைப் போல்தான் இருக்கிறது அவர்களுடைய வாதம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு அண்ணா மாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு அண்ணா மாவட்டமானது ஆரம்பிக்கப்

படக்கூடாது என்று போராடிய அந்த நண்பர்கள் எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள்; 'அண்ணாவுக்கு மரியாதை கொடுப்பவர்களா' என்ற வாதத்தை வைக்கிறார்கள். அண்ணாவை கொடியிலே வைத்து, அண்ணாவை கட்சியிலே வைத்து, நடத்தக்கூடிய பத்திரிகைக்கும் அண்ணா என்று வைத்து, அதற்கு மேல் தொண்டர்கள் எல்லாம் கையிலே அண்ணாவை பச்சை குத்திக் கொள்ளவேண்டும் என்று சொல்லி, அந்த அளவுக்கு எதிலெடுத்தாலும் அண்ணா, அண்ணா என்று சொல்லக்கூடிய அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செயல்படுகிறது என்று சொன்னால், இதற்கு இணையாக, அண்ணாவினுடைய கொள்கைகளைச் சொல்லக்கூடிய அரசு எதுவும் இல்லை என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். விலைவாசி ஏறிவிட்டது என்று சொன்னார்கள். 'ஏதோ விலைவாசி ஏறிவிட்டது' என்று சொல்கிறார்கள், பருப்பு விலை ஏறிவிட்டது, அரிசி விலை ஏறிவிட்டது, இதுபோன்ற பொருட்களுடைய விலைகள் ஏறிவிட்டன என்று சொல்வார்கள்; பட்டியல் போட்டுச் சொல்வார்கள்; ஏதோ பட்ஜெட் அறிவிப்பதற்கு முன்பாகவே பட்ஜெட் அவர்களுடைய கையில் கிடைத்து விட்டதோ, இப்படிப்பட்டவற்றைச் சொல்கிறார்களே என்று எதிர்பார்த்தேன். ஆனால் மாண்புமிகு நண்பர் அவர்கள் சொன்னார்கள். 'விலைவாசி ஏறிவிட்டது; முடி வெட்டக்கூடிய தொழிலாளர்கள் கூட ரூபாய் 7-லிருந்து ரூபாய் 10 ஆக தங்களுடைய விலையை உயர்த்தி இருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அப்படி அதையும் சொல்லிவிட்டு, முடி வெட்டுபவர்களும் இருக்கிறார்கள்; முடி வெட்டாதவர்களும் இருக்கிறார்கள்; அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை என்று சொன்னார்கள். அதில் அவர் எந்த ரகம் என்று எனக்குத் தெரியவில்லை. அந்தத் தொழில் செய்யக்கூடிய அப்படிப்பட்ட தொழிலாளிகள் மீது ஏன் அவருக்கு வருத்தம் என்று தெரியவில்லை. ஏன் அவர்களைக் கேவலப்படுத்தியிருக்கிறார் என்று புரியவில்லை. இந்த நிலையில், விலைவாசியேற்றத்திற்கும் அத்தொழிலைச் செய்யக்கூடிய தொழிலாளிகளுடைய கூலி உயர்வுக்கும், சம்பள விகிதத்திற்கும் அர்த்தம் தெரியாதவர்கள், வேறுபாடு தெரியாதவர்கள் இந்த அளவுக்கு பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையிலேயே வருத்தப்பட வேண்டிய நிலைதான் இருக்கிறது.





இன்னும், கட்டிடத் தொழிலாளர்களுடைய கூலியானது ஏறியிருக்கிறது. கல் உடைக்கும் தொழிலாளர்கள் கூலி ஏறி இருக்கின்றது. நாதஸ்வர வித்துவான்களின், கலைஞர்களின் கூலியானது உயர்ந்திருக்கின்றது. மேளம் அடிக்கக்கூடிய கலைஞர்களுடைய கூலியானது உயர்ந்திருக்கின்றது. இவையெல்லாம் தெரியாமல் ஏதோ ஒரு தொழிலாளியைப் பற்றிக் கேவலமாகப் பேசுவதாகத்தான் இந்த நேரத்தில் எண்ணுகிறேன் என்பதைக் கூறிக்கொண்டு, அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் வறட்சியைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் அண்ணா மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அது பிரிக்கப்பட்டிருக்கக் கூடிய அனைத்து தொகுதிகளுமே வறட்சிக்கு முக்கியத்துவமாக, வறட்சிக்கு இருப்பிடமாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில், திண்டுக்கல்லும் சரி, அதைச் சுற்றி இருக்கக்கூடிய கிராமங்களும் சரி, இன்னும்கூட சொல்லப் போனால் சிறுமலைப் பகுதியில் இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளிலும், அங்கிருக்கின்ற பயிர்கள் காய்ந்து விட்டன. விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படக் கூடிய நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே அண்ணா மாவட்டத்தை முழுவதுமாக வறட்சி மாவட்டமாக அறிவித்து அங்கிருக்கக்கூடிய வரி விதிப்புகளை விலக்கி அங்கு நல்ல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சொல்லவேண்டுமானால், திண்டுக்கல்லில் தோல் கழிவுநீரால் அங்கிருக்கக்கூடிய நிலங்கள் அந்தப் பகுதிகளிலே நல்ல வளமாக இருந்த அந்த நிலங்களெல்லாம் கெட்டுப்போய் எந்தவிதமான பயிர்களும் வளராத நிலையிலே இருக்கின்றன. அதற்கு அரசானது சரியான முறையிலே முயற்சிகளை எடுத்து ஆவன செய்து கொண்டிருக்கிறார்கள். அதே சூழ்நிலையிலே ஏறத்தாழ ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு மேலாக அங்கு கெட்டு பாழாகி இருக்கக்கூடிய அந்த நிலங்களை மாற்றி திரும்பவும் அதிலே விளை பொருள்கள் விளையக்கூடிய அளவுக்கு நல்ல ஏற்பாட்டினை மேற்கொள்ள அன்புடன் அரசானது கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல பல காலமாக இங்கு கோரப்பட்டு வந்திருக்கக் கூடிய அண்ணா மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கக் கூடிய திண்டுக்கல்லுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டு மென்பதை பலமுறை இங்கே நான் கூறியிருக்கிறேன். அது மட்டுமல்ல சுகாதாரக் கேடுகள் எல்லாம் மிகவும் கடுமையான முறையிலே இருக்கின்றன. அண்ணாவினுடைய பெயராலே, அழகான மாவட்டமாக இருக்கின்ற நேரத்திலே, திண்டுக்கல் நகரமானது அழகாக மாறவேண்டுமென்ற எண்ணத்திலே பாதாள சாக்கடைத் திட்டத்தை நீங்கள் அவசியம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல் பகுதியிலே சரித்திரப் புகழ்பெற்ற மலைக்கோட்டையானது இருக்கிறது. அந்த மலைக்கோட்டையிலே வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் உள்ளன. அந்தப் பகுதியிலே ஒரு முருகன் கோயிலை நிறுவி அதன்மூலமாக ஒரு பிக்னிக் ஸ்தலமாக வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய ரோடுகள் எல்லாம் மிகவும் கடுமையான முறையிலே, மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. திண்டுக்கல்லை அழகுபடுத்தக்கூடிய முறையிலே அங்கே அதிகமான நிதி வசதிகளை ஒதுக்கித் தந்து அதன் மூலமாக நல்ல பல திட்டங்களை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். போனை திட்டமானது புரட்சித் தலைவருடைய அன்பாலும் அருளாலும் கிடைத்த ஒரு திட்டம். அதற்கு நான் மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமை அடைகிறேன். ஆனால் அந்தப் பகுதியிலே பதிக்கப்படுகின்ற குழாய்களில் [illegible] உடைவதாக புகார்கள் வருகின்றன. அவற்றையும் கவனித்து திண்டுக்கல் பகுதியிலே எந்த அளவுக்கு வேகமாக செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி அங்கு இருக்கக்கூடிய மக்களுடைய தண்ணீர் தவிப்பைப் போக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட கொசுவினுடைய பிரச்சினை பற்றி பேசினார்கள். கொசுப் பிரச்சினையை கொசுறான பிரச்சினையாக நினைக்காமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இந்தக் கொசு பிரச்சினை திண்டுக்கல் பகுதியிலே மிகமிக கடுமையாக இருக்கிறது. அதையும் நீங்கள் உடனடியாக கவனித்து அதை எந்தவிதத்திலே ஒழிக்க முடியுமோ அதற்குரிய ஏற்பாட்டினை செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல் பகுதியிலே சீப் ஜுடீசியல் மாஜிஸ்டிரேட் என்ற கோர்ட்டானது இதுவரையிலும் வராமல் இருக்கிறது. அந்தக் கோர்ட்டானது விரைவில் வருவதற்கு இந்த அரசானது எந்த அளவிலே வழிமுறைகளைச் செய்ய வேண்டுமோ அதையும் செய்ய வேண்டுமென்று சொல்லி, டிஸ்டிரிக்ட் அண்டு செஷன்ஸ் கோர்ட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கிருக்கக்கூடிய அப்பீல்கள், நிலக்கோட்டை பகுதியிலிருந்தும், நத்தம் பகுதியிலிருந்தும் திண்டுக்கல்லுக்கு வருவதில்லை. இன்னும் மதுரையை ஜூரிஸ்டிக்ஷன் பாயிண்டாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் மாற்றி திண்டுக்கல்லிலேயே அந்த செஷன்ஸ் கோர்ட்டுக்கு வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல் பகுதியிலே ஆதி திராவிட மக்களுக்கு என்று ஒரு மினி ஸ்பின்னிங் மில்லானது கொடுக்கப்படவேண்டுமென்று நான் இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கையாக கூறுகிறேன். அது வேகமாகச் செயல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதையும் விரைவிலே கொடுத்தருளவேண்டுமென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல் என்று சொன்னாலே பூட்டு என்கின்ற அளவுக்கு அங்கே பூட்டுத் தொழில் மிகச் சிறப்பாக இருக்கிறது. அந்தப் பூட்டுத் தொழிலை சிறப்பாகச் செய்வதோடு டூல் அண்டு டை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிக முக்கியமான கோர்ஸ் இந்த திண்டுக்கல்லில் வந்திருக்கிறது. டூல் அண்டு டை என்ற அந்த கோர்ஸிலே இன்னும் அதிகமான சீட்டுகளை கொடுத்து மாணவர்கள் பயன்படக்கூடிய அளவிலே அதை செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திண்டுக்கல் பகுதிக்கு ஸ்டேடியம், அதாவது விளையாட்டு அரங்கம் ஒன்றை ஆரம்பித்துத் தரவேண்டுமென்று சொல்லி பல்வேறான கோரிக்கைகளை வைத்தாலும் இன்னும் அது

முற்றுப்பெறாத கோரிக்கையாகவே இருக்கிறது. அதையும் அவசியம் செய்துதரவேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக் கொண்டு நத்தம் பகுதியிலே குடிநீருக்காக ஏறத்தாழ 7 கிணறுகள் தோண்டப் போவதாக இருந்தது. அதிலே மூன்றே மூன்று கிணறுகள்தான் தோண்டப்பட்டு அந்த வேலைகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

இதுவரை வெட்டப்படாமல் இருக்கிற கிணறுக்காக ஒதுக்கப் பட்டுள்ள நிதியை வைத்து திண்டுக்கல் முழுவதும் அடிக் குழாய்களை அமைத்துத் தந்து அந்தப் பகுதி மக்களுடைய கண்ணீரைத் துடைக்க—தண்ணீர் கஷ்டத்தைப் போக்க வேண்டு மென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அடுத்து திண்டுக்கல் நகரில் சிறுவர்களுக்கான பூங்காக்களையும் நீச்சல் குளங்களையும் அமைத்துத்தர வேண்டும் என்று சொல்லி இறுதியாக ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் அருகில் உள்ள தாடிக்கொம்பு அருள் திரு. சௌந்திரராஜப் பெருமாள் கோயிலில் மிகவும் அழகிய சிற்பங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலேயே மிகவும் சிறப்பான சிற்பங்கள் என்று பெயர்பெற்ற சிற்பங்கள் அங்கேதான் இருக் கின்றன. ஆனாலும் அவைகளுக்கெல்லாம் முறையான பாதுகாப்பு இல்லை. அங்கே உள்ள பக்கச் சுவர்களெல்லாம் விழுந்துவிடுகிற அபாய நிலையில் இருக்கின்றன. எனவே அந்தச் சுற்றுச் சுவர்களை ஏற்படுத்தி அந்தக் கோயிலுக்கு எந்த அளவுக்கு பாதுகாப்பை அளிக்க முடியுமோ அதைச் செய்ய அரசு முன் வர வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி.

*திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டில் இருக்கிற குறைபாடுகளையும் அதில் இன்னும் செய்யப்பட வேண்டிய மக்கள் பணிகளைப் பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் களும் குறிப்பாக ஆளும் கட்சியின் உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். "தமிழக மாநில மக்களின் சிக்கல்களை யெல்லாம் செம்மையான முறையில் தீர்த்துவைப்பது என்பது, முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை" என்றும் "மத்திய மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பு





சிறப்பாகவும் செம்மையாகவும் நடந்தேற வேண்டுமானால் உறவு முறையிலும் உரிமைப் பரிமாற்றங்களிலும் சீரான—தேவையான மாற்றங்கள் ஏற்பட வேண்டும்" என்றும் மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலே சொல்லியிருக் கிறார்கள். தேவையான மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று சொல்கிறபோது இப்போது இருக்கிற நிலை சரியாக இல்லையோ என்று அச்சப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பற்றாக்குறை பட்ஜெட் என்கிற காரணத்தால் பல்வேறு துறைகளுக்கும் பல்வேறு தலைப்புகளுக்கும் அதிகமான தொகை ஒதுக்கியிருந்தாலும்கூட, அவைகள் எல்லாம் ஏறி இருக்கிற விலைவாசி உயர்வு காரணமாக மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய இயலாத நிலையைத்தான் உருவாக்கும் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில் 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 312 கோடி மத்திய அரசிடம் கேட்டிருக் கிறார்கள். அப்போது அவர்கள் தந்திருப்பது ரூ. 31 கோடி மட்டும்தான். அதைப்போல் இந்த ஆண்டும் வறட்சிக்காக என்று ரூ. 347 கோடி கேட்டிருக்கிறீர்கள். எவ்வளவு கொடுப்பார்கள் என்று தெரியவில்லை. மத்திய அரசை நாம் தட்டிக் கேட்டு நமக்கிருக்கிற வறட்சியை ஒழிப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே எந்தத் தரப்பிலே இருந்து பேசினாலும், நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமையை நீக்கவும், அதற்கான நிவாரணப் பணிகளை உருவாக்கவும்தான் பேசுகிறோம் என்பதை யாரும் மறக்க முடியாது.

பல மாவட்டங்களிலிருந்து இன்றைய தினம் மக்கள் குடி பெயர்ந்து செல்லுகிற நிலைமை இருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு கிராமங்களில் குடிநீருக்காக மக்கள் வேதனைப்படுகிற நிலைமைதான் இருக் கிறது. அதைப்போலவே விவசாயிகளும் கூட குடிநீருக்காகக் கஷ்டப்படுகிற நிலைமைதான் இருந்து வருகிறது. இந்த நிலைமைகளையெல்லாம் போக்குவதற்கு அரசாங்கம் போர்க்கால நடவடிக்கைகளைப் போல் மேற்கொண்டு செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. நடராசன்] [1987 மார்ச் 24

வரவு செலவு திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றையதினம் ஒரு குதிரை மின்சக்தி வைத்திருக்கிற விவசாயி ரூ. 75 கட்ட வேண்டிய நிலைமை உள்ளது. இந்தத் திட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலே 5 அல்லது 10 குதிரை மின்சக்தி வைத்துக் கொண்டிருந்தவர்கள்கூட மினிமம் சார்ஜ் என்று ரூ. 5 தான் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைய தினமோ வறட்சியின் காரணமாக கிணற்றில் குடிப்பதற்குக்கூட நீர் இல்லாத நிலையில் ஒரு குதிரை மின்சக்திக்குக்கூட ரூ. 75 கட்டுவது என்பது விவசாயிகளை தண்டிப்பது போல் இருக்கிறது என்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே மத்திய அரசு பட்ஜெட்டைக் கொண்டு வருவதற்கு முன்னாலேயே தபால் கட்டணத்தையும் ரெயில் கட்டணத்தையும் உயர்த்திவிட்டது. அதைப் போலவே மாநில அரசும் இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு முன்னாலேயே பஸ் கட்டணத்தை இங்கே உயர்த்தி இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இது ஒரு சரியான அணுகுமுறை அல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றைய தினம் பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களின் குறிப்புகளை அளித்தார்கள். அதிலே லாபம் கிடைத்திருப்பதாகத்தான் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஏழை எளிய மக்கள் அன்றாடம் பயன்படுத்துகிற பேருந்து கட்டணத்தை மீண்டும் குறைப்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாகவே கேரள அரசாங்கத்தோடு பேசி நிறைவேற்றப் பட வேண்டிய பாண்டியாறு—புன்னம்புழா பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. தற்போது பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் அதைக் குறித்து வேகமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பக்கத்திலே மின் வெட்டு 40 சதவீதமாக இருக்கிறது. இன்னுமொரு பக்கத்திலே மூன்றிரண்டு விவசாயிகளுக்கு கிணற்றில் தண்ணீர் இருந்தாலும் மின் இணைப்பு தராத நிலைமை இருக்கிறது. இந்த வறட்சிக் காலத்தில் வேகமான வகையில் பலயிடங்களில் குட்டைகளை அமைக்க வேண்டும்.



1987 மார்ச் 24] [திரு. ஆ. நடராசன்]

என்னுடைய தொகுதியில் கடந்த ஏழாண்டுக் காலமாக குட்டைகளை அமைக்காமல் உள்ள நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஈச்சனாரி, மதுக்கரை ஆகிய இரண்டு கிராமங்களில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட குட்டைகள் இப்போது உடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றை கட்டவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவசர நிதியாக வறட்சிக்காக 28 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே 5 கோடி ரூபாயை வேலை வாய்ப்புக்கும், ஓப்பன் கிணறு அமைக்க ஒரு கோடி ரூபாயும், லாரிகளின் மூலம் தண்ணீர் கொடுக்க 15 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது "யானைப் பசிக்கு சோளப் பொரி" என்பதைப் போல இருக்கிறதே தவிர, நடைமுறைச் சாத்தியமான காரியமாக இருக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல கால்நடைகள் தண்ணீர் இல்லாத காரணத்தால் செத்துப் போகின்ற நிலைமை இருக்கின்றது. நமக்குப் பக்கத்திலே இருக்கின்ற கர்நாடக அரசாங்கம்கூட 'கோசாலா' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அங்கே கால்நடைகளை காப்பாற்ற நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

குடிநீர் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் பல இடங்களில் குடிநீர் பற்றாக்குறை இருக்கிறது. அதிலே குறிப்பாக சிறுவாணி திட்டம் கலைஞர் காலத்திலே கொண்டு வரப்பட்ட திட்டம். இந்த திட்டத்தைக் கொண்டு வந்து, பத்தாண்டுக் காலமாகியும் இன்னும் நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள். நீண்ட காலமாக அந்த திட்டம் முழுதும் நிறைவேற்றாத நிலை இருக்கிறது என்பதை சென்ற கூட்டத் தொடரில்கூட எடுத்துச் சொன்னேன். அப்போதிருந்த அமைச்சர் இப்போதில்லை. ஆனாலும் புதிய அமைச்சர் இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் முத்துசாமி காலனி, கருமலை செட்டிபாளையம், வேடப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு ஏழரை இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, இன்னும் இந்தத் தொகை செலவிடப்படாமல்

[திரு. ஆ. நடராசன்] [1987 மார்ச் 24

உள்ள நிலைமை இருக்கிறது. இந்த திட்டத்திலே ஆத்துப்பாலம், குனியமுத்தூர் அண்ணா நகர் பகுதி சேர்க்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கழிப்பிட பிரச்சினை. கழிப்பிடத்திற்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதாகச் சொல்கிறார்கள். கழிப்பிடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையைக் கூட இந்த அரசாங்கம் செலவு செய்யவில்லை. ஆறரை கோடி ரூபாய் 1984 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டது. அந்த தொகையில் 6 கோடியே 49 இலட்சம் ரூபாயை சரண்டர் செய்திருக்கிறார்கள். ஒரு இலட்சம் ரூபாயைத்தான் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால் பெண்கள் கிராமங்களில் கழிப்பிடம் இல்லாமல் துன்பப்படுகிறார்கள். அவர்கள் இதற்காக உள்ளாட்சி மன்றங்களை அணுகக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. உள்ளாட்சி மன்றங்களுக்கு என்ன நிலைமை? நிதி இல்லை. அங்கே பத்தாண்டுக் காலமாக துப்புரவு தொழிலாளர்களை நியமிப்பதில் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து, அந்த தடையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல உள்ளாட்சி மன்றங்களிலும், ஒன்றியங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் துப்புரவு தொழிலாளர்கள், மற்ற அலுவலர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் 74 நடுத்தர, சிறு நகரங்களுக்கும், மதுரை, கோவை, சேலம் போன்ற நகரங்களுக்கும், அதனுடைய வழியில் இருக்கக்கூடிய 740 குக்கிராமங்களுக்கும் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் 1984 ஆம் வருடம் எப்ரல் மாதம் துவங்கியிருக்க வேண்டும். ஆனால் இந்த திட்டத்தை இறுதியாக்குவதில் ஏற்பட்ட கால தாமதத்தின் காரணமாக 1985 ஆம் ஆண்டு பிப்ரவரியில்தான் உலக வங்கியின் உதவியுடன் துவங்க முடிந்தது. எனவே அந்த ஆண்டு அத்திட்டம் நிறைவேற்றப்படாமல் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் சரண்டர் செய்யப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 24] [திரு. ஆ. நடராசன்]

அடுத்து வேலை வாய்ப்புகளுக்கான பணி. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்கிற திட்டம் சொல்லியிருக்கிறார்கள். இந்த திட்டத்தை செயல்படுத்துகிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. 1983-84 ஆம் ஆண்டு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருகிற திட்டத்திற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கி அந்த திட்டத்தை நிறைவேற்றாமல் அதிலே 99.9 சதவீத தொகையை திரும்ப ஒப்படை செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டாவது நிறைவேற்ற வேண்டும். 1984-85-ல் அந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றாமல் 13.22 கோடி ரூபாய் சரண்டர் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒரு காரியம்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. ஆகிய திட்டங்களுக்கு ஏராளமான தொகையை மத்திய அரசு ஒதுக்குகிறது. ஆனால் அந்தத் தொகைகள் முறையாகச் செலவு செய்யப்படுகிறதா என்றால் இல்லை. செலவு செய்யும் பணம் எவ்வளவு என்பதையும், எந்தெந்தப் பணிக்கு எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்பதையும் பற்றி ஊராட்சி ஒன்றியக் குழுவுக்கு அறிக்கை வைக்க வேண்டும். அதைப் பரிசீலிக்க, ஊராட்சி ஒன்றியக் குழு அவற்றைப் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தில் அர்பன் பேரூராட்சிகள், ரூரல் பேரூராட்சிகள் என்று பிரிக்கப்பட்டு, அர்பன் பேரூராட்சிகள் அந்தத் திட்டத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே அந்தப் பேரூராட்சிகளுக்கும் அந்தத் திட்டங்களை விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏராளமான தொழிலாளர்கள், ஏறத்தாழ 12,000 தொழிலாளர்கள் பல ஆலைகள் மூடப்பட்ட காரணத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பல நேரங்களிலே எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும், ஆளுங்கட்சித் தரப்பிலிருந்தும் எடுத்துக் காட்டியும், அரசாங்கம் அந்தத் தொழிலாளர்கள் பிரச்சினையில் கவனம் செலுத்தாத நிலைமையைத்தான் பார்க்கிறோம்.

[திரு. ஆ. நடராசன்]

12,000 தொழிலாளர்கள் இன்றையதினம் வேலை இழந்து, 4, 5 ஆண்டுகளாக பட்டினியோடு போராடிக் கொண்டிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம். இன்றைக்கு அனைத்துச் சங்கங்களின் சார்பிலே 6 தொழிற் சங்கத் தலைவர்கள் 10 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தும் அரசாங்கம் அதைக் கவனிக்காத நிலைமைதான் இருக்கிறது.

அடுத்து, என்.எம்.ஆர். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் 10 ஆண்டுகள் பணியில் இருந்தால், அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று 1984-ல் உத்திரவு போடப்பட்டும், அது இன்றையதினம் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை.

அடுத்து, கல்விக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாக ஆளுங் கட்சியினர் பெருமையோடு சொல்லிக் கொண்டார்கள். இன்றைய தினம் நம்முடைய கல்விக் கூடங்களின் நிலைமை என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். மாணவர்கள் மரத்தடியில் படிக்கும் காட்சியைப் பார்க்கிறோம். பள்ளிகளில் தரை இல்லை. உட்கார பெஞ்ச் இல்லை. இது தமிழ் நாட்டில் 234 தொகுதிகளிலும் இருக்கும் இழிவான நிலையாக இருக்கிறது. இதைச் செய்ய, இப்போது ஒதுக்கியிருக்கும் தொகை போதாது. அதுமாத்திரமல்ல. அந்தப் பணத்தை முறையாகச் செலவிட இந்த அரசாங்கம் செயல்பட வேண்டும். பல இடங்களில் ஆசிரியர்கள் இல்லை. ஒரு வகுப்பில் 90 மாணவர்கள் இருக்கும் நிலை இருக்கிறது. புத்தகங்கள் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது பொங்கல் பரிசாகத் தான் தரப்படுகிறது. அது உரிய காலத்தில் தரப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் வேலாண்டிபாளையத்தில் உயர்நிலைப் பள்ளி துவங்கவேண்டும். பணம் கட்டப்பட்டுள்ளது. ஒத்தக்கால் மண்டபத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கான தொகை செலுத்த அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள். பிச்சனூரில் ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளிக்குக் கட்டிடங்கள் இல்லாத காரணத்தால், அங்கே படிக்கும் மாணவ மாணவிகள் மிகுந்த சிரமத்தில் இருக்கிறார்கள். அந்த நிலைமை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுக்கரையில் ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி ஷிப்ட் முறையிலே நடைபெற்றுக் கொண்டிருப்பதால், மாணவர்கள் தரமான கல்வியைக் கற்க முடியாத நிலைமை



இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதையும் மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நூலக வரி வாங்குகிறோம். ஆனால் ஒவ்வொரு ஆண்டிலும் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் கூட துவக்காத நிலைமையைப் பார்க்கிறோம். தேவையான நூலகங்கள் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து காலையிலே பேசினார்கள். என்னுடைய பகுதியிலே இரண்டு ஆலைகள் இருக்கின்றன. கேரள மாநில எல்லையில் இருக்கும் மலபார் சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வரும் தூசி காரணமாக அந்தப் பகுதியில் இருக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல ஏ.சி.சி. சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகை காரணமாக, அங்கே யுள்ள நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையையும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஈ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டுமென்று கடந்த 10 ஆண்டுகளாகச் சொல்லப் படுகிறது. குனியமுத்தூர், சுந்தராபுரம், மதுக்கரை, ஒத்தக்கால் மண்டபம் ஆகிய இடங்களில் இடம் பார்த்தும், இன்னும் அதைச் செய்யவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் ஓமியோபதி மருந்தகங்கள் தொடங்குவது பற்றிய கொள்கையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே என்னுடைய தொகுதியில் உள்ள கணவாய்க்கனூர், அப்பாச்சிக்கவுண்டன்பதி போன்ற சாதாரண கிராமங்களில், சின்ன ஊர்களில் உடனடியாக அந்த மருந்தகங்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துகளைப் பொறுத்தவரையில் ஏராளமாக விடுகிறோம் என்று சொல்லப்பட்டாலும், என்னுடைய தொகுதியிலே மிக நீண்ட காலமாக எட்டிமடை, சின்னைய கவுண்டனூர், வேலாண்டிபாளையம், ஒத்தக்கால் மண்டபம் ஆகிய இடங்களில் பேருந்துகள் விட வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கொடுத்தும்,

[திரு. ஆ. நடராசன்] [1987 மார்ச் 24

இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாலம் கட்டுவது. குமுட்டிமுனையிலே ஒரு பாலம். செட்டிபாளையத்திலே ஒரு கிலோ மீட்டர் ஆற்றிலே மணலிலே செல்ல வேண்டிய நிலைமைகள் இருக்கின்ற காரணத்தினால் அதற்காக ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும். ஈச்சனாரிலே 10 ஆண்டு காலமாக பழுதடைந்திருக்கின்ற பாலத்தை உடனடியாக சீர்செய்ய வேண்டும்.

குளத்துப்பாளையத்திற்கும் பாலக்காட்டு பாதைக்கும் இடையில் இருக்கின்ற பாதையிலே ஒரு பாலத்தைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் முதியோர்களுக்கும், விதவைகளுக்கும், ஊனமுற்றோர்களுக்கும், அவர்களால் கொடுக்கப்பட்ட மனுக்கள் அத்தனைக்கும் உதவித் தொகை வழங்கிவிட்டோம் என்று சொல்லப்படுகிறது. பல கட்டங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. கேள்வி நேரங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. உண்மையான நிலைமை என்னவென்றால், என்னுடைய தொகுதியிலே ஏறத்தாழ 500 பேர்களுக்கு 7, 8 ஆண்டுக் காலமாக பலமுறைகள் விண்ணப்பித்தும் கூட இன்னும் உதவித் தொகை தரப்படவில்லை. அதை உடனடியாக தர வேண்டும். அவர்கள் இறப்பதற்கு முன்னால் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஹரிஜனங்களுக்கு, வீட்டுமனை இடம் தர வேண்டும். அவர்கள் பல்வேறு இடங்களில் இடத்திற்கான முன்மொழிவுகளை அனுப்பி இருக்கின்றார்கள். குறிப்பாக கல்லாமேடு ஹரிஜனங்கள், குறிச்சி பேரூராட்சி அலுவலகம் பின்புறம் இருக்கின்ற ஹரிஜன பொதுமக்கள் கேட்டிருக்கின்றார்கள். ஆற்றுப் பாலத்திலே 1976 ஆம் ஆண்டு ரூ. 4,000 கூட செலுத்தியிருக்கிறார்கள், ஹரிஜன மக்கள். அதுபோல, திருமலைப்பாளையத்திலேயும், மிஷ்டமலைக் காட்டிலேயும் உள்ள ஆதிவாசிகள் பேரூர், சீரநாய்க்கன் பாளையம் பகுதிகளில் இருக்கின்ற ஹரிஜன மக்களுக்கு, கிராமங்களிலே இருக்கின்ற ஹரிஜன மக்களுக்கு வீட்டு மனை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 24] [திரு. ஆ. நடராசன்]

ஹரிஜன மாணவர்களுக்கு இல்லம் தொடங்குவதாக தெரிவித்திருக்கின்றார்கள். அதிலே என்னுடைய தொகுதியிலே ஒரு இல்லம் கூட இல்லாத காரணத்தினாலே ஹரிஜன மாணவர் களுக்கு இல்லம் துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரூர் ஒன்றியம், மற்றும் மாநகராட்சியிலே சேர்க்கப்பட்ட தெலுங்குபாளையம், குமாரபாளையம் ஆகிய ஊர்களில் 10 லிட்டர் மண்ணெண்ணெய் கடந்த 1978 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்தது. அது இப்போது 5 லிட்டராகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு ஏற்றாலும், ஏற்காவிட்டாலும், விவசாயி களுடைய கடன் தள்ளுபடி செய்கிறோம் என்று சொன்னார்கள். வீட்டிற்கு சேலை, வேஷ்டி 1984 ஆம் ஆண்டு கொடுத்தீர்கள். ஒரு கிலோ ஒருவருக்கு வேலை, 20 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி, பாம்புகடி வைத்தியருக்கு குதிரை, அமாவாசை இருட்டில் திருட வரும் முகமூடி திருடர்களைப் பிடிக்க ஹெலிகாப்டர், பட்டினி சாவுக்கு ரூ. 100, தாலிக்குத் தங்கம் தருகிறோம், மூன்று சக்கர சைக்கிளில் காய்கறி தருகிறோம் என்று எண்ணற்ற வாக்குறுதிகளை தந்தீர்கள். ஆனால் அவற்றை நிறைவேற்றவில்லை. அவற்றை நிறைவேற்றாமல் விடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது)

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்

என்ற குறளை எடுத்துக்கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. என். விஜயபாலன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் தந்த 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியறிதலை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. என். விஜயபாலன்] [1987 மார்ச் 24

நிதிநிலை அறிக்கையினுடைய ஆரம்பத்திலே,

"கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி"

என்ற வள்ளுவனுடைய குறளை இங்கே முன் உதாரணமாக வைத்து இருக்கின்றார்கள். அந்த வள்ளுவனுடைய குறளுக்கிணங்க, கொடை வழங்குதல், அருள்புரிதல், செங்கோல் முறை பேணுதல், குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய நான்கு பண்புகளையும் உடைய அரசு இருக்கிறது. தமிழகத்திலே செம்மையான ஒரு ஆட்சியை தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று பற்றாக்குறை பொருளாதாரம், அதன் காரணமாக ஏற்படும் பண வீக்கம், கட்டுக்கடங்காமல் அகில இந்திய அளவிலே ஏறிக்கொண்டே வரும் விலைவாசி ஏற்றம் போன்ற நிலைமைகள் உருவானாலும்கூட அதை எல்லாம் சீர் செய்து தமிழக மக்கள் வளமோடு வாழ்வதற்காக, அவர்களுடைய எதிர்காலம் சிறப்பாக, செம்மையாக இருப்பதற்காக தமிழக அரசும், அதன் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களும் காரியங்களை செய்து வருகின்றார் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒருபுறம் வறட்சி, மற்றொருபுறம் வெள்ளம், புயல், இன்னொரு பக்கம் இனக் கலவரங்கள், அடுத்த பக்கம் அரசியல் வாதிகளின் அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள், இதற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல இன்றைக்கு நாட்டிலே வெடிகுண்டு சம்பவங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கிறோம். இந்த வெடிகுண்டு சம்பவங்களை முறையாக கண்டுபிடித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அந்த வெடிகுண்டு சம்பவங்களால் மக்கள் இறந்து கொண்டிருப்பதைக் கண்டுபிடித்து, இந்த அரசு ஆவன செய்து கொண்டிருக்கின்ற நிலைமைகளை நான் உளமாற பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 12-20)

குறிப்பாக அரியலூருக்கு அருகில் மருதையாற்றிலே வெடிகுண்டு வைக்கப்பட்டு, ரெயில் கவிழ்ந்து பல அப்பாவி மக்களுடைய உயிர் போக்கப்பட்டது. கடந்த சில நாட்களாக



1987 மார்ச் 24] [திரு. என். விஜயபாலன்]

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் வெடிகுண்டு வைக்கப் படுவதால் பல்வேறு அப்பாவி மக்களுடைய உயிர் போக்கப் படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் இவ்வாறு நடைபெறாமல் இருப்பதற்காக இந்த அரசு கடுமையான நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொண்டிருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய காரியங்களைச் செய்கின்ற தீவிரவாதிகளை அல்லது குற்றவாளிகளைக் கண்டு பிடித்து கடுமையான தண்டனையை வழங்க வேண்டும்.

தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு தமிழக மக்களுக்காகவும், அவர்களுடைய நல்வாழ்வுக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள். உலகத்தில் எங்கெங்கு தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் ஏற்படுகின்ற இன்னல்களை எல்லாம் போக்குகின்ற ஒரு நல்ல தலைவராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மனசாட்சி படைத்தவர்கள் மறுக்கவே மாட்டார்கள். அந்த வகையில் இலங்கை தமிழர்களுடைய பிரச்சினை கடந்த சில ஆண்டுகளாக பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாமெல்லாம் நன்றாக அறிவோம். அந்த இலங்கை தமிழர்களை ஓர் அரசாங்கம் தன்னுடைய இராணுவத்தை அனுப்பி வைத்து கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது. அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுகின்றார்கள். உலகத்தின் வேறு எங்கும் நடைபெறாத அளவுக்குக் கொடுமையை அங்கே ராணுவம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்து நம்மால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தன்னால் எந்த அளவுக்கு அந்தத் தமிழர்களுக்கு வாழ்வு அளிக்க முடியுமோ அந்த அளவுக்கு வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த அளவுக்குக் கொடுமைகளை நீக்க முடியுமோ அந்த அளவுக்கு இந்த அரசு கொடுமைகளை நீக்க பாடுபட்டுக் கொண்டிருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் இந்திய துணைக் கண்டத்தின் பிரதமர் அவர்களும் இப்பிரச்சினைக்கு நல்ல முறையில் தீர்வு காண

[திரு. என். விஜயபாலன்] [1987 மார்ச் 24

ஆவன செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, அந்த வகையில் அவர்களும் இதற்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இப்படி பல்வேறு நிலைகளில் முயற்சிகளை மேற்கொண்டும் இன்னும் முழுமையாக பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. இப்படியே போய்க் கொண்டிருந்தால் இலங்கையில் வாழ்கிற தமிழர்கள் அனைவரையும் நாம் இன்னும் கொஞ்சம் நாட்களில் இழந்துவிடுவோமோ என்கிற அச்சம் என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் இருப்பதால் தயவுசெய்து இப்பிரச்சினையில் இன்னும் தீவிரமாக எவ்வளவு தூரம் நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் நடவடிக்கையை மேற்கொண்டு இலங்கை தமிழர் பிரச்சினைக்கு விரைவில் முழுமையான தீர்வு காண வேண்டுமென்று நான் தமிழக அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். தீர்வு காண முடியாத பிரச்சினைகளுக்கெல்லாம் வெற்றிகரமாக தீர்வு கண்டு வெற்றிகளைக் குவித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். பல்வேறு வெற்றிகளைக் குவித்த மாண்புமிகு, புரட்சித் தலைவர் அவர்கள் இப்பிரச்சினையிலும் இன்னும் தீவிரமாக ஈடுபட்டு அந்த அப்பாவி இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற உடனடியாக தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழையெளிய மக்களும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களும், ஆதி திராவிடர் பழங்குடி மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், கிராமப்புற மக்களும் செம்மையாக வாழ வேண்டுமென்ற கருத்து கொண்டவர் எங்களுடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த கருத்துக்கேற்ப தமிழக முதல்வர். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த கருத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கு 20 கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கீடு செய்து இலவச காலணி அளிக்கும் திட்டத்தை வகுத்து தந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கும், கிராமப்புறத்திலே பணியாற்றுகின்ற ஏழை தாய்மார்களுக்கும் இலவசமாக காலணி



1987 மார்ச் 24] [திரு. என். விஜயபாலன்]

வழங்குகின்ற அருமையான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே அறிமுகப்படுத்தி யிருக்கிறார்கள். இத்தகைய நல்ல திட்டங்களை அறிவிக்கின்ற போது தங்களுடைய மன நிலைமைக்கு ஏற்ப பாராட்டுகின்ற மனம் படைத்தவர்கள் பாராட்டுகிறார்கள், பாராட்டாமல் இருக்க வேண்டுமென்ற மனம் படைத்தவர்கள் பாராட்டாமல் இருக்கிறார்கள். கிண்டல் செய்ய வேண்டுமென்ற மனம் படைத்தவர்கள் கிண்டல் செய்கிறார்கள். இத்தகைய முறையில் இங்கே சிலர் பேசிய காட்சியையும் நாம் பார்த்தோம். எதையும் பேசுவதும், சொல்வதும் எளிது. ஆனால் ஒவ்வொரு திட்டங்களையும் செயல்படுத்துவது என்பது அவ்வளவு சாதாரண காரியம் அல்ல என்பதை நான் இங்கே அப்படிப்பட்டவர்களுக்கு நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுடைய எண்ணங்களை புரிந்து கொண்டவர்கள். ஆதலால் தான் இத்தகைய அற்புதமான திட்டத்தை இன்றைய தினம் உருவாக்கியிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்திய நேரத்திலே இந்தத் திட்டம் நிறைவேறுமா என்று கேட்டவர்கள் உண்டு. நடைமுறைப்படுத்த முடியாது என்று சொன்னவர்கள் உண்டு. இது சாத்தியப்படாது என்று சொன்னவர்களும் உண்டு. அன்றைக்குச் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி கிண்டல் செய்தவர்கள் எல்லாம் வியக்கின்ற வகையில் தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அத்திட்டத்தை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும், 80, 90 லட்சம் குழந்தைகள் பயனடையும் வகையிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதைப்போன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு திட்டமும் எதிர்காலத்தில் வெற்றிகரமாக நிச்சயமாக நடைமுறைப்படுத்தப் படும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். அன்றைக்கு அந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கிண்டல் செய்து பேசியவர்களெல்லாம் இன்றைக்கு எப்படி வாய்மூடி மௌனிகளாக இருந்து கொண்டு இருக்கிறார்களோ அதைப்போன்று இந்தக் காலணி வழங்குகின்ற திட்டத்தையும் கிண்டல் செய்து கொண்டிருக்கின்றவர்கள் நிச்சயமாக எதிர் காலத்திலே வாய்மூடி மௌனிகளாக இருக்கின்ற நிலைமைகள் உருவாகும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. என். விஜயபாலன்] [1987 மார்ச் 24

ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரைக்கும் செல்லும் பள்ளிச் சிறார்களுக்குச் சீருடைகளும், பாடப் புத்தகங்களும் வழங்கியிருக்கிறது. அவர்களுக்கு இன்றைக்குக் காலணியும் கிடைக்கிறது என்றால் அந்த அளவிற்கு அவர்களுடைய வாழ்க்கையிலே ஏழைக் குழந்தைகள் காலிலே போடுவதற்கு அந்தக் காலணியை வாங்குவதற்கு வசதியற்ற கொடிய சூழ்நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் உணர்ந்து பார்த்த காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட மாபெரும் திட்டத்தைத் தமிழக முதல்வர் அவர்கள் எத்தனை கோடி செலவானாலும் அந்தக் ஏழைக் குழந்தைகளும், கிராமப்புறங்களிலே பணியாற்றுகின்ற ஏழைத் தாய்மார்களும் வளத்தோடு இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலே உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோமேயானால் தமிழகத்திலே பல்வேறுபட்ட இடங்களிலே குறிப்பாகக் கோடை காலங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு நிரம்ப இருக்கிறது என்பதை நாம் தெளிவாக அறிவோம். ஆனாலும் சென்னையைப் பொறுத்த அளவிற்கு பல ஆண்டுக் காலமாக குடிநீர் வசதி இல்லாமலும், எந்த விதமான வசதி இல்லாமலும் சென்னை வாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக அறிந்த தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை உருவாக்கினார்கள். அந்தக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தில் மத்திய அரசும் நிச்சயமாக ஒரு நல்ல நிலையை உருவாக்கும் என்று இந்த நேரத்திலே நான் நம்புகிறேன். அந்தக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் வெற்றி பெறுகின்றபொழுது சென்னையிலே குடிநீர்ப் பஞ்சமே இருக்காது என்ற நிலைமை உருவாகிவிடும். இதுவரை யாருமே செய்ய முடியாத அந்த மாபெரும் திட்டத்தை, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற அந்தத் திட்டத்தை, சென்னையிலே வாழ்கின்ற மக்களினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1987 மார்ச் 24] [திரு. என். விஜயபாலன்]

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொல்லுகின்றபொழுது, குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மூன்று படி அரிசித் திட்டத்தைச் சொல்லி அதை நிறைவேற்றாமலே போய்விட்டார்கள், அதைப் போன்று திராவிடப் பாரம்பரியம் என்று சொல்லுகின்ற ஆட்சி நடைபெறுகின்றது, அதைப் போன்று வீடு கட்டுகிறோம் என்று சொல்லி நீங்களும் செய்து விடாமல் இருக்கப் போகிறீர்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். நடந்து கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சியினுடைய நல்ல நோக்கத்தை உணர்ந்தாக வேண்டும். ஆட்சிப் பீடத்திலே இருக்கின்ற, ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றவர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் மூன்றுபடி அரிசித் திட்டத்தை உருவாக்ினார்கள் என்றால் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் அதைச் சொன்னார்கள். ஆனால் நடைமுறைப்படுத்துகின்ற பொழுது ஏற்படுகின்ற சங்கடங்களினால் சில நேரங்களிலே அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய இயலாமற் போவது இயற்கையான ஒன்றாகும். அந்த அடிப்படையிலேதான் பேரறிஞர் அவர்கள் அன்றைக்கு முடிந்த அளவிற்குத் தமிழக மக்களுக்கு நல்ல நல்ல திட்டங்களை அறிவித்தார்கள்.

அதனுடைய அடிப்படையில் பேரறிஞர் அண்ணாவினுடைய வழிவந்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலேதான், முப்பது இலட்சம் வீடுகள் கட்டப்படுகிறது என்று சொல்கிறார்கள். எத்தனை பேர்கள் இன்றைக்கு வீதியிலே உறங்குகின்ற காட்சியையும், பிளாட்பாரத்திலே படுத்துக் கிடக்கின்ற காட்சியையும் பார்க்கின்றோம்? அந்த காரணத்தினாலேதான் ஏழைமக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலேதான் முப்பது இலட்சம் வீடுகள் வழங்கப்படும் என்ற ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி தந்திருக்கிறார்கள். அவர்களுடைய நோக்கத்தை நாம் பாராட்ட வேண்டுமே தவிர, அல்லது அதை நடைமுறைப்படுத்துவதற்கு வழிமுறைகளைச்

சொல்ல வேண்டுமே தவிர, நடைபெறவில்லை என்பதற்காகக் குறைகூறிக் கொண்டு இருப்பதில் பயனில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேரூர் நடராசன் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, எங்களுடைய ஆட்சியிலே கலைஞர் அவர்கள் பல்வேறுபட்ட திட்டங்களையெல்லாம் செய்தார்கள், அந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு கவனிக்காமல் போய்விட்டது என்றெல்லாம் சொன்னார்கள். எந்த ஆட்சியிலே போட்ட திட்டமாக இருந்தாலும், அது நல்ல திட்டமாக இருக்குமேயானால் தமிழக முதல்வர் அவர்கள் அதை உள்ளுணர்வோடு எடுத்துச் செய்யக் கடமைப்பட்டிருப்பார்கள். ஆனால் வீராணம் திட்டம் போன்று இருந்தால் அதை எப்படிச் செயல் படுத்த முடியும் என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போன்று இந்த ஆட்சியிலே பல்வேறுபட்ட நன்மைகளும், பல்வேறுபட்ட திட்டங்களும் வரலாற்றிலே, சரித்திரத்திலே இடம் பெறுகின்ற வகையில் ஏழை மக்கள் பாராட்டுகின்ற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை உளமார இந்த நேரத்திலே நான் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கின்றேன். அதே நேரத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒரு சில பிரச்சினைகளைச் சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். ஏனென்றால் தமிழகத்திலே பல்வேறுபட்ட நன்மைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, என்னுடைய பூம்புகார் தொகுதியிலே பல்வேறுபட்ட நன்மைகளைத் தமிழக அரசு செய்திருக்கிறது. என்றாலும் கூட, செண்பகனிருப்பு எண்டங்கொட்டு கிளையூர் என்ற இடத்திலே ஐயாவையனார் பிரிவு வாய்க்கால் ஒன்று போய்க் கொண்டிருக்கிறது. பல ஆண்டுக் காலமாக அங்கே மதகு இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதையும், அதைப்போல மாக்கார் படுகை மஞ்சளாறு இணைப்புப் பாலமும்,





எரவாஞ்சேரி இலுப்பூர் வீரசோழன் ஆறு இணைப்பு பாலமும், கார்குடி படுகை மஞ்சளாறு இணைப்புப் பாலமும், ஆரவல்லி சேமங்கலம் ஐயாவையனார் இணைப்புப் பாலமும் அவசியம் வேண்டும் என்று பல ஆண்டுக் காலமாக அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டு இருக்கின்ற அந்த மக்களின் எண்ணங்களை நான் இந்த நேரத்தில் கவனப்படுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

தரங்கம்பாடி தாலுகாவில் சந்திரவரம் என்ற கிராமம் இருக்கிறது. மீனவர்கள், ஆதிதிராவிடர்கள், பின்தங்கிய வகுப்பினர்கள் அங்கே வாழ்கிறார்கள். அங்கே ஒரு பாலம் கட்டும் வேலை மீனளத் துறையினால் தொடங்கப்பட்டு, மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் அந்த வேலை முடிவு பெறவில்லை. அந்த வேலை ஏன் இன்னும் முடியவில்லை என்று சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் கேட்டும் கூட இன்னும் எங்களுக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை. நாடு சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலாவது அந்தப் பாலம் கட்டும் வேலை முடிக்கப்பட்டு, அந்த மக்களுக்குப் பயன் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டைகள் பல இருக்கின்றன. யோகா உடற்பயிற்சி செய்கின்றவர்கள் நிறைய பேர் அங்கே வருகிறார்கள். காரணம் உடல் நலத்திற்கு ஏற்ற 'ஆர்சான்' என்று சொல்லப்படுகின்ற காற்று அங்கே அதிகமாக இருக்கிறது. ஆகவே, பல்வேறு பகுதிகளை சுற்றுலா வளர்ச்சித் தலங்களாக மாற்றி வருகின்ற நம்முடைய அரசு, தரங்கம்பாடியை ஒரு சுற்றுலா வளர்ச்சித் தலமாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் பல்வேறு பட்ட பலன்கள் அந்தப் பகுதி மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கல்விக்காக நம்முடைய அரசு செய்கின்ற செலவினங்களையும் திட்டங்களையும், திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துகின்ற முறைகளையும் நான் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியில் செம்பனார்கோவில் ஊராட்சியில் ஒரு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அதை ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியாக

மாற்றியமைக்க வேண்டுமென்று விரும்பி, அந்தப் பகுதி மக்கள் 10,000 ரூபாயும் கட்டியிருக்கிறார்கள். ஆகவே, அந்த நடுநிலைப் பள்ளியை மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களை வரவேற்று, பாராட்டி, எனக்கு பேசுவதற்கு கிடைத்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. வி. பி. சிந்தன்:** மரியாதைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களைச் சொல்வதற்காக நான் இங்கே நிற்கிறேன்.

இந்த அறிக்கையின் சில இடங்களில் சாலச்சிறந்த சில கருத்துக்களை மாண்புமிகு நிதி அமைச்சர் வலியுறுத்தி யிருப்பதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். "இந்தியா முழுவதையும் பாதிக்கக் கூடிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை பொருளாதாரம், அதன் காரணமாக ஏற்படும் பண வீக்கம், கட்டுக்கடங்காமல் அகில இந்திய அளவில் ஏறிக் கொண்டே வரும் விலைவாசி ஏற்றம், கடன் பளு, உயர்ந்து கொண்டே வரும் வட்டி விகித அளவு முதலியவை தமிழக அரசின் பொருளாதாரக் கட்டுக்கோப்பையும், தமிழக மக்களின் பொருளாதார வாழ்வையும் பெரிதும் பாதிக்கவே செய்கின்றன" என்று ஆரம்பித்திருக்கிறார்கள்.

துணைத் தலைவரவர்களே, மீண்டும் "தமிழக மாநில மக்களின் சிக்கல்களை எல்லாம் செம்மையான முறையில் தீர்த்து வைப்பது என்பது, முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை" என்று குறிப்பிட்டு, "மத்திய-மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பு சிறப்பாகவும், செம்மையாகவும் நடந்தேற வேண்டுமானால் உறவு முறையிலும் உரிமைப் பரிமாற்றங்களிலும் சீரான—தேவையான மாற்றங்கள் ஏற்பட வேண்டும்; அப்பொழுதுதான் வளமான மாநிலங்களைக் கொண்ட வலுவான இந்தியா அமையும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தைத்தான் நான் வரவேற்கிறேன் என்று சொன்னேன்.





ஆனால் இந்த உரை முழுவதையும் படித்தபோது இந்தக் கருத்தை சில வாசகங்களில் கூறிவிட்டு, இந்தக் கருத்தைக் காற்றிலே பறக்கவிட்டதுபோல் தெரிகிறது. இதிலே ஒரு இடத்தில் குறிப்பிடும்போது "புதுவாழ்வு தேடித் தரும் பொறுப்பினை மாநில அரசுகள் செம்மையான முறையிலே செய்திட இயலாது" என்று குறிப்பிட்டது கூர்ந்து நோக்கத் தக்கதாகும். ஆங்கிலத்தில் This requires serious thought என்று இருக்கிறது. ஆனால் ஆளும்கட்சி கூர்ந்து கவனிக்கிறதா என்பது என்னுடைய சந்தேகம்.

நான் நீண்ட விளக்கங்களுக்குள் போகவில்லை. திட்டக் குழுக் கூட்டங்களிலும், தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும், நிதிக் குழு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநிலங்களுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்கிற நேரத்திலும், முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இந்தக் கோரிக்கைகள் எந்த அளவுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கின்றன என்பதும், இந்தக் கோரிக்கை களுக்கு எந்த அளவுக்கு தமிழக மக்களைத் திரட்டியிருக்கிறது என்பதும், இந்தக் கோரிக்கைகளுக்காகப் போராடக்கூடிய இதர பல சக்திகளுடன் எந்த அளவுக்கு இணைந்திருக்கிறது என்பதும் இங்கே நான் எழுப்புகிற முக்கியமான கேள்வி.

துரதிருஷ்டவசமாக இத்தகைய கோரிக்கைகளை வலியுறுத்துகிற மாநில முதலமைச்சர்கள் மாநாடு கூடும்போது நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அங்கு செல்ல மாட்டார்கள். இத்தகைய கோரிக்கைகளுக்காகப் போராட்டங்கள் முதலமைச்சர்களுடைய மாநாட்டில் நடைபெறும்போது ஆளும் கட்சி பக்கத்தில் முதலமைச்சர் உறுதியாக நின்று விடுகிறார். ஆகவேதான் இந்தக் கொள்கைகள் ஏட்டளவில் இருக்கிறதே தவிர நடைமுறையில் கொண்டு வருவதில் போதுமான கவனம் செலுத்தவில்லை என்பதைத் தான் வருத்தத்தோடு நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மன்றத்திற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் நாடு முழுவதும் ஒரு மிக வலிமை வாய்ந்த இயக்கம் நடந்து கொண்டு இருக்கிறது, இந்த முக்கியமான கருத்துக்களை வலியுறுத்தி. அதுமட்டுமல்ல. மாற்றுக் கொள்கைகள் அமைய வேண்டும். 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பிறகு கடைப்பிடித்த கொள்கைகள் நம்முடைய நாட்டை ஒழிவிற்கு எடுத்துச் செல்கிறது. ஆகவே அந்தக்

[திரு. வி. பி. சிந்தன்] [1987 மார்ச் 24

கொள்கைகளை மாற்ற வேண்டும். ஒரு ஆல்டர்னேட்டிவ் பாலிசி அதாவது ஒரு மாற்றுக் கொள்கை என்ற அடிப்படையில் இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்ற முறையில் ஒரு மகத்தான இயக்கம் இன்று நடந்து கொண்டு இருக்கிறது. இதில் ஆளும் கட்சி எந்தப் பக்கத்தில் நிற்கிறது என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

மத்திய அரசு அண்மையில் புதிய பொருளாதாரக் கொள்கை என்று ஒரு கொள்கையை அறிவித்தது. நான் விளக்கத்திற்குள் போகாவிட்டாலும் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நாட்டுக்குத் தேவையான பல்வேறு பண்டங்களையும், பல்வேறு இயந்திரங்களையும் உற்பத்தி செய்கிற தகுதி வாய்ந்த இயந்திரங்கள் நம்மிடத்திலே இருந்தும் அந்நிய நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்க்கு பொருட்களையும், இயந்திரங்களையும் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது அரசு. ஒரு மாதத்திற்கு முன்னால் பெங்களூரில் உள்ள இண்டியன் டெலிபோன்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. நம்பியார் பகிரங்கமாக அரசினுடைய இந்தக் கொள்கையைக் கண்டித்து ஒரு அறிக்கையை வெளியிட்டதை நான் இந்த மன்றத்தின் முன்னால் கொண்டுவர விரும்புகிறேன். டெலி கம்யூனிக்கேஷன் எக்விப்மென்ட்ஸ் அதாவது தேவையான தொலைபேசிக் கருவிகளை உண்டாக்கக் கூடிய தொழிற்சாலை பெங்களூரிலே இருந்தும் 1976 ஆம் ஆண்டிலே 770 கோடி ரூபாய் மதிப்புள்ள தொலைபேசிக் கருவிகளை அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது ஏன் என்று அங்கே கேட்கிறார்கள்.

அதே முறையில் பலம் வாய்ந்த கப்பல் கட்டும் தொழிற்சாலை நமக்கு உண்டு விசாகப்பட்டினத்தில். அப்படி இருந்தும் ஆண்டுதோறும் அந்நிய நாடுகளிலிருந்து கப்பல்களை ஏன் இறக்குமதி செய்கிறீர்கள் என்று அங்கேயுள்ள பொறியாளர்களும், அந்த நிறுவனத்தினுடைய தலைவரும் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் வலியுறுத்திக் கூறுகிறார்கள். ஆகவேதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று வலியுறுத்தினால் மட்டும் போதாது. மத்திய அரசினுடைய கொள்கைகள் மாநிலங்களைச் செயலற்ற முறையில் ஆக்கி விடுகிறது. மாநிலங்களின் தொழில் வளர்ச்சிக்கு அது குறுக்கே நிற்கிறது. அவர்கள் 8,000 கோடி ரூபாய்க்கு மேல் பற்றாக்குறை பட்ஜெட் கொண்டு வந்ததும், புதிய வரித் திட்டங்களைக் கொண்டு வந்ததும் மாநில அரசுகள் மூச்சுவிட முடியாத



1987 மார்ச் 24] [திரு. வி. பி. சிந்தன்]

நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது; மாநிலங்களில் உள்ள முன்னேற்றங்களைத் தடை செய்கிறது அது என்ற நல்ல கருத்தைச் சொன்னால் மட்டும் போதாது—நான் மீண்டும் சொல்கிறேன்—அதற்காக இந்தியா முழுவதும் நடைபெறக் கூடிய இயக்கத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தலைமையில் இயங்குகிற அரசும் துணை நிற்குமேயானால் நான் மகிழ்ச்சி உள்ளவனாக இருப்பேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1947-க்குப் பிறகு இன்று வரையுள்ள ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகளை சற்று பரிசீலித்துப் பார்த்தால் ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகப்பட்டு ஒரு மிகப் பெரிய அட்வர்ஸ் பேலன்ஸ் ஆஃப் பேமென்ட் ஏற்பட்டிருப்பதை உணர முடியும். அதாவது நம்முடைய வியாபாரத்தை அதிகப்படியாக அந்நிய நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய ஒரு சிக்கல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மாநில அரசு கவனித்து நாடு முழுவதும் நடைபெறுகிற மக்களுடைய இயக்கத்தோடு சேர்ந்து நிற்க வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் தமிழக அரசின் கொள்கையைப் பார்க்கும்போது அதே பற்றாக்குறை பட்ஜெட்டையும், அதே அதிகப்படியான வரியையும்—நான் விளக்கத்திற்குள் போகவில்லை—மீண்டும் வலியுறுத்துகிற நிலைமையில்தான் இந்தக் கொள்கைகளும் வந்திருக்கின்றன. மத்திய அரசின் கொள்கைகளிலிருந்து மாறுபட்ட பட்ஜெட்டாக, மாறுபட்ட அணுகுமுறையாக இதிலே நான் பார்க்க முடியவில்லை.

நான்கு முக்கியமான பிரச்சினைகளை மட்டும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கொடுங்கள் என்று அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். ஆக்க பூர்வமான ஆலோசனைகளைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் நான் இவ்வளவும் பேசுகிறேன். ஒன்று, பொது விநியோக முறையை அதாவது பப்ளிக் டிஸ்ட்ரிபுஷன் சிஸ்டத்தை எந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் வலுப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு வலுப்படுத்தவில்லை

[திரு. வி. பி. சிந்தன்] [1987 மார்ச் 24

(பிற்பகல் 12-40)

என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதை வலுப்படுத்துவதன் மூலமாகத்தான் இந்தியாவிலே சுழன்று கொண்டிருக்கிற விலைவாசி உயர்வை ஓரளவிற்கு கட்டுப்படுத்தி தமிழக மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும். சீரழிவு இல்லாத லஞ்சமும் ஊழலும் இல்லாத திறமையான ஒரு பொது விநியோக முறை ஏற்பட வேண்டும். அந்தக் கடைகளிலேயே மருந்து வேண்டும். அந்தக் கடைகளிலேயே துணி வேண்டும். அந்தக் கடைகளிலேயே உணவுப் பண்டங்கள் வேண்டும். அத்தியாவசியமான அனைத்துப் பொருள்களும் நியாயமான விலைக்கு வழங்கக் கூடிய அளவுக்கு பொது விநியோக முறையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நான் சார்ந்திருக்கிற இயக்கத்தினுடைய அனுபவத்தில் உங்களுக்குச் சொல்கிறேன் அந்த முயற்சியை எடுக்கும்போது, அந்த மாநிலத்தில் விலைவாசியை ஓரளவுக்கு நம்மால் கட்டுப்படுத்த முடியும்.

இரண்டாவதாக உற்பத்தித் துறையிலும், விநியோகத் துறையிலும் எந்த அளவுக்குச் சிறப்பாக கூட்டுறவு அமைப்பைப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முடியும். ஓரளவுக்கு முடியும். நமது நிதியமைச்சர் குறிப்பிட்டதைப் போல் மாநில அரசால் மட்டும் இந்தப் பிரச்னையைத் தீர்த்து விட முடியாது. ஓரளவுக்குப் போக்க முடியும். அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

மூன்றாவதாக இந்த நாட்டிலுள்ள கோடிக்கணக்கான விவசாயிகளுடைய உற்பத்திப் பண்டங்களுக்கு நியாய விலை வழங்க வேண்டும். அரசு நெல்லுக்கு 35 ரூ. மானியம் வழங்குகிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அது மட்டும் போதாது. பஞ்சு உற்பத்தி செய்கிற லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னால் என்ன விலை கிடைத்ததோ அந்த விலையையும், அன்றைய நூல் விலையையும் துணி விலையையும் இன்றைய நூல் விலையோடும் துணி விலையோடும் ஒப்பிட்டுப் பாருங்கள். பஞ்சு உற்பத்தி செய்கிற விவசாயிகள் பஞ்சாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆலை முதலாளிகளோ கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும்.



1987 மார்ச் 24] [திரு. வி. பி. சிந்தன்]

நான்காவதாக, தென்னாற்காடு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் போன்ற இடங்களில் கடலை, நிலக்கடலை உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுடைய நிலைமையும் இப்படித்தான். எண்ணெய் எண்ணெயிலிருந்து உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களின் விலை உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால் விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் லட்சக் கணக்கில் இருக்கும் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுடைய நிலைமையும் அதுதான். 10 ஆண்டுகளுக்கு முன்னால் சீனியின் விலை என்ன? 10 ஆண்டுகளுக்குப் பிறகு சீனியின் விலை இன்றையதினம் என்ன? கரும்பு பயிரிடும் விவசாயிக்கு என்ன கிடைக்கிறது?

இதற்கெல்லாம் மேலாக நிலம் அதிகமாக வைத்திருக்கிறவர்களிடமிருந்து பிடுங்கி ஏழை எளிய மக்களுக்கு எந்த அளவுக்கு இலவசமாக வழங்க முடியுமோ அந்த அளவுக்குத்தான் கிராமப்புற மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகப்படுத்த முடியும். நம்முடைய தொழில் வளர்ச்சிக்கும் உத்தரவாதம் கிடைத்திட முடியும். இந்த நான்கு பிரச்சினைகளிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் வேண்டும். அவைகளை நமது மாநில அரசு கடைப்பிடிக்குமா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும் போது, அத்தகைய ஒரு முறைக்கு, அத்தகைய ஒரு வழி காட்டுதலுக்கு இந்த அரசு தயாராக இருப்பதாக இந்த பட்ஜெட்டிலே இல்லை. தமிழக அரசினுடைய சமீப கால நடவடிக்கைகளையும் கணக்கிலே எடுத்துப் பார்க்கும்போது, அந்த திசையில் செல்லுகிற அறிகுறியையே இந்த பட்ஜெட்டிலே நான் பார்க்கவில்லை.

பட்ஜெட்டை கொண்டு வருவதற்கு முன்னால், ஸ்டாம்ப் டியூட்டியை அதிகப்படுத்தினார்கள். பால் விலையை அதிகப்படுத்தினார்கள். பயணச் சீட்டு விலையை உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய அரசு என்ன நடவடிக்கையைக் கடைப்பிடிக்கிறதோ அதே முறையில் இங்கேயும் பட்ஜெட்டுக்கு முன்னாலே அத்தனையையும் உயர்த்தி விட்டு, இந்த பட்ஜெட்டிலேயும் 90 கோடி அளவுக்கு வரி போட்டிருக்கிறார்கள் என்பது எந்த விதத்திலும் நம்முடைய விலைவாசி நிலைமையை கட்டுப்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்றிட முடியாது. தொழில் வளர்ச்சிக்கும் இது பெரும் அளவுக்கு உதவி அளிக்காது.

[திரு. வி. பி. சிந்தன்] [1987 மார்ச் 24

பட்ஜெட்டிலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மோட்டார் வெஹிகல்ஸ் டாக்ஸுக்கு மேலே ஒரு சர் சார்ஜ் வசூலிக்கப்படுவது நம்முடைய தமிழ்நாட்டில்தான். மோட்டார் வெஹிகல்ஸ் டாக்ஸ் என்ன வசூலிக்கப்படுகிறதோ அதற்கு மேல் 50 சதவீதம் சர் சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. அது மட்டும் அல்ல. எல்லா கழகங்களிலேயும் 40 சதவீதம் வண்டிகளை நாம் ஓட்டுகிறோம். எல்லா கழகங்களிலேயும் லாபத்தை ஈட்டியிருக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஊதிய உயர்வு ஒன்றும் அதிகப்படியாக செய்யப்படவில்லை. அக்கம் பக்கத்தில் உள்ள மாநிலங்களை விட கம்மியான சம்பளத்தைத்தான் நாம் நம் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு கொடுக்கிறோம். ஆனால் கிலோமீட்டர் எஃபிஷியன்சி என்று எடுத்துப் பார்த்தால் இன்று இந்தியாவிலேயே முதல் வரிசையில் நிற்பது தமிழகம் தான். ஒரு கிலோ மீட்டருக்கு உள்ள செலவு, ஒரு கிலோ மீட்டருக்கு ஆகக் கூடிய பெட்ரோல் செலவு என்ன என்று பார்த்தால் அது 94 சதவீதத்திலிருந்து 104 சதவீதம் வரை இருக்கிறது.

ஆகவே இவ்வளவு லாபகரமான தொழிலை நாம் நடத்துகிற போது அதிலும் குறிப்பாக மாநில அரசு உலக வங்கியிடமிருந்து 8 சதவீதம் 9 சதவீதம் வட்டிக்கு பெறக்கூடிய பணத்தை இந்த கழகங்களுக்கு 12 சதவீதம் 14 சதவீதம் என்று வட்டிக்கு கொடுக்கிறார்கள். அந்த வட்டி வசூலிக்கக்கூடிய தொகையில் ஏராளமாக லாபம் மாநில அரசுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலைமையில் எந்த விதத்திலும் இந்தக் கட்டணத்தை உயர்த்தி இருக்கக் கூடாது. கல்கத்தாவிலே, பம்பாயிலே, டெல்லியிலே மாநகரங்களில் எல்லாம் அங்கேயுள்ள அரசுகள் கட்டணத்தைக் குறைப்பதற்கு சப்சிடி வழங்குகின்றன. 60 சதவீதம் மானியத்தை மேற்கு வங்க அரசு கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்கு சப்சிடி வழங்குகிறது. ஆனால் நாம் சப்சிடியும் வழங்குவதில்லை, கட்டணத்தையும் உயர்த்திக்கொண்டே போகிறோம். ஆகவே இந்தக் கட்டண உயர்வு, ஸ்டாம்ப் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு ஆகியவைகள் எந்த வகையிலும் நியாயமானவையாக இல்லை



1987 மார்ச் 24] [திரு. வி. பி. சிந்தன்]

அடுத்தபடியாக நான் சொல்ல வேண்டியது சிறு தொழில்களைப் பற்றித்தான். மீண்டும் நான் வலியுறுத்திச் சொல்வேன், மாண்புமிகு நிதியமைச்சர் பதில் அளிக்கும்போது அவர்களிடத்தில் ஒரு நியாயமான பதிலை எதிர்பார்க்கிறேன். தமிழகத்தில் லைசென்ஸ் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றன என்ற கணக்கைத்தான் நீங்கள் சொல்கிறீர்களே தவிர, வேறில்லை. நிதியமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விளக்கத்தைக் கேட்கிறேன். ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் வெளியீடுகளில் பெருமளவிற்கு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்று குறிப்பு வந்திருப்பது உண்மைதானா? அப்படியானால் எவ்வளவு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன? மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதற்கும், சிறு தொழில்களுக்கு கை கொடுப்பதற்கும் மாநில அரசினுடைய திட்டம் என்ன? நான் இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தபோது இதிலே போதுமான அளவிற்கு விவரங்கள் எதுவுமில்லை. ஒரு பிரச்னையை மட்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். நம்முடைய கோவையிலே, சென்னை மாநகரத்திலே தொழில் பேட்டைகளை அமைத்து பெரிய அளவிற்கு ஊக்கத்தை நாம் அளிக்கிறோமே அந்தப் பகுதிகளில் எல்லாம் கோக் கிடைக்காத காரணத்தால். கோல் நியாயமான விலைக்கு கிடைக்காத காரணத்தால் அந்த ஆலைகளை எல்லாம், சிறு தொழிற்சாலைகளை எல்லாம் மூடிக் கொண்டு இருக்கிறார்கள். நான் மாநில அரசைக் கேட்பதெல்லாம் இன்றையதினம் மேற்கு வங்க அரசு இன்னும் பல மாநில அரசுகள் ஒரு கொள்கையை மத்திய அரசிடம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. கோல், இந்தியாவினுடைய எந்தப் பகுதியில் உற்பத்தியானாலும், இந்தியாவினுடைய எந்தப் பகுதிக்கு அதை எடுத்துச் சென்றாலும் ஒரே விலையில் விற்க வேண்டும். இந்தக் கோரிக்கையை எல்லோரும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசும் மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில், திட்டக் குழுவினுடைய கூட்டத்தில் இந்தக் கொள்கையை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன். கல்கத்தாவிற்குப் பக்கத்திலே அல்லது பீகாரிலே நிலக்கரி உற்பத்தி செய்தாலும், அந்தப் பகுதியும் இந்தியாவில் தான் இருக்கிறது. அங்கே நிலக்கரி என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அதே விலைக்கு எல்லா மாநிலங்களிலும் விற்கப்பட வேண்டுமென்பது கோரிக்கை; மத்திய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாது என்று எனக்குத் தெரியும். ஆனால் மத்திய

[திரு. வி. பி. சிந்தன்] [1987 மார்ச் 24

அரசை வலியுறுத்துகிற முறையிலே இந்தக் கொள்கையை நீங்கள் கடைப்பிடிக்கவில்லையென்று சொன்னால் சிறு தொழில்களைப் பாதுகாக்க முடியாது.

அடுத்து, பெரிய தொழில்களைப் பற்றி அதிகமாகச் சொல்ல எனக்கு நேரமில்லை. ஆனால் தொழில்கள் பெருமளவிற்கு மூடப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அபாயத்தை அரசு ஏற்றுக்கொண்டால் அரசுக்கு இழிவு ஏற்படுமே என்ற நிலையில் ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் பார்ப்பது சரியல்ல. இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வழியென்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

கடைசியாக ஒரு பிரச்னையைச் சொல்ல விரும்புகிறேன். அரசினுடைய ஊதியக் கொள்கையை எந்த வார்த்தையில் கண்டிப்பது என்றே தெரியவில்லை. அரசுக்கு ஒரு ஊதியக் கொள்கை உண்டா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். என்.ஜி.ஜி.ஓ.-க்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் முனிசிபல் ஊழியர்கள், மருத்துவமனையைச் சார்ந்த ஊழியர்கள் ஆகியவர்களுக்கு அரசாங்கம் இன்றைய தினம் தமிழகத்தில் 608 புள்ளிக்கு 530 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் 608 புள்ளிக்கு மத்திய அரசு 750 ரூபாய் வழங்குகிறது. ஆந்திர மாநில அரசு 740 ரூபாய் வழங்குகிறது. கர்நாடகா அரசு 632 புள்ளிக்கு 780 ரூபாய் வழங்குகிறது. கேரளாவிலே 608 புள்ளிக்கு 710 ரூபாய் வழங்குகிறார்கள். மத்திய அரசினுடைய ஊதியத்தை ஏன் கொடுக்க மறுக்கிறீர்கள்? போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கிற சம்பளம் பக்கத்து மாநிலங்களில் கொடுக்கிற அளவிற்கு ஏன் கொடுக்க மறுக்கிறீர்கள்? இந்த ஊதியக் கொள்கையிலே மிகப் பெரிய மோசமான கொள்கையை கடைப்பிடிக்கிறீர்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு ஆகும். தமிழ் நாட்டிலே வழங்கப்படுகிற 530 ரூபாய் என்பது மிகவும் கம்மியானது. அது மட்டுமல்ல சத்துணவுத் திட்டம், அதிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு நீங்கள் கொடுக்கிற சம்பளத்தைப் பற்றியெல்லாம் நான் அதிகமாக எடுத்துச் சொல்லாவிட்டாலும் இந்த ஊதியக் கொள்கையிலே அடிப்படையாக ஒரு மாற்றம் தேவை என்று வலியுறுத்துகிறேன். இந்த ஊதியத்தை எதிர்த்து நியாயம் கேட்கிற உரிமை அரசு ஊழியர்களுக்கு உண்டு, தொழிலாளர்களுக்கு உண்டு. ஆனால் இத்தகைய இயக்கத்தை நடத்தும்போது, இன்றைக்கு



1987 மார்ச் 24] [திரு. வி. பி. சிந்தன்]

தலைமைச் செயலகத்திலே 13 பேர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதற்கு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கவில்லை.

[பிற்பகல் 12-50]

அதுமட்டுமல்ல, அரசு ஊழியர்கள் மாலை 5.30 மணிக்குப் பிறகு, அலுவலக வேலை முடிந்த பிறகு ஆர்ப்பாட்டம் நடத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு ரகசிய சுற்றறிக்கையை மாநில அரசு எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பியிருக்கிறது. மின்சார இலாக்காவில் தர்ணா நடத்தினால், இன்கிரிமென்ட் கட் செய்யப்படுகிறது, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு மலருக்கு விளம்பரம் வாங்கியதற்காக, சங்கம் வெளியிட்ட ஒரு சிறப்பு மலருக்காக விளம்பரம் வாங்கியதற்காக 65 பேர்கள் சஸ்பென்சன் செய்யப்பட்டு, அந்த நடவடிக்கை தவறு என்று மின்சார இலாக்காவிற்கு, தொழிலாளர் நல இலாக்காவினுடைய ஆலோசனை வந்ததற்குப் பிறகும் 65 பேர்கள் சஸ்பென்சன் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நான் நீண்ட நேரம் பேச முடியாவிட்டாலும் இதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அரசினுடைய ஊதியக் கொள்கை, தொழிலாளர்களுடைய ஊதிய வழங்குக் கொள்கை, தொழிலாளர் நல இலாக்கா நடத்திச் செல்கிற முறை ஆகியவைகள் சரியல்ல. இதே சட்ட மன்றத்திலே அமைச்சர் அவர்கள், மூடிய ஆலையைத் திறக்க வேண்டுமென்று, தொழிற் தகராறு சட்டத்தின் 10-பி பிரிவின்படி ஒரு உத்தரவு போட்டார்கள். அந்த ஆலையை மூடுவது தவறு, அந்த ஆலையை மூடியது சட்ட விரோதம் என்று. ஆனால் சட்ட விரோதமாக்கப்பட்ட அந்த கதவடைப்பைத் திறப்பதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, நம்முடைய தொழிலாளர் நல இலாக்கா இன்றையதினம் எந்தக் கொள்கையும் இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், தமிழக அரசுக்குச் சொந்தமான ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையில் அண்மையிலே வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. வேலை நிறுத்தம் செய்வதற்குள்ள உரிமையை அடிப்படை உரிமை என்று கருதக் கூடியவர்கள் நாங்கள். ஆனால் வேலை நிறுத்தம் நடைபெறும் போது, புதிய தொழிலாளர்களை வேலைக்குக் கொண்டு வருகிறார்கள். தொழிற் தகராறு சட்டத்தினுடைய 5-வது

[திரு. வி. பி. சிந்தன்] [1987 மார்ச் 24

பிரிவின்படி, இது சட்ட விரோதம். ஆனால், அரசினுடைய ஆலையிலே வெளித் தொழிலாளர்களை போலீஸ் உதவியுடன் கொண்டு வருகிறார்கள். இதை எதிர்த்து குளித்தலையிலே உள்ள நீதிமன்றத்திலே ஒரு வழக்கு போட்டு, நீதிபதிகள் இது தவறு என்று உத்தரவு போடுகிற நிலைமை வந்திருக்கிறது. நான் முடிக்கிற நேரத்தில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டுக்குப் பேராபத்தாக ஜாதி உணர்வுகளும், மத உணர்வுகளும் பிற்போக்காளர்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், தேசிய ஒற்றுமையைக் கட்டிப் பாதுகாக்கிற நோக்கோடு நம்முடைய மிகச் சிறந்த ஒரு இயக்கத்தை தமிழக அரசும், தமிழகத்தினுடைய ஆளும் கட்சியும், ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவர்களும் இணைந்து செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதுதான் நாச வேலை செய்கிறவர்களுக்கு எதிரணியாக அமையும், அதுதான் இந்த நாட்டினுடைய அரசு உரிமையைப் பாதுகாக்க முடியும் என்று கூறி என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு சில பிரச்னைகளை மட்டும் குறிப்பிட்டு முடித்துக் கொள்கிறேன்.

சூரப்பேட்டுத் திட்டம் என்று ஒரு குடிநீர்த் திட்டம். இதை யாரோ ஒரு அமைச்சர் வந்து திறப்பு விழா நடத்தியிருந்தால் நான் வருத்தப்பட்டு இருக்க மாட்டேன். 5 ஆண்டுகளுக்கு முன்னால், 40 லட்சம் ரூபாய் இந்த நகரியத்திலேயிருந்து டுவாட் போர்டுக்குக் கொடுக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் விழா நாட்டிய பிறகும், இன்றைக்கு வரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதே மாதிரியாக மின் வினியோகம் செய்வதிலே, குடி தண்ணீரிலே இருக்கக்கூடிய குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன்.

1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மூலம் வரவு ரூபாய் 2,779.15 கோடியாகவும், செலவு ரூபாய் 2,874 கோடியாகவும், அமைந்திருப்பதை நான் இங்கே கோடிட்டுக் காண்பிக்க



1987 மார்ச் 24] [திரு. இரா. சண்முகம்]

விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக மூலதனக் கணக்கில் வரவும், பொதுக் கணக்கு மூலமாக வரக்கூடிய வரவும், அதேசமயத்தில் புதிய வரிகளின் மூலமாக கிடைக்கக் கூடிய 90 கோடி ரூபாய், வரிச் சலுகை மூலமாக இழப்பு 15 கோடி ரூபாயும் போக, நிகரப் பற்றாக்குறையாக ரூ. 131.69 கோடி அமைந்திருப்பதை இந்த நாட்டினுடைய அறிஞர் பெருமக்களும், பொருளாதார நிபுணர்களும் வரவேற்றிருக்கிறார்கள். அந்த வகையில் இது ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை என்றும், தமிழக அரசு வளர்ச்சிப் பணிகளை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பை இந்த நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காண்பித்து இருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிலையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மக்களுடைய வரிப் பணத்தை எந்த அளவுக்கு தேர்தல் காலங்களில் தான் கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப புதிய திட்டங்கள் மூலமாகவும், அடிப்படைத் தேவைகள் கிராமப் பகுதிகளிலும், பட்டணங்களிலும் உள்ள மக்களுக்குப் போய்ச் சேருகிற வகையில் எண்ணி துல்லியமாக இந்த வரவு-செலவுத் திட்டத்தை வகுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையில் தான் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியமாக கல்விக்கு 597 கோடி ரூபாயும்—மின்சாரத்திற்கு சென்ற ஆண்டு 300 கோடி ரூபாய் ஒதுக்கி இருந்தும் 30 கோடி ரூபாய் அதிகமாக செலவு செய்து இருக்கிறோம்—வேளாண்மைக்கு 141 கோடி ரூபாயும், நகராட்சிக்கு 193 கோடி ரூபாயும், சமூக நலன்களுக்கு 92 கோடி ரூபாயும், பாசனத்திற்கு 142 கோடி ரூபாயும் நாம் ஒதுக்கி அவைகளை செலவு செய்ய தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கல்விக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற 597 கோடி ரூபாயை முதற்கண் நாம் வரவேற்று ஆக வேண்டும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பேரூர் நடராசன் அவர்கள் சொல்லுகிறபோது 'கல்விக்கு நீங்கள் ஒதுக்கிய பணம் போதாது' என்று சொன்னார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியைக் காட்டிலும் அதிகமாகச்

[திரு. இரா. சண்முகம்] [1987 மார்ச் 24

செய்து இருக்கிறார். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றி தேர்தல் காலத்தில் சொல்லாமல் இருந்த தன்னிறைவுத் திட்டம் சத்துணவுத் திட்டம் போன்றவைகளையும் நிறைவேற்றியுள்ளார். கிராமப் பகுதியில் இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் இதற்கு முன்னால் மரத்தடி களிலும், பொது இடங்கள் இல்லாமல் தனிப்பட்டவர்கள் வீட்டு வராந்தாக்களிலும் நடந்து கொண்டு இருந்தன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால்தான் கிராமப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு இன்றைக்கு கூடுதலான கட்டிடங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்களைக் கட்டி இன்றைக்கு பிள்ளைகள் எல்லாம் வகுப்பு அறைகளில் அமர்ந்து படிக்கிற நிலை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் மரத்தடியில் இன்னும் பள்ளி பிள்ளைகள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று ஏன் இப்படி தவறான தகவலை இங்கே வெளியிட்டார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பள்ளிக் கட்டிடங்கள் என்று சொல்லுகிறபோது அவர்கள் பொதுவாக ஆரம்பப் பாடசாலை கட்டிடங்களைப் பற்றி சொன்னார்களா அல்லது உயர்நிலைப் பள்ளிக்கூட கட்டிடங்களைப் பற்றி கோடிட்டுக் காட்டினார்களா என்று தெளிவாகச் சொல்லாமல் சென்று விட்டார்கள். ஏதோ குற்றத்தைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் சொன்னார்களே ஒழிய எல்லோரும் மனம் திறந்து பேச வேண்டும் என்று சொன்னால் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கிராமப் புறங்களில் பல வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள். அந்த வகையில் கல்விக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற 597 கோடி ரூபாயை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டும் அல்ல, இங்கே நடப்பு ஆண்டில் 30 லட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 30 லட்சம் வீடுகளை எப்படி கட்ட முடியும் என்று எல்லோரும் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த 30 லட்சம் வீடுகளை கட்டுவதற்கு தனியாக ஒரு நிறுவனத்தை உருவாக்கி அதன்



1987 மார்ச் 24] [திரு. இரா. சண்முகம்]

மூலமாக அந்த கட்டுமானப் பொருட்கள் எல்லாம் இவர்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்றும் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களுக்கு எல்லாம் அந்தப் பொருட்கள் வெகு சீக்கிரத்தில் கிடைப்பதற்கு நிதிநிலையை உருவாக்கி வைத்ததற்குப் பின்னால் தான் அந்த அரசால் 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள்.

இதற்கு முன்னால் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப் படுத்தியபோது எல்லோரும் பேசினார்கள், ஒரு நிருமணத்திற்கு ஒரு வேளை, இரண்டு வேளை சமையல் செய்து போட முடியாத இந்த நிலையில் தமிழ் நாட்டில் இருக்கிற எல்லாக் குழந்தை களுக்கும் எப்படி அன்றாடம் சமைத்துப் போட முடியும்? இது முடிகிற காரியமா? என்று எல்லாம் அவர்களுக்கு முடிந்த அளவில் எடுத்து அதை வெளியில் விமர்சனம் செய்தார்கள். ஆனால் அந்த சத்துணவுத் திட்டம் எவ்வளவு அழகாக தமிழ் நாட்டில் நடைபெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். 85 லட்சம் குழந்தைகள் ஒரு வேளை சத்துணவை உண்டு கொண்டு இருக்கிறார்கள். வேலை இல்லாமல் இருந்து கொண்டு இருக்கிற விதவைத் தாய்மார்கள் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர்களுக்கு குறைவு இல்லாமல் வேலை வாய்ப்பைப் பெற்று இருக்கிறார்கள். அந்த சத்துணவுத் திட்டத்தை இன்றைக்கு எல்லோரும் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். 1984 பொதுத் தேர்தல் நடந்தபோது சொன்னார்கள், உங்களுடைய பிள்ளைகளுக்கு அவர்கள் தட்டுகளில் தானே உணவு அளிக்கிறார்கள், நாங்கள் வந்தால் தலை வாழை இலை போட்டு அந்த சத்துணவைப் பரிமாறுவோம் என்று எல்லாம் சொன்னார்கள். அந்த வகையில் இன்றைக்கு இந்த 30 லட்சம் வீடுகள் நிச்சயமாகக் கட்டப்படும். கட்டுவதற்கு உண்டான வாய்ப்புகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிய பின்னால் தான் இந்தத் திட்டத்தை இந்த

[பிற்பகல் 1.00]

அவையில் அறிமுகம் செய்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வீடுகளைக் கட்டுவதற்கு எப்படி லெவி சிமெண்ட் இப்போது கண்ட்ரோல் விலையில் சிறிய வீடுகளைக் கட்டுவதற்கு

அரசாங்கம் கொடுக்கிறதோ, அதுபோல இந்த 30 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. கல்லினுடைய விலைக்கு வரியை ஏற்றியிருக்கிறார்கள். அதேபோல், மரத்தினுடைய விலைக்கும் எஸ்.டி. ஏறியிருக்கிறது. ஆகவே முன்பு இருந்த விலையே இருக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கிராமப் பகுதியிலே ஒருங்கிணைந்த குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ், ஏறக்குறைய 2 வயது முதல் 5 வயது வரை, 28,125 மையங்கள் இருக்கின்றன. பலநோக்குச் சுகாதார மையங்கள் 72,009 மையங்கள் அமைந்திருந்து, நடப்பாண்டில் 77,200 மையங்களாக உயர்த்தப் பட்டிருக்கின்றன. 1987-88 ஆம் ஆண்டில் சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிட்டிருப்பதை வரவேற்கிறேன். கிராமப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நோய்வாய்ப்படுகின்ற நேரத்தில் உதவுவதற்கு, கிராமப் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்ற அவல நிலையைப் போக்குவதற்கு புரட்சித் தலைவர் அவர்களால் கூடுதல் சுகாதார நிலையங்கள், மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டு, இப்படி பல நிலையங்கள் கிராமப் பகுதியிலே இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் அவற்றைச் சிறந்த வகையில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. நடப்பாண்டில் தொடக்க சுகாதார நிலையங்கள் 140 ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த வகையில் திருத்தணி தொகுதியில், திருவாலங்காடு பகுதியில், கனகம்மாசத்திரத்தில் ஒரு சுகாதார மையத்தை துவக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் ஆனதற்குப் பிறகு மக்கள் கட்டிய வரிப் பணத்தில், குறைந்தது 20 விழுக்காடாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேர வேண்டுமென்ற திட்டத்தினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான், இந்த மதிய உணவுத் திட்டம் கொண்டு வந்தார்கள், சீருடை வழங்குகிறார்கள். மருத்துவப் பரிசோதனை செய்கிறார்கள். இலவசப் பாடப் புத்தகம்





கொடுக்கிறார்கள். காலணி கொடுப்பதற்கான அறிவிப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். முதியோருக்கு உதவித் தொகை நேரடியாகக் கிடைக்கிறது. முதியோருக்கு ஆண்டுக்கு இரண்டு உடை கொடுப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சலுகை விலையிலே அரிசி, சலுகை விலையிலே மண்ணெண்ணெய், சலுகை விலையிலே சமையல் எண்ணெய், சலுகை விலையிலே சர்க்கரை ஆகியவை கொடுக்கிறார்கள். சலுகை விலையிலே ஜனதா ரக ஆடைகள் வழங்கப்படுகின்றன. இன்னும் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற திட்டங்களின் கீழ் 20 விழுக்காட்டிற்குக் குறைவில்லாமல் ஏழை மக்களுக்கு நேரடியாகச் சேர்வதற்கான வாய்ப்பை புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள.

செங்கற்பட்டு மாவட்டம் வறட்சி நிலவுகின்ற பகுதி என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சிப் பகுதி என்று அறிவிக்கின்ற நேரத்தில், மாவட்டம் முழுவதும் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட வேண்டும். மாவட்டம் பூராவும் இருக்கின்ற வட்டங்களில் ஒரு பகுதியைச் சார்ந்த பிர்க்காவில் இருக்கிற 3 அல்லது 4 கிராமங்களை அறிவிக்கப் போவதாக பொது மக்கள் பல இடங்களில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வானம் பொய்த்திருக்கின்ற நிலைமை எல்லோருக்கும் தெரியும். அங்கே உள்ள நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, குறைவாகக் கிடைக்கக் கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்தி, 2, 3 ஏக்கர் விவசாயம் செய்யப்பட்ட பகுதிகளைப் பார்த்து, அந்த 2, 3 கிராமங்களை விட்டுவிட்டு, வேறு பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கலாமா என்று அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதுமாக நிலவரி வஜா செய்ய வேண்டும. காரணம், கூட்டுறவுக் கடன் மீதான வட்டியும், அபராத வட்டியுமாக நாம் தள்ளுபடி செய்த ரூ. 200 கோடியை அவர்கள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். நிலுவையில் இருக்கிற வரி ரூ. 17 கோடி இருக்கும். அதை வஜா செய்வதற்கான ஏற்பாட்டை புரட்சித் தலைவர் அவர்கள் அறிவிப்பார்களேயானால், வேளாண்மையைச் செய்கின்ற அந்த மக்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மை செய்கின்றவர்களுக்கு, ஜிப்சம் போன்ற

உரத்திற்கு 5 விழுக்காடு விற்பனை வரியை, 3½ விழுக்காடு விற்பனை வரியாக குறைத்து இருக்கிறீர்கள். இந்த ஜிப்சம் என்ற உரம் விவசாயிகள் அதிகமாகப் பயன்படுத்தாத உரம். எனவே, அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய உரமாக இருக்கின்ற யூரியா, சல்ஃபேட், காம்ப்ளெக்ஸ் இதுபோன்ற உரங்களை அந்த மானிய விலையிலே கொடுத்து ஊக்கத்தை அளிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களை வாயார, மனதார பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். காரணம் ஒரு குதிரை மின் ஓட்டத்திற்கு 75 ரூபாய் கட்டினால் போதும், மிகச் சிறிய விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணமே வேண்டாம் என்று அறிவித்த அந்தக் கொள்கையை எல்லோரும் மனதார பாராட்டி வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் இந்த தண்ணீர் இல்லாத கிணற்றுக்கு ஒரு குதிரை மின் ஓட்டத்திற்கு 75 ரூபாய் கட்டக் கூடிய வாய்ப்பினால் விவசாயிகள் மிகவும் அவதிக்குட்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படி இருப்பவர்கள் மிகக் குறைந்த சதவிகிதத்தில்தான் இருப்பார்கள். பொதுவாக அதிகமாகத் தண்ணீர் இருக்கின்ற பகுதியிலே, மின்சார பம்ப் செட்டுகளை இணைப்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது. மக்கள் இதை வரவேற்றிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கு எல்லாம் டிவி கொடுக்க வேண்டும், கலர் டிவி வைக்க வேண்டும் என்று அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். கலர் டிவி வைப்பதற்கு ஓராண்டுக் காலமாக அதிகாரிகளை அணுகி கேட்கும்போது, ஊராட்சி மன்றங்களுக்கு டிவி வாங்க வேண்டுமென்றால், அரசாங்கத்திலிருந்து எந்த டிவி வாங்க வேண்டும் என்ற ஆணை எங்களுக்கு இதுநாள் வரை வரவில்லை. ஆகவே நாங்கள் வாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்திலிருந்து இந்த பெயர் உள்ள டிவி வாங்க வேண்டுமென்று அனுமதி வந்தால் ஒழிய வாங்க முடியாது என்று சொல்கிறார்கள். அது உண்மையாக இருக்குமானால் உடனடியாக எந்த டி.வி. வாங்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



கடைசியாக, ஐடிஐ படித்த மாணவர்கள் சிறு தொழில் செய்கின்ற நேரத்திலே வெல்டிங் ஒன்றை மட்டும் வைத்து பிழைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த வெல்டிங் கம்பிக்கு 8 சதவிகிதம் வரியாக இருப்பதை 10 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். ஆகவே மீண்டும் 8 சதவிகிதமாக இருந்தால் நலமாக இருக்கும். ஏழை எளிய மக்கள் ஒரு சின்ன வெல்டிங் செய்வதாக இருந்தாலும் 10 ரூபாய் கேட்கிறார்கள். அதை இப்போது நாம் அதிகப்படியாக உயர்த்திவிட்டால் 15 ரூபாய் என்று கேட்பார்கள். ஆகவே அந்தத் தொழில் செய்து பிழைக்கக்கூடிய மாணவர்கள், சுய வேலைவாய்ப்பு காரணமாக பெற்ற கடனையும் திருப்பித்தர முடியாது. ஆகவே நிச்சயமாக 8 சதவிகிதம் இருக்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் ஹோட்டல்களில், சிறிய ஹோட்டல்களில் விற்கக்கூடிய பண்டங்களுக்கு வரி உயர்த்தியிருக்கிறோம். அந்த ஹோட்டல்களுக்கு ஏழை எளிய மக்களும், கூலி வேலை செய்பவர்களும், பார வண்டி இழுப்பவர்களும் மட்டும் தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வரி இல்லாமல் விட்டு விட்டு, அந்த வரியை நட்சத்திர ஹோட்டல்களுக்கு விதிப்பதற்கான வாய்ப்பைத் தர வேண்டும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். பிரித்து நிர்வாகத்தை நேரடியாக பார்ப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அழகிரி போக்குவரத்துக் கழகம்—பி.ஏ.டி.சி. என்ற அந்தக் கழகத்தை இரண்டாகப் பிரித்து தனியாக செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஒரு பேருந்து கழகத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொன்னேரியில் இப்போது கட்டிக் கொண்டிருக்கின்ற அனல் மின் நிலையத்திற்கு வட சென்னை அனல் மின் நிலையம் என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி அறிஞர் அண்ணா அனல் மின் நிலையம் என்ற பெயர் சூட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து எனக்கு வாய்ப்பை நல்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

[டாக்டர் க. நல்லமுத்து] [1987 மார்ச் 24

அரசு அதிகாரிகள், அரசு இடைத்தரகர்கள் ஆகியோர் ஏழை மக்களுக்கு கட்டித் தருகின்ற அந்த வீட்டினுடைய பணத்தைக் கையாடல செய்து மாடமாளிகைகளும், குளிர்ச் சாதன வசதிகளும் ஏற்படுத்திக் கொண்டு, அதிகாரிகளும், அதிகாரிக்கு வேண்டியவர்களும் சுகமாக வாழ்க்கை வாழ்வதற்குத்தான் அந்தப் பணம் எல்லாம் உதவுகின்றதேயொழிய, நிரந்தரமாக குடியிருப்பவர்களுக்கு வசதியான வீடுகள் கட்டுவதற்கு அந்தப் பணம் முழுமையாக செலவழிக்கப்படுவதில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

இங்கே எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், மோட்டார், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், மொப்பட் போன்ற பொருட்களுக்கு எல்லாம் வரி குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பாக மொப்பட்டிற்கு வரி 4 சதவிகிதம் என்று போட்டிருக்கிறீர்கள். அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். காரணம் என்னவென்றால், அந்த மொப்பட் வரிச் சலுகை என்பது சாதாரண அரசு அலுவலர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும், ஆசிரியர் பெருமக்களுக்கும் மிகவும் உபயோகமான ஒரு திட்டம் என்பதை இங்கே பாராட்ட விரும்புகிறேன்.

வீடு கட்டுமானப் பொருட்களுக்கு வரி உயர்வு செய்திருக்கிறீர்கள். பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். சினிமா டிக்கெட்டின் விலையை உயர்த்தியிருக்கிறீர்கள். இந்த மூன்றுமே நேர்முகமாக ஏழை எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய ஒரு திட்டமாகத்தான் இருக்கிறது. வீடு கட்டும் பொருட்களிலேயே செங்கல், மூங்கில் மற்றும் ஓடு, மரம் போன்றவற்றிற்கு நீங்கள் இங்கே வரி உயர்வு செய்திருக்கிறீர்கள். இவைகள் ஏழைகள், வீடு இல்லாதவர்கள், வீடு கட்டுவதற்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலையாக இருப்பதால், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

தமிழகத்தைப் பொறுத்தவரை போக்குவரத்துத் துறைகள் அனைத்துமே இங்கே லாபகரமாக ஓடிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்தி மாணவர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் ஒரு சிரமத்தை ஏற்படுத்தியதைத் தவிர்த்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து. சினிமா



1987 மார்ச் 24] [டாக்டர் க. நல்லமுத்து]

டிக்கெட் விலையை உயர்த்தியிருக்கிறீர்கள். சினிமாத் துறை நாட்டினுடைய பெரும்பகுதியான பொருளாதாரத்தை அடக்கிக் கொண்டிருக்கிறது. அந்த நிலையிலே, சினிமா துறையிலே மற்ற பகுதிகளுக்கு நீங்கள் வரியை உயர்த்தி வருமானத்தைப் பெருக்கிக்கொண்டு இந்த சினிமா டிக்கெட்டுக்கு உரிய வரி உயர்வை நீங்கள் மறு பரிசீலனை செய்து குறைக்க வேண்டுமென்பதையும் இங்கே எனது கோரிக்கையாக வைக்கிறேன்.

இங்கே நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கூறுகின்றபோது ஏழ்மை ஒழிப்புத் திட்டம் என்னவாயிற்று என்று கோரினார்கள். ஏழ்மை ஒழிப்புத் திட்டம் கண்டிப்பாக ஒரு காலத்தில், வெற்றிபெறத்தான் போகிறது. ஏழ்மை ஒழிப்புத் திட்டம் என்பது, ஒரு பொருளாதாரத் திட்டம் வகுக்கின்றோம் என்றால் இங்கே இந்த நாட்டில் இருக்கின்ற உழைக்கும் தகுதி பெற்றவர்கள், உழைக்கும் வயது வந்தவர்கள் அனைவரும் உழைப்பில் ஈடுபடவேண்டும். அப்போதுதான் இங்கே ஏழ்மை ஒழியும். இந்த நிலையை கருத்தில் கொண்டுதான் பாரதப் பிரதமர் அவர்கள் இங்கே பொருளியல் நிபுணர்களை வைத்துக் கொண்டு ஏழ்மை ஒழிப்புத் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். என்.ஆர்.ஈ.பி. திட்டம், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், இந்தத் திட்டங்களெல்லாம் அந்த தத்துவத்தின் அடிப்படையிலேதான் இங்கே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. இங்கே என்.ஆர்.ஈ.பி. திட்டமாக இருந்தாலும் சரி, ஆர். எல்.ஈ.ஜி.பி. திட்டமாக இருந்தாலும் சரி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாக இருந்தாலும் சரி இவைகள் அனைத்தும் வளர்ச்சிப் பணிகளுக்கே பயன்படுத்தப் படுகின்றன. இதற்காக ஒதுக்குகின்ற அத்தனை பணங்களும் வளர்ச்சித் திட்டத்திற்குத்தான் உதவுகின்றன. ஏழைகளுக்கு வீடு கட்டுவதற்கு, அலுவலகம் கட்டுவதற்கு, சாலைகள் போடுவதற்கு, ஏரிகள், வாய்க்கால்கள் வெட்டுவதற்கு, இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தைப் பார்க்கின்றபோது வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கு இந்தத் திட்டங்களையெல்லாம், உண்மையிலேயே, சிறப்பான முறையிலே, நியாயமான முறையிலே நடைமுறைப்படுத்தினால் கண்டிப்பாக ஏழ்மையை ஒழிக்க முடியும். இதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். இந்தத் திட்டம் எந்த ஏழைக்கு சென்று அடைகிறதோ அந்த ஏழை உண்மையிலேயே வறுமைக்

கோட்டிலிருந்து தன்னுடைய நிலையை உயர்த்திக்கொள்வதைக் கண்கூடாகப் பார்க்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இங்கே பல்வேறு திட்டங்களையெல்லாம் சிறப்பாகச் செய்திருக்கிறீர்கள்.

இந்த நிலையிலே கல்வித்துறையை இங்கே காண்கிறேன். கல்வித் துறையிலே 1986-87 ஆம் ஆண்டு 551 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள். இந்த ஆண்டு 597 கோடி ஒதுக்கி இருக்கிறீர்கள். இதிலே எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. தமிழக கல்வித் துறையில் கட்டாயக் கல்வி முறை இருக்கிறதா? இலவசக் கல்வி முறை இங்கே கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இங்கே எல்லா நகரங்களிலும் ஊர்களிலும் தனியார் பள்ளிகள் அன்றாடம் தொடங்கப்பட்டு வருகின்றன. அதன் பொருள் என்ன? இங்கே தமிழகத்தில் படிக்கும் வயதுவந்த மாணவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அந்த மாணவர்கள் அனைவரும் படிப்பதற்குரிய பள்ளிகள் எத்தனை இருக்கின்றன? அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் அங்கே அமர்த்தப்பட்டிருக்கிறார்களா என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதைப் பார்க்கின்ற போது தமிழகத்திலே கல்வி இலவசக் கல்வியாக இல்லையோ என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றுகிறது. அதோடு இங்கே ஏழை எளிய மக்களெல்லாம் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிகளிலே படிக்க வைப்பதற்குப் பணம் இல்லாத காரணத்தினால் கல்வி பயில்கின்ற வாய்ப்பை இழந்து கொண்டிருக்கிற ஏழை மாணவர்களெல்லாம் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன். இங்கே, அரசுப் பள்ளிகளும் சரி, தனியார்ப் பள்ளிகளும் சரி அனைத்திலும் படிக்கின்ற மாணவர்களிடம் நன்கொடை என்கின்ற பெயராலே பணம் பெறுகிறார்கள். இந்த நிலை நீடித்தால் நிச்சயமாக இந்தக் கல்வித்திட்டம் மூலம் படித்தவர்கள் தொகை தமிழகத்தில் எதிர்காலத்தில் குறையக் கூடிய ஒரு நிலை உருவாகிக்கொண்டு வருகிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், அரும்பாவூர் மேல்நிலைப் பள்ளி, பெரம்பலூர் மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம் மேல்நிலைப்பள்ளி இதுபோன்ற பள்ளிகளிலெல்லாம் கட்டாயமாக நன்கொடை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள்.



நன்கொடை என்பதைப் பல்வேறு வகையிலே பெறுகிறார்கள். சீருடை என்ற ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டு சீருடை என்ற பெயராலே பணத்தை இங்கே வசூல் செய்கிறார்கள். ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியெல்லாம் அரசுப் பள்ளிகளிலே தொடங்கி இருக்கிறார்கள். இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே நன்கொடை பெறாமல் மாணவர்களைச் சேர்ப்பதில்லை. இந்த நிலைமையில் ஏழை மக்களுடைய குழந்தைகள் எப்படி ஆசிரியராக ஆக முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து ரெவின்யூ துறையைப்பற்றியும் ஒரு கருத்தைச் சொல்ல விழைகிறேன். ரெவின்யூ துறை என்பது இங்கே பல முறை கேடுகளுக்கும் ஊழல்களுக்கும் இரையாகி, அந்தத் துறையே செயல்படுகிறதா என்றே ஐயப்படுகிற நிலைமைதான் இருந்து வருகிறது. என்னுடைய தொகுதியான பெரம்பலூர் தொகுதியில் தாண்டகப்பட்டு என்ற இடத்தில் ஆயிரக்கணக்கான தரிசு நிலங்களை அங்கே உள்ள அரசு அலுவலர்களும் பெரும் செல்வந்தர்களுமாக எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அது மட்டுமல்ல ஏழை எளிய மக்களிடமிருந்து வந்த நிலங்களையும் அவர்கள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அதன் காரணமாக நிலமற்ற ஏழைகள் இன்றைக்கு அல்லல்படுகிற நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலைமையை எண்ணிப் பார்க்கிறபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே "ஏழ்மையை ஒழிக்க முடியுமா" என்று கேட்ட கேள்வியைத்தான் நானும் கேட்க வேண்டியவனாக இருக்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது) மேலும் காவல் துறையை எடுத்துக் கொண்டால் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. குப்புசாமி):** தயவுசெய்து முடித்துவிடுங்கள். ரொம்பவும் நேரமாகிவிட்டது. இன்னும் 4 பேர் பேச வேண்டும்.

**டாக்டர் க. நல்லமுத்து:** முடித்துவிடுகிறேன். காவல் துறையை எடுத்துக் கொண்டால் நாள்தோறும் குற்றங்களும் பல்வேறு கொலைகளும் கொள்ளைகளும் நடக்கிற நிலைமையைப் பார்க்கும்போது தமிழகத்தில் போதுமான அளவுக்குக் காவலர்கள் இல்லையோ என்றே ஐயப்பட வேண்டியிருக்கிறது. என்னுடைய

[டாக்டர் க. நல்லமுத்து] [1987 மார்ச் 24

தொகுதியில் பல காவல் நிலையங்களில் துணை ஆய்வாளர்களே இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதன் காரணமாக அங்கே சட்டம் ஒழுங்கு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு எல்லாம் வெறும் கேலிக் கூத்தாகவே ஆகிக் கொண்டு வருகிறது என்பதையும் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களின்மீது நான் அன்பும் மரியாதையும் கொண்டவன் என்ற நிலையில், நம்முடைய முதல்வருடைய ஆட்சியில் ஒரு சில அப்பாவி மக்களுடைய நிலைமை மட்டும் எடுத்துக் காட்ட விழைகிறேன். தயவுசெய்து கொஞ்சம் பொருத்தருளுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. குப்புசாமி):** நீண்ட நேரம் பேசியாகிவிட்டது. 12 நிமிடங்களுக்கு மேல் பேசியாகிவிட்டது. முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டும். அடுத்து திரு. உத்திராபதி . . .)

**டாக்டர் க. நல்லமுத்து:** இதோடு முடித்துக் கொள்கிறேன். எனது தொகுதியான பெரம்பலூர் தொகுதியில் உள்ள திருவாடத்துறை என்ற ஊரில் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் பணி அங்கே உள்ள ஆற்றில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதிலே 4 இளைஞர்கள் ஆற்று மணலில் புதைந்து போய்விட்டார்கள். ஆற்று மணலில் தோண்டும் போது அவர்கள் புதைந்துவிட்டார்கள். அவர்களை உடனே அவர்கள் தோண்டி எடுத்தார்களா என்று பார்த்தால் உண்மையிலேயே வேதனைப்பட வேண்டிய அவசியம்தான் இருக்கிறது.

அந்த இளைஞர்கள் 4 மணிக்கு மணலில் புதைந்து போய் இருக்கிறார்கள். உடனடியாக அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இரவு 11 மணிக்கு எனக்குத் தகவல் கிடைத்து நான் சென்று ஊரில் தண்டோரா போட்டு பின்னாலே மணலைத் தோண்டி அவர்களை வெளியே எடுக்கிற அவல நிலை இருக்கிறது. காரணம் என்ன? அவர்கள் எல்லாம் அப்பாவி ஏழைகள். அதைப் போலவே அரியலூர் தொகுதியில் ஏழை விவசாயிகள்—ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர்கள்—நாள் முழுவதும் வயலிலே வேலை செய்து பிழைப்பவர்கள், அவர்கள் 5 மணிக்கு வேலையை முடித்துவிட்டு அங்கே உள்ள வாய்க்காலில்



1987 மார்ச் 24] [டாக்டர் க. நல்லமுத்து]

தண்ணீரில் குளித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் குளித்துக் கொண்டிருக்கிறபோது பக்கத்தில் செல்கிற மின்சாரக் கம்பி அறுந்து ஆற்றுத் தண்ணீரில் விழுந்தது. அந்தத் தண்ணீரில் குளித்துக் கொண்டிருந்த அந்த 4 பேரும் இறந்து போனார்கள். அந்தக் குடும்பத்தைச் சார்ந்த வனிதா, வனஜா என்ற 1½ வயது மற்றும் 3 வயது குழந்தைகள் அனாதைகளாக ஆகிவிட்டார்கள். அந்தக் குடும்பத்திற்கோ அல்லது அந்தக் குழந்தைகளுக்கோ இதுவரை ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டதா என்றால் இல்லை என்பதை வேதனையோடு நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே என் தொகுதியில் வாலிகண்டாபுரம் பஞ்சாயத்தில் பம்பை கிராமத்தில் கடந்த 5—3—1987 அன்று ஒரு வெடிகுண்டு விபத்து ஏற்பட்டது. அதிலே பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருமே சிறுவர்கள். பள்ளிச் சிறுவர்கள்தான் அந்த விபத்திலே பாதிக்கப்பட்டார்கள். ஒரு சிலருக்கு அந்த விபத்தின் காரணமாக 2 கண்களும் போய்விட்டன. மற்றவர்கள் கை கால்களை இழந்திருக்கிறார்கள். அந்தச் சம்பவம் எப்படி ஏற்பட்டது? வெடிகுண்டு எப்படி வந்தது, அது எப்படி வெடித்தது என்று இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்கப்பட்டது என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன் . . . (மணியடிக்கப் பெற்றது).

*** திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 90 கோடி ரூபாய்க்கு தமிழகத்தில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பற்றாக்குறை 131.69 கோடியாக இருக்கிறது. அதே போல மத்திய அரசும் எட்டாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பற்றாக்குறை பட்ஜெட் போட்டு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை பல்வேறு இனங்களில் போட்டிருக்கிறது. இப்படி மத்திய அரசும் இந்த மாநில அரசும் போடக்கூடிய வரிகளும், பற்றாக்குறை பட்ஜெட்டும் சாதாரண ஏழையெளிய மக்கள் தலையில் வெடிக்கிறது. எனவே இந்த பட்ஜெட்டை நாங்கள் பாராட்ட முடியாமல் கருத்துக்களைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

[திரு. பொ. உத்திராபதி] [1987 மார்ச் 24

திருச்சியிலேயிருந்து சென்னைக்கு திறந்தவெளி கால்வாயின் மூலமாக குடிநீர் கொண்டு வருவதாக அறிவித்தீர்கள். ஆனால் பிறகு அந்த திட்டம் கைவிடப்பட்டது. அதேபோல தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுக்காவில், மறவகாட்டில் உப்பு இரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கல்நாட்டு விழா செய்தார்கள். அந்த திட்டமும் பிறகு கைவிடப்பட்டுவிட்டது. இதெற்கெல்லாம் என்ன நடைமுறை என்று தெரியவில்லை. சென்னையில் இருக்கக் கூடிய மாநில அரசு அலுவலகங்களை தமிழகத்தின் நடுமையமாக இருக்கக்கூடிய திருச்சியில் அமைக்கப் போவதாக அறிவிக்கப் பட்டது. அந்த திட்டமும் பிறகு கைவிடப்பட்டுள்ளது. இப்படி தமிழகத்தில் முக்கியமான திட்டங்கள் என்று சொல்லக் கூடிய திட்டங்கள் முதலில் அறிவிக்கப்பட்டு பிறகு நடைமுறைக்கு ஒவ்வாதைகள் என்ற வகையில் செயலற்றதாகி விட்டன. ஆகவே பட்ஜெட்டில் சாதாரண மக்களுக்கு வேலைக்கு உத்தரவாதம், வாழ்க்கைக்கு உத்தரவாதம் ஆகியவற்றுக்கான திட்டங்கள் பற்றி குறிப்பிடவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொங்கல் பரிசாக, ரேஷன் கார்ட் வைத்திருக்கக்கூடியவர்கள் 'கோ-ஆப் டெக்ஸ்' கடைக்குச் சென்று 25 ரூபாய் கொடுத்தால் வேட்டி, சேலை கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் தேவையான நிதி ஒதுக்கப்படவில்லை. சட்டசபை கூடப் போகிறது என்று தெரிந்திருந்தும், சட்டசபையில் வரி விதிப்பது பற்றி பேசி முடிவெடுத்திருக்கலாம் என்றில்லாமல், உலக வங்கியின் வற்புறுத் தலுக்காக தமிழகத்தில் இருக்கக்கூடிய சோழன், கட்டபொம்மன் போன்ற பல்வேறு போக்குவரத்து வாரியங்களில் ஆதாயம் கிடைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையிலும், பஸ் கட்டணத்தை உயர்த்தியிருப்பது என்பது சாதாரண மக்களை கசக்கிப் பிழியக் கூடிய அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதால் நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. எனவே உலக வங்கிக்கு தமிழ்நாட்டு மக்களை அடகு வைத்து விடுவீர்களோ என்று அச்சம் ஏற்பட்டு வருகிறது. இந்த போக்கை கைவிட வேண்டும்.



1987 மார்ச் 24] [திரு. பொ. உத்திராபதி]

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான நிதி கிடையாது. தேவையான நிதி இல்லாததால் குடிநீர், மின் சாரம், சாலை வசதிகள் ஆகிய மக்களுக்குத் தேவையான காரியங் களை தொகுத்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இருந்தும் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான நிதியை வழங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளில் எல்லாம் சுகாதாரம் சீர்கெட்டு சாக்கடைகள் நாற்றமெடுத்து ஓடுகின்றன. மெயின் ரோடுகளைத் தவிர மற்ற தெருக்கள் எல்லாம் கடக்க முடியாத அளவிற்கு சீர்கெட்ட சாலைகளாக இருக்கின்றன. ஆகவே நகராட்சிகளுக்கு நிதி வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப்போலவே பெரும்பாலான பேரூராட்சிகளுக்கு வருமானம் கிடையாது. ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதி அங்கே பணிபுரியும் சுகாதார ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண் டிய அளவிற்குக்கூட வருமானம் கிடையாது. அப்படிப்பட்ட நிலையில் உள்ள பேரூராட்சிகளைக் கணக்கெடுத்து அவைகள் நிதி ஆதாரத்தைப் பெருக்கிக் கொள்ள அல்லது அவர்களுக்கு நிதி கொடுக்க மாநில அரசு முயற்சி எடுக்க வேண்டும். ஆயிரம் ரூபாய்க்கு மேல் அவர்கள் செலவு செய்ய வேண்டுமானால் அதற்கு அரசின் அனுமதி கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் எந்த வேலையும் செய்ய முடியாது. ஆகவே இந்த ஆயிரம் ரூபாய் என்பதை ஐந்தாயிரம் ரூபாய் என்று வைத்து அவர்கள் வேலை செய்வதற்கேற்ப பேரூராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் நிதிப் பற்றாக்குறை இருப்பதால் பல்வேறு வேலைகள் தேக்க நிலையில் உள்ளன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை பேரூராட்சியில் தேர்தலுக்கு முன்னால் உள்ள மின்சார பாக்கி, அதாவது 22—5—1986-க்கு முன்பு இருந்த மின்சாரக் கட்டண பாக்கி ரூ. 39,939.50. தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்றத் தலைவர் வந்த பிறகு அந்தப் பணம் முழுமையும் கட்டி விட்டார்கள். இதைக் கட்டியதற்குப் பிறகு பேரூராட்சியிலிருந்து மின்சார விஸ்தரிப்புக்காக கேட்டபோது, காலதாமத கட்டணம் என்ற பெயரில் அந்த

[திரு. பொ. உத்திராபதி] [1987 மார்ச் 24

பேரூராட்சி ரூபாய் 50,448.35 கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மின்சார கட்டண பாக்கி ரூபாய் 39,939 என்றால், அதைக் கட்டுவதில் ஏற்பட்ட காலதாமதத்திற்காக போட்டிருக்கக்கூடிய வட்டி ரூபாய் 50,448 என்றால் எப்படி பேரூராட்சிக்கு மின்சாரம் வழங்க முடியும்? ஆகவே பேரூராட்சிகளுக்கு கொடுக்க வேண்டிய மின்சார கட்டண பாக்கிக்கு வட்டி போடக் கூடாது. ஆகவே அந்த வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

அடுத்தபடியாக இன்றைக்கு தமிழகத்தில் மக்களை வறட்சி ஆட்டிப் படைக்கிறது. இன்றைக்கு வறட்சி நிவாரணம் என்று சொல்கிறபோது, பயிர் சாவியாகிவிட்ட நிலங்களுக்கு நிலவரி தள்ளுபடி செய்வது மட்டும் போதாது. சாகுபடிச் செலவுக்கு முதலீடு செய்து, விளையாமல் கஷ்டம் ஏற்பட்டுவிட்டதால், ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இன்றைக்கு தென்னை மரங்கள், பனை மரங்கள்கூட பட்டுவிட்டன. திருநெல்வேலி மாவட்டம், தஞ்சை மாவட்டம், சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம் இன்னும் பல மாவட்டங்களில் பனை மரங்கள், தென்னை மரங்கள் முழுமையாகப் பட்டுப்போய் விறகாகக்கூட வந்துவிட்டன. எனவே வறட்சி உச்சக்கட்டத்தில் இருக்கிறது. இன்றைக்கு பருவ மழை பொய்த்ததால், சாகுபடி நடக்காமல், தரிசாக லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளன. இதையெல்லாம் கணக்கில் எடுத்து, விவசாயிகளுக்கு ஜீவனக் கடன் வழங்க வேண்டும்.

வறட்சி தமிழ்நாட்டில் நீடித்து வருகிறது. வருடந்தோறும் சில மாவட்டங்களில் பருவமழை பொய்த்துவிடுவதால், நிவாரணத்திற்கு நிரந்தர ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் வறட்சி வந்துகொண்டிருக்கிறது. எனவே வறட்சி நிவாரணத்திற்காக தனியாக நிதி ஒதுக்கிட அரசு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் பருவமழை பொய்த்தவுடன் முன் எச்சரிக்கையுடன் திட்டமிட்டிருக்க வேண்டும். இன்றைக்கு துணைக் கோள் மூலம் ஒரு மாதத்துக்கு முன்பே கால நிலையைத் தெரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு நவீன விஞ்ஞானம்—சையன்ஸ்—வளர்ந்துள்ளது.



1987 மார்ச் 24] [திரு. பொ. உத்திராபதி]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்து, எக்ஸ்பிரஸ் இன்னும் பல பத்திரிகைகளில் முன்கூட்டியே வறட்சி வரப்போவதாக அறிவிக்கிறார்கள். எனவே கடும் வறட்சி ஏற்படுமென்று தெரிந்து, வறட்சிக் கொடுமையைத் தவிர்க்க வேண்டும். ஆனால் அரசு அதிகாரிகளும், அரசும் வறட்சி வருவதற்கு முன்பு திட்டமிடுவதில்லை. இதில் மாநில அரசு தவறி விட்டது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

குழாய்க் கிணறுகள் தோண்ட துரப்பணக் கருவிகள்—ரிக்—இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு தனியார் வாடகைக்கு விடுகிறார்கள். இங்கே கிணறு தோண்ட கருவிகள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் தனியார் வெளி மாநிலங்களுக்கு கொடுத்து, அதிக வருமானம் பெறுகிறார்கள். இன்றைக்கு, குடி தண்ணீருக்காக நிலத்தடி நீரைப் பயன்படுத்த ஆய்வு செய்த குழாய்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. முன்கூட்டியே இணைப்புகள் கொடுத்திருந்தால் குடிதண்ணீர் தட்டுப்பாட்டைத் தவிர்த்திருக்கலாம்.

வறட்சிக் கொடுமை, குடிப்பதற்கு தண்ணீர் இல்லாத கொடுமை ஆகிய இரண்டு காரணங்களால் வயிற்றுப் போக்கும், வைசூரி நோயும் பரவுகிறது. கடுமையான வெய்யிலும் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே குடி தண்ணீர் தட்டுப்பாட்டைக் குறைக்கவும், நோய் பரவாமல் தடுக்கவும் போர்க்கால துரித நடவடிக்கை வேண்டும். இதில் மாநில அரசின் தாமதத்தை என்னால் கண்டிக்காமல் இருக்க முடியாது. ஆகவே துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மத்திய அரசும் வறட்சி நிவாரணத்திற்கு போதுமான நிதி வழங்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு சொல்லி தட்டிக் கழிப்பது, மாநில அரசு நேரத்தோடு வறட்சி நிலைமையைப் பற்றிச் சொல்லத் தவறி விட்டார்கள் என்பதுதான். இதை பாராளுமன்றத்தில் மத்திய அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். அந்த நிலைமை இல்லாமல், காலத்தோடு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, தேவையான நிதியைப் பெற மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு தமிழ் நாட்டில் 37,000 கண்மாய்கள் மேடிட்டு இருக்கின்றன. மழைத் தண்ணீரை கண்மாய்களில் தேக்கி வைக்கும் வகையில் அவற்றைப் புதுப்பிக்கத் திட்டமில்லை.

வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு மாறாக, வயல்களில் கொடி நட்டு, ஜப்தி செய்கிறார்கள். பேராவூரணி, பட்டுக்கோட்டை இன்னும் சில மாவட்டப் பகுதிகளில் கடுமையான ஜப்தி நடவடிக்கை எடுத்து, ஆடு மாடுகளை ஓட்டிப் போவதாகச் சொல்லுகிறார்கள். இந்த கடும் வறட்சி நிலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஜப்தி நடவடிக்கையை தள்ளி வைக்க வேண்டும்.

அடுத்து வறட்சிக் கொடுமை, பஞ்சம் ஆகிய காரணத்தால் ஆடு மாடுகளைப் பராமரிக்க முடியாமல் ஈனக் கிரையத்திற்கு சந்தையில் விற்கிறார்கள். மக்கள் பிழைப்பைத் தேடி இடம் பெயர்ந்து வெளி மாநிலங்களுக்கு சாரி சாரியாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து வறட்சி இருக்கிறது. மேற்கண்ட மூன்றும் இருந்தால் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்பது பேமின் கோட் விதி—பஞ்ச நிவாரண விதி. இது வெள்ளைக்காரன் காலத்திலேயே போடப்பட்டுள்ளது. வெள்ளைக்காரன் காலத்திலேயே பஞ்ச நிவாரண விதி என்று வைத்திருந்தார்கள். நமது தமிழக அரசு அந்த விதியைப் பயன்படுத்தி, அமுல் நடத்த தயக்கம் காட்டுவதேன்? ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு பச்சைக் கார்டு கொடுத்து இலவச ரேஷன் வழங்க வேண்டும். இன்றைக்கு வேலை கிடையாது. வறட்சி அதிகரித்திருக்கிறது. ஆகவே பச்சைக் கார்டை வழங்கி இலவச ரேஷன் வழங்க வேண்டும். நிவாரண வேலைகள் ஆரம்பிப்பதன் மூலம் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். மத்திய அரசு கரூர்—திண்டுக்கல் ரெயில்வே திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருந்தால் அங்கே அவர்களுக்கு வேலைகள் கிடைத்திருக்கும். ஆனால் அந்த மாதிரியான திட்டங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளாததால் வேலை ஏற்படவில்லை. அப்படி எடுத்துக் கொண்டிருந்தால், லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திருக்கும். இந்த திட்டத்தின் மூலமாக தமிழக அரசுக்கும் பலன் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, கிருஷ்ணா நதித் திட்டம். முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் கல்நாட்டு விழா செய்து நான்கு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 30 கோடி ரூபாயை, தமிழக மக்களுடைய வரிப் பணத்தை, சென்னை நகர மக்களுக்கு குடி தண்ணீர் வழங்க





வேண்டுமென்பதற்காக தூக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு ரூ. 47 கோடிக்கு மேல் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார். ஆனால் இன்றைக்கு ஆந்திர அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள் அனுமதியோடு நான் சொல்லிக் கொள்கிறேன். "தெலுங்கு கங்கை திட்டத்திற்கு பணம் தராவிட்டால் ஒரு சொட்டு தண்ணிர் கூட விடமாட்டோம்." ஆந்திர மந்திரி மிரட்டல். "டெல்லிக்கு எம்.ஜி.ஆர். ஏன் பயப்படுகிறார்?" இன்று தமிழக மக்கள் நம்பிக்கை இழக்கக்கூடிய அளவுக்கு அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் துரிதமாக தெலுங்கு-கங்கை திட்டத்தின் மூலமாக சென்னை நகர மக்கள் 50 லட்சம் மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

காவிரி நீர் பிரச்சினை. அதற்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டும். அடுத்த ஜூன் மாதத்திற்குள் தண்ணீர் கிடைக்கும் என்று தஞ்சாவூர் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே இன்றைக்கு நடுவர் தீர்ப்புக்கு விட்டிருக்கிறோம். மத்திய அரசை வற்புறுத்தி ஒரு காலகெடுவுக்குள் அந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நம்முடைய அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வீட்டுவசதி திட்டம். வீட்டுவசதி உலக ஆண்டு என்று ஐ. நா. சபையில் ஒரு தீர்மானத்தைப் போட்டு இருக்கிறார்கள். அதுபோலவே 30 லட்சம் வீடுகள் என்று நீங்கள் ஒரு திட்டத்தை அறிவித்தீர்கள். இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ ஓராண்டு முடிந்தும்கூட 10 லட்சம் வீடுகள் கட்டியிருக்கின்றார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடக்கூடிய நிலை இல்லை. ஆகவே இந்த திட்டம் தோல்வி கண்டிருப்பதாகத்தான் நான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

அதே போல இன்றைக்கு தாட்கோ வீட்டு வாரியம் இருக்கும் போது, அந்த தாட்கோ வீட்டு அமைப்பிற்கு கட்டுமான பொருள்கள் உற்பத்தி சங்கங்கள் என்று அமைப்பது என்பது திசை திருப்புவதாக இருக்கும். அது ஒரு பெரிய ஊழலுக்கு இடம் கொடுக்கும். இன்றைக்கு அப்படி பல்வேறு காரியங்கள் நடப்பதை நாம் பார்க்கிறோம். அரசுத் துறையில் கோடிக்கணக்கான ரூபாய்களை கொடுக்கிறோம். ஆனால் அதன் மூலமாக பல்வேறு

[திரு. பொ. உத்திராபதி] [1987 மார்ச் 24

அமைப்புகள் தவறு செய்கிறார்கள். ஆகவே அதை இன்றைக்கு தாட்கோ நிறுவனத்தின் மூலமாகவே செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு உலக வீடு கட்டும் ஆண்டு என்று சொல்கிறார்கள். ஆனால் குடியிருப்பு மனைகள் பட்டா சொந்தமாக ஆக்கப்படவில்லை. இன்றைக்கு வீடு கட்டுவதற்கு குடியிருப்பு மனைகள் பட்டா உள்ளனவாக இருக்க வேண்டும். அப்படி வீட்டு மனைகள் இருந்தால்தான் வீடு கட்ட முடியும். ஆகவே இந்த ஆண்டிலேயாவது அனைத்து மக்களுக்கும் குடியிருப்பு மனைகள் சொந்தம் ஆக்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும்.

அதுபோலவே, அரசு பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோல சமமான ஊதியத்தை மாநில அரசு இன்னும் அறிவிக்கவில்லை. அது பெரிய ஏமாற்றமாகும். ஆந்திரம், கேரளம், கர்நாடக மாநிலங்களில் உள்ள அரசுகள் கொடுக்கும் ஊதியத்தைவிட தமிழக அரசு ஊழியர்களின் சம்பளம் குறைவாக இருக்கின்றது. ஆகவே எதிர்காலத்தில் மற்ற மாநிலங்களுக்கும், மத்திய சர்க்காருக்கும் சமமாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு சலுகைகள் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரி மீது உபரி வரி, உணவுப் பொருள்கள் மீது நீக்கப்பட்ட வரியை இப்போது போட்டிருப்பது என்பதெல்லாம் மக்கள் தலைமீது மேலும் ஏற்றிய சுமையாக அமைந்துவிடும். ஆகவே இன்றைக்கு விலைவாசிகளை மேலும் உயர்த்தாமலும் இருக்க வேண்டும். இன்றைக்கு வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் இல்லை. பினாமி நிலங்கள் ஒழிப்புத் திட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் குறிப்பிடவில்லை. வறட்சி நிவாரணத்தில் என்னவோ அக்கறையில்லை. மெத்தனமான போக்கு மேலோங்கி இருக்கிறது. இன்றைக்கு காலுக்கு செருப்பு கொடுப்பது என்று இருந்தாலும், ஒரு குடம் தண்ணீர் கிடைக்க மைல் கணக்கில் தாய்மார்கள் நடந்து சென்று எடுத்துவரக்கூடிய அவல நிலை இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, உடனடியாக வறட்சி நிவாரண வேலைகளை வேகமாக்க வேண்டும். துரிதப்



1987 மார்ச் 24] [திரு. பொ. உத்திராபதி]

படுத்த வேண்டும். மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்க துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பணியாற்றக்கூடிய சகல ஊழியர்களை நிரந்தர பணியாளர்களாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போன்று சத்துணவு ஊழியர்கள் சத்துணவு மையத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம் சத்துணவு திட்டம் நிரந்தரம் ஆக்கப்பட்டதுபோல, அதில் பணியாற்றும் பணியாளர்களையும் நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல அமுதம் அங்காடி, நெல் கொள்முதல் நிறுவனம் போன்ற நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்கி அரசு ஊழியர்களுக்கு அளிக்கக்கூடிய சலுகைகளை எல்லாம் அவர்களுக்கும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

அதேபோல என் தொகுதியிலுள்ள போட்டூர் யூனியனில் பள்ளிவர்த்தி கிராமத்தில் அரிசந்திராநதி ஆற்றில் வண்டி பாலம் கட்டி கொடுக்க வேண்டும். இந்த இடத்தில் 15 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். அதுபோல பொன்னுக்கொண்டான் ஆற்றில் வண்டி பாலம் கட்டி கொடுக்க வேண்டும். பாமணி ஆற்றில் பாலம் கட்டப்பட வேண்டும். அதுபோல திருத்துறைப்பூண்டி யூனியனில் ஆலத்தம்பாடியிலிருந்து ஆலத்தூர் வரையுள்ள ரோட்டைப் பொறுத்தவரையில் 9 கிலோ மீட்டர் தூரமுடையது இந்த ரோடு. சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுகள் ஆகிவிட்டது. அங்கே ஏழையெளிய விவசாயிகள் வாழ்கிறார்கள். முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராமசாமி இருந்தபோது ஒரே நேரத்தில் 15 ஆயிரம் பேரைத் திரட்டி 9 கிலோ மீட்டர் தூரத்தை லாரி போகிற அளவுக்கு சீர் செய்து கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டிலேயே அந்த ரோட்டை பேருந்து போகும் அளவுக்கு சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முத்துப்பேட்டை நகரம், திருத்துறைப்பூண்டி, இடையூர் பஞ்சாயத்து இன்னும் நூற்றுக்கணக்கான கிராமங்களில் குடிதண்ணீர் வசதியில்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். பட்டுக்கோட்டை ராஜாமடத்திலிருந்து 12 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்குவதற்கு ஒரு கூட்டுக்குடி நீர்த்திட்டம் முன்னாள்

[திரு. பொ. உத்திராபதி] [1987 மார்ச் 24

வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் முயற்சி செய்யப்பட்டது. இத்திட்டத்தை இந்த ஆண்டிலேயே மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருத்துறைப்பூண்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட்டும் இன்னும் தேவையான தளவாடங்கள் இல்லை. இதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். கோட்டூரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட்டு வாடகை கட்டிடத்தில் நடக்கிறது. வாடகை பணம் 7 ஆயிரம் பாக்கியிருப்பதால் அதை காலி செய்ய வேண்டுமென்று கோர்ட் மூலம் உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அதே ஊரில் கோயிலுக்குச் சொந்தமாக சுமார் 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. கிராம மக்கள் அதை கேட்டால் மார்க்கட் ரேட் கேட்கிறார்கள். அது அதிகம் என்பதால், அதற்கு சர்க்கார் ஒரு ரேட் கொடுத்து நிலம் வாங்கி கட்டிடம் கட்டி பெண்கள் நல்ல முறையில் கல்வி கற்க வாய்ப்பு வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

கடைசியாக, முத்துப்பேட்டை நகரத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் நலனுக்காக விடுதி கட்டிக்கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருந்தாலும், மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றும் அளவுக்கு முக்கியமாக வாழ்க்கைக்கு உத்தரவாதம் உடையதாக அமையவில்லை என்று சொல்லும் அளவிற்கு கின்ற வறட்சியை போக்குவதற்கு அரசு உடனடியாக தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு செலுத்த வேண்டுமென்று சொல்லி. வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**திரு. அ. பெரியசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை துவக்குகின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் புதிய இந்த பட்ஜெட் புரட்சிகரமானது. காரணம் ஜனவரி 1 ஆம் தேதி முதல் மதுவிலக்கு பூரணமாக அமுல்படுத்தப்பட்டதால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 250 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும் நாட்டு மக்களுக்குத்



1987 மார்ச் 24] [திரு. அ. பெரியசாமி]

தேவையான பல்வேறு நல்வாழ்வு திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருப்பதால்தான் இந்த பட்ஜெட்டை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலமும் அமுல்படுத்தாத முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தை நல சத்துணவுத் திட்டமாக இந்த அரசு அமுல்படுத்த இருப்பதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். உலக அரங்கில் எந்த ஒரு அரசும் செயல்படுத்தாத அற்புதமான திட்டம் இலவச காலணி திட்டமாகும். இந்தத் திட்டத்திற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஏழை யெளிய தாய்மார்களும், குழந்தைகளும் இத்திட்டத்தின் மூலமாக பலனடைவார்கள் என்பதனால் அவர்கள் எல்லாம் இத்திட்டத்தை வாழ்த்துவார்கள், வணங்குவார்கள். இத்திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கானவர்கள் நிரந்தர வேலைவாய்ப்பு பெற இருப்பதால் இத்திட்டத்தை நான் பாராட்டி வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் கிராமப்புறங்களில் தொலைக்காட்சி தகவல் தொடர்பு முறையாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஊராட்சிக்கும் வண்ண தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்க இருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். பாசனத்திற்காக 1987-88ல் 14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான பணியும் விரைவுபடுத்தப்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன். கேரளாவில் மேற்கு நோக்கி பாய்கின்ற ஆறுகளில் சிலவற்றிலிருந்து உபரி நீரை திருப்பி தமிழகத்தின் வறண்ட பகுதிகளுக்கு பயன்படுத்துவதற்காக கேரள அரசை வலியுறுத்தி வருவதற்காக இந்த அரசின் அணுகுமுறையை நான் பாராட்டி வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் 56,600 ஹெக்டேர் பரப்பு நிலங்கள் பயன் அடைய ரூபாய் 18.63 கோடி மதிப்பீட்டுச் செலவில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஆயக்கட்டு விரிவாக்க திட்டப் பணியை அரசு நிறைவேற்றி வருவதை வரவேற்கிறேன். மேலும் ரூபாய் 7.44 கோடி மதிப்பீட்டுச் செலவில் கூடுதலாக 14,170 ஹெக்டேர் பரப்பளவுக்குப் பாசன வசதி அளிக்க வகை செய்யும் இந்தத் திட்டத்தை அளித்ததற்கு அந்த மாவட்டத்தின் சார்பாக அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. அ. பெரியசாமி] [1987 மார்ச் 24

கல்விக்காக அரசு ரூபாய் 597 கோடி ஒதுக்கி இருப்பதை வரவேற்கிறேன். இதனால் தமிழகம் கல்வித் தரத்தில் முதன்மையான இடத்தை வகிக்கும் என்பது உறுதி ஆகும். 1 முதல் 8-வது வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளி மாணவ மாணவியர்க்கு இலவச சீர் உடைகளும் பாட புத்தகங்களும் வழங்கப்படுகிறது. மேலும் இதன் மூலம் சீருடைகளை தைப்பதால் 40,000 மகளிர் வேலை வாய்ப்பு பெறுகின்றனர்.

நமது முதல்வர் அவர்கள் மீனவர் சமுதாயத்தின் நண்பராகத் திகழ்வதால் அந்தச் சமுதாய மக்கள் நலனுக்காக இலவச வீடுகள் ஒதுக்கவும், அவர்களின் குடியிருப்புகளை முக்கிய சாலைகளுடன் இணைக்கவும், அலை தடுப்புச் சுவர் கட்டவும், புயலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள புகலிடம் கட்டவும் வகை செய்கின்ற திட்டங்களும் இந்த பட்ஜெட்டில் அறிவித்திருப்பதை உளமார வரவேற்கிறேன்.

புன்செய் நிலத்தில் பயிரிடும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும், மானாவாரிப் பயிர் விளைவிக்க வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 4 சதவீத சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்குவதை மனதார வரவேற்கிறேன். அவ்வாறே சிறுதொழிலிலும், குடிசைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள நலிந்த பிரிவினர் தொடர்ந்து 4 சதவீத சலுகை பெற வழி செய்யப்பட்டு இருப்பதையும் பாராட்டுகிறேன்.

மேலும் குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தை அரசு 1979 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இப்போது 7.4 லட்சம் குடிசைவாழ் மக்களுக்கு மின்சக்தி இலவசமாக வழங்கப்பட்டு வருவதையும் பாராட்டுகிறேன்.

மேலும் பருவமழைகள் பெரும் அளவுக்குப் பொய்த்து விட்டதனால் மாநிலத்தின் பெரும் பகுதியில் வறட்சி நிலவுகிறது. இந்த நிலையைச் சமாளிக்க இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி, ஆளுநர் அவர்கள் தன்னுடைய பேருரையில் குறிப்பிட்டிருந்தார்கள். ரூபாய் 347 கோடிக்கு நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பி உள்ளதை வரவேற்கிறேன்.

கடந்த ஒன்றரை மாதங்களில் 1,233 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு உள்ளன. இதற்காக ரூ. 28 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.



1987 மார்ச் 24] [திரு. அ. பெரியசாமி]

இவ்வளவு மக்கள் நலன் திட்டங்கள் பட்ஜெட்டில் இருந்தும் மக்கள் நலனுக்காக பல வரிச் சலுகைகளும் இந்த அரசு தாயன்போடு செய்து இருப்பதை நான் மிகவும் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன்.

கூட்டுறவு அமைப்பின்கீழ் ஆதி திராவிடர்களைச் சேர்ப்பதற்கு தொடர்ந்து அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. 1985-86 ஆம் ஆண்டிலும் 1986-87 ஆம் ஆண்டிலும் ஒவ்வொரு ஆண்டும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 10,000 பேர் கூட்டுறவு அமைப்பின்கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் வேளாண்மையைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் ஆதி திராவிடர்கள் அதிகமாகக் கடன் வாங்குவதால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூபாய் 250 வழங்கும் மற்றொரு திட்டத்தையும் அரசு செயல்படுத்தி இருப்பதை வரவேற்கிறேன்.

பால் சொசைட்டிக்கு தாட்கோ மூலமாக கடன் வழங்கியதில் ஆதி திராவிடர்களுக்கு மானியம் வழங்கவில்லை. மானியம் வழங்க அரசு ஏற்பாடு செய்து தர வேண்டுகிறேன்.

மேலும் தமிழ்நாட்டில் தற்போது வெடிகுண்டு சம்பவங்கள் சதிகாரர்களின் சதிவேலையாக இருந்தது. சமீபத்தில் நடந்த வெடிகுண்டு விபத்துக்குக் காரணமாக இருந்த சதிகாரர்களை பிடித்த போலீஸ் துறைக்கு என் சார்பிலும் அரசு சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற தீய சம்பவங்கள் இனிமேல் நிகழாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-50]

எனது தாராபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. தாராபுரம் தொகுதி தொழில் துறையில் பின்தங்கிய தாலுகாவாக இருந்தும் இங்கு யாரும் தொழில் தொடங்க முன் வருவதில்லை. அதற்குக் காரணம் இரயில் பாதை தாராபுரத்தில் இல்லாததுதான். ஆகையால் தாராபுரத்திற்கு புதிய இரயில் பாதை திருப்பூரிலிருந்து தாராபுரம் வழியாக பழனிக்கு அமைக்க மத்திய அரசை வற்புறுத்தி, ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தாராபுரம் பகுதியில் எஞ்சினீயரிங், விவசாயம், மற்றும் கலைக்கல்லூரி ஆகியவைகளுடன் பாலிடெக்னிக் கல்லூரிகளும் தொடங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. பெரியசாமி] [1987 மார்ச் 24

தாராபுரம் நகர் பகுதியில் புதிய பூங்காக்களை அமைத்தும், நகராட்சி சார்பில் சினிமா தியேட்டர், திருமண மண்டபம், டவுன் ஹால் போன்றவைகளைக் கட்டவும் தகுந்த ஏற்பாடுகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்திடவும், நகரில் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி திறக்கவும், நகராட்சிப் பள்ளிகளில் கழிப்பிட வசதி, சுற்றுச் சுவர் வசதி, போன்றவைகளைச் செய்திடவும் நகரப் பகுதியில் தற்போதுள்ள குழல் விளக்குகளை மாற்றி சோடியம் ஆவி விளக்குகளைப் போடவும் ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுகிறேன்.

தாராபுரம் தொகுதிக்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியத்தில் சாலைகள் பழுதடைந்துள்ளன. நிதிப் பற்றாக்குறை காரணமாக அந்தச் சாலைகள் சரிவர செப்பனிடப்படாமல் உள்ளன. அந்தச் சாலைகளை செப்பனிட வேண்டும். அதோடு மேலும் பல புதிய சாலைகளை அமைத்து, அதற்கு ஏற்றாற்போல் புதிய பஸ் வசதிகளையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ஊராட்சி ஒன்றியங்களில் புதிய ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மடத்துக்குளம், தாராபுரம் ஒன்றியங்களில் பஞ்சாயத்துப் பள்ளிகளில் உள்ள, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களின் சத்துணவுக் கூடங்களில் குடிநீர் இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளி அறைகளில் அதிகப்படியாக மாணவர்கள் உட்கார்ந்து பயில்கிறார்கள். அங்கு ஆசிரியர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. ஆகையால் புதிதாக ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் இரண்டு நூற்பாலைகளைக் கட்டித்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் அரசு மருத்துவமனையில் குடும்ப நல அறுவை சிகிச்சைக்காக தனியாக அறுவை அரங்கு ஏற்படுத்தித்தர வேண்டும். ஏற்கெனவே அதற்கான அரசாணை பெறப்பட்டு



1987 மார்ச் 24] [திரு. அ. பெரியசாமி]

உள்ளது. ஆகவே கட்டிடம் கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு சுகாதார நிலையங்கள் அமைத்தும் மக்களுக்குப் பணியாற்ற வேண்டிக்கொள்கிறேன்.

மடத்துக்குளம் ஒன்றியத்தில் பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் பயிர் செய்திருந்தார்கள். ஏக்கருக்கு சுமார் 1,500 ரூபாய் செலவு செய்திருந்தும் மழையில்லாத காரணத்தாலும் அமராவதி அணையில் தண்ணீர் இல்லாத காரணத்தாலும் பயிர்கள் காய்ந்து விட்டன. ஆகையால் மடத்துக்குளம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளதால், அந்தப் பகுதியில் உள்ள வரிகளை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதி, மணக்கடவு கிராமத்தில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஒவ்வொரு ஆண்டும் இருந்து வருகிறது. இதைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு கிராமக் குடிநீர் வாரிய நிர்வாகப் பொறியாளர் (ஈரோடு) 1983 ஆம் ஆண்டு 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தைத் தயார் செய்தார். ஆனால் இதுவரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இந்த 1987-88 ஆம் ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

* திரு. ஆ. சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடமாடும் பல்கலைக் கழகம், தமிழகத்தினுடைய நிதி அமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுகின்ற நோக்கத்தான் நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய ஒரு சில கருத்துக்களை அவைமுன் வைக்க விழைகிறேன்.

பேரறிஞர் அண்ணாவினுடைய வழி நடக்கும் புரட்சித் தலைவருடைய பொற்கால ஆட்சியில், இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டது போன்று நான்கு பண்புகளையும் ஒருசேர சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக இதைத் தெள்ளத் தெளிவாக உலகுக்கு உணர்த்தியுள்ளது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைத்து

நாடுகளும் வீட்டுவசதி ஆண்டாகக் கொண்டாடுகிற இத்தருணத்தில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக 30 இலட்சம் வீடுகளை இங்கே அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியைச் சார்ந்த அன்பர்கள் '30 இலட்சம் வீடுகளை எந்த வகையில் கட்டிக் கொடுக்க முடியும், அதற்கு எந்த நிதியாதாரம் இருக்கிறது' என்றெல்லாம் குறைபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டமானது கிராமப்புற வேலை வாய்ப்பினைப் பெருக்குவதாக இருப்பதோடு, தான் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி வெற்றி பெற இந்த அரசு செம்மையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிற நேரத்தில் சில குள்ள நரிக்குணம் படைத்த குணாளர்கள் கேலியும், கிண்டலும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் மெத்த பணிவோடு ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானத்தைக் கிழித்து வைகுண்டத்தை எப்படி காட்ட முடியும்' என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு செய்கிற நல்ல திட்டங்களை நீங்கள் நல்ல பண்பாட்டோடு ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர குறைபட்டுக் கொள்வதே உங்களுடைய குணமாக இருக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த பட்ஜெட் வாயிலாக காலணித் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏழைக் குழந்தைகளுக்குப் பயன்படுகிற வகையில் அமைந்து இருக்கிறது. இந்தச் சீர்மிகு திட்டத்தை ஏழைக் குழந்தைகளுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருந்தும் கூட அதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் வக்கணையும், கேலியும், கிண்டலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது காமாலைக்காரனுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் என்று சொல்வார்கள். ஆக எதை எடுத்தாலும் நீங்கள் குறைபடுவதும், அதிலே குற்றம் கண்டுபிடிப்பதுமாக இருந்து கொண்டிருக்கிறீர்களே தவிர ஏற்றுக் கொள்கின்ற மனம் எதிர்க்கட்சி அன்பர்களுக்கு இல்லை; அதைத் தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை. எனவே சாதாரணத் திட்டமாக இதனை நீங்கள்



நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே தவிர இந்தச் சிறப்பான திட்டத்தை வரவேற்கிற வகையில் நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவேதான் நான் உங்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்வேன், உங்களைச் சொல்லிக் குற்றம் இல்லை, நீங்கள் படித்துக் கொண்டிருக்கிற பாடசாலை அப்படிப்பட்டது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த நாட்டிலே குழந்தைச் செல்வங்கள்தான் வருங்காலத் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட குழந்தைகளுக்காக மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் சத்துணவு மையங்களை அமைத்து அவர்களுக்கு சத்துணவு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளின் நலனும், தாய்மார்களின் நலனும் முக்கியமாகக் கருதப்படுகிறது. இதையும் சில பேர் நக்கலும், நையாண்டியும் செய்து பேசுகிறார்கள். என்ன பேசுகிறார்கள்? இந்தத் திட்டமானது அறிவிக்கப்பட்ட நிலையிலே 'இந்தத் திட்டம் 60 நாட்களுக்குச் செயல்படுமா, பிள்ளைகளைப் பிச்சைக்காரர்களாக ஆக்கும் திட்டமல்லவா இது, எப்படி இதை நடத்தப் போகிறார்கள்' என்றெல்லாம் அன்றைய சூழ்நிலையில் வருணித்தார்கள். ஆனால் இன்றைய நிலையில் அந்தத் திட்டமானது எந்த அளவுக்கு சீரோடும், சிறப்போடும், செம்மையோடும் நடந்து கொண்டிருக்கிறது என்பதை பார்த்து அவர்களது வாய் மூடி இருப்பதை நாமெல்லாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. ஆ. சிவக்குமார்:** அண்மையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்கள் குறித்து இங்கே சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். வெடி குண்டுகளை வைத்து கட்டிடங்களைத் தகர்ப்பதும், ரயில் பாலங்களில் வைத்து ரயிலைக் கவிழ்ப்பதும் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இப்படிப்பட்ட மிருகத்தனமான செயல்கள் வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. இப்படிப்பட்டவர்கள் இலங்கைப் பிரச்சினை பற்றியும், இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன் பற்றியும் பேசி வருகிறார்கள். ஆகவே நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்

கிறேன். "உள்ளூரிலே ஓணான் பிடிக்க முடியாதவர்கள் உருந்தூர் பேட்டையிலே போய் எப்படி உடும்பு பிடிக்கப் போகிறார்கள்" என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். இங்கே உள்ள தமிழர்களைக் காக்கத் தெரியாதவர்கள் இலங்கையிலே உள்ள தமிழர்களுக்காக எந்த அளவுக்கு நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆடு நனைகிறதே என்று ஓநாய் கவலைப்படுவதற்கு ஒப்பாகும் இது என்பது என்னுடைய கருத்து. இறுதியாக என் தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். அதற்குத் துணைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே பாதிப் பகுதி வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடுமையான வறட்சிக்கு உட்பட்டிருக்கிறது, பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் ஏற்கெனவே இந்த அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதி முழுவதையும் ஆராய்ந்து பார்த்து வறட்சிப் பகுதியாக அறிவித்து வரி வஜா செய்ய வேண்டும் என்று மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமயநல்லூரைப் பொறுத்த வரையில் தொகுதியின் தலைமை இடமாக இருப்பதால், அங்கே ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கக்கூடிய மேல் நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அதைப் பிரித்து பெண்களுக்கு தனியாக ஒரு பள்ளியை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமயநல்லூர் மிகப் பெரிய ஊராகும். அங்கே கால்நடை மருத்துவமனை ஒன்று சின்ன இடத்தில் மருந்தகமாக இயங்கி வருகிறது. வாடகையிலே அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை தயவுசெய்து பெரிய மருத்துவமனையாக மாற்றி ஒரு கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25-3-1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் **2.03 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.**





## 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

45. டி. எம். எஸ். 7235 மற்றும் டி. எம். எஸ். 7237 எண்ணுள்ள வண்டிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகை முறை வரி விதிப்பினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 1980 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 17 ஆம் நாளிட்ட 94 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

46. 1944 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 1986 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18 ஆம் நாளிட்ட 471 ஆம் எண் மற்றும் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29 ஆம் நாளிட்ட 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22(4) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது.]

47. 1983-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள்-மூலிகை மருந்துக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

48. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

49. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் பதினோராவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1987 மார்ச் 24

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

74. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் இணைப்பு—'உ'-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியலில் இருந்து பல்லவன் பொறியியற் கழகத்தினை நீக்குவது குறித்து 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

75. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை).

## இணைப்பு.

(423 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1987-88 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| A | வருவாய்க் கணக்கில் செலவு. | |
| 1 . | நில வரித் துறை | 6,70,85 |
| 2 | மாநில ஆயத் தீர்வைத் துறை | 1,87,66 |
| 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் | 1.26,36 |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் | 6,55,14 |
| 5 | முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் | 41,53 |
| 6 | பத்திரப் பதிவு | 2,77,58 |
| 7 | மாநிலச் சட்ட மன்றம் | 56,49 |
| 8 | தேர்தல்கள் | 23,62 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 13,87,06 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் | 77,74 |
| 11 | மாவட்ட நிர்வாகம் | 16,90,56 |



1987 மார்ச் 24]

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 12 | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் | 1,49,55 |
| 13 | நீதி நிர்வாகம | 6,43,62 |
| 14 | சிறைச்சாலைகள் | 3,92,66 |
| 15 | காவல் துறை | 39,29,25 |
| 16 | தீயணைப்புப் பணிகள் | 2,93,19 |
| 17 | கல்வி | 1,98,94,52 |
| 18 | மருந்துவம் | 46,83,55 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 24,68,32 |
| 20 | வேளாண்மை | 45,86,05 |
| 21 | மீனளம் | 2,31,43 |
| 22 | கால்நடை வளர்ப்பு | 10,71,75 |
| 23 | கூட்டுறவு | 12,57,84 |
| 24 | தொழில்கள் | 2,58,82 |
| 25 | சிங்கோனா | 1,23,63 |
| 26 | கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 6,52,90 |
| 27 | கதர்த் தொழில் | 1,25,65 |
| 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் | 64,18,96 |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 9,87,72 |
| 30 | சமூக நலன் | 30,72,99 |
| 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 17,03,66 |
| 32 | பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் | 4,54,11 |
| 33 | வீட்டு வசதி | 10,09,08 |
| 34 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 11,40,26 |

[1987 மார்ச் 24

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| **A** | வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 35 | நகர்பொருள் வழங்கல் | 51,52,02 |
| 36 | பாசனம் | 25,44,39 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 1,16,58 |
| 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும் | 8,60,34 |
| 39 | சாலைகளும் பாலங்களும் | 30,50,32 |
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 1,87,97 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 19,91 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் | 37,42,46 |
| 43 | பல்வகை | 72,96,39 |
| 44 | எழுதுபொருள்-அச்சுத்துறை | 6,43,64 |
| 45 | காட்டுவளத் துறை | 5,52,84 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 10,20,69 |
| 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,15,21 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 4,63,71 |
| 49 | குடிநீர் வழங்கல் | 39,26,23 |
| | மொத்தம்—A வருவாய்க் கணக்கு | 9,04,37,00 |
| **B** | வருவாய்க் கணக்கின்கீழ் வாராத மூலதனச் செலவு. | |
| 50 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 98,41 |
| 51 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 3,35,89 |



136506

1987 மார்ச் 24]

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| **B** | வருவாய்க் கணக்கின்கீழ் வாராத மூலதனச் செலவு—தொடர்ச்சி. | |
| 52 | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 21,81,23 |
| 53 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 19,08,05 |
| 54 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 11,33,75 |
| 55 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 23,66 |
| 56 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 7,53,41 |
| 57 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 73,62 |
| 58 | பல்வகை மூலதனச் செலவு | 4,16,95 |
| | மொத்தம்— வருவாய்க் கணக்கின் கீழ் வாராத மூலதனச் செலவு | 69,24,97 |

கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | |
|---|---|---|
| 59 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 1,26,53,98 |
| | பெரு மொத்தம் | 11,00,15,95 |

D
V811,31'N87
N87.34.2